



மின்னூல் ஆக்கம் - தமிழ்நேசன்
மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net
TAMIL EBOOKS

# பிரம்மரட்சஸ்



மின்னூல் ஆக்கம் - தமிழ்நேசன்
மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net

## கோட்டயம் புஷ்பநாத்

## தமிழில் : சிவன்

# என்னுரை

நீங்கள் வழக்கமாகப் புத்தகத்தின் முன்னுரையைப் படிக்காதவராக இருப்பினும், இந்தப் புத்தகத்தைப் பொறுத்தவரை இதைப் படித்துவிட்டுச் செல்வது, கதைப் போக்கைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும் என்பது எனது தாழ்மையான ஓர் ஆலோசனை.

மொழிபெயர்ப்பு என்பது, உங்களுக்குத் தெரியாத மற்றொரு மொழியிலிருந்து தெரிந்த மொழிக்கு மாற்றப்படுவது. அந்த மொழி குறித்து உங்களுக்குத் தெரியாத விஷயங்கள் எவ்வளவோ இருக்கலாம். அதையெல்லாம் நீங்கள் உணர்வுப்பூர்வமாகப் புரிந்துகொள்ள மொழிபெயர்ப்பு உதவவேண்டும். உங்களுக்குப் படிப்பதற்கு எளிமையாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு சிலர் அவற்றையெல்லாம் தவிர்த்துவிட்டோ அல்லது 'தற்சமமம்' என்ற பெயரில் வேறு எதையெல்லாமோ புகுத்துவதையோ மொழி பெயர்ப்பில் நான் செய்வதில்லை. வாசகர்களை அந்த அளவுக்கு நான் தாழ்வாக மதிப்பிடவில்லை என்பது இதன் பொருள்.

ஒரு மாற்றுமொழிப் புத்தகம், என்னதான் வேடம் போட்டு வந்தாலும் அது மாற்றுமொழிப் புத்தகமே. அதில் நமது சூழலையோ, மொழியையோ, பாணியையோ திணிப்பதால் அது நமது மொழிக் கதையாகவோ, புத்தகமாகவோ மாறிவிடப் போவதில்லை! எனவே, பிற மொழியில் உள்ள நூலை, அந்த மொழி வாசகர்கள் எப்படிப் புரிந்து கொள்கிறார்களோ, எப்படி உணர்கிறார்களோ, அப்படியே அதை மொழிபெயர்க்கும் மொழியினரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பது என் கருத்து.

பிற மொழியினரின் வாழ்க்கை நடைமுறைகள், பழக்க வழக்கங்கள், பேச்சு போன்றவற்றைத் 'தற்சமம்' என்ற பெயரில் நமது மொழிக்கு மாற்றும்போது அவற்றின் உண்மைத் தன்மை அடிபட்டுப் போகிறது. எனவே, 'இலக்கிய மேதாவிகள்' குறிப்பிடும் தற்சமத்துக்குள் நுழையாமல் மலையாள மொழியின் இயல்புத் தன்மையிலேயே, அதை அப்படியே நேரடியாக மொழிமாற்றம் செய்திருக்கிறேன்.

இதில் 'தம்பி' என்று வரும் சொல்லுக்கு ஒரு குறிப்பிட்ட இனத்தவர் அல்லது பரம்பரையின் பெயர் என்பது பொருள். நாம் தமிழில் பயன்படுத்தும் 'தம்பி'என்ற சொல்லுக்கும் இதற்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது. இரண்டாவதாக 'அந்தர்ஜனம்'. இந்தச் சொல்லுக்கு வீட்டை விட்டு வெளியேறாத நம்பூதிரிப் பெண்கள் என்று பொருள். 'தறவாடு' என்பது குறிப்பிட்ட ஒரு பரம்பரை, பாரம்பரியம், பாரம்பரிய வீடு போன்ற பொருட்களைக் கொண்டது. இதற்கெல்லாம் நாம் 'தற்சம'ங்களைத் தேடிக் கொண்டு செல்ல, அப்படிப்பட்டவை தமிழில் நடைமுறையில் இல்லை என்பதை உணரவேண்டும். இரண்டும் கெட்டான்களாக இந்த மாதிரி வார்த்தைகளைப் பயன்படுத்துபவர்கள், இதைப் புரிந்துகொள்வது நலம். 'சமம்' என்ற நல்ல தமிழ் வார்த்தையின் பொருள் புரியாமல் இப்படியொரு வார்த்தையை அவர்கள் பயன்படுத்தியிருக்கவும் வாய்ப்பு உண்டு. ஒரு மாநிலத்துக்குள்ளேயே வெவ்வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், தங்களது வட்டார வழக்கில் எழுதும் கதைகளுக்கு இந்த மேதாவிகள் தற்சமம் கேட்பதுண்டா? அல்லது அப்படிப்பட்ட வார்த்தைகள் ஒட்டுமொத்தத் தமிழகத்துக்கும் அப்படியே தெளிவாகப் புரிந்துவிடும் என்று இவர்கள் கருதுகிறார்களா என்பது எனக்கு விளங்கவில்லை!

பிறமொழி, இனத்தவரைக் குறித்து நாம் புரிந்துகொள்ள முற்படும் காரியங்களை இந்தத் தற்சமம் அழித்துவிடும் என்றே கருதுகிறேன். உண்மையைச் சொன்னால், 'தற்சமம்' என்பதற்கான பொருள் அவர்களுக்கு விளங்கவில்லை என்றோ அல்லது தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றோ நான் கருதுகிறேன்.

மலையாள மொழியில் வெளியாகும், 'மலையாள மனோரமா'வில் எண்பதுகளின் கடைசியில் பிரம்மரக்ஷ என்ற பெயரில் கோட்டயம் புஷ்பநாத் எழுதிய நாவலின் மொழிபெயர்ப்பு இது. தமிழ் மாத இதழ் ஒன்றில் ஏறத்தாழ இதன் பாதிப்பகுதி தொடராக வெளிவந்தது. அதை இப்பொது முழுமையாகத் தந்திருக்கிறேன்.

அனுமதி அளித்த மதிப்புக்குரிய கோட்டயம் புஷ்பநாத், வெளியிடும் கவிதா பப்ளிகேஷன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகின்றன.

தோழமையுடன்,

# 1

“அதோ... அங்கு... அந்தப் பனங்காட்டுக்குள் தென்படும் இருள் குவியல்தான் எழுமற்றூர் மனை.”

“ஒரு காலத்தில் அந்தக் கிராமத்தின் முக்கால்வாசிச் சொத்துகளும் அவர்களுடையதுதான்!”

இடச்சேரி தறவாட்டைச் சேர்ந்த வாசுதேவன் தம்பியின் திருமணத்தில் கலந்துகொள்ள வந்திருந்தவர்கள்தான் இப்படிப் பேசியவர்கள்.

இடச்சேரி தறவாட்டில் அன்றைக்கு ஒரு திருவிழாவின் கம்பீரமும், களையுமிருந்தன.

நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த வந்த நாலுகட்டுக்குச் சுற்றிலும், நடுமுற்றத்திலும் குருத்தோலைகள் மற்றும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அந்த அலங்காரம் ஐந்து மைல் தொலைவிலுள்ள தைக்காட்டுத் தரை சேதுமாதவன் தம்பியின் வீடுவரை நீண்டிருந்தது.

அதுதான் மணப்பெண்ணின் வீடு.

திருமணம், வியாழக்கிழமை காலையில் பத்துக்கும் பதினொன் றுக்கும் இடைப்பட்ட முகூர்த்தத்தில்.

நெற்றிப்பட்டம் கட்டிய ஏழு கம்பீர யானைகள் பின்தொடரப் பெண் அழைப்பு நடந்தது.

வாத்தியங்களும், மேளங்களும் நானாவித முறைகளில்...


மின்னூல் ஆக்கம் - தமிழ்நேசன்
மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net
TAMILEBOOKS

அலங்கரிக்கப்பட்ட குதிரை வண்டியில் மாப்பிள்ளை வாசுதேவன் தம்பி.

பெண்ணின் வீட்டிலும் திருவிழாக் கோலம்தான்.

நாக வரக் கச்சேரியும், பக்க மேளங்களும் மாறி மாறி ஒலித்தன. கிட்டத்தட்ட அது ஓர் இசைப் போட்டியேதான்!

"மாப்பிள்ளை வீட்டார் வந்து விட்டார்கள்!" யாரோ ஒருவர் கூறினார்.

மறுபடியும் சூழ்நிலை இசைக் கோலாகலமாக மாறியது.

முகூர்த்தவேளை நெருங்கியது.

கல்யாண மண்டபத்தில் புரோகிதர் நுழைந்து, ஏற்பாடுகள் செய்யத் தொடங்கியதும் சத்தங்கள் படிப்படியாகக் குறைந்தன.

மாப்பிள்ளையை மண்டபத்துக்கு வழிநடத்திச் சென்று உபசரித்தார்கள்.

அடுத்த முறை மணமகளுடையது. மாதவன் தம்பி என்ற மிகவும் புகழ் பெற்றவரின் மகள் ஓமனக் குஞ்ஞம்மா. மிகவும் நிதானமாகத் தோழிமார் புடைசூழ அழைத்து வரப்பட்டு மணமகனின் அருகே உட்கார வைக்கப்பட்டாள்.

ஓமனா, செல்லச்சீராட்டுக்கு உரியவள்தான்.

பளிங்குக் கல்லில் வடித்தெடுத்த ஒரு தேவகன்னிகை போலிருந்தாள் அவள்.

இடுப்பைத் தாண்டி நீண்டு வளர்ந்திருந்த தலைமுடி. அதைப் பின்னலிட்டு பூவால் மூடியிருந்தார்கள். உச்சந்தலைப் பகுதியில் நடுவகிட்டில் பன்னிரண்டு வைரக்கற்கள் பதித்த பதக்கம் ஒன்று பளபளத்தது.

வானவில் போன்ற அழகான புருவங்கள். எள்ளுப் பூ போன்ற அழகான மூக்கு, தாமரை இதழ்களின் வண்ணத்தில் வடித்தெடுத்த அழகான உதடுகள். மாலை நேரக் குங்குமச் சிவப்பைப் பிரதியெடுத்த கன்னக் கதுப்புகள்.

இவையெல்லாமே ஓமனாவின் அழகை அதிகப்படுத்தின.

வாசுதேவன் தம்பியும் அழகில் சளைத்தவர் இல்லை. ஆஜானுபாகுவான தோற்றம். விரிந்த மார்புகள். தசைப்பற்றான கை-கால்கள். கருமையான தலைமுடி. முகத்துக்குப் பொருத்தமான மீசை. தொப்பூழ்கொடி வரை நீண்டு கிடக்கும் தங்கத்தால் கட்டடப்பட்ட ருத்திராட்ச மாலை. பெண்கள் விரும்பும் முகம். இதெல்லாம் தம்பியின் தோற்றப் பொலிவு.

புரோகிதர் மந்திரம் ஓதிக் கொண்டிருந்தார்.

தாலி கட்டும் நேரமானது.

தங்கத்தாலி கோத்த, தங்க நூலிழைகளால் திரிக்கப்பெற்ற சரடின் இரண்டு முனைகளை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு தம்பி முன்புறமாக நகர்ந்தபோது, சட்டென்று மிகவும் பயங்கரமான ஹுங்காரத்துடன் சுழற்காற்று வீசியது.

கல்யாணப் பந்தல் ஆடியலைந்தது. கல்யாண மண்டபம் குலுங்கிய்து. நில விளக்குகளில் எரிந்து கொண்டிருந்த தீப தாளங்கள் வட்டமாகச் சுற்றியலைந்து திரியிலிருந்து வேறுபட்டு மேற்புறமாக பெயர்ந்து உயர்ந்தன.

எங்கேயெல்லாமோ ஒளிந்திருந்தவை போல் வானத்தில் கார்மேகங்கள் ஒன்று திரண்டன. பயங்கரமான ஒரு மழைக்கு அறிகுறியாக இயற்கையே கருமையடைந்தது.

வெளியே தென்னந்தோப்புகளில் பிணைத்திருந்த யானைகள் திசையெட்டும் நடுங்குமாறு பிளிறின.

அங்கு கூடியிருந்தவர்கள் பர பரம் பார்த்துக் கொண்டனர்.

"சீக்கிரம் தாலி கட்டுங்கள். முகூர்த்தம் முடியப் போகிறது" புரோகிதர் நினைவுபடுத்தினார்.

வாசுதேவன் தம்பி, மணப்பெண்ணின் கழுத்தருகே தாலியைக் கொண்டு செல்வதற்குள், அவர் சகோதரி கயிறுகளில் முடிச்சுகளைப் போட்டாள்.

புரோகிதர், பூமாலைகளை மணமக்களிடம் கொடுத்தார்.

தம்பி, தன் கையிலிருந்த மாலையை ஓமனாவின் கழுத்தில் அணிவிக்க முயன்றபோது, நிலவிளக்கு ஒன்று தலைகுப்புற விழுந்தது. இருப்பினும் ஒருவாறாக சடங்குகள் தொடர்ந்து நடைபெற்றன.

இயற்கையில் நடந்த சம்பவங்களைத் தற்காலிகமான இயற்கையின் சீற்றம் என்றே எல்லாரும் கருதினர்.

ஆனால், வாசுதேவன் தம்பியின் மனதில் ஒரு கருமையான நிழல் படிந்தது.

விருந்துபசாரங்கள் திட்டமிட்டபடி நடந்தன. விருந்துக்குப் பிறகு மணப்பெண்ணுடன், மாப்பிள்ளை வீட்டார் தங்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தனர்.

எழுமற்றூர் மனையை ஒட்டியே கல்யாண கோஷ்டி ஊர்வலமாக வந்தனர்.

அந்த இடத்தை அடைந்தபோது மற்றொரு சம்பவம் நடந்தது.

முன்புறமாக நடந்து வந்த யானைகள் ஏழும் எதையோ கண்டு பயந்தவை போல் திடுமென்று அலறின. மேற்கொண்டு கால் எடுத்து வைக்காமல் அவை அப்படியே அசைவற்று நின்றன.

அப்போதும் தம்பியின் மனம் பதறியது.

“யானைகள் அப்படியே நிற்கட்டும். நாம் போகலாம்” வயது முதிர்ந்த ஒருவர் யோசனை கூறினார்.

எனவே, மணமக்களும் அவர்களின் உறவினர்களும் நடந்தே வீட்டை அடையத் தீர்மானித்தனர்.

அவர்கள் இடச்சேரித் தறவாட்டுக்குள் நுழைந்தபோதும் விருந்து மற்றும் உபசாரங்கள் குறைவின்றித் தொடர்ந்தன.

மாலை நேரமாவதற்குள் பெரும்பாலானவர்கள் விடைபெற்றுப் பிரிந்தனர். மீதமிருந்தவர்கள் பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட வர்களும் பெரும் பெரும் பதவிகளில் இருப்பவர்களும்தாம்.

அவர்களுக்குப் பரிமாறுவதற்காகப் பிரத்தியேகமான பானம் மற்றும் உணவு வகைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. விருந்து ஆரம்பமானதும் அந்த அறையின் கதவை மூடினர். காரணம், அங்கு பரிமாறிய உணவு மற்றும் பானங்களை அந்தத் தறவாட்டைச் சேர்ந்த பெண்களோ, உறவினர்களில் மீதமிருப்பவர்களோ பார்த்துவிடக் கூடாது என்பதற்காகத்தான்.

கோழி, வாத்து போன்றவற்றுடன் ஆடு, முயல் போன்றவற்றின் இறைச்சிகளை பல்வேறு வகையாகச் சமைத்து பத்திரமாகப் பாத்திரங்களில் போட்டு எடுத்து வந்தனர். அவற்றையெல்லாம் அறைக்கதவை மூடிய பிறகே திறந்தனர்.

சற்று நேரத்துக்குப் பிறகு மது பாட்டில்களின் மூடிகள் திறக்கப்படும் ஓசைகளுடன், சோடா பாட்டில்களின் மூடிகளைத் திறக்கும் சத்தமும் இடைவிடாமல் கேட்டன.

பெரும்பாலான பாட்டில்கள் காலியான பிறகு, அங்கு நடைபெற்ற உரையாடல்கள் வித்தியாசமாக இருந்தன. பர பரம் ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத வார்த்தைகள் உயர்ந்தன.

“நம் புது மாப்பிள்ளையும் இதையெல்லாம் கொஞ்சம் அனுபவிக்கட்டுமே!” தாசில்தார் சங்கரன் நாயர் உரத்த குரலில் கூறினார்.

“ஐயோ... வேண்டாம். இன்றைக்கு மட்டும் என்னை இதிலெல்லாம் சேர்க்காமல் விட்டு விடுங்கள். இன்றைய தினம் என் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு நாள் இல்லையா?” தம்பி கூறினார்.

“இப்படியெல்லாம் பேசினால் எப்படி? தம்பியும் எங்களுடன் உட்கார்ந்து சாப்பிட வேண்டும். இல்லை என்றால் நான் இத்துடன் எல்லாவற்றையும் நிறுத்திக் கொள்கிறேன்” ரேஷன் மொத்த வியாபாரி கரியாச்சன், தன் கையிலிருநத கிளாசில் நிறைந்திருந்த மதுக் கலவையை ஒரே மூச்சில் குடித்துவிட்டுக் கூறினார். பிறகு அவர் அந்த கிளாசில் மதுவை ஊற்றினார்.

அதற்குள் மேலும் ஐந்து அல்லது ஆறு பேர் கிளாசுகளில் மதுவை நிரப்பிக்கொண்டு தம்பிக்குச் சுற்றும் சூழ்ந்து கொண்டனர். எல்லாருமே தம்பியைக் குடிக்குமாறு வற்புறுத்தினர்.

அவர்கள் எல்லாருமே சமூகத்தில் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள்.

தம்பி, மன்னிக்குமாறு அவர்களிடம் மறுபடியும் கேட்டுக் கொண்டார்.

"இப்படிச் சொன்னால் எப்படி? சரி, நீங்கள் குடிக்காவிட்டால் இதையெல்லாம் உங்கள் தலையில் ஊற்றிக் குளிப்பாட்டி விடுவோம்... பரவாயில்லையா?"

அவர்கள் எல்லாரும் அளவுக்கு மீறிக் குடித்திருக்கிறார்கள். தான் குடிக்காவிட்டால், தன்னை மதுவால் அபிஷேகம் செய்வார்கள் என்று தம்பிக்கு உறுதியாகத் தெரிந்தது. எனவே, அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்களில் ஒருவரிடமிருந்து நிறைந்த கிளா ஒன்றை வாங்கி, மிகக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவைத்த வாறே தம்பி நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

உடனே மற்றொருவர் ஃபோர்க் ஒன்றில் மாமிசத் துண்டு ஒன்றைக் குத்தி எடுத்துக்கொண்டு தம்பியை நெருங்கினார்.

"இந்தாருங்கள்... இதையும் சாப்பிடுங்கள்."

"கடவுளுக்கு பயந்து இந்த ஒரு விஷயத்தில் மட்டுமாவது என்னை வற்புறுத்தாதீர்கள்!"

"இது என்ன வார்த்தை! எங்கள் சந்தோஷத்துக்காக இந்த ஒரேயொரு துண்டையாவது சாப்பிடுங்கள்!" கறித்துண்டு கொண்டு வந்தவர் வற்புறுத்தினார்.

"இன்று ஒருநாள் மட்டும் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்" தம்பி மிகவும் பணிவுடன் பேசினார்.

"அதுவும் சரிதான். தம்பி சொல்கிறபடி இன்றைக்கு அவர் கறி எதையும் சாப்பிட வேண்டாம். மது அருந்தினால் போதும்" தாசில்தார் தீர்ப்பு சொன்னார்.

எனவே, நல்லவேளையாகத் தம்பி அதிலிருந்து தப்பித்தார். இருப்பினும் மேலும் இரண்டு கிளா மதுக்கலவையை அவர் குடிக்க வேண்டி வந்தது.

மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது.

அந்த அறைக்குள் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஏறத்தாழ மூக்குமுட்டக் குடித்திருந்தனர். எனவே, ஒவ்வொருவராகத் தள்ளாடித் தள்ளாடி விழத் தொடங்கினர். ஒருசிலர் தடுமாற்றத்துடன் எழுந்து கதவைத் திறந்து வெளியேறினர். அவர்களை பத்திரமாகக் கொண்டுபோய் வீடுகளில் விட, தம்பியின் வேலைக்காரர்கள் அங்கு தயாராகக் காத்திருந்தனர்.

சுமார் பத்தரை மணியானபோது மதுவின் வாசனையும், வியர்வை நாற்றமும் அடங்குவதற்காக வாசுதேவன் தம்பி பேட்டின் உதவியால் பல் தேய்த்தார். பிறகு நன்றாகக் குளித்தார். வெள்ளை வேட்டி ஒன்றை உடுத்திக்கொண்டு முகத்தில் பௌடர் போட்டுக் கழுத்திலும் மார்பிலும் கொஞ்சம் சென்ட் போட்டுக்கொண்டு முதலிரவு அறைக்குள் நுழைந்தார்.

அந்த அறைக்கதவு திறந்து கிடந்தது. அறைக்குள் கோல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உள்ளே நுழைந்தவுடன் தம்பி கதவை மூடித் தாழிட்டார்.

வெண்பட்டு விரித்த மெத்தையில் மல்லிகைப் பூக்கள் தூவப்பட்டிருந்தன. அதில் ஒருபுறமாகச் சாய்ந்து தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தாள் மணப்பெண்.

கதவைத் திறந்து மூடிய சத்தத்தில் அவள் ஒடுங்கியது போல் தம்பிக்குத் தோன்றியது.

அந்த அறைக்குள் மல்லிகைப் பூக்களின் மணம் அடர்த்தியாக நிறைந்திருந்தது.

“நான் ரொம்பத் தாமதமாகி விட்டேனோ?” தம்பி மன்னிப்புக் கோரும் குரலில் கேட்டார்.

அழகின் மொத்த வடிவமாக அமர்ந்திருந்த மணமகள் அதற்கு பதில் சொல்லவில்லை. அவள் அப்போதும் அலங்கரித்த நிலையி லேயே இருந்தாள்.

"இதையெல்லாம் கொஞ்சம் அவிழ்த்து வைக்கக் கூடாதா? நான் வந்து எவ்வளவு நேரமாகிறது?" தம்பி. சற்று நகைச்சுவையுடன் பேசினார்.

அதைக்கேட்ட புது மணப்பெண் ஓரக்கண்களால் தம்பியைப் பார்த்தாள். அவள் உதடுகளின் கடைக்கோடியில் சிறு புன்னகை யொன்று மலர்ந்தது.

தம்பி. அவள் தலைமுடியில் சூடியிருந்த மல்லிகைப் பூக்கள் கோத்த மாலையை மெதுவாக அவிழ்த்துச் சேதப்படுத்தாமல் படுக்கையில் வைத்தார். அதன்பிறகு நெற்றிச் சுட்டியை அவிழ்த்து வைத்தார்.

"இதையெல்லாம் போட்டுக்கொண்டு படுத்தால் உடம்பை உறுத்தாதா? உனக்கு மட்டுமல்ல..." அவர் கூறினார்.

இதைக் கேள்விப்பட்டதும் ஓமனா புளகாங்கிதம் அடைந்ததாக அவருக்குத் தோன்றியது.

"எல்லாவற்றையும் நான் ஒவ்வொன்றாக அவிழ்க்கிறேன். கொஞ்சம் திரும்பி உட்கார்" தம்பி கூறினார். பிறகு அவர், அவள் கழுத்தில் கிடந்த செயின்களை ஒவ்வொன்றாகக் கொக்கியிலிருந்து விடுவித்துக் கழற்றத் தொடங்கினர். எல்லா செயின்களையும் கழற்றிய பிறகு அவர், அவளைத் தன் பக்கமாகத் திருப்பினார். அவளின் தாடையைப் பிடித்து உயர்த்திய அவர், அவள் முகத்தை ஊன்றிப் பார்த்தார். "ஆகா... என்ன ஓர் அழகு!" அவர் தன்னையும் மீறி வார்த்தைகளை வெளியிட்டார்.

"இந்த முடியின் பின்னலையும் அவிழ்த்து விட்டால் எவ்வளவு அழகாக இருக்கும்? மேகங்களுக்கு நடுவே நிலாவைப் பார்ப்பது போலிருக்கும்!" அவர் பாட்டுக்குப் பேசினார்.

அதைக் கேட்ட அந்தப் பேரழகி மீண்டும் புன்னகைத்தாள். அந்தக் கண்களில் வெட்கம் தளம் அமைத்தது.

"என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா?" அவர், அவள் கண்களை உற்றுப் பார்த்தபடி கேட்டார்.

"உம்.." அவள் முனகினாள்.

"இப்படிச் சொன்னால் போதுமா? தெளிவாகச் சொல். நான் காதாரக் கேட்க வேண்டும்!"

"நிறையப் பிடித்திருக்கிறது!" அவள் கூறினாள்.

"உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?" அவர் தொடர்ந்தார்: "என்னுடைய இதுவரையிலான வாழ்க்கையில் நான் இப்போதுதான் முதன்முறையாக ஒரு பெண்ணை நெருங்குகிறேன். அதாவது இவ்வளவு நெருக்கத்தில்!" அவர், அவள் நெற்றியின் மத்தியிலிருந்து தன் சுட்டுவிரலைக் கீழ்நோக்கி இறக்கி மூக்கின் முனை மீது நிற்க வைத்தார். அங்கிருந்து அந்த விரல் உதடுகளுக்கு நகர்ந்து, அங்கிருந்து தாடை பிறகு கழுத்து என்று தொடர்ந்து கீழ்நோக்கி இறங்கியது.

திடுமென்று அவள், அறியாமல் செய்வது போல் அந்தக் கையைத் தட்டி ஒதுக்கினாள்.

"நான், ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டும் - வாழ்க்கையில் முதல் தடவையாக!" என்று சொன்னவர், அவளைக் கட்டிலில் தள்ளினார்.

பட்டு உறை போர்த்திய தலையணையில் தலை அமர்த்தி, அவள் மட்டமல்லாக்கப் படுத்திருந்தாள்.

"நான் ஒரு தடவை பார்க்கட்டுமா?" அவர் கேட்டார்.

அவள் மறுபடியும் முனகினாள்.

அவள் உடலை மூடியிருந்த சரிகைத் துணியை, தம்பியின் விரல்கள் அகற்றின. அவற்றை அவர் கட்டிலின் சட்டங்களில் போட்டார்.

அதன் பிறகு சிவந்த பட்டு ரவிக்கையின் ஊக்குகளை அவர் விரல்கள் ஒவ்வொன்றாகப் போட்டி போட்டு அவிழ்த்தன,

ஒரு சிலை மாதிரி அவள் அசையாமல் கிடந்தாள்.

வாசுதேவுன் தம்பியின் கை விரல்கள் கீழ்ப்புறமாக இறங்கின. தொப்பூழின் கீழ்ப்பகுதியில்.... அங்கும் விரல்கள் அசைந்தன.

ஒரு சந்தனச்சிலை மாதிரி அவள் தம்பியின் முன்னால் கிடந்தாள்.

“நான் ஒரு தடவை பார்க்கிறேன்” அவர் எழுந்துபோய் கோல்விளக்கை எடுத்துக்கொண்டு வந்தார்.

அவர் கண்கள் நெற்றியிலிருந்து கீழ்ப்புறமாக இறங்கி மார்பகங்களில் வந்து நின்றன. உடையற்ற அந்த மார்பகங்களின் நடுவில் கறுப்பான ஒரு மச்சம். ஒரு குங்குமப் பொட்டின் வட்டப் பரப்பளவில்... தம்பி சட்டென்று அவள் முகத்தைப் பார்த்தார்.

அந்த முகத்தில் ஒரு மாற்றம். அது விநாடிக்கு விநாடி மாறிக்கொண்டே இருந்தது. வாசுதேவன் தம்பி திடுக்கிட்டு அப்படியே அசைவற்று நின்று போனார்.

“என் பகவதீ!” என்று கூறியபடி அவர் திரும்பினார். ஆனால், அவரால் அசைய முடியவில்லை!

## 2

**வா**சுதேவன் தம்பியின் தோளில் சில்லென்ற கைப்பகுதி ஒன்று படிவது போல் அவருக்குத் தோன்றியது.

பயம் ஒரு நண்டைப் போல் அவர் இதயத்தின் சுவர்களில் மரத்துப்போன தன் கால்களைக் குத்தி இறக்கியது.

தம்பி திடுக்கிட்டுப் பார்த்தார். தான் பார்த்து பயந்த உருவம் இன்னும் அந்தக் கட்டிலில்தான் படுத்திருக்கிறது. ஆனால், அதன் கைகளுக்கு நல்ல நீளம். அது நீண்டு வந்து அவரைப் பிடித்திருக்கிறது.

திடுமென்று ஓர் இழுப்பு.

அவர் கட்டிலில் அப்படியே உட்கார்ந்து விட்டார்.

“இங்கே பார்!” பிசிறடிக்கும் ஒரு குரல். கண்ணாடித் துண்டுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் குலுங்குவது போன்ற சத்தம். நடுநடுவே

தகரத் துண்டுகள் ஒன்றுடன் ஒன்று உராய்வது போன்ற சத்தமும் கேட்டது.

வாசுதேவன் தம்பி நிர்வாணமான அந்தப் பெண்ணுருவத்தைப் பார்த்தார்.

அவள் உரத்த குரலில் வாய்விட்டுச் சிரித்தாள்.

சிரித்தபோது அவர், அவள் பற்களைப் பார்த்தார்.

கூர்மையான நீண்ட பற்கள்.

அவள் மார்பக நுனிகள் நீலநிறத்துடன் விளங்கின.

அவள் தன் இடக்கையை உயர்த்தி அவரின் மற்ற தோளிலும் வைத்தாள். அந்தக் கைக்கும் நீளம் அதிகமாகி வந்தது.

"நான் யாரென்று உனக்கு விளங்கவில்லையா? நான் யாரென்று சொல்!" அவள் கலகலவென்று சிரித்தபடி கேட்டாள்.

"கார்த்திகா அந்தர்ஜனம்!" மிகவும் தயங்கித் தயங்கி அவர் மந்திரித்தார்.

"என்னை ஞாபகமிருக்கிறதா?" தாங்க முடியாத அவளின் சிரிப்பு மீண்டும் உயர்ந்தது.

"ஞாபகமிருக்கிறது!" தம்பி மந்திரிப்பது போல் பேசினார்.

"எந்த இடத்தில் என்னைப் பார்த்தாய்?" அவள் கேட்டாள்.

மறு விநாடி தம்பியின் மனதில் அந்தக் கடந்த கால சம்பவத்தின் திரைச்சீலை உயர்ந்தது.

**வெ**ற்றி வீரனும் வீரதீரப் பராக்கிரமசாலியுமான வாசுதேவன் தம்பி. எழுமற்றூர் இல்லத்தின் அப்பாவியான கோவிந்தன் நம்பூதிரி.

கோவிந்தன் நம்பூதிரி ஒரு காலத்தில் அந்தப் பகுதியின் ஜமீன்தாராக இருந்தார்.

அந்தக் கிராமத்தின் கோயிலும் அதற்குச் சுற்றிலுமுள்ள நிலப் பகுதிகளும் வயல்களும் எழுமற்றூர் இல்லத்துக்குச் சொந்தமாக இருந்தன.

குன்றின் உச்சியில் உயர்ந்து நிற்கும் எழுமற்றூர் பகவதி கோயிலின் தென்மேற்குப் பகுதியிலுள்ள நெல் வயலை ஒட்டி எழுமற்றூர் இல்லம் அமைந்திருந்தது.

இடச்சேரி தறவாட்டைச் சேர்ந்த தம்பிகள், எழுமற்றூர் மனையின் காவல் வீரர்களாக இருந்தனர். திருமேனிகள் அப்பாவிகளாக இருந்ததால், படிப்படியாக அவர்களின் சொத்துகள் ஒவ்வொன்றாக தம்பிமார்களின் கைவசமாகி, இடச்சேரி தறவாடு நாளுக்குநாள் வளர்ந்து வந்தது.

அந்தச் சூழ்நிலையில் எழுமற்றூர் மனையின் கடைசி வாரிசான பெண் குழந்தை கார்த்திகா அந்தர்ஜனத்தைத் தனிமையில் ஆழ்த்தி விட்டு, கோவிந்தன் நம்பூதிரி காலத்திரைக்குள் மறைந்தார்.

கார்த்திகா அந்தர்ஜனத்துக்குத் திருமணம் நிச்சயம் செய்த சூழ்நிலையில்தான் கோவிந்தன் நம்பூதிரி மரணமடைந்தார். எனவே, அவளது திருமணம் அடுத்த ஒரு வருட காலத்துக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

கார்த்திகா அந்தர்ஜனத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாப்பிள்ளை அரசாங்க உத்தியோகத்தில் நல்ல சம்பளம் பெறுபவராக இருந்தார். வயது சற்று அதிகமானாலும், அவர் சற்றுத் தொலைவில் உள்ள தாலுகா ஒன்றில் தாசில்தாராக வேலை செய்து கொண்டிருந்தார். உண்மையைச் சொன்னால், அவருக்கு இது இரண்டாம் கல்யாணம். முதல் மனைவிக்கு இரண்டு ஆண் குழந்தைகள். அந்த மனைவி இறந்து விட்டிருந்தாள்.

அந்த தாசில்தாரைக் குறித்து வாசுதேவன் தம்பிக்கு நன்றாகத் தெரியும். சட்டங்களை நன்றாக அறிந்து வைத்திருந்த அவர், முதல் மனைவியின் சொத்துகளைக் கைப்பற்றி வைத்திருந்த, அவள் சகோதரர்களிடமிருந்து எல்லாவற்றையும் மீட்டு எடுத்தார். அது தொடர்பாகச் சில வழக்குகள் நடந்தாலும் அதிலெல்லாம் அவருக்கே வெற்றி கிடைத்தது.

அந்த தாசில்தார், கார்த்திகா தம்புராட்டியைத் திருமணம் செய்து கொண்டால், தாங்கள் தற்போது அனுபவித்து வரும் சொத்துகளை

ஒருவேளை அவர் மீட்டு எடுக்க முயற்சி செய்யலாம் என்ற சந்தேகம் தம்பிகளுக்கு ஏற்பட்டது.

அதேசமயம் வாசுதேவன் தம்பியும் கார்த்திகா தம்புராட்டியும் உள்ளூரக் காதல் கொண்டிருந்தனர். எனினும் தன் ஜாதி மகிமைகளைப் புறக்கணித்துவிட்டு, தம்பியைக் கல்யாணம் செய்ய கார்த்திகா தம்புராட்டியால் முடியவில்லை.

அதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. சுயம்புவான எழுமற்றூர் பகவதி குடிகொண்டிருக்கும் கோயிலில் பூஜை செய்ய வேண்டியது. எழுமற்றூர் இல்லத்தைச் சேர்ந்த நம்பூதிரிகள் மட்டும்தான் என்ற ஒரு நிபந்தனை இருந்தது.

வேற்று ஜாதிக்காரரைத் திருமணம் செய்தால், அந்த வகையான மரபு துண்டிக்கப்படும் என்பதாலும் தம்புராட்டி அந்த யோசனையி லிருந்து பின்வாங்கினாள்.

மாதத்தில் ஆறு நாட்கள் தவிர மற்ற எல்லா நாட்களிலும் கார்த்திகா அந்தர்ஜனம்தான் கோயிலில் பூஜை செய்து வந்தாள்.

தம்பியைத் திருமணம் புரிய வேண்டும் என்று மனதில் அவள் தீர்மானித்த சூழ்நிலையில், ஒருநாள் தீபாராதனை முடிந்து நடை சாத்த வேண்டிய தருணத்தில் ''கார்த்திகா!'' என்றொரு குரல் கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள்.

எதிரில் தேஜ சொரூபினியான சாட்சாத் பகவதி நின்று கொண்டிருந்தார்.

கார்த்திகா தம்புராட்டி தலை தாழ்த்தி வணங்கினாள்.

“நீ நினைப்பது தவறு!'' தேவி கூறினார்.

கேள்விக்குறி நிறைந்த பார்வையுடன் அவள் தேவியைப் பார்த்தாள்.

“தம்பி உன்னைத் திருமணம் புரிந்து கொள்வதாகச் சொல்லி யிருப்பது ஒரு காரிய சாத்தியத்துக்காக. அவருக்குப் பல பெண்களுடன் தொடர்பு உண்டு. உன் சொத்துகளைக் கைப்பற்றிய பிறகு உன்னை அவர் கொன்று விடுவார்.''

தம்புராட்டி தேவி பேசுவதைக் கவனித்தாள்.

தேவி தொடர்ந்தார்: "எழுமற்றூர் இல்லத்தில் வசிக்கும் அருகதை தம்பிக்கு இல்லை. உன்னால் எழுமற்றூர் இல்லத்தை விட்டு வெளியேறவும் முடியாது. பூர்வ பிதாமகன்களின் ஆசாரங்களையும் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் ஒதுக்கி வைத்தால் அதனால் ஏற்படும் விளைவுகள் பயங்கரமாக இருக்கும். ஞாபகத்தில் இருக்கட்டும்."

தேவி மறைந்தார்.

கார்த்திகா அந்தர்ஜனம் கருவறையை நோக்கித் தொழுதாள்.

மறுநாள் வழக்கம்போல் தம்பி இல்லத்துக்கு வந்தார்.

கார்த்திகா அந்தர்ஜனத்தின் நடவடிக்கையில் தென்பட்ட மாற்றத்தால் அவருக்குச் சந்தேகம் தோன்றியது.

"நான் வந்திருப்பது இதுவரை சொல்லாத ஒரு விஷயத்தை வெளிப்படையாகப் பேசுவதற்காக!" தம்பி தயங்கித் தயங்கிப் பேசினார்.

"என்ன சொல்ல வேண்டுமோ, அதைச் சொல்லுங்கள். ஏன் வருத்தப்படுகிறீர்கள்?" தம்புராட்டி கதவை ஒட்டி நின்று கொண்டாள்.

"உங்கள் அப்பா திருமேனி இறந்துவிட்டார். எங்கிருந்தோ வரும் ஒருவர் உங்களை இரண்டாம் திருமணம் செய்துகொள்ளவிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்தச் சூழ்நிலையில் நான் இதைச் சொல்லாமல் இருப்பதும் சரியல்ல" தம்பி தொடக்கமிட்டுப் பேசினார்.

தம்பி என்ன சொல்ல வருகிறார் என்று தம்புராட்டிக்கு விளங்கியது.

"எனக்கு ஓர் ஆசை. வெளிப்படையாகப் பேசலாம் இல்லையா? நான் கார்த்திகாவை மனமார விரும்புகிறேன். என்னைத் திருமணம் செய்ய உனக்கு விருப்பமில்லை என்றால் போகட்டும். கார்த்திகா மற்றொருவரைத் திருமணம் செய்யாமல் இருக்கலாமே."

“ச்சீ... என்ன சொன்னாய்? முதலில் எழுந்திரு அங்கிருந்து!” திடுமென்று ஏற்பட்ட கோபத்தில் கார்த்திகா அந்தர்ஜனம் இப்படிப் பேசிவிட்டாள். இருப்பினும் மறுவிநாடியே தான் பேசியது தவறு என்று உணர்ந்து அதைத் திருத்திக் கொள்ளவும் முற்பட்டாள்.

“மன்னித்து விடுங்கள். வாய் தவறிப் பேசிவிட்டேன். நீங்கள் இந்தத் தறவாட்டைக் காவல் காக்கும் வீரர்கள் என்பதை நான் அந்த நேரத்தில் மறந்தே போனேன்.”

நிலைமை அவமானத்துக்கு உரியதாகி விட்டது என்பதை உணர்ந்த தம்பி சட்டென்று பேச்சின் போக்கை மாற்றினார்.

“என்னை மன்னித்து விடுங்கள் தம்புராட்டி! அடியேன் தெரியாமல் பேசிவிட்டேன். மேற்கொண்டு இப்படி நடக்காது. அது உறுதி. தம்புராட்டி என்னை மன்னித்து விட்டேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். அப்போதுதான் என் மனம் ஆறுதலடையும்!” தம்பி வருத்தமுற்றவர் போல் நடித்தார்.

“போகட்டும்... நான் எல்லாவற்றையும் மறந்து விட்டேன்.”

“இப்போதுதான் மனசுக்கு ஆறுதலாக இருக்கிறது!” வாசுதேவன் தம்பி எழுந்து நடக்கத் தொடங்கினார்.

ஒரு வாரம் கடந்தது.

வழக்கம்போல் கார்த்திகா அந்தர்ஜனம் கோயிலுக்குச் சென்று தீபாராதனைக்குப் பிறகு திரும்பி வந்தாள்.

அவள் பூஜையறை வாசலில் விளக்கு ஏற்றி துளசி மாடத்திலும் விளக்கு வைத்துவிட்டுத் திரும்பியபோது யாரோ படி கடந்து வருவதைக் கவனித்தாள். நெருங்கி வந்தபோது அடையாளம் தெரிந்தது... தம்பிதான்.

ஒரு மைல் தொலைவிலுள்ள சிவன் கோயிலில் திருவிழா நடைபெறுவதால், இல்லத்தின் வேலைக்காரர்கள் அங்கு போயிருக்கிறார்கள். எனவே, அந்தர்ஜனம் தனியாக இருந்தாள்.

தேவி குறிப்பிட்ட விஷயம் மனதுள் இருந்ததால், இயல்பான மரியாதையின் பொருட்டு தம்பியிடம் உட்காருமாறு கூறினாள்.

வராந்தாவில் கிடந்த தடுக்கை இழுத்துப் போட்டு தம்பி உட்கார்ந்தார்.

"என்ன இந்த நேரத்தில்?" தம்புராட்டி கேட்டாள்.

"நான் எப்போது வேண்டுமானாலும் இங்கு வரலாமே!"

'இப்போது, தான் தனியாக இருக்கிறோம்!' என்ற உணர்வு தம்புராட்டிக்கு ஏற்பட்டது. எனவே, நட்பான முறையில் எதையாவது பேசி தம்பியை அங்கிருந்து அனுப்பி வைப்பதே உசிதம் என்று நினைத்தாள். அவள் மனதில் பயம் ஏற்படாமலும் இல்லை.

"ச்சே... இன்றைக்கு என்ன ஒரு வெக்கை. குடிப்பதற்கு சம்பாரம் (நீர் மோர்) இருக்குமில்லையா?" தம்பி கேட்டார்.

"கொண்டு வருகிறேன்" தம்புராட்டி உடனே உட்புறம் சென்றாள்.

நீர் மோர் கொடுத்து எப்படியாவது தம்பியை அங்கிருந்து உடனடியாக வெளியேற்றிவிட வேண்டுமென்ற யோசனையுடன் அவள் சமையலறையை அடைந்தாள்.

வெண்கல டம்ளரில் நீர் மோர் எடுத்துக்கொண்டு திரும்பியபோது தன் தோள்களில் இரண்டு கரங்கள் படிவதாக அவளுக்குத் தோன்றியது.

திரும்பிப் பார்ப்பதற்குக்கூட முடியவில்லை. அதற்குள் அவர் ஒரு கைக்குழந்தை மாதிரி அவளை வாரி எடுத்திருந்தார்.

கார்த்திகா அந்தர்ஜனத்தை உட்புற அறையின் கட்டிலில் படுக்க வைத்தார் தம்பி. மார்பை இறுக்கிப் பிடித்திருந்த ரவிக்கையின் ஊக்குகளை அவரின் வலிமையான விரல்கள் தகர்த்து எறிந்தன. கடுமையான மதுவின் நாற்றம் தம்புராட்டியின் மூக்கைத் துளைத்து ஊடுருவியது. அவளின் தளிர் போன்ற மேனியில் தம்பியின் வலிமையான தசைப் பகுதிகள் உராய்ந்தன.

தம்பி அங்கிருந்து வெளியேறியதும் கட்டிலிலிருந்து எழுந் திருக்க முயன்ற கார்த்திகா தம்புராட்டியை மற்றொருவரின் கை பிடித்து அழுத்தியது.

அதன்பிறகு ஐந்து பேர்!

அவர்கள் எல்லாருமே தம்பியின் நண்பர்கள். மது அருந்திவிட்டு அவர்கள் எல்லாரும் ஒரு தீர்மானத்துடன் வந்திருந்தனர்.

மறுநாள் கார்த்திகா அந்தர்ஜனத்தின் உடல் இல்லத்தைச் சேர்ந்த குளத்தின் தெளிந்த நீரில் மிதந்தது. வேலைக்காரர்கள் தம்பியிடம் வந்து தகவல் தெரிவித்தனர்.

நாட்களும் மாதங்களும் கடந்து, ஐந்து வருடங்களும் சென்றன.

எழுமற்றூர் இல்லம் வாரிசு இன்றி அழிந்தது. கோயிலில் பூஜை முடங்கியது. கோயிலுக்குச் சுற்றிலும் புற்கள் வளர்ந்தன. இஞ்சை எனப்படும் புல், கருவறைக்குள்ளும் ஊடுருவிப் படர்ந்தது.

அந்தத் தறவாட்டின் மீதமுள்ள சொத்துகளும் தம்பியின் கைக்கு வந்து சேர்ந்தன.

கடந்த கால சம்பவங்கள்...

மறதி... எல்லாவற்றையும் அழித்துத் துடைத்து விடுகிறது.

**இ**ப்போது -

இதோ... அவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே வடிவமாகக் கட்டிலில் கிடப்பதை தம்பி பார்த்தார்.

"என்னை மன்னித்துவிடு. என்னை மன்னித்துவிடு!" தம்பி மன்றாடினார்.

"மன்னிப்பதா! இந்தச் சந்தர்ப்பத்துக்காக நான் எத்தனை காலமாகக் காத்திருக்கிறேன்!" அந்த உருவம் தொடர்ந்து பேசியது: "உங்கள் ரத்தம் எனக்கு வேண்டாம். அது அசுத்தமானது. ஆனால், உங்கள் சக்தி எனக்குத் தேவை. அந்தச் சக்தியை நான் உங்களிட

மிருந்து நிதானமாக உறிஞ்சி எடுத்துக் கொள்வேன் - இப்படி அணு அணுவாக!'' அந்த உருவம் உரத்த குரலில் வாய்விட்டுச் சிரித்தது.

பிறகு தம்பியை விசையுடன் கட்டிலில் இழுத்துப் போட்டது.

# 3

**எ**தையும் தன் பக்கமாக இழுத்து நெருக்கப்படுத்திக் கொள்ளும் வல்லமை அவளுக்கு இருந்தது.

தம்பி, தடுக்க முயற்சி செய்தாலும் அவள், அவரைக் கீழ்ப்படுத்தினாள். தம்பியின் சக்தியை விநாடிக்கு விநாடி அவள் கவர்ந்தெடுக்கவே செய்தாள். இறுதியில் அவர் சோர்வடைந்து போனார்.

எப்படியாவது அவளது பிடியிலிருந்து விடுபட வேண்டும் என்ற வேட்கையுடன் அவர் படுக்கையிலிருந்து எழுந்து வெளியே ஓடினார்.

அவள் தடுக்கவில்லை.

ஆனால், அவளது உரத்த குரலிலான சிரிப்பு அவரைப் பின்தொடர்ந்தது.

முற்றத்தில் போட்டிருந்த பந்தலின் கீழே, ஒரு மூலையில் இருவர் அமர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தனர்.

அவர்கள் கல்யாணத்தில் பங்குகொள்வதற்காக வெகு தொலைவிலிருந்து வந்தவர்கள். ஆதலால், அன்றிரவு அங்கு தங்கியவர்கள்.

அவர்களை நெருங்கியதும் தம்பி சட்டென்று தனக்குள் உயர்ந்த பயத்தை ஒதுக்கிவிட்டு, நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டு அதில் அமர்ந்தார். அப்போதும் அவருக்கு மூச்சிரைத்தது.

முதலிரவு அறையிலிருந்து வெளியே வந்த அவரை அவர்கள் மேலும் கீழுமாகப் பார்த்தனர். தம்பியின் உடல் மொத்தமும் வியர்த்திருப்பதைப் பார்த்ததும் அவர்களுக்குச் சிரிப்பு வந்தது.

"என்ன கொஞ்சம் போடுகிறீர்களா?" அவர்களில் ஒருவர் கேட்டார்.

தம்பி அதற்கு பதில் எதுவும் சொல்லாமல் அங்கிருந்த மது புட்டியைக் கையில் எடுத்தார். ஏறத்தாழ அதில் பாதியளவு மது இருந்தது. ஒரே மூச்சில் அப்படியே அதில் முக்கால் பகுதியைக் குடித்தார்.

அங்கிருந்த இருவருக்கும் அப்போதும் விஷயம் எதுவும் விளங்கவில்லை. அவர்கள் இருவருமே தம்பியின் நெருங்கிய நண்பர்கள். தம்பியின் தனிப்பட்ட விஷயங்களிலும் சுதந்திரமாகக் கருத்து சொல்லக் கூடியவர்கள்.

"நாங்கள் இரண்டு பேரும் படுத்துப் பார்த்தோம். தூக்கம் வரவில்லை. அப்போது உங்கள் வேலைக்காரர் ஒருவரைப் பார்த்தோம். அலுப்பாக இருக்கிறது என்று சொன்னதும் அவர்தான் இதைக் கொண்டு வந்து கொடுத்தார்" ஒரு நண்பர் கூறினார்.

ஆனால், தம்பி அதையெல்லாம் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. வாழ்க்கையில் எவருக்கும் நேர்ந்திராத மாதிரியான ஆபத்தில் அவர் சிக்கியிருக்கிறார். சொன்னால் கூட எவரும் நம்ப மாட்டார்கள்!

தான் திருமணம் செய்துகொண்டு வந்த மணப்பெண்ணின் இடத்தில் எழுமற்றூர் இல்லத்தின் கடைசி அந்தர்ஜனம் படுத்திருக்கிறாள் என்று சொன்னால் யாராவது நம்புவார்களா?

அதுவும் இறந்து குளத்தில் கிடந்த தம்புராட்டி! எனவே, தம்பி அந்த விஷயத்தை மறைத்து வைத்தார். பின்பு அவர்களுடன் உட்கார்ந்து பேசி நேரம் கடத்தினார். அங்கேயே படுத்து உறங்கவும் செய்தார்.

விடியற்காலையில் சேவல் கூவியபோது தம்பி கண்விழித்தார். இந்த நேரத்தில் பேய், பிசாசுகளுக்கு பயப்பட வேண்டியது இல்லை என்பதால், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தம்பி, முதலிரவு அறைக்குள் நுழைந்தார்.

கட்டிலில் எவரும் இல்லை.

அப்படியானால், தான் திருமணம் செய்து அழைத்து வந்த ஓமனா எங்கே?· எப்படியிருந்தாலும் தனக்கு நேர்ந்த அனுபவத்தை எவரிடமும் சொல்வது நல்லது அல்ல என்று நினைத்தார். துண்டு மற்றும் சோப்பு எடுத்துக்கொண்டு குளக்கரையை நோக்கி நடந்தார்.

குளித்த பிறகு வழக்கம் போல் சாப்பாட்டு அறைக்குச் சென்றபோது, அங்கு அவர் சகோதரி நின்றிருந்தாள்.

ஆவி பறக்கும் சூடான இட்லியும் கொதிக்கக் காய்ச்சிய பாலும் மேஜை மீது தயாராக இருந்தன.

"ஓமனா, சட்னியை எடுத்து வா!" நாத்தனார் சந்திரிகா, சமையற்கட்டைப் பார்த்துக் குரல் கொடுத்தாள்.

தம்பி, சமையற்கட்டுப் பகுதியை உற்றுப் பார்த்தார்.

கடந்த இரவில் முதலிவு அறையில் நடைபெற்ற சம்பவம்... தனக்கு இப்படியோர் அனுபவம் ஏற்பட்டாலும் ஓமனா ஏன் முதலிவு அறைக்குள் வரவில்லை என்று தம்பிக்குத் தெரியவில்லை. இருப்பினும் பீதியேற்படுத்தும் அந்தச் சம்பவம் நிகழவே செய்தது.

வாசுதேவன் தம்பி ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்துக்குள் சாட்சாத் ஓமனா, ஒரு பாத்திரத்தில் சட்னியுடன் அந்த அறைக்குள் வந்தாள்.

வாசுதேவன் தம்பி ஊன்றிப் பார்த்தார். இது ஓமனாவேதான். அதில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது.

தான் இரவில் சந்தித்த உருவத்துடன் இவளுக்கு எந்தவிதமான ஒற்றுமையும் கிடையாது.

அப்படியானால் ஓமனா ஏன் முதலிரவு அறைக்கு வரவில்லை என்பது விடை தெரியாத கேள்வியாக தம்பியை உலுக்கியது! ஏன் வரவில்லை என்பதை எப்படி அவளிடம் கேட்பது?

"ஓமனா, நீயும் உட்காரம்மா!" சந்திரிகா கூறினாள்.

அவள் உட்காராமல் தயங்கித் தயங்கி நின்றாள்.

"உட்கார் ஓமனா! இந்த வீட்டில் அப்படியெல்லாம் ஒரு பழக்கமில்லை" சந்திரிகா வற்புறுத்தியதால் அவள் அமர்ந்தாள்.

"அண்ணா, நேற்று மாலை நேரத்தில் இருந்து ஓமனாவுக்கு ஒரே தலைவலி. மிளகு அரைத்துப் பற்றுப் போட்டுப் படுத்தாள். இன்று காலையில்தான் தலைவலி போனதாம்! இல்லையா ஓமனா,"

ஓமனா, 'ஆமாம்' என்பது போல் த்லையாட்டினாள்.

'ஓகோ இதுதானா விஷயம்! வாசுதேவன் தம்பி யோசனையில் ஆழ்ந்தார். அது சாதாரணமான ஒரு தலைவலியாக இருக்க முடியாது. கார்த்திகாவின் ஏதோ ஒரு ஜாலவித்தையாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், அதைப்பற்றி இப்போது எப்படிக் கேட்பது? எனவே, அமைதியாக இட்லியைச் சாப்பிட்டுவிட்டு எழுந்தார் தம்பி.

அன்று மத்தியானத்தில், கல்யாணத்துக்காக வந்திருந்த உறவினர்கள் எல்லாரும் கிளம்பி விட்டனர். இப்போது அந்த வீட்டினர் மட்டுமே மீதமாயினர். வாசுதேவன் தம்பியின் தங்கை சந்திரிகா படித்தவள். வயது இருபத்தாறு. அவளைக் கல்யாணம் செய்தவர் ராணுவத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றுபவர். அவர் வருடம் தோறும் தவறாமல் வந்து விடுமுறையைக் கொண்டாடிவிட்டுப் போவார். பாதி நாள் பாலக்காட்டில் உள்ள அவரது வீட்டில் இருப்பார். சந்திரிகாவை அந்த வீட்டுக்கு அவர் அழைத்துச் செல்வதே இல்லை. கணவனிடமிருந்து அன்பும், சுகமும் கிடைப்பது அந்த நாட்களில் மட்டும்தான். அவர் வரும்போது உடல்நலக் குறைவு ஏதாவது இருந்தால் அதுவும் இருக்காது!

சந்திரிகா உடல் ஆரோக்கியமானவள். இரட்டைநாடி உடம்பு என்று சொல்ல முடியாவிட்டாலும் தசைப்பிடிப்பான உடம்புதான்.

அந்த வீட்டின் காரிய தராகப் பணிபுரியும் கேசவன் குட்டியுடன் அவளுக்கு ரகசியத் தொடர்பு இருப்பதாகக் குளக்கரைக்கு வரும் பெண்கள் கிசுகிசுப்பது உண்டு.

அந்தக் குடும்பத்தில் உள்ள மற்றொரு நபர் தம்பியின் தாயாரான சாரதாம்மா. விதவையான அவர், கடவுள் பக்தியிலும், தியானத்திலுமாகப் பொழுதைக் கழிப்பவர்.

அவ்வளவு பெரிய வீட்டில் இவர்களுக்கு அடுத்தபடியாக இரண்டு வேலைக்காரர்கள்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு கொஞ்சம் கண் மயங்குவது தம்பியின் வழக்கம். அதை இழக்கப் பெரும்பாலும் அவர் விரும்புவது இல்லை. மட்டுமின்றி மிகவும் களைத்தும் போயிருந்தார்.

கட்டிலில் போய்ப் படுத்ததும் அவரால் உறங்க முடியவில்லை.

மல்லிகைப் பூக்களின் மணம் கட்டிலிலிருந்து இன்னும் மறையவில்லை. முந்தைய இரவில் தூவியிருந்ததும் கட்டித் தொங்க விட்டதுமான பூக்கள் எல்லாம் வாடி, உலர்ந்திருந்தன. அந்த அறைக்குள் வேறு எவருமே நுழையவில்லை. படுக்கையைப் பார்த்தபோது இரவு நடந்த சம்பவங்கள் உடனே மனதில் தெளிவடையத் தொடங்கியது - ஒரு பயங்கரக் கனவு மாதிரி.

அதில் படுக்கவே அவருக்கு பயமாக இருந்தது.

ஓமனா அந்த அறைக்கு வரவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட விநாடியிலிருந்து தம்பியின் பயம் அதிகரித்தது.

அவர் மெத்தை மீது விரித்திருந்த துணியைச் சுருட்டி ஒரு மூலையில் எறிந்தார்: அதன்பிறகு கட்டிலில் ஏறிப் படுத்தார்.

அவர் சன்னமான மயக்கத்துக்குள் கடந்தபோது இல்லத்தின் குளத்திலிருந்து கரைக்கு இழுத்துப் போட்ட கார்த்திகா அந்தர்ஜனத்தின் உருவம் மனதில் தெளிவடைந்தது.

அன்றைக்கு அந்தப் பிணத்தை குளத்தின் மேற்குப்புறம் வளர்ந்திருக்கும் எட்டி மரத்துக்கு வடக்கில்தான் புதைத்தனர்.

அன்று, புதைப்பதற்காகக் குழி தோண்டியபோது ஏற்பட்ட அனுபவத்தை தம்பி நினைவு கூர்ந்தார்.

குழி வெட்டத் தொடங்கியதும் சுமார் மூன்று அடி ஆழத்தில் கருங்கல்லில் செதுக்கியது போன்ற நீள் சதுரமான பெட்டி ஒன்று

தட்டுப்பட்டது. அதற்கு கல்லாலேயே செய்யப்பட்ட ஒரு மூடியும் இருந்தது. மேல் மூடியை உயர்த்தியபோது சரியாக ஒரு மனிதரைப் படுக்க வைக்கும் அளவுக்கு அதில் இடமிருந்தது விளங்கியது.

அதைக் குறித்து விசாரித்தபோது ஒரு தகவல் சொன்னார்கள். பழங்காலத்தில் கிழக்குத் திசையிலிருந்து கொள்ளைக்காரர்கள் வருவதுண்டாம். முரட்டுத்தனமான அவர்கள் எதற்கும் தயங்காத வர்கள். வழக்கமாக அவர்கள் கொள்ளையடிக்கத் தேர்ந்தெடுப்பதே இல்லங்களைத்தானாம். எனவே, கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக விலையுயர்ந்த நகைகள் மற்றும் பாத்திரங்களை இப்படிப்பட்ட ரகசிய அறைகளில் போட்டுப் பூட்டி வைப்பார்களாம். அதையும் இப்படிக் குழி தோண்டிப் புதைத்து வைப்பார்களாம்.

ஆனால், அப்போது அந்தக் கருங்கல் பெட்டியைத் திறந்து பார்த்தபோது அதற்குள் அப்படிப்பட்ட பொருள்கள் எதுவும் கிடையாது. அதைப் பார்த்ததும் தம்பிக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. கார்த்திகா அந்தர்ஜனத்தின் உடம்பை அதற்குள் போட்டு மூடி, மண்ணை நிரப்பிச் சரிசெய்தார்.

அதன் பிறகு வாசுதேவன் தம்பி அந்தப் பக்கமாகப் போனதே இல்லை.

தூக்கம் தம்பியின் கண்ணிமைகளுக்குக் கனம் கூட்டியது.

படுத்திருக்கும்போது, அந்த மெத்தைக்குள் எதுவோ ஒன்று அசைவது போல் அவருக்குத் தோன்றியது. ஏதோ ஒன்று உருண்டு புரள்வது மாதிரி.

சட்டென்று படுக்கையிலிருந்து துள்ளியெழுந்தவர், மெத்தையை ஒருமுறை முழுவதுமாகத் தடவிப் பார்த்தார்.

'ஒருவேளை தனக்கு அப்படித் தோன்றியிருக்கலாம்' என்று நினைத்தார். மீண்டும் படுத்தார். அவர் மறுபடி கண் விழித்தபோது மாலை நேரம் ஆகியிருந்தது.

காபி குடித்துவிட்டு தம்பி வீட்டிலிருந்து வெளியேறினார்.

அவர் கால்கள் அவரையும் மீறி எழுமற்றூர் இல்லத்தை நோக்கி நடக்கத் தொடங்கின. யாரோ தன்னை அந்தப் பக்கமாக இழுத்துக் கொண்டு போவது போல் தம்பிக்குத் தோன்றியது. 'எதற்காக, தான் இந்த இடத்துக்குப் போகிறோம்?' என்று அவர் தனக்குத் தானே கேட்டுக் கொண்டாலும் அதற்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை. இருப்பினும் அவர் பாட்டுக்கு நடந்தார்.

சூரியன் மறைந்து விட்டது. எனினும் கிழக்குப்புறக் குன்றுகளின் உச்சியில் பதுங்கிக் கிடந்த மேகங்களில் அந்தி நேரத்தின் சிவப்பு நிறம் தென்படவே செய்தது.

தம்பி முன்புறமாக நடந்துகொண்டே இருந்தார். கடைசியில் ஒருவாறாக அவர் எழுமற்றூர் மனையின் தெருவாசற்படியான படிப்புரையில் வந்து நின்றார்.

தன்னை யாரோ வலுவாகப் பிடித்து இழுப்பது போன்ற உணர்ச்சியுடன் அவர் இல்லத்தைச் சேர்ந்த அந்தப் பழைய குளத்தை நோக்கி நடந்தார். குளத்தை நெருங்கியபோது அங்கு, அரைகுறை வெளிச்சமே இருந்தது. பச்சை நிறமான பாசியும் நீர்வாழைக் கொடிகளும் குளத்தில் அடர்த்தியாகப் பரவிக் கிடந்தன.

எட்டி மரம் கருமையாக நின்று கொண்டிருந்தது. அதன் வட பகுதியில்தான் கார்த்திகா அந்தர்ஜனத்தைப் புதைத்திருந்தனர்.

வாசுதேவன் தம்பி சுற்றுமுற்றும் பார்த்தார். அந்தப் பிராந்தியம் மொத்தமும் ஆள் நடமாட்டம் அற்றிருந்தது. ஒரு வண்ணத்துப்பூச்சி கூட அங்கு பறக்கவில்லை. குளத்தின் நீர்ப்பரப்பும் அசைவற்றுக் கிடந்தது.

.தம்பி. அந்தக் குளத்தின் மேற்பரப்பையே பார்த்தபடி நின்றார்.

எங்கிருந்தோ சன்னமான காற்று வீசியது. எட்டி மரத்தின் இலைகளை அசைத்துக்கொண்டு அந்தக் காற்று கிழக்குத் திசை நோக்கி நகர்ந்தது. அந்தக் காற்று அதற்கு அப்பால் வளாந்து முதிர்ந்து பட்டைகள் செதில்களைப் போல் பரவிப் படர்ந்திருந்த மரோட்டி மரத்தின் சிகரப் பகுதிகளில் உள்ள இருட்டில் கலந்து மறைந்தது.

மறு விநாடி குளத்தின் நீர்ப்பரப்பில் நெல்பொரி போன்று சின்னச் சின்னக் குமிழ்கள் மேலெழும்பி வந்து வெடித்தன. தம்பியின் கண்கள் அவற்றின் மீதே பதிந்திருந்தன. திடுமென்று அந்தக் குமிழ்கள் தென்பட்ட பகுதியில் தண்ணீர் ‘பும்’ என்ற சத்தத்துடன் மேற்புறமாக உயர்ந்தது.

# 4

**வா**சுதேவன் தம்பியின் உடம்பிலுள்ள வியர்வைத் துளைகளின் வழியாக வியர்வை பீய்ச்சியடிக்கத் தொடங்கியது.

தான் எதைப் பார்க்கிறோம்!

அசைவற்றுக் கிடக்கும் குளத்தின் மேற்பரப்பை ஊடுருவிக் கொண்டு கறுத்த உருவம் ஒன்று மேற்புறமாக உயர்ந்து வந்தது.

தனக்கு எதிராகத் திரும்பி நிற்கும் அந்தப் பெண் உருவத்தின் தலைமுடி, குளத்தில் வலை விரித்தாற்போல் பரவிக் கிடந்தது.

நிலையற்ற நீரிலிருந்து அந்த பயங்கர உருவம் உயர்ந்து எழும்பி, நீர்ப்பரப்பின் மீது மிக இயல்பாக, நிதானமாக நடந்து எட்டி மரத்தின் வடக்குப்புறமாக நகர்ந்து நின்றது.

தரையையும் தண்ணீரையும் தொடாமல் பயணம் செய்தது அது.

தான் கனவு காணவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வாசுதேவன் தம்பி தன் இடக்கையைக் கிள்ளிப் பார்த்தார்.

வலியெடுக்கிறது.

‘சுயநினைவுடன்தான் இருக்கிறோம்!’ என்ற உணர்வு வாசுதேவன் தம்பிக்குத் தோன்றிய அதே கணத்தில், அவரின் ரத்தக் குழாய்களுக்குள் பயங்கரமான பீதி ஊடுருவத் தொடங்கியது.

காலின் கட்டை விரலிலிருந்து படிப்படியாக, நிதானமாக மூளையை நோக்கி பய உணர்வு ஊர்ந்தது.

தன்னைத் தானே உதறிக் கொள்வது போல் அவர் உடல் ஒருமுறை நடுங்கியது.

ஆச்சரியப்படத்தக்க முறையில் பயணம் செய்த அந்த உருவம், அவருக்கு எதிர்த்திசையில் நகர்ந்ததால், அது யார் என்று தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் அது எட்டி மரத்தின் வடக்குப் புறமாக நகர்ந்தபோது, யதேச்சையாகவே அவர் கார்த்திகா அந்தர்ஜனத்தை நினைவு கூர்ந்தார்.

உடம்பின் மொத்த சக்திகளையும் ஒன்று திரட்டிய வாசுதேவன் தம்பி மேலும் சற்று தூரம் முன்னோக்கி நடந்தார். அப்போது இருள் போலத் தோன்றிய அந்த உருவம், அன்று அந்தர்ஜனத்தை அடக்கம் செய்த கல் அறைக்குள் தாழ்ந்து இறங்கவும் செய்தது.

மேற்கொண்டும் அங்கு நிற்பது உசிதம் அல்லவென்று தம்பிக்குப் புரிந்தது. எனவே, அவர் அங்கிருந்து வேகமாகத் தனது வீட்டை நோக்கி நடந்தார்.

வீட்டை அடைந்தபோது, தம்பிக்கு மிகவும் நெருக்கமான நண்பர் ஒருவர் அவரை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

அவர் சேகர வர்மா.

அந்த நாட்டை ஒரு காலத்தில் ஆட்சி செய்த புராதனமான ஒரு கோவிலகத்தின் (அரண்மனையின்) வாரிசு அவர்.

இருவரும் ஆத்மார்த்தமான நண்பர்களும்கூட.

அப்போது வர்மாவை அங்கு பார்த்ததும், அதுவரை அவரை பயப்படுத்திக் கொண்டிருந்த சம்பவங்கள் எல்லாம் மறுபடியும் அவர் மனதுள் படிப்படியாகத் தெளிவடையத் தொடங்கின.

தம்பியின் முகம் ஏகத்துக்கும் வெளிறியிருப்பதை கவனித்த சேகர வர்மா கேட்டார்: "என்ன தம்பி, கல்யாணமான ஒரே இரவுக்குள் உங்கள் முகம் இப்படி பாளைபோல் வெளுத்துவிட்டதே. நேற்றிரவு தூங்கவில்லையா என்ன?" அதைத் தொடர்ந்து நமுட்டுச் சிரிப்பு ஒன்றும் அவர் உதடுகளிலிருந்து புறப்பட்டது.

“என்ன பேச்சு வர்மா இது! இதையெல்லாம் நாம் முதல் தடவையாகவா பார்க்கிறோம்?” தம்பி கேட்டார்.

“நான் சொன்னது உண்மையா, இல்லையா என்பதை நீங்கள் கண்ணாடியைப் பார்த்தால் தெரிந்துவிடும். ஒரே இரவிலேயே உங்களை இந்த அளவுக்கு ஆளாக்கிய பெண்மணி அப்படியொன்றும் சாமானியமானவளாகத் தெரியவில்லை. கல்யாணத்தில் பார்த்தபோதே நான் எடை போட்ட விஷயம்தான் இது. அதுமட்டுமா, அந்த மூக்கின் நீளத்தைக் கவனித்த போதே நீங்கள் மண்ணைக் கவ்வுவீர்கள் என்று எதிர்பார்த்தேன்!”

தம்பி அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை. அவரிடம் என்ன பதிலைச் சொல்ல?

சொன்னாலும் அவர் நம்ப மாட்டார். மட்டுமின்றி, கார்த்திகா அந்தர்ஜனத்தின் மரண விபத்தின் பின்னணியில் சேகர வர்மாவுக்கும் பங்கு உண்டு.

கார்த்திகா அந்தர்ஜனத்தின் கற்பைச் சூறையாடியதில் தம்பியுடன், வர்மாவுக்கும் சமபங்கு உண்டு. அன்றைய அந்த இரவில் கண்டபடி குடித்துவிட்டுச் சுயநினைவற்ற நிலையில் கார்த்திகா அந்தர்ஜனத்தை மாறிமாறி பாலியல் பலாத்காரம் செய்து அவளை மரணத்துக்குத் தள்ளிவிட்ட மனிதர்களில் வர்மாவும் ஒருவர்!

அந்தர்ஜனம் தனது திருமண நாளின் இரவில் முதலிரவு அறைக்குள் வந்தாள் என்பதையும், எல்லா வகையிலும் தன்னைத் தோல்வியடைய வைத்தாள் என்பதையும் எப்படி அவரிடம் சொல்வது?

அடிதடி, சண்டை போன்றவற்றில் தேர்ந்தவரான வாசுதேவன் தம்பி, ஓர் ஆவியிடம் தோல்வியடைந்து விட்டார் என்பதை ஒப்புக்கொள்ளவா முடியும்? எனவே, எக்காரணத்தைக் கொண்டும் வர்மாவிடம் அது தொடர்பாகப் பேசுவது இல்லை என்று தம்பி தீர்மானித்தார்.

“சரி, நான் கிளம்பட்டுமா?” வர்மா கேட்டார்.

“என்ன. தம்புரானுக்கு இன்று என்ன இவ்வளவு அவசரம்?” தம்பி விசாரித்தார்.

“அப்படியொன்றும் தலைபோகிற காரியமெல்லாம் கிடையாது. நீங்கள்தான் இப்போது சுகவாசியாகி விட்டீர்களே. நிரந்தரமாக ஓர் ஆள் கிடைத்தாகி விட்டது. நான், நம் சந்திரன் பிள்ளையின் வீட்டுக்குப் போய்விட்டு அப்படியே... வீட்டுக்குப் போகலாம் என்று நினைத்தேன்.”

“பிள்ளையுடனான நட்புக்குக் காரணம்?”

“குறிப்பிட்டுச் சொல்ல எதுவுமில்லை. சந்திரன் பிள்ளையின் கையாள்தான் சாராயம் காய்ச்சும் பாறுக்குட்டி. பிள்ளையைப் பிடித்தால் போதைக்கு போதையும் கிடைக்கும். சுகத்துக்கு சுகமும் கிடைக்கும்.”

“தைரியத்துக்காக வேண்டுமானால் சரக்கு இங்கேயே இருக்கிறது. கல்யாணத்துக்குக் கொண்டு வந்ததில் மிச்சம்.”

வர்மாவைப் பார்த்ததும் கொஞ்சம் மது குடித்தால் தேவலாம் என்று தம்பிக்குத் தோன்றியது.

“அப்படியானால் முதல் விஷயத்தை இங்கேயே முடித்துக் கொள்ளலாம்” வர்மாவின் முகம் பிரகாசம் அடைந்தது.

விருந்தினர்களை உபசரிக்கும் அறையில் அவர்கள் அமர்ந்தனர். முற்றத்துக்கு வந்து, வராந்தாவை அடைந்து தங்கை சந்திரிகாவை அழைத்து, கொறிப்பதற்கு எதையாவது கொண்டு வருமாறு கூறினார் தம்பி.

வர்மாவும், தம்பியும் வெளிப்புறச் சவுக்கையில் இருந்தனர். அவர்கள் இருவரும் பேசுவதைக் கவனித்தபோதே அடுத்த கட்டம் என்னவாக இருக்குமென்று சந்திரிகாவுக்கு விளங்கியது உடனே சமையலறைக்குள் நுழைந்தவள் உலர வைத்திருந்த மாம்பழ அடையிலிருந்து கொஞ்சத்தை ஒரு தட்டில் போட்டு, கூஜா நிறையக் குளிர்ந்த தண்ணீரும் எடுத்துக்கொண்டு சவுக்கைக்கு வந்தாள்.

சேகர வர்மாவை அவள் ஒருதடவை ஊன்றிப் பார்த்தாள். தசைப்பற்று நிறைந்த சந்திரிகாவின் உடம்பை, சேகர வர்மாவின்

கண்களும் கவனிக்கத் தவறவில்லை. அந்தக் கண்கள் தன்னை ஒரு தடவை முழுமையாகப் பார்க்கும்படி சந்திரிகாவும் நின்று... அதற்கு இடம் கொடுத்தாள்.

வெளிநாட்டு மது வகையைச் சேர்ந்த பாட்டிலின் கழுத்தைத் திருகி, தம்பியே அதை கிளாசில் ஊற்றினார். கூஜாவிலிருந்து தண்ணீரையும் எடுத்து ஊற்றினார்.

"சந்திரிகாவின் வீட்டுக்காரரை நான் சமீபத்தில் பார்த்த ஞாபகம் இல்லையே?" சேகர வர்மா கேட்டார்.

"வந்து போய் ஒரு வருடம் கூட இன்னும் ஆகவில்லை. அதனால் தான் கல்யாணத்துக்குக் கூட வரவில்லை" தம்பி பதிலளித்தார்.

"அவர் எப்போது வருவார்?"

"போன தடவை வந்தது ஐந்து வருட இடைவெளிக்குப் பிறகுதான். இனி எப்போது வருவாரோ?"

சந்திரிகா முகம் தாழ்த்தியபடி நின்றிருந்தாள். பதில் எதுவும் சொல்லவில்லை. இருப்பினும் அவள் சேகர வர்மாவையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

"தனிமையில் இருந்து போரடிக்கும்போது எங்கள் வீட்டுப்பக்கம் வந்தால் கொச்சு அம்மிணியிடம் பேசிப் பொழுது போக்கலாமே..."

கொச்சு அம்மணி, வர்மாவின் இளைய சகோதரி. வயது பதினேழு. எல்லா வகையிலும் கெட்டிக்காரி. சந்திரிகாவிடம் அவளுக்கு அன்பும் உண்டு. அவர்கள் நல்ல சினேகிதிகளும் கூட. அவர்கள் பர பரம் அங்கும் இங்கும் தங்குவதுண்டு. சந்திரிகா, சேகர வர்மாவை ஒரு தடவை ஊன்றிப் பார்த்துவிட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

சந்திரிகா அங்கிருந்து கிளம்பிய பிறகு வர்மா கேட்டார்: "இவ்வளவு நேரமாகியும், நீங்கள் நேற்றைய இரவை எப்படிச் செலவழித்தீர்கள் என்று சொல்லவே இல்லையே? மண்டபத்தில் உங்கள் மனைவியைப் பார்த்தேன். கெட்டிக்காரிதான் என்று தோன்றியது. என்ன நான் சொன்னதெல்லாம் சரிதானே?"

வர்மாவிடம் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தம்பி தடுமாறினார். 'தனக்கு நேர்ந்த அனுபவத்தை எப்படி வெளிப்படை யாக அவரிடம் சொல்வது? சொல்ல முடிந்த விஷயமா என்ன... மீறிச் சொன்னாலும் நம்ப முடிகிற விஷயங்களா?'

"என்ன. பதில் எதுவும் சொல்லாமல் இருக்கிறீர்கள். நான் சொன்னது தவறா?"

அதற்கும் தம்பி பதில் எதுவும் சொல்லவில்லை. மது பாட்டிலிலிருந்து மதுவை கிளாசுக்குள் ஊற்றினார்.

பேசியும், மது அருந்தியும் நேரம் போனதையே அவர்கள் உணர வில்லை. கடிகாரம் மணி பதினொன்று என்பதற்கு அடையாளமாகப் பதினோரு முறை மணியடித்தது.

"ஐயோ... மணி பதினொன்று ஆகிவிட்டதா? நான் இதை எதிர்பார்க்கவே இல்லை, சரி, கிளம்பட்டுமா தம்பி!"

"தனியாகப் போய் விடுவீர்கள் இல்லையா?"

"நல்ல கேள்வி, எனக்கா பயம்!"

நிலவு ஆகாயத்தில் தெளிவாக ஒளி சொரிந்தது. பாதையில் நிழலும் வெளிச்சமும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

கிழக்குத் திசையிலிருந்து வந்த மேகங்கள் குவிந்து கிடந்தன. பாண்டவன் மலை. அதன் உச்சியில் இலையுதிர்ந்த வறண்ட கிளைகளுடன் நிற்கும் அத்தி மரத்தின் நிழல்கள், மலைகளின் மடிப்புகளில் சாய்ந்து விழுந்து கொண்டிருந்தது. வேறெதுவும் அந்த புல்மேட்டில் இல்லாததால், ஒரு கருமையான ஓவியம் போல் அது தெளிவாகத் தெரிந்தது.

சேகர வர்மா ஒற்றையடிப் பாதையின் ஊடாக நடந்தார்.

தம்பியின் வீட்டிலிருந்து வெளியேறியபோது, சந்திரிகா அவர் மனதுள் நிறைந்திருந்தாள். எனினும் சற்று நேரத்துக்குள் சாராயம் காய்ச்சும் பார்வதி என்கிற பாறுக்குட்டி அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டாள்.

பாதை இரண்டாகக் கிளை பிரியும் இடத்தை அடைந்தபோது வர்மா நின்றார். வலப்புறம் போனால் பாறுக்குட்டியின் வீட்டை அடையலாம். இடப்புறம் போனால் தனது இருப்பிடமான கோவிலகத்தை அடையலாம். ஆனால், அங்கு போய் என்ன செய்வது? தன் உடம்புக்கும் மனசுக்கும் ஆறுதல் அளிக்க அங்கு யார் இருக்கிறார்கள்? எவரும் இல்லை!

எனவே, வர்மாவின் கால்கள் வலப்புறமாகத் திரும்பின.

அந்தப் பாதை முடிவடையும் இடம் ஆலமரத்தின் அடிப்பகுதி. அதற்கு அருகில் எழுமற்றூர் மனை. அதன் கிழக்குப் பகுதியில் பாறுக்குட்டியின் வீடு.

ஆலமரத்தின் அடிப்பகுதியை நெருங்கியபோது அங்கு யாரோ நிற்பதாகத் தோன்றியது.

நெருங்கிப் பார்த்தபோது, தான் தேடிவந்த நபரே அங்கு நிற்பது விளங்கியது. ஆமாம் பாறுக்குட்டிதான் நிற்கிறாள்.

ஆலமர இலைகளின் இடைவெளிகள் வழியாகச் சலிக்கப்பட்டு வந்த சன்னமான வெளிச்சத்தில் பாறுக்குட்டியைக் காண முடிந்தது.

"என்ன, யாரை எதிர்பார்த்து நிற்கிறாய் பாறு?" சேகர வர்மா கேட்டார்.

"அடியேன் வேறு யாரை எதிர்பார்த்து நிற்க முடியும். தம்புரானைத் தவிர என் ஞாபகத்தில் வேறு யார் இருக்கிறார்கள்?"

"இது, என்னை நீ மனசார கேலி செய்வது மாதிரித் தெரிகிறதே!"

"தம்புரானை நான் கேலி செய்வதா?" பாறுக்குட்டி நிலாவுக்கு இறங்கிவந்து சிரித்தாள்.

இடுப்பில் ஒரு நான்கு முழ வேட்டி, ரவிக்கை - இதுதான் பாறுக்குட்டியின் வேஷம்.

ரவிக்கையின் விளிம்புக்கும் வேட்டியின் மேற்பகுதிக்கும் நடுவிலுள்ள தசைப்பற்றான இடுப்புப் பகுதியைக் காணலாம். தொப்பூழ்க் கொடியின் சன்னமான நிழலும்.

கட்டுக்கு அடங்காமல் தளும்பி வழியும் மார்பகங்கள் பாறுக்குட்டியினுடையது.

"வா, போகலாம். நானும் அந்தப் பக்கம்தான்" வர்மா கூறினார்.

"இந்த வார்த்தையைக் கேட்பதற்காகத்தான் இதுவரை நின்று கொண்டிருந்தேன். விஷயம் என்னவென்றால், என் வீட்டில் இப்போது நாலைந்து பேர் இருக்கிறார்கள். சாராயம் குடிக்க வந்தவர்கள். போதை ஏறிய பிறகு வேறு சிலதெல்லாம் தேவையாம். நாலு குடிகாரர்களைச் சமாளிப்பது என்னால் முடியாத காரியம். அதனால் பின்புற வழியாக இப்படி வந்துவிட்டேன்."

"நான் வருவேன் என்று உனக்குத் தெரியுமா என்ன?"

"மனசு மந்திரித்தது."

"அப்படியானால் எந்தப் பக்கம் போவது?"

"அதற்கா இடம் கிடையாது? எவ்வளவு இடம் பரவிக் கிடக்கிறது. தம்புரான் என்னுடன் வாருங்கள்."

பாறுக்குட்டி நடந்தாள்; பின்னாலேயே சேகர வர்மாவும்.

எழுமற்றூர் மனையின் தெருவாசற்படி கடந்து இருவரும் உள்ளே நுழைந்தனர்.

திண்ணையில் கோல்விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

"இது யார் இங்கு விளக்கேற்றி வைத்திருப்பது?" வர்மா கேட்டார்.

"நான்தான். இதை ஏற்றி விட்டுத்தான் உங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். தம்புரான் விளக்கை எடுத்துக் கொள்ளுங்கள். நாம் உள்ளே போகலாம்."

சேகர வர்மா கோல்விளக்கை எடுத்துக்கொண்டு திண்ணை மீது ஏறியதும் உட்புறக் கதவும் திறந்து கிடப்பது தெரிந்தது.

"வாருங்கள், நான் இப்போதெல்லாம் இங்கு அடிக்கடி வருவேன்" பாறுக்குட்டி கூறினாள்.

உட்புறத்துக்கு வந்ததும் பாறுக்குட்டி கூறினாள்: "தென்புற அறை சௌகரியமானது. அதோ, கதவும் திறந்து கிடக்கிறது."

சேகர வர்மா அந்த அறைக்குள் நுழைந்தார். கோல் விளக்கை மேஜை மீது வைத்தார். திரும்பிப் பார்த்தபோது பாறுக்குட்டி கதவை மூடுவது தெரிந்தது.

அவள் திரும்பியபோது ரவிக்கையின் கொக்கிகள் கழன்று விட்டிருந்தன.

உடையற்ற அவளின் மார்புப்பகுதியில் சேகர வர்மாவின் பார்வை பதிந்தது.

அவர் ஒருமுறை கண்ணை மூடித் திறந்தார்.

அவள் மார்பின் மையத்தில் கருமையான ஒரு சந்திரப்பிறை!

"சேகர வர்மா, இது நான்தான்!"

திடுமென்று அந்த உருவம் மாறியது. சேகர வர்மா பயந்து நடுங்கினார்!

# 5

**தி**ரும்பிப் பார்த்தபோது சேகர வர்மாவின் முன்னால் நிற்பது யார்?

கார்த்திகா அந்தர்ஜனம்!

எழுமற்றூர் மனையின் கடைசி வாரிசான கார்த்திகா.

அன்று தன் பலிஷ்டமான கைகளின் பிடியில் அகப்பட்டு சுயநினைவை இழந்த இளந்தளிர் போன்ற அழகி.

ஆனால், அந்த உருவத்துக்கு முக உணர்ச்சியில் மாற்றம் ஏற்படுகிறது.

அவள் சிரிக்கிறாள்.

சிரிக்கும்போது மல்லிகை மொட்டுகள் போல் தென்பட்ட அந்தப் பற்கள், இப்போது நீண்டு கூர்மையாகி, புலி நகங்கள் போல் மாறுகின்றனவா?

சேகர வர்மாவின் கண்கள் மங்கலடையத் தொடங்கின.

மறுபடியும் கண்களை மூட அவர் மனசு ஒப்புக்கொள்ளவில்லை.

“எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், இன்னும் நீங்கள் திருப்தியடையவில்லை என்றுதான்” கார்த்திகா அந்தர்ஜனம் அவரை நெருங்கினாள்.

தொட்டும் தொடாமல் கார்த்திகா நிற்கிறாள்.

அவள் கைகள், அவர் தோள்களில் பதிந்தன.

பனிக்கட்டி போன்ற சில்லிப்பு...

பாம்பு ஒன்று படத்தால் மூடிக்கொண்டாற் போல்...

சேகர வர்மா, “ஐயோ!” என்று அலறினார். ஆனால், அதைச் செவிமடுக்க எவருமில்லை. மட்டுமின்றி, அந்த அலறல் தொண்டைக்கு உள்ளேயே சிக்கிக்கொண்டது.

பிறகு திடுமென்று அது நிகழ்ந்தது.

சேகர வர்மா கட்டிலில் மட்டமல்லாக்க விழுந்தார். அவரது சட்டையின் காலர் பகுதியைப் பிடித்து அந்த உருவம் கீழ்ப்புறமாக இழுத்தது. உறுதியான அந்தச் சட்டை மிகவும் பழைய வாயல் துணி மாதிரிக் கீழ்ப்புறமாகக் கிழிந்தது.

அவர், அவளைத் தடுக்க முயற்சி செய்தார். ஆனால், அதையெல்லாம் தாண்டிய அற்புதமான சக்தி ஒன்று அவளுக்கு இருந்தது.

அவளின் கைப்பகுதி அவரின் மார்பு ரோமங்களுக்கு ஊடாக அளைந்தபோது, பயம் அவரின் இதயச் சுவர்களை வருடியபோதிலும் அவரது உணர்வுகள் விழித்துக் கொண்டன.

“என்னை விடு, என்னை விடு!” சேகர வர்மா உரத்த குரலில் கூறினார்.

ஆனால், பைசாசிகமான அந்தக் கரங்கள் அவரை இறுக்கி நெரித்தன.

மதுவின் போதை மிக விரைவில் அவரிடமிருந்து பறந்து மறைந்தது. பல தடவை அவர் அலறிக் குரல் எழுப்ப முயன்றும் சத்தம் அவரிடமிருந்து வெளியேறவில்லை.

அதிகாலையில் சேவல் கூவியபோது கார்த்திகா அந்தர்ஜனத்தின் வடிவம் நிதானமாக அந்த அறையை விட்டு வெளியேறியது!

ஒரு நிழல் மாதிரி அது திண்ணையை அடைந்தது. பிறகு முற்றத்துக்கு வந்தது. அங்கிருந்து குளத்தை நெருங்கியது. குளத்தின் குளிர்ந்த நீருக்குள் அந்த வடிவம் இறங்கியது. நீர் அலைப்புண்டது. கடைசியில் நீரின் மேற்பரப்புக்கு வந்து அங்கிருந்து வெளியேறி கருங்கல் பெட்டிக்குள் புகுந்த அந்த உருவம் கண்களிலிருந்து மறைந்தது.

**ம**றுநாள் பொழுது விடிந்தது. நீண்ட நேரத்துக்குப் பிறகு கோவிலகத்திலிருந்து சேகர வர்மாவைத் தேடி, விசாரித்தவாறே ஒருவர் இடச்சேரி தறவாட்டை அடைந்தார்.

வாசுதேவன் தம்பி வெளிப்புறத் திண்ணையில் அமர்ந்திருந்தார்.

“என்ன, வர்மா எதையாவது சொல்லி அனுப்பினாரா?” தம்பி கேட்டார்.

“இல்லை, நான் அவரைத் தேடி வந்திருக்கிறேன். இதுவரை அவர் வீடு வந்து சேரவில்லை” தேடி வந்தவர் கூறினார்.

அதைக் கேட்டதும் தம்பி நிம்மதி இழந்தார்.

“நேற்று இரவு பதினோரு மணிக்கு அவர் இங்கிருந்து கிளம்பினார். வழக்கம்போல் கொஞ்சம் மருந்து சாப்பிட்டிருந்தார். சந்திரன் பிள்ளையின் வீட்டுக்குப் போனாரோ என்னவோ. ஒருவேளை போனாலும் போவேன் என்று சொல்லியிருந்தார்.”

சந்திரன் பிள்ளையுடனான வர்மாவின் நட்பு அந்த ஊழியருக்கும் தெரியும். எனவே, அது தொடர்பான பாறுக்குட்டியின் உறவும் அவருக்குத் தெரியும்.

“ஒருவேளை அங்குகூட அவர் போயிருக்கலாம். எனினும் அவர் எங்கும் ராத்தங்கும் வழக்கமில்லாதவர்.”

“இருந்தாலும் அவர் இங்கிருந்து கிளம்பிவிட்டதால், சந்திரன் பிள்ளையையும் பார்த்து விடுவது நல்லது” தம்பி கூறினார்.

அப்போதே அந்த வேலைக்காரர் அங்கிருந்து கிளம்பினார். அவர் நேராகப் போனது சந்திரன் பிள்ளையின் வீட்டுக்குத்தான். அப்போது செந்தென்னையின் அடியில் நின்று, சந்திரன் பிள்ளை பல் தேய்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்ணும் முகமும் அதிகமாக வீங்கியிருந்தது. ராத்திரியில் அளவுக்கு அதிகமாகத் தண்ணி போட்டதன் அடையாளங்கள் தென்பட்டன.

“என்னடோ குறூப்பே!” சந்திரன் பிள்ளைக்கு வர்மாவின் வேலைக்காரரைத் தெரியும்.

“தம்புரானைத் தேடி வந்தேன். இடச்சேரிக்குப் போனபோது அங்கு இல்லை. அங்கு போவதாகத்தான் சொல்லிவிட்டுக் கிளம்பினார்.”

“இங்கு வந்ததாக யார் சொன்னது?”

“தம்பிதான் சூசகமாகச் சொன்னார்.”

“இங்கு வரவில்லை. வேறு எங்கும் போகவும் வழியில்லை.”

‘வேறு எங்கும்’ என்று சந்திரன் பிள்ளை குறிப்பிட்டது பாறுக் குட்டியைத்தான். வழக்கமாக சந்திரன் பிள்ளையுடன்தான் அங்கு போவார்.

“பிள்ளேச்சா அங்கும் இல்லை. இங்கேயும் வரவில்லை. அப்படியானால் ஒருவேளை அங்கு போயிருப்பாரோ? ஒரு நடை போய்ப் பார்த்துவிட்டு வரலாமா?”

“நீ போய்ப் பார். எனக்குக் காலையில் ஏராளமான வேலைகள் இருக்கின்றன. இல்லாவிட்டாலும் பகல் நேரத்தில் எப்படி அந்தப் பக்கமெல்லாம் போவது?”

குறூப்பு நேராக பாறுக்குட்டியின் வீட்டை நோக்கி நடந்தார். ஆனால், அங்கும் விசாரிப்புக்குப் பலன் எதுவும் கிடையாது. அங்கு

சேகர வர்மா வரவே இல்லையென்று பாறுக்குட்டி உறுதியாகக் கூறிவிட்டாள். 'அப்படியானால் வேறு எங்கு போயிருப்பார்? அவருக்கு என்ன நேர்ந்திருக்கும்?' குறூப்பு யோசனையில் ஆழ்ந்தார்.

அவர் அங்கிருந்து திரும்பி நடக்கத் தொடங்கினார். நடந்து வந்தவர் எழுமற்றூர் மனையின் முன்புறமுள்ள ஆலமரத்தின் அடிப்பகுதிக்கு வந்து சேர்ந்தார்.

சூரியன் வானத்தின் நடுப்பகுதிக்கு வந்திருந்தான். பாறுக்குட்டியின் வீட்டில் இருந்து ஒரு கிளா சாராயம் குடித்த தெம்பில்தான் அவர் அந்த இடம் வரை வந்து சேர்ந்தார். எனவே, ஆலமரத்தின் நிழலில் சற்று நேரம் இளைப்பாறுவதற்காக அமர்ந்தார்.

அங்கிருந்து பார்த்தபோது எழுமற்றூர் மனையின் தெரு வாசற்படி தெரிந்தது. கதவுகள் எதுவும் இல்லை. காலப் பழைமையினால் தெரு வாசல் நிலையே ஒருபுறமாகச் சரிந்து கிடந்தது.

மனையின் சவுக்கையை ஒட்டி, செந்தெங்கு ஒன்று நிற்பதைக் கவனித்தார். ஆரஞ்சு நிறம் வாய்ந்த இளநீர்க் குலைகள், எவருக்கும் வேண்டாததாக மரத்தில் தொங்குகின்றன. இளநீர் மற்றும் பிஞ்சுக் காய்களும் தென்பட்டன.

பயத்தினாலோ என்னவோ, பட்டப் பகல் நேரத்தில் கூட அங்கு எவரும் போவதில்லை.

தொண்டையில் ஊற்றியிருந்த சாராயம், குறூப்பின் தாகத்தை அதிகப்படுத்தியது. தொண்டை வறண்டது. இளநீர்க் குலைகளைப் பார்த்தபோது தாகம் தானாகவே அதிகமானது. இடுப்பில் மலைப்புறம் கத்தி இருக்கவே இருக்கிறது. போதையில் பயம் எழும்பவில்லை. தெரு வாசற்படி கடந்து மனையின் முற்றத்தை அடைந்தார்.

மரத்தை நெருங்கியதும் இளநீர் ஒன்றைச் சுழற்றிப் பிரித்தெடுத்தார். கத்தியை எடுத்து முனைப் பகுதியைச் சீவி, ஓட்டை போட்டு வாய்ப் பக்கமாகக் கவிழ்த்தார்.

இனிமையான நீர், தேன் மாதிரி இருந்தது. சுகமான ஏப்பம் வந்தது.

திண்ணையின் விளிம்பில் அடித்து இளநீரைப் பிளந்தார்.

பிளந்த இளஞ்சிரட்டைகளுடன் திண்ணையில் வந்து அமர்ந்தார்.

சிரட்டைகளில் ஒட்டியுள்ள தேங்காயின் முதிராத பருப்பை - நுங்கு போல் இருப்பதைச் சுரண்டித் தின்னும்போது வராந்தாவில் குடை ஒன்று சாய்த்து வைத்திருப்பதைக் கவனித்தார்.

பார்த்தவுடனேயே அது எவருடைய குடை என்பது விளங்கி விட்டது.

சேகர வர்மா தம்புரானின் குடைதான். அதில் சந்தேகம் இல்லை!

'இது எப்படி இங்கு வந்திருக்கும்?' குறூப்பு யோசனையில் ஆழ்ந்தார். அங்கு உட்கார்ந்தவாறே கண்ணைச் சுழற்றிப் பார்த்தார். பூஜையறையை ஒட்டி வலப்புறமாகச் செல்லும் அறையின் கதவும் திறந்து கிடந்தது. உடனேயே குறூப்பின் மூளை வேலை செய்யத் தொடங்கியது. அப்படியானால், சேகர வர்மா இங்குதான் இருக்கிறார். அது உறுதி! யாரோ வசமாகச் சிக்கியிருக்கிறார்கள். அவளுடன் இங்கேயே பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கலாம். அவர் இப்படிப்பட்ட விஷயத்தில் கைதேர்ந்தவர் என்பது குறூப்புக்குத் தெரியும்.

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்த குறூப்பு வீட்டுக்குள் நுழைந்தார். ஒவ்வோர் அறையாகத் தேடத் தொடங்கினார். அப்படி வரும்போது தென்புற அறை. அவர் கண்ணுக்குத் தென்பட்டது. அதன் ஒரு கதவும் பாதி திறந்து கிடந்தது.

குறூப்பு, சத்தம் எழுப்பாமல் நிதானமாக ஒரு பூனை மாதிரி எட்டு மேல் எட்டு வைத்து வாசலை நெருங்கி உட்புறம் பார்த்தார். உள்ளுக்குள் அசால்ட்டும் ஆர்வமுமாக எட்டிப் பார்த்தவர், முதலில் தென்பட்ட காட்சியிலேயே திடுக்கிட்டு அசைவற்றுப் போனார். அந்த அறையின் ஜன்னல் வெளிப்புறமாகத் திறந்து கிடந்தது. அதன் வழியாக வந்த வெளிச்சத்தில் கட்டிலில் மட்டமல்லாகக் கிடந்த சேகர வர்மாவை குறூப்பு பார்த்தார். உடனே பதைப்புடன் அந்த அறைக்குள் நுழைந்தார்.

நிர்வாண உடலுடன் ரத்தத்தில் குளித்துக் கிடந்தார் சேகர வர்மா. அவர் மார்பின் தோல் இழுத்துக் கிழிக்கப்பட்டிருந்தது. அவர் கண்கள்

வெறித்தபடி பைசாசிகமாகத் தன்னை ஊன்றிக் கவனிப்பதாக குறூப்புக்குத் தோன்றியது. அவர் பார்வை அந்த உடலின் கீழ்ப்புறத் துக்கு நகர்ந்தது. தொடைப் பகுதியில் ரத்தம் உறைந்து போயிருந்தது.

அங்கிருந்து அவர் தலைதெறிக்கும் வேகத்தில் ஓடத் தொடங்கினார். அவர் நேராக வந்து நின்ற இடம் கோவிலகத்தின் தெரு வாசற்படிதான். தகவலை சேகர வர்மாவின் அப்பாவிடம் தெரிவிக்க நேரம் அதிகம் ஆனது. சொல்ல முடியாமல் குறூப்பின் நாக்கு தொண்டைக்குள் அமிழ்ந்து விட்டது போல் தோன்றியது. இருப்பினும் ஒருவாறாகச் சொல்லி முடித்தார்.

எல்லாவற்றையும் கவனித்துக் கேட்ட தம்புரானின் அப்பா கேட்டார்: "ஆமாம், இதை நீ வேறு எவரிடமாவது சொன்னாயா?"

"இல்லை தம்புரான். பார்த்ததும் நான் நேராக ஓடி வந்தது இங்குதான்."

"நல்லது. அப்படியானால் இதை மேற்கொண்டும் எவரிடமும் சொல்ல வேண்டாம். காதும் காதும் வைத்த மாதிரி மூன்றாவது மனிதருக்குத் தெரியாமல் பிணத்தை எப்படியாவது இங்கு கொண்டு வரவேண்டும். அதற்கு மேற்கொண்டு இரண்டு வேலைக்காரர்களை அழைத்துக் கொள். வெளியில் வேறு எவரிடமும் சொல்ல வேண்டாம் என்று அவர்களிடமும் எச்சரிக்கை செய். மிகுந்த கவனத்துடன் பிணத்தை இங்கு எடுத்து வரவேண்டும். நமது மாட்டு வண்டியைக் கொண்டு போங்கள். வைக்கோலை தாராளமாகப் பயன்படுத்தி, காரியத்தைக் கச்சிதமாக முடியுங்கள். புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுங்கள். என்ன, நான் சொல்வது விளங்கியதா?"

குறூப்பு உடனே இரண்டு வேலைக்காரர்களுடன் கிளம்பினார். தம்புரானின் அப்பா குறிப்பிட்டது போல் மாட்டு வண்டியைக் கட்டிக்கொண்டு கிளம்பினர். ஆலமரத்தின் அடியில் வண்டியை நிறுத்திவிட்டு, ஒருவரைக் காவலுக்கு வைத்துவிட்டு மற்ற இருவரும் பிணத்தை எடுப்பதற்காகச் சென்றனர்.

அவர்கள் தெரு வாசற்படிக்குள் நுழைய முற்படும்போது, பாறுக்குட்டி அந்த வழியாக வந்தாள்.

ஏகப்பட்ட அலங்காரங்களுடன் வந்திருந்தாள். அடிக்கடி அவள் அருகிலுள்ள நகரத்துக்குச் சென்று வருவதுண்டு. அது அவள் வழக்கம்.

“ஏதாவது தகவல் தெரிந்ததா குறூப்புச் சேட்டா?” அவள் கேட்டாள்.

அதைக் கேட்ட குறூப்பு உடனே மற்றவரைப் பார்த்தார். அதன்பிறகு பாறுக்குட்டியைப் பார்த்து ஒருமுறை கண்ணடித்தார்.

உடனே பாறுக்குட்டி அவரை அருகே வருமாறு சைகை காட்டினாள்: “இப்படி வாருங்கள் உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும்.”

குறூப்பு அவளை நெருங்கினார்.

“தம்புரானைப் பற்றி தகவல் ஏதாவது தெரிந்ததா?”

“இல்லை, எதுவும் தெரியவில்லை.”

“நீங்கள் ஏன் இங்கேயே வட்டமிடுகிறீர்கள்?”

“ஒன்றுமில்லை, நீ பட்டணம் போகிறாற் போலிருக்கிறதே...”

“ஆமாம், வேண்டுமானால் உங்களுக்காகப் பயணத்தை தள்ளிப் போடுகிறேன். என்ன சொல்கிறீர்கள், காத்திருக்கவா?” அவள் எதற்கும் தயாராக இருந்தாள்.

‘இந்த இழவு வேறு பிராணனை வாங்குகிறதே!’ என்று மனதுள் நொந்து கொண்டார்.

“வேண்டாம், இப்போது நீ கிளம்பு. நான் சாயந்தரமாக அங்கு வருகிறேன்.”

“வர வேண்டும். நான் காத்திருப்பேன். மறக்கக் கூடாது!”

பாறுக்குட்டி நடக்கத் தொடங்கினாள்.

பாதையை மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு வேறெவரும் தென்படாததால், அவர்கள் இருவரும் படிப்புரை கடந்து முற்றத்தை அடைந்தனர்.

“நீ பயப்படாதே. விஷயம் கொஞ்சம் விபரீதம்தான். இந்தத் துணியால் உடம்பை நன்றாக மூடிக் கட்டி எடுத்து வரவேண்டும். பிறகு தெரு வாசற்படி மறைவிலேயே காத்திருக்க வேண்டும். சேக்குட்டி சைகை காட்டினால்தான் நாம் தெருக்கதவைத் தாண்டி வெளியேற வேண்டும்” குறுப்பு, அவனுக்கு எச்சரிக்கை செய்தார்.

இருவரும் வீட்டுக்குள் நுழைந்தனர்.

குறுப்பு தென்புற அறையை நெருங்கி உடன் வந்தவனின் கையைப் பிடித்துக் கொண்டு உட்புறம் காலெடுத்து வைத்தார்.

“என்ன!” குறுப்பு திடுக்கிட்டு நடுங்கினார். சேகர வர்மாவின் உடம்பு அங்கு இல்லை!

சட்டென்று அந்த இருண்ட அறைக்குள் வெளவால்கள் எக்கச்சக்கமாகச் சத்தம் எழுப்பியபடி வட்டமிட்டுப் பறப்பது தெரிந்தது.

# 6

**சே**கர வர்மாவின் உடம்பு அந்த அறைக்குள் காணாமற் போகவே, குறுப்பு சோர்ந்து போனார்.

சற்று நேரத்துக்கு முன்னால் தான் வந்து நேரடியாகப் பார்த்த உடம்பு. அப்போது அதைப் பார்த்து பயந்து நடுங்கவும் செய்தார். அந்த உடம்பை இப்போது அந்த அறைக்குள் காணவில்லை.

‘அதை எடுத்துக்கொண்டு போய், யாருக்கு என்ன லாபம்?’ குறுப்பு யோசித்தார். ‘இப்போது இந்தத் தகவலை எப்படி கோவிலகத்தில் போய்ச் சொல்வது?

‘தான் இதுவரை சொன்ன தகவல்கள் மொத்தமும் பொய் என்று பெரிய தம்புரான் நினைப்பார்.

தன் சொந்த மகன் ஆள் யாரும் குடியிருக்காத எழுமற்றூர் இல்லத்துக்குள் இறந்து கிடப்பதாக, தான் பொய் சொன்னதாகவும் நினைப்பார். மகனைக் குறித்து அவதூறாகப் பேசியதற்காகச் சில நேரம் சாட்டையடியும் பெற வேண்டியிருக்கும்.

இப்போது என்ன செய்வது?'

"என்ன குறுப்பு சேட்டா... இப்படியே விக்கித்துப் போய் நின்று விட்டால் எப்படி? வந்த காரியம் என்னாவது?" உடன் வந்த வேலைக்காரர் கேட்டார்.

"எடோ பாச்சா. நானும் அதைத்தான் தேடுகிறேன். இனி அதை வேறு எங்கேயென்று போய்த் தேடுவது?"

"ஒருவேளை அது உங்கள் பிரமையாக இருக்குமோ?"

"என்ன இப்படிக் கேட்கிறாய்? நான் என் இரண்டு கண்ணாலும் பார்த்து பயந்து அலறியது இப்போதும் ஞாபகத்தில் இருக்கிறது. ச்சே... நான் இனி என்ன செய்வது?" குறூப்பு அங்கிருந்து வெளியேறினார்.

வெளிச்சம் அதிகமில்லாத அந்த வீட்டின் உட்புறப் பகுதிகளில் எல்லாம் தேடினார். ஆனால், எங்கு தேடியும் சேகர வர்மாவின் உடல் தென்படவில்லை.

குறூப்பு அங்கிருந்து வெளியேறி ஆலமரத்தின் அடிப்பகுதிக்கு வந்தார்.

"வாருங்கள் போகலாம், போய்க் காணவில்லை என்று சொல்ல வேண்டியதுதான்!"

"நாம் கோவிலகத்துக்குள் நுழையும்போது ஒருவேளை, சின்னத் தம்புரான் அங்கு இருப்பாரோ என்னவோ!" பாச்சன் கூறினான்.

"அப்படி ஏதாவது நடந்தால் வெள்ளைக் காக்காய் மட்ட மல்லாக்கப் பறக்கும்!"

கோவிலகத்துக்குள் சென்றார் குறூப்பு. தான் பார்த்ததைச் சத்தியம் செய்து கூறினார்.

"அப்படியானால் உடம்பு வேறு எங்கு போயிருக்கும்?" பெரிய தம்புரான் கேட்டார்.

"அதுதான் எனக்கும் விளங்கவில்லை தம்புரான்!"

“எப்படி இருந்தாலும் நான் ஒரு முயற்சி செய்து பார்க்கிறேன். அவன் வருவானா இல்லையா என்று தெரிந்த பிறகு, வேறு யாரையாவது அணுக வேண்டியதுதான்...” தம்புரான் ஒரு தீர்மானத்துக்கு வந்தவராக உள்ளே போனார்.

சேகர வர்மா சட்டென்று காணாமல் போனதை எவரும் தெரிந்து கொள்ளவில்லை. பெரிய தம்புரானின் எச்சரிக்கைக்குப் பிறகு வேறெவரும் அதைக் குறித்து யோசிக்கவும் இல்லை.

**மா**லை நேரமானபோது வாசுதேவன் தம்பிக்குள் கொஞ்சம் கொஞ்சமாக பயம் உயரத் தொடங்கியது. நேற்று இரவு தனக்கு முன்பாக கார்த்திகா அந்தர்ஜனம் தட்டுப்படவில்லை.

ஆனால், வேறொரு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஓமனா நேற்றும் தனது படுக்கை அறைக்கு வரவில்லை. அதற்கான காரணத்தை அவர் கேட்கவும் இல்லை. எதற்காக விசாரிக்க வேண்டும்?

‘ஒருவேளை ஓமனாவாக வருவது கூட கார்த்திகா அந்தர்ஜன மாக இருந்தால், கடவுளே, அதை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

அன்று தம்பியுடன் பேச்சுத் துணைக்குக்கூட எவரும் இல்லை. எனவே, அவர் தனியாகத் திண்ணையில் அமர்ந்திருந்தார்.

அப்போது ஓமனா கையில் தீபத்துடன் வெளியே வந்தாள். முற்றத்தைக் கடந்து தெருவாசற்படி வரை போனவள் ‘தீபம்’ என்று மூன்று முறை சொல்லிவிட்டுத் திரும்பி வந்தாள். கையிலிருந்த விளக்கைத் துளசி மாடத்தில் வைத்தபின், தம்பியை ஒருதடவை பார்த்துவிட்டு வீட்டுக்குள் போனாள்.

நிலவு ஒளி பொழிந்து கொண்டிருந்தது. நல்ல வெளிச்சம்.

அந்த ஒளிக்கதிர்கள் துளசியின் தளிர் இலைகளில் மோதிப் பிரதிபலித்து, அவையும் எண்ணற்ற தீபங்களாக ஜொலித்தன.

சற்று நேரத்துக்குப் பிறகு விளக்கு அணைந்தது. அதிலிருந்து மேலெழும்பிய வெண்ணிறப் புகை ஒரு சரடு போல் உயர்ந்து துளசிச்

செடியின் சிகரங்களுக்கு ஊடாகப் பாய்ந்து அந்தரத்தில் ஒன்றிக் கலந்திருந்தது.

“சேட்டா, சாப்பாடு பரிமாறியிருக்கிறேன்” சந்திரிகா அழைத்தாள்.

அந்த அழைப்பைக் கேட்ட தம்பி தன்னையும் மீறி ஒரு முறை நடுங்கினார்.

எழுந்தவர் சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தார்.

சந்திரிகாவும் ஓமனாவும் அங்கு இருந்தனர்.

“ஓமனாவுக்கு நேற்றும் தலை பிளக்கும் தலைவலி!” சந்திரிகா கூறினாள்.

தம்பி, தலையை உயர்த்திப் பார்த்தார்.

ஓமனாவுக்கு வெட்கம் என்பதே இல்லை. அவள், அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

“ஆனால், இன்றைக்கு அப்படியெதுவும் கிடையாது!” என்ற சந்திரிகா, ஓமனாவின் கையைப் பிடித்துக் கிள்ளினாள்.

சந்திரிகா இப்படிப்பட்ட பேச்சு பேசுவதில் கூச்சநாச்சமே இல்லாதவள்.

“எல்லாவற்றுக்கும் மேலாக நேற்றும் முந்தா நாளும் நல்ல நாள் கிடையாது. இன்று கார்த்திகை நட்சத்திரம் நல்ல நாள்” சந்திரிகா தொடர்ந்து பேசினாள்.

‘கார்த்திகை’ என்ற சொல் அவரைத் திடுக்கிட வைத்தது. அவர் உடம்பில் இருந்த மொத்த மயிர்க்கால்களும் குத்திட்டு நின்றன. சாப்பாட்டை அத்துடன் முடித்துக்கொண்டு கை கழுவி விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

வாசுதேவன் தம்பி சாப்பாட்டு அறையிலிருந்து வெளியேறிய பிறகு சந்திரிகா கூறினாள்: “அண்ணனுக்கு, உங்கள் மீது பயங்கரக் கோபமாக இருக்கும். இரண்டு நாள் இரவிலும் அவரைத் தனியாகப் படுக்க வைத்து விட்டீர்களே... இன்றைக்குப் பழிக்குப்பழி வாங்கி விடுவார். அது உறுதி!”

ஓமனா அதைக் கேட்டு வெட்கம் அடைந்தாள். அவளைப் பார்த்து சந்திரிகா சொன்னாள்: "அதற்கு நான் ஒரு வித்தை சொல்லித் தரட்டுமா? இன்றைக்கு நீங்கள் ரொம்பவும் சீக்கிரமாக அவரது அறைக்குள் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். அண்ணன் வரும்போது நீங்கள் கட்டிலில் கிடக்க வேண்டும்! என்ன நான் சொல்வது புரிந்ததா?"

"இந்த சந்திரிகாவுக்கு வெட்கம் என்பதே கிடையாதா என்ன?" ஓமனா செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

பிறகு அவர்கள் இருவரும் சாப்பிட்டனர். அதற்குப் பிறகும் சற்று நேரம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். சந்திரிகாவுக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றியது.

"அண்ணி, இனி நான் சொன்னது மாதிரி போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். எனக்குத் தூக்கம் வருகிறது..." என்ற சந்திரிகா, ஓமனாவை தம்பியின் அறைக்குள் அனுப்பிவிட்டு அவள் தனது அறைக்குப் போனாள்.

கடிகாரத்தில் மணி ஒன்பது அடித்தது. அந்தச் சத்தம் அவ்வளவு பெரிய கட்டடத்தில் பலமுறை எதிரொலித்ததாகத் தோன்றியது.

வாசுதேவன் தம்பி அப்போதும் வராந்தாவிலேயே அமர்ந்திருந்தார்.

பூஜையறை வாசலில் அப்போதும் நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவர் கண்கள் தெரு வாசற்படியையே இமைக்காமல் வெறித்துப் பார்த்தன. சொந்த வீடாக இருந்த போதிலும் தனது அறைக்குள் நுழைய அவர் பயந்தார்.

ஓமனா, வெண்பட்டுத் துணியாலான விரிப்பின் மீது இடக் கன்னத்தைப் பதிய வைத்துக் கிடந்தாள். முண்டும் பிளவுஸும் அவளது உடைகள்.

இதுவரை ஆணை உணராத ஓமனா, வாசுதேவன் தம்பியின் காலடிச் சத்தத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

தம்பியின் வடிவமும், எஃகு இரும்பு போன்ற உடலழகும் அவள் மனதில் தெளிவடைந்து நின்றிருந்தது. அது, அவள் இதயத்துக்குள் உத்வேகத்தை ஊட்டவும் செய்தது.

தன் உடம்பை அவர் வந்து கசக்கி நொறுக்குவதை அனுபவிக்க அவள் காத்துக் கிடந்தாள்.

கடிகாரத்தில் மீண்டும் மணியடிக்கும் சத்தம் கேட்டது. எத்தனை முறை மணியடித்தது என்பதை ஓமனா எண்ணவில்லை. இருப்பினும் தொடர்ந்து மணியடிப்பதைக் கேட்டாள்.

அவள் அப்படிப் படுத்திருக்கும்போது சன்னமான பாதங்களின் ஒரு சலனம் கேட்டது.

'சிலும்... சிலும்...' ஒரு ஜோடி கால் தண்டையின் சத்தம் போல் இருந்தது அது.

ஓமனா சன்னமான ஒரு மயக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். அவள் கண்களைத் திறந்தாள். கோல்விளக்கில் எண்ணெய் தீர்ந்து திரி முழுக்க எரிந்து விட்டிருந்தது. அந்த மங்கலான வெளிச்சத்தில் அறைக்குள் யாரோ நிற்பதாக ஓமனாவுக்குத் தோன்றியது.

அது ஒரு புகைச்சுருள் போலிருந்தது. மனித வடிவம் கொண்ட ஒரு புகைச்சுருள்! அதற்குள் மின்மினிப் பூச்சிகள் மாதிரி நெருப்புத் துணுக்குகள் கண்டபடி பறப்பதாகவும் அவளுக்குத் தோன்றியது.

ஏதோ ஒரு மாயா உலகத்துள் அமிழ்ந்து விட்டவள் போல் அவள் அதையே உற்றுப் பார்த்தாள்.

நிமிடங்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. ஒளித் துணுக்குகளின் பாய்ச்சல் அப்போதும் தொடர்ந்து கொண்டிருந்தது.

அவள் பார்க்கும்போதே அந்தப் புகைச்சுருளின் தலை போல் தென்பட்ட பகுதியில் நெருப்புத் துணுக்குகள் இரண்டு பிரிவாக ஒன்றிணைந்து இரண்டு கண்கள் போல் பளபளத்தன.

சாம்பல் நிறப் புகைச்சுருளுக்குள் இரண்டு நெருப்புக் கண்கள்!

அந்த உருவம் நிதானமாக ஓமனாவின் அருகே வந்தது.

தொண்டை வெடிக்குமளவு உரத்த குரலில் அலற வேண்டுமென்று அவளுக்குத் தோன்றினாலும் குரல் தொண்டைக்குள் அமுங்கிவிட்டது போல் இருந்தது.

அந்த உருவம் நிதானமாகக் குனிந்தது.

அப்போது இருளின் துண்டுகள் பெயர்ந்து விழுவது போல் இருபுறங்களில் இருந்தும் நீண்ட தலைமுடிக் கற்றைகள் ஓமனாவின் உடல் மீது விழுந்தன.

அந்தக் கண்கள் அவளை நெருங்கின.

திடுமென்று அட்டகாசச் சிரிப்பு ஒன்று உயர்ந்தது.

கண்ணாடித் துண்டுகளை ஒன்றுடன் ஒன்று உராய்ந்து எழுப்பப்படுவது போன்ற சத்தம்.

ரத்தக் குழாய்களில் முழுக்க பயம் ஜொலித்துப் படரும் பயங்கரமான சிரிப்பு.

சிரிப்பு உயர்ந்தபோது அந்தக் கண்களுக்குக் கீழே வெண்மையாகப் பளபளக்கும் நீண்ட, கூரிய பற்களை ஓமனா கவனித்தாள்.

மறு விநாடி, அந்த உருவம் ஓமனாவை அப்படியே கைகளில் எடுத்து உயர்த்தி, அந்தரத்தில் பம்பரம் போல் சுழற்றிக் கீழ்ப்புறமாக வீசியெறிவது போல் அவளுக்குத் தோன்றியது.

ஆனால், அவள் விழுந்த இடம் அதே படுக்கைதான்.

அங்கு படுத்தபடி அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அந்தப் பைசாசிக உருவம் அப்போதும் அங்கேயே நிற்கிறது.

"அவனுடன் வாழ வந்திருப்பவளா நீ? உன்னை நான் வாழ விட்டுவிடுவேனா... இனிமேல் உன்னை இந்த வீட்டுக்குள் நான் பார்க்கக் கூடாது. போ, எழுந்து ஓடு, ம்!"

ஓமனா பயந்து நடுங்கியபடி, கட்டிலிலிருந்து துள்ளிக் குதித்து திறந்து கிடந்த கதவு வழியாக வெளியே ஓடினாள்.

"ஐயோ, என்னைக் கொல்கிறார்கள்!" அவள் உரத்த குரலில் அலறினாள்.

அந்தக் குரலைக் கேட்டு உறக்கத்தில் இருந்து திடுக்கிட்டு எழுந்த சந்திரிகா அறையிலிருந்து வெளியே ஓடி வந்தாள்.

“என்ன, என்ன நடந்தது?” தம்பி கேட்டார்.

“பேய், பேய்!” ஓமனா மீண்டும் அலறினாள்.

“அண்ணி அது உங்கள் பிரமையாக இருக்கும்!” சந்திரிகா கூறினாள்.

“இல்லை, பிரமையில்லை. அது அந்த அறைக்குள் இருக்கிறது.”

“என்ன இருப்பதாகச் சொன்னீர்கள்? நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்” சந்திரிகா கையில் விளக்குடன் அந்த அறைக்குள் நுழைந்தாள்.

“இங்கு யாரையும் காணோமே!” சந்திரிகா அறைக்குள் இருந்து குரல் கொடுத்தாள்.

“அதற்குள் இருக்கிறது. அதற்குள்தான் இருக்கிறது” ஓமனா கூவினாள்.

“அண்ணி, உள்ளே வந்து பாருங்கள். தனியாகப் படுத்திருந்ததால் உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கும்.”

ஆனால், ஓமனா அதற்குள் நுழைய ஒப்புக்கொள்ளவில்லை.

“அண்ணி, இப்படியெல்லாம் பயந்தால் எப்படி?” சந்திரிகா அந்த அறைக்கு வெளியே வந்து, ஓமனாவை வலுக்கட்டாயமாக உள்ளே அழைத்துச் சென்றாள்.

“இப்படிப் படுத்துக் கொள்ளுங்கள் - இந்தக் கட்டிலில். நான்தானே சொல்கிறேன்” சந்திரிகா தைரியம் ஊட்டினாள்.

‘ஒருவேளை தான் கனவு கண்டிருப்போமோ?’ என்று தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டவள் மறுபடியும் அந்தக் கட்டிலில் படுத்தாள்.

“நீங்களும் போங்கள். அண்ணியைத் தனியே படுக்க விடாதீர்கள்.”

விருப்பமில்லாத மனத்துடன் தம்பி அந்த அறைக்குள் நுழைந்தார். தம்பி உட்புறம் போய்க் கதவைத் தாழிட்டவுடன் சந்திரிகா தனது அறைக்குப் போனாள்.

"என்ன பயந்துவிட்டாயா ஓமனா?" தம்பி கேட்டார்.

அப்போது யாரோ வலுவாக ஊதி அணைத்தது போல் அந்த அறையிலிருந்த விளக்கு அணைந்தது.

"ஐயோ, என்னைக் கொல்றாங்க..." கட்டிலிலிருந்து அலறல் ஒன்று உயர்ந்தது.

## 7

"என்ன, என்ன நடந்தது" தம்பி தீப்பெட்டியைத் தேடியபடி பரபரப்புடன் கேட்டார்.

அப்போது மேஜை மீதிருந்த விளக்கு கீழே விழுந்து உடையவும் செய்தது.

கட்டிலிலிருந்து அதன்பிறகு சத்தம் எதுவும் கேட்கவில்லை.

சட்டென்று விளக்கு அணைந்தாலும் அப்போது ஏற்பட்ட திகைப்பினாலும் தம்பி சுற்றுப்புறச் சூழ்நிலையைக் கவனிக்கவில்லை. தேடுவதற்கிடையில் தற்செயலாக ஜன்னல் பக்கம் பார்த்தபோது நிழல் மாதிரி யாரோ நிற்பது தெரிந்தது.

"யாரது?" என்று கேட்டபடி தம்பி அதை நோக்கி நகர்ந்தார்.

சட்டென்று அந்த உருவம் மறைந்தது.

படுக்கையின் கீழ் தீப்பெட்டியை எடுப்பதற்காக தம்பி அடிப் பகுதியில் தேடினார்.

"ஐயோ, என்னைக் கொல்கிறார்களே" என்று அலறியபடி ஓமனா படுக்கையில் இருந்து மீண்டும் துள்ளி எழுந்தாள்.

"பயப்படாதே, நான்தான்" தம்பி தீக்குச்சியை உரசி விளக்கேற்றினார்.

ஓமனா முகம் பொத்தியபடி குப்புறப் படுத்திருந்தாள். தம்பி அவளை நெருங்கி, அவள் தோளைப் பிடித்தபடி கூறினார்: "பயப்படாதே, நான்தான் தம்பி, இப்படித் திரும்பிப் படு!"

அவர் அவளை மல்லாக்கத் திருப்பிப் படுக்க வைத்தார்.

ஆனால், ஓமனாவின் முகத்தைப் பார்த்த தம்பி திடுமென்று பின்வாங்கினார்.

அந்த முகத்தைப் பார்த்து அவர் பயந்து நடுங்கினார். ஒரு தேவதை மாதிரி அழகான ஓமனாவின் முகத்துக்கு பதிலாக பல்லிளிக்கும் மண்டையோடு ஒன்று தென்பட்டது. கண்களுக்கு பதிலாக அங்கு இரண்டு குழிகள். மூக்குப் பகுதியில் முக்கோண வடிவில் ஒரு நிழல்.

"என்ன, என்ன நடந்தது?" என்று கேட்டபடி ஓமனா கட்டிலி லிருந்து எழுந்தாள்.

குரல் கேட்டு தம்பி திரும்பிப் பார்த்தபோது, அந்த மண்டை ஓடு உயர்ந்து வந்தது.

பயந்து நடுங்கிய தம்பி அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடினார்.

ஓமனா அந்த அறையிலிருந்து வெளியேறவில்லை. தன் கணவர் மது அருந்திவிட்டு வந்ததால் போதையில் என்னென்னவோ செய்வதாக அவள் கருதினாள்.

இருப்பினும் அந்த அறைக்குள், தான் நுழைந்தது முதல் நடந்தவையெல்லாம் முற்றிலும் ஆச்சரியமான சம்பவங்கள் என்று அவளுக்கு விளங்கியது. தான் முதலில் ஒரு பைசாசிக வடிவத்தைப் பார்த்தோம். அதன்பிறகு கணவர் தன்னைப் பார்த்துவிட்டு பயந்து நடுங்கி ஓடினார். இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று அவளுக்கு விளங்கவில்லை. அந்தக் கட்டிலிலிருந்து எழுந்த ஓமனா, கையில் விளக்கை எடுத்துக்கொண்டு சந்திரிகா படுத்திருக்கும் அறை வாசலை அடைந்தாள்.

"சந்திரிகா, சந்திரிகா!" ஓமனா அழைத்தாள்.

சந்திரிகா எழுந்து கதவைத் திறந்தாள்.

"என்ன, மறுபடியும் பயந்து விட்டீர்களா?"

"என்ன நடக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. அவர் அறையிலிருந்து வெளியேறி ஓடினார். நாம் விரும்பத்தகாத என்னென்னவோ சம்பவங்கள் இங்கு நடக்கின்றன. எனக்கு மொத்தத்தில் ஒரே பயமாக இருக்கிறது சந்திரிகா!"

"அண்ணி, எல்லாவற்றுக்கும் பரிகாரம் செய்யலாம். அதனால், நீங்கள் இங்கேயே படுத்து உறங்குங்கள்."

ஓமனாவும், சந்திரிகாவும் ஒரே கட்டிலில் படுத்து உறங்கினர். சந்திரிகாவைக் கட்டியணைத்தபடி ஓமனா படுத்தாள். அந்த அளவுக்கு அவள் பயந்து போயிருந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தபோது கோவிலகத்திலிருந்து மறுபடி குறூப்பு வந்தார்.

சேகர வர்மாவைப் பற்றி எந்த ஒரு தகவலும் தெரியவில்லை என்று அவர் கூறினார்.

"எல்லா இடத்திலும் தேடினீர்களா?"

"இனி தேடுவதற்கு இடமில்லை."

வாசுதேவன் தம்பி மொத்தத்தில் குழப்பம் அடைந்தார். 'தனக்கு மிகவும் நெருக்கமான நண்பர் ஒருவர் காணாமல் போயிருக்கிறார். அவருக்கு என்ன நேர்ந்தது என்றே தெரியவில்லை!'

"சரி, குறூப்பே, நானும் உங்களுடன் வருகிறேன். விசாரித்துப் பார்க்கலாம்."

உடை மாற்றிக்கொண்டு வந்த தம்பி குறூப்புடன் நடக்கத் தொடங்கினார்.

"முதலில் எங்கே விசாரிக்கலாம் என்று நினைக்கிறீர்கள் குறூப்பே?" வாசுதேவன் தம்பி கேட்டார்.

"எனக்கு ஒரு சந்தேகம். உங்களிடம் இதுவரை அதைச் சொல்லவில்லை."

"என்ன சந்தேகம், சொல்லுங்கள்."

குறூப்பு தனது முந்தைய தின அனுபவம் மொத்தத்தையும் வாசுதேவனிடம் கூறினார்.

உடனே வாசுதேவன் தம்பியின் முகத்தில், சேகர வர்மாவைப் பற்றிய ஒரு துப்பு கிடைத்த உணர்வு வெளிப்பட்டது.

“எழுமற்றூர் மனையில்தான் பார்த்தீர்கள் இல்லையா!”

“நான், என் இரண்டு கண்ணாலும் அதை நேரடியாகப் பார்த்தேன்.”

“சேகர வர்மா. இறந்து கிடப்பதையா பார்த்தீர்கள்?”

“என்னங்க தம்பி! இப்படித் தோண்டித் துருவிக் கேட்கிறீர்கள்? இதில் நான் ஏதாவது பொய் சொல்ல வேண்டிய தேவை இருக்கிறதா? அதுவும் தம்புரானைப் பற்றி!”

“ம்...!” தம்பி அழுத்தமாக உம் கொட்டிவிட்டுத் தொடர்ந்தார்: “நாம் எல்லா இடத்திலும் தேடுவோம். அப்படியே மனைக்கும் போவோம்.”

சரியாக அந்த நேரம் அவர்கள் எழுமற்றூர் மனையை அடைந்திருந்தனர்.

எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு தம்பி, அதற்குள் காலெடுத்து வைக்கிறார். படிப்புரைக்குள் கால் எடுத்து வைத்தபோது தன் உடலுக்குள் ஒருவித மரப்புத் தன்மை படர்வதாக அவருக்குத் தோன்றியது. உடம்பின் மொத்த ரோமக் கால்களும் துடித்து நிமிர்ந்தன. தன் உடம்பு கனமற்று லேசாவது போல் உணர்ந்தார்.

“சேகர வர்மாவை சரியாக எந்த இடத்தில் பார்த்தீர் குறூப்பே?”

“இதோ, இந்த அறைக்குள்தான்.”

“மறுபடியும் ஒரு தடவை உள்ளே போய்ப் பாருங்கள்.”

“என்னால் இனிமேல் அதற்குள் தனியாகப் போக முடியாது. நீங்களும் வாருங்கள்...” குறூப்பு தயங்கினார்.

இருவரும் வீட்டுக்குள் நுழைந்து தென்புற அறை வாசலுக்கு வந்தனர்.

“இதற்குள்தான் பார்த்தேன்” குறூப்பு கூறினார்.

குறூப்பு கதவை உட்புறமாகத் தள்ளினார். வாசுதேவன் தம்பி உட்புறம் பார்த்தார். அங்கு எதுவும் தட்டுப்படவில்லை.

“எப்படியிருந்தாலும் இதற்குள் நுழைந்தது நுழைந்து விட்டோம். எல்லா இடத்தையும் பார்த்து விடலாம்” தம்பி கூறினார்.

இருவருமாகச் சேர்ந்து தெரு வாசற்படி கடந்தனர். தம்பி குளத்தை நோக்கி நடந்தார். ஒரு யூகத்தால்தான் அவர் அப்படி நடக்கத் தொடங்கினார். தனக்கு நேர்ந்த அனுபவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சேகர வர்மாவுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். உறுதிதான்! எனவே, இல்லத்தின் குளத்தைப் பரிசோதிப்பது அவரது நோக்கம். அதற்காகவே இந்தப் பக்கம் வந்தார்.

இருவரும் குளக்கரையை அடைந்தனர். தண்ணீர் இப்போது தெளிந்திருந்தது.

“குறூப்பு, அந்த ஆம்பல் மொட்டுக்குக் கீழே துணிதானே தட்டுப்படுகிறது?” தம்பி சந்தேகத்துடன் கேட்டார்.

“ஆமாம், உண்மைதான்!” குறூப்பு வலப்பக்கமாகச் சற்று நகர்ந்து நின்று பார்த்தார். “அவரது வேட்டியின் முனை போல் இருக்கிறது. வேட்டியின் கரை அதுதான்” அவர் தனது சந்தேகத்தை தீர்த்துக் கொண்டார்.

“மறுபடியும் நன்றாகப் பாரும்... அதோ அந்தக் கம்பால், மொட்டுகளை நகர்த்திப் பாரும்” தம்பி கூறினார்.

உலர்ந்து விழுந்து கிடந்த எட்டி மரத்தின் கம்பு ஒன்றை எடுத்து துணியைக் கீழ்ப்புறமாக அழுத்திப் பார்த்தார்.

கம்பு தண்ணீருக்குள் எதன் மீதோ பட்டது போல் தோன்றியது. குறூப்பு அதை மேற்புறமாக இழுத்தார்.

அப்போது மெலெழும்பி வந்தது சேகர வர்மாவின் உடல்.

குறூப்பு நடுங்கியபடி பின்புறமாக நகர்ந்தார்.

“இனி இந்தத் தகவலை கோவில்கத்தில் போய்த் தெரிவியுங்கள். மிச்சத்தைப் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். தவறிக் குளத்தில் விழுந்து இறந்து விட்டார் என்று மட்டும் சொன்னால் போதும்!” தம்பி குறூப்பிடம் கூறினார்.

சேகர வர்மாவின் உடம்பைக் குளத்திலிருந்து வெளியே எடுத்தனர். முறைப்படியான கர்மங்கள் எல்லாவற்றையும் செய்த பிறகு சிதையிலிட்டு எரித்தனர். மரணத்துக்கான காரணம் அப்போதும் விளங்காததாகவே மீதமானது. ஆனால், வாசுதேவன் தம்பிக்கு மட்டும் சில சந்தேகங்கள் அது தொடர்பாக எழுந்தன.

கார்த்திகா அந்தர்ஜனத்தின் மரணத்துக்குக் காரணமானவர்களில் ஒருவரான வர்மாவின் மரணம், வாசுதேவன் தம்பியின் மனதில் பீதியை எழுப்பி விட்டது. தன்னுடைய முடிவும் வெகு தொலைவில் இல்லை என்பது உறுதியாகி விட்டது. எனவே, உடனடியாக இதற்குப் பரிகாரம் செய்யாவிட்டால், மீதமுள்ளவர்களும் ஒவ்வொருவராக அந்தப் பிரம்மரட்சஸின் பழிவாங்குதலுக்கு இரையாக வேண்டியிருக்கும்.

அன்று மாலை நேரத்தில் தம்பி, ஆள் அனுப்பி குறூப்பை வரவழைத்தார்.

“உங்களை எதற்காக வரவழைத்திருக்கிறேன் தெரியுமா?” தம்பி கேட்டார்.

“ஏதாவது காரியம் இருக்கும்.”

“சரி, சொல்லி விடுகிறேன்.”

‘தம்பி என்ன சொல்லப் போகிறார்?’ என்பதை அறியும் ஆவலில் அவர் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு நின்றார்.

“உங்களுக்குத் தெரிந்த, கெட்டிக்காரர்களான மந்திரவாதிகள் யாராவது இருக்கிறார்களா?” வாசுதேவன் தம்பி விசாரித்தார்.

குறூப்பு வராந்தாவில் அமர்ந்தார்.

“நன்றாக யோசனை செய்து சொன்னால் போதும், ஏப்பை சாப்பை யான ஆட்கள் தேவையில்லை. ஆள், நிச்சயம் கெட்டிக்காரனாக இருக்க வேண்டும்!”

"யோசித்துப் பார்க்கிறேன்."

சற்று நேரத்துக்குப் பிறகு குறூப்பு கூறினார்: "வடக்கே கிளிகொல்லூர் காவை ஒட்டி வார யார் ஒருவர் இருக்கிறார். சங்கரவாரியரோ... என்னவோ அவர் பெயர். பயங்கரமான மந்திரவாதி என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் கூப்பிட்டால் பதில் கொடுக்காத ஆவிகளும், பேய் பிசாசுகளும் கிடையாதாம்!"

"பிரம்மரட்சஸுகளைத் தளைக்க முடிந்த ஒருவர்தானா?" தம்பி கேட்டார்.

"வாரியரைப் பற்றி உங்களுக்குத் தெரியாததால் இப்படிப் பேசுகிறீர்கள்!"

"உங்களுக்குத் தெரிந்து அப்படி ஆச்சரியகரமான எதையாவது செய்திருக்கிறாரா?"

"நான் நேரடியாகப் பார்த்தது இல்லை. ஆனால், கேள்விப் பட்டிருக்கிறேன்."

"குறூப்பே, நாம் ஒரு தடவை அங்கு போய்விட்டு வரவேண்டும். நாளைக்கே புறப்படலாம்... நீங்கள் தயாராக வந்து விடுங்கள்!" தம்பி கூறினார்.

"அதற்கென்ன, தாராளமாக வருகிறேன்" குறூப்பு ஒப்புக் கொண்டார். உடனேயே அங்கிருந்து கிளம்பவும் செய்தார்.

**இ**ரவு நேரமானபோது ஓமனாவுக்கு பயம் ஏற்படத் தொடங்கியது. சந்திரிகா எவ்வளவு வற்புறுத்தியும் அந்தப் படுக்கை அறைக்குள் நுழைய அவள் ஒப்புக்கொள்ளவில்லை. வாசுதேவன் தம்பியோ வராந்தாவிலேயே உட்கார்ந்திருந்தார்.

"அண்ணி, அப்படியானால் ஒரு யோசனை. நீங்கள் இந்த அறையில் படுத்துக் கொள்ளுங்கள். எனக்கு அந்த மாதிரி பயம் எதுவும் கிடையாது. நான் வேண்டுமானால் அங்கே படுத்துக் கொள்கிறேன். உங்களுக்கு அந்த அறையில் படுக்கத்தானே பயம்?"

தம்பியின் படுக்கையறைக்குள் நுழைந்த சந்திரிகா அங்கிருந்த மெத்தை, தலையணை, விரிப்பு போன்றவற்றை எடுத்து வந்து தனது அறையில் விரித்தாள். அதன்பிறகு தனது படுக்கையை எடுத்துக்கொண்டு அவள் தம்பியின் அறைக்குப் போனாள்.

கடிகாரத்தில் பனிரெண்டு மணி அடிக்கும் சத்தத்தை சந்திரிகா கேட்டாள்.

அப்போது அந்த அறையின் ஜன்னல் அருகே ஒரு சத்தம் கேட்டது. உடைகள் சலசலப்பது மாதிரியான சத்தம்.

யாரோ மிக நீண்ட பெருமூச்சு வெளிவிடுவது போல்...

‘அது யாராக இருக்கும்?’ சந்திரிகா யோசிக்கத் தொடங்கினாள்.

குளிர் அதிகமாக இருந்ததால் சந்திரிகா இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தாள். தலை வரை இழுத்து மூடியிருந்தாள்.

மறுபடியும் அதே சத்தம் கேட்டது.

யாரோ அங்கு இருக்கிறார்கள் என்பது உறுதி!

சந்திரிகா, தலையை மூடியிருந்த போர்வையை விலக்கிவிட்டு சத்தம் வந்த திசையில் பார்த்தாள்.

பார்த்தவள் திடுக்கிட்டாள்.

ஜன்னல் வழியாக ஓர் உருவம் நிதானமாக அந்த அறைக்குள் நுழைந்தது.

# 8

படுக்கையில் அந்த நிலையிலிருந்து சந்திரிகாவினால் அசையக்கூட முடியவில்லை.

அவள் உடலின் ரத்தக் குழாய்களுக்குள் பாய்ந்து கொண்டிருந்த ரத்தம் மொத்தமும் சட்டென்று அப்படியே உறைந்துவிட்டாற்போல் தோன்றியது.

காரணம், அந்த உருவம் கடந்து வந்தது அப்படிப்பட்ட முறையில்தான்.

அந்த உருவம் காற்றில் தவழ்ந்து வருவது மாதிரி அவளுக்குத் தோன்றியது. நீருக்குள் மீன் ஒன்று செடிகள் மற்றும் பாறைகளுக்கு ஊடாக நெளிந்து, வளைந்து வருவது போல் அந்த உருவம் வருவதாக சந்திரிகாவுக்குத் தோன்றியது.

முற்றிலுமாக அந்த அறைக்குள் வந்த உருவம், சந்திரிகா படுத்திருக்கும் கட்டிலை நெருங்கி நின்றது.

ஜன்னல் வழியாக வந்து கொண்டிருந்த சன்னமான வெளிச்சம் அந்த உருவத்தின் முகத்தில் பதிந்தது.

சந்திரிகா பயத்தில் அப்படியே உறைந்து போனாள்.

கார்த்திகா அந்தர்ஜனம்!

'கடவுளே!' அவள் மனம் அலறியது.

விபத்தில் சிக்கிக் குளத்துக்குள் இறந்து கிடந்த கார்த்திகா அந்தர்ஜனம் இதோ, தனக்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறாள்.

"உன்னிடம் இங்கு படுத்துக்கொள்ளச் சொன்னது யார்?" அந்த உருவம் கேட்டது. பயமேற்படுத்தும் என்னவோ மாதிரியான ஒரு குரல்.

சருகுகள் ஒன்றுடன் ஒன்று உராய்வது போல் பிசிறடிக்கும் குரல்.

சந்திரிகாவின் உடம்பிலிருந்த மயிர்க்கால்களுக்கு ஊடாக பயம் மெதுவாக உள்ளுக்குள் ஊடுருவியது. பீதியின் மரத்துப்போன விரல்கள், அவளின் இதயச் சுவர்களை வருடின.

அதோ, அந்தக் கைகள் நீண்டு வருகின்றன.

'ஐயோ!' என்று சந்திரிகா அலறத் தொடங்குவதற்குள், நீண்டு வந்த அந்தக் கைகள் அவள் உடலின் கீழ்ப்புறமாக நுழைந்து, அவளை உயர்த்தி எடுத்து விசையாக வெளியே வீசியெறிந்தது.

வெளியே வளர்ந்திருந்த புதர்ச் செடிகளின் மீது வந்து விழுந்தாள் சந்திரிகா. அவள் உரத்த குரலில் அலறினாள். ஆனால், சத்தம் அவள் தொண்டையிலிருந்து வெளியேறவே இல்லை.

அதன்பிறகு வந்தது போலவே அந்த உருவம் திரும்பிப் போகவும் செய்தது.

**தூ**க்கம் கண்ணைச் சுழற்றியபோது வாசுதேவன் தம்பி எழுந்து தனது படுக்கை அறைக்குச் சென்றார். ஆனால், அங்கு எவரையும் காணவில்லை.

ஓமனாவை அழைப்பதற்கு பதில் அவர் சந்திரிகாவை அழைத்தார். அதற்கு பதில் குரல் கொடுத்தவளும் சந்திரிகாதான். ஆனால், அந்தக் குரல் வீட்டுக்கு வெளியிலிருந்து கேட்டது.

வியப்பு அடைந்த தம்பி, விளக்கை ஏற்றிக்கொண்டு சந்திரிகாவின் குரல் வந்த திசையை நோக்கி நடந்தார்.

அதற்குள் சந்திரிகா எழுந்து உட்கார்ந்திருந்தாள்.

“அண்ணா, நான் இங்கு இருக்கிறேன்!” அவள் பதற்றத்துடன் கூறினாள். புதர்ச்செடிகளால் உடம்பில் கீறல் விழுந்த பகுதிகளை வருடியபடி அவள் ஜன்னலுக்கு அருகே வந்து நின்றாள்.

“என்ன, என்ன ஆனது உனக்கு? முதலில் உள்ளே வா!”

வராந்தா வழியாக அவள் வீட்டுக்குள் வந்தாள்.

நடந்ததையெல்லாம் விவரித்தாள்.

“ஓகோ... அப்படியா சங்கதி! சரி, நீயும் ஓமனாவும் ஒன்றாகப் படுத்துக் கொள்ளுங்கள்” என்ற தம்பி, சந்திரிகாவை, அவளது அறைக்கு அனுப்பி வைத்தார். பிறகு வராந்தாவில் வந்து அமர்ந்து கொண்டார்.

நில விளக்கில் எண்ணெய் ஊற்றித் திரியை நீட்டிப் பற்ற வைத்தார்.

அதற்கு அருகே உட்கார்ந்திருந்தவருக்குத் தன்னையும் மீறிக் கண்கள் அடைத்தன. விடியற் காலையில் சேவல் கூவியபோது தம்பி திடுக்கிட்டு விழித்தார். உடம்பெல்லாம் வலிப்பதாகத் தோன்றியது. முதுகுப்பகுதியில் மணல் துகள்கள் உடம்புக்குள் ஊடுருவுவது போன்ற

உணர்வு. கையால் தடவிப் பார்த்தபோது, தான் படுத்திருப்பது வழுவழுப்பான தரையில் அல்லவென்று புரிந்தது.

சுற்றிலும் கூரிருட்டு.

தம்பி திகைப்பு அடைந்தார். அவர் ஒருவாறாக எழுந்து உட்கார்ந்தார்.

எதெல்லாமோ நெருக்கி, நொறுங்கி உடைபடுவது போன்ற சத்தம் அருகில் எங்கிருந்தோ கேட்டுக் கொண்டிருந்தது. தொடர்ந்து 'ப்ளும்' என்றொரு சத்தம்.

எதுவோ ஒன்று தண்ணீரில் விழுவது போன்ற சத்தம்.

வாசுதேவன் தம்பிக்குள் ஒரு சந்தேகம் உயர்ந்தது. 'தான் ஏதோ ஒரு குளத்துக்கு அருகே படுத்திருக்கிறோமோ? அருகில்தான் குளம் இருக்க வேண்டும்.

கைகளால் சுற்றுமுற்றும் துழாவினார். சட்டென்று அவர் இடப்புறமாகச் சரிந்து ஒதுங்கினார். வலப்புறம் கை தாழ்ந்ததே குளத்தை நோக்கித்தான்.

ஆழமான குளம்.

'அந்தக் குளத்துக்குள்தான் கார்த்திகா அந்தர்ஜனத்தின் பிணத்தைக் கொண்டு வந்து போட்டோம். படுத்த நிலையில் அப்படியே மெதுவாக நகர்ந்தாலோ திரும்பினாலோ ஆழமான அந்தக் குளத்துக்குள் விழுந்திருப்போம்!

பொழுது விடியும்போது தனது பிண உடல் தண்ணீருக்குள் மிதந்திருக்கும். பிறகு யாராவது கவனித்தால் உண்டு. இல்லாவிட்டால் மேற்பரப்பில் செடிகளுக்கு அடியில் மறைந்து கிடக்க வேண்டியதுதான். அங்கிருந்து சட்டென்று எழுந்த தம்பி, கண்களைச் சுருக்கிச் சுற்றுமுற்றும் பார்த்தார். அதற்குள் சன்னமான வெளிச்சம் பரவத் தொடங்கியிருந்தது. அந்த அரைகுறை வெளிச்சத்தில் அவர் கருமையான ஓர் ஓவியம் போல் நின்றிருந்த எட்டி மரத்தின் பின்னால் எழும்பி நிற்கும் எழுமற்றூர் மனையின் வெளிப்புற மதிலின் ஒரு பகுதியைக் கவனித்தார்.

யாரோ தன்னைக் கொண்டுவந்து இங்கு போட்டிருக்கிறார்கள் என்பது விளங்கியது. வேறு யார், கார்த்திகா அந்தர்ஜனமாகத்தான் இருக்க வேண்டும். அப்படியானால் நிலைமை மிகவும் விபரீதமாகிக் கொண்டு வருகிறது. எப்படியும் அந்தப் பைசாசிக உருவத்துக்கு ஒரு முடிவு கட்டாவிட்டால் வாழ்க்கையில் ஒருபோதும் நிம்மதி என்பதே இருக்காது. அவர் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டார்.

வீட்டை அடைந்தவர் மறுபடியும் வராந்தாவில் படுத்தார். வெயில் சுள்ளென்று உறைத்தபோது தம்பி எழுந்தார்.

அப்போது குளித்துவிட்டு வந்த சந்திரிகா சொன்னாள்: "காலையில் பார்த்தபோது ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தீர்கள். நான் எத்தனை தடவை எப்படியெல்லாம் தட்டி எழுப்பிப் பார்த்தேன் தெரியுமா?"

"என்னையும் மீறி நான் அசந்து தூங்கிவிட்டேன்... ஆமாம் குறுப்பு வந்தாரா?" தம்பி கேட்டார்.

"இல்லையே... வந்த மாதிரித் தெரியவில்லை."

அப்போது வெளியே யாரோ இருமும் சத்தம் கேட்டது.

"யாரோ வந்திருக்கிறார்கள்" ஓமனா வந்து கூறினாள்.

"குறுப்பாகத்தான் இருக்க வேண்டும்" என்று முணுமுணுத்த தம்பி வெளியே போனார்.

"குறுப்பே. நாம் கிளம்பலாம் இல்லையா?" தம்பி கேட்டார்.

"நான் தயாராக வந்திருக்கிறேன். கிளம்புங்கள் போகலாம்."

தம்பி அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்து விட்டு உடை மாற்றிக்கொண்டு வந்தார்.

கிளம்புவதற்கு முன் சந்திரிகாவை அழைத்த தம்பி கூறினார்: "அனேகமாக இருட்டுவதற்கு முன்னால் வந்துவிடுவேன். ஒருவேளை வருவதற்கு மேலும் தாமதமானால், 'வலிய கோயிக்கல்' வீட்டைச் சேர்ந்த தாமோதரனின் சகோதரிகள் யாரையாவது அழைத்து வந்து இங்கு படுக்க வையுங்கள்."

அவர்கள் இருவரும் தெருவாசல் தாண்டிச் செல்வதை ஓமனாவும், சந்திரிகாவும் பார்த்துக்கொண்டே இருந்தனர்.

"நீங்கள் பார்த்ததும், ஓர் உருவத்தைத்தான் என்று சொன்னீர்களே... அது யார்?" ஓமனா கேட்டாள்.

"அது, இங்கு பக்கத்தில் உள்ள வாரிசற்றுப் போன ஒரு மனையின் கடைசி வாரிசு. ஒரு தம்புராட்டி. பெயர் கார்த்திகா அந்தர்ஜனம். ஒருநாள் அவர்கள் வீட்டுக் குளத்திலேயே இறந்து மிதந்தார் அவர்!"

"இருக்கட்டுமே... அவர் எதற்காக இந்த வீட்டுக்கு வந்தார்?"

"எனக்கும் அதுதான் புரியவில்லை. அவர் எதற்காக இங்கு வருகிறார்? உண்மையைச் சொன்னால் அவர் இங்கு வரவேண்டிய தேவையே இல்லை!"

"ஒருவேளை நீங்கள் அவருக்கு ஏதாவது தொல்லை கொடுத்தீர்களோ?" ஓமனா கேட்டாள்.

"அதற்கு வாய்ப்பே இல்லை. அந்த வீட்டின் எல்லா விஷயங்களையும் நாங்கள்தான் நடத்திக் கொடுத்திருக்கிறோம்."

"எப்படி இருந்தாலும், இந்த வீட்டைச் சுற்றி வருவதுதான் அதன் நோக்கம் என்றால், அதை எங்காவது ஆணியறைந்து விட வேண்டியதுதான்."

"குறூப்பும் அண்ணனும் அதற்காகத்தான் போயிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்."

குறூப்பும், வாசுதேவன் தம்பியும் எழுமற்றூர் மனையைச் சேர்ந்த பகவதி கோயிலை நெருங்கியபோது தாமோதரன் உண்ணித்தானை சந்தித்தனர்.

தாமோதரன் உண்ணித்தான், தம்பியின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவர். சேகர வர்மாவைப் போல், தம்பியின் எல்லாவிதமான கெட்ட பழக்க வழக்கங்களுக்கும் பங்காளி.

"நீங்கள் இருவரும் எங்கே இப்படி?" தாமோதரன் கேட்டார்.

"அதெல்லாம் கொஞ்சம் ரகசியமான விஷயம்."

"அப்படியானால், அதைத் தெரிந்துகொண்ட பிறகுதான், உங்களை இங்கிருந்து விடுவேன்!"

தம்பி, நடந்ததையெல்லாம் சுருக்கமாகக் கூறினார். எல்லா வற்றையும் கேட்ட பிறகு நின்ற இடத்திலிருந்து அசைய முடியாமல் அப்படியே ஆணியடித்தாற் போல் நின்றுவிட்டார் தாமோதரன்.

"ஓகோ, விஷயம் அப்படிப் போகிறதா?"உண்ணித்தானின் குரலில் பதற்றம் தெரிந்தது.

அதற்குள் தம்பியும் குறூப்பும் நடைபயணத்தைத் தொடர்ந்தனர்.

உண்ணித்தான் எழுமற்றூர் தேவி கோயிலுக்குள் பார்த்து இரு கைகளையும் பக்தியுடன் கூப்பித் தொழுதபடி பேசினார். "தேவி, பகவதி, முட்டாள்தனமாக எதையாவது செய்திருந்தால் மன்னித்து அருளுங்கள். இனிமேல் இப்படியெல்லாம் நடந்துகொள்ள மாட்டேன்!"

அப்போது கருவறையின் இருபுறங்களிலும் நின்றிருந்த பூத கணங்களின் சிலை ஒன்றில் பல்லி ஒன்று குரல் கொடுத்தது.

அந்தச் சத்தம், அது பேசுவது போலிருந்தது.

உண்ணித்தானுக்கு அதன் பொருள் இப்படித்தான் தோன்றியது: 'அடுத்தது நீ தான்!'

"பகவதி..." உண்ணித்தான் அந்த பல்லியைக் கவனித்தார்.

அதன் கண்கள் பளபளத்தன.

அது அவரையே ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தது.

தாமோதரன் உண்ணித்தானின் இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்தது. அவர், அதன் பிறகு ஒரு நிமிடம் கூட அங்கு நிற்கவில்லை. உடனே வீட்டுக்குக் கிளம்பினார்.

வீட்டுக்கு வந்த பிறகும் அவருக்கு நிம்மதி இல்லை.

அவர் மனைவி, ரேவதி குஞ்ஞும்மா அவரருகே வந்தாள். அவரிடம் ஏதோ விபரீதமான ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

"என்ன, என்னமோ போலிருக்கிறீர்கள்?" அவள் விசாரித்தாள்.

அவர் எழுந்து தனது படுக்கையறையை நோக்கி நடந்தார்.

**வா**சுதேவன் தம்பியும், குறூப்பும் கிளிக்கொல்லூரை அடைந்தனர். அதற்குள் மாலை நேரமாகி விட்டிருந்தது.

அங்கிருந்து காவுக்குச் செல்லும் வழியை விசாரித்தனர். அந்த நாற்சந்தியிலிருந்து காவுக்கு அதிகத் தூரமில்லை.

காவை நெருங்கும்போது இருட்டி விட்டது.

மிகவும் பழைய ஒரு கோயில் அது. வெளிப்புற மதிலோ, சுற்றிலும் இடமோ அதிகமில்லாத கருவறை மட்டுமே உள்ள ஒரு கோயில்.

ருத்ர பகவதி, கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது என்று கோயிலுக்கு முன்னால் உள்ள ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்த பெரியவர் கூறினார். சப்பணமிட்டு அமர்ந்திருந்த பெரியவரின் மடியில், நரைத்து நீண்ட தாடி பதிந்து கிடந்தது.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" பெரியவர் கேட்டார்.

"சற்றுத் தொலைவில்... தெற்குப் பகுதியிலிருந்து வருகிறோம்" குறூப்பு கூறினார்.

"இந்த நேரத்தில் அங்கு யாரை சந்திக்கப் போகிறீர்கள்?"

"சங்கர வாரியரை!"

"ஓகோ, அப்படியானால் அதற்காகத்தான் வந்திருக்கிறீர்கள், இல்லையா?" பெரியவர் கேட்டார்.

இதைக் கேட்டதும் குறூப்பும் தம்பியும் பர பரம் பார்த்துக் கொண்டனர்.

பெரியவரின் கேள்வியில் பதிலும் அடங்கியிருப்பது போல் தோன்றியது. எனவே, வந்தது எதற்காக என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

"சங்கர வாரியர் குடியிருப்பது இந்தக் கோயிலுக்குப் பின்னால் தான்! அதோ. அந்த வழியாகப் போனால் போதும்" பெரியவர் சுட்டிக் காட்டினார்.

அவர்கள் அந்தப் பக்கமாகப் பார்த்தனர்.

அந்தப் பகுதியில் நீலநிற வெளிச்சம் ஒன்று புள்ளி போல் தென்பட்டது.

# 9

"**ச**ந்தேகமே வேண்டாம்! அந்த வெளிச்சம் தெரிவதுதான் நீங்கள் தேடி வந்த இடம்!" ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்த பெரியவர் மீண்டும் கூறினார்.

வாசுதேவன் தம்பியும், குறூப்பும் முன்புறமாகச் சற்று நடந்த பிறகு திரும்பிப் பார்த்தனர்.

"என்ன, பெரியவரைக் காணவில்லையே!" தம்பி கூறினார்.

"அவர் எங்கேயாவது போயிருக்கலாம்."

அப்போது அருகிலிருந்த பிரமாண்டமான பாலை மரம் மிகவும் விசையுடன் குலுங்கியது. வேருடன் பெயர்ந்து விழுவதைப் போலிருந்தது அதன் தள்ளாட்டம். ஒரு விநாடியில் சட்டென்று அது அசைவற்று நிற்கவும் செய்தது.

"குறூப்பே, சங்கர வாரியர் ஆள் கெட்டிக்காரர் என்றுதான் தோன்றுகிறது..." தம்பி ரகசியமான குரலில் பேசினார்.

"இப்படித் தோன்றக் காரணம்?"

"இதெல்லாமே ஒரு பரிசோதனையாக இருக்கலாம். 'ஆள் எப்படிப்பட்டவர் என்று புரிந்து கொள்ளுங்கள்!' என்று காட்டி யிருக்கலாம்."

"ஒருவேளை நீங்கள் சொன்ன மாதிரியும் இருக்கலாம்" குறூப்பு கூறினார்.

நீல வெளிச்சத்தை லட்சியமாக்கி இருட்டினூடாக அவர்கள் நடந்தனர். பெரியவர் சொன்னபடி அது அவ்வளவொன்றும் அருகில் இல்லை.

கடைசியாக அவர்கள் வந்து சேர்ந்தது ஒரு தெரு வாசற்படிக்கு முன்னால். அது திறந்து கிடந்தது. அதற்குள் தென்பட்ட ஒரு பழைய வீட்டின் வராந்தாவில் யாரோ ஒருவர் உட்கார்ந்திருப்பது போல் தோன்றியது.

இருவரும் தெரு வாசலைக் கடந்தனர்.

"யாரது?" வராந்தாவிலிருந்து ஒரு குரல் கேட்டது.

"ரொம்பத் தொலைவிலிருந்து வருகிறோம்" தம்பி பதிலளித்தார்.

"உள்ளே போங்கள்" அங்கிருந்தவர் பதிலளித்தார்.

அப்போது அந்த நீல வெளிச்சம் நகர்வதை அவர்கள் கவனித்தனர். ஊன்றிப் பார்த்தபோது அது ஒரு பாம்பு என்று அவர்களுக்கு விளங்கியது.

திறந்து கிடக்கும் அறை ஒன்றுக்குள் அந்தப் பாம்பு ஊர்ந்து சென்றது. நீல நிறத்தில் தென்பட்டது அந்தப் பாம்பின் வாய்க்குள் இருந்தது நாகமாணிக்கம் என்பது குறூப்புக்குப் புரிந்தது.

"உட்காருங்கள்!" வராந்தாவில் இருந்தவர் கூறினார். பின்பு நில விளக்கின் திரியை முன்புறமாக நீக்கித் தூண்டி விடவும் செய்தார். உடனே வெளிச்சம் அதிகரித்தது.

"தகவல் என்ன? சொல்லுங்கள்!" அவர் கேட்டார்.

"நாங்கள் தேடி வந்த இடம்தானே இது? சங்கர வாரியரை சந்திப்பதற்காக வந்திருக்கிறோம்" குறூப்பு கூறினார்.

"சந்தேகம் வேண்டாம். நீங்கள் வந்திருப்பது சரியான இடத்துக்குத்தான்."

“நாங்கள் வந்திருப்பது...” குறுப்பு பேசத் தொடங்கியபோது சங்கர வாரியர் தடுத்தார்.

“வேண்டாம். அதையும் நானே கண்டுபிடித்துக் கொள்கிறேன்” வாரியர் எழுந்து உள்ளே போய்த் திரும்பி வந்தார். அப்போது அவர் கையில் ராசிப்பலகையும் சோழி மற்றும் சங்குகளும் கொண்ட பை ஒன்றிருந்தது.

“இப்போது பிர னம் பார்ப்பது சரியல்லதான். ஆனால், நீங்கள் கூற வந்திருக்கும் நபர் அகப்பட வேண்டுமானால் அதற்கு இதுதான் சரியான நேரம்!” வாரியர் கூறினார்.

அதன் பிறகு அவர் ராசிப் பலகையில் சோழிகளைப் பரப்பினார். அது தொடர்பான சடங்குகளை முடித்த பிறகு கைக்குக் கிடைத்த சோழிகளை எடுத்துக் கூட்டிக் கழித்து, வகுத்து என்னென்னவோ செய்தார். இறுதியில் அவர் முகத்தில் சுளிவுகள் உயர்ந்தன.

சங்கர வாரியர் தெரு வாசற்படிப் பக்கம் பார்த்தார்.

அவர் கண்களில் பீதி பரவியது.

“என்னங்க வாரியரே?” குறுப்பு கேட்டார்.

“ஒன்றுமில்லை, நீங்கள் இருவர் மட்டுமல்ல வந்திருப்பது, அவ்வளவுதான்.”

‘வாரியர் அப்படிச் சொன்னதால் நம்முடன் வேறு யார் வந்திருப்பார்கள்?’ இருவரும் யோசனையில் ஆழ்ந்தனர்.

மட்டுமின்றி, வாரியர் மிகவும் பயப்படுவதாகவும் தோன்றியது.

“இப்படியெல்லாம் பயப்படுத்த வேண்டாம். கிளிக்கொல்லூர் காவு சங்கர வாரியர் அவ்வளவெல்லாம் சாமானியமானவன் இல்லை. தேவைப்பட்டால் எல்லை கடக்கவும் தெரியும்!” வாரியர் எவரிடம் என்றில்லாமல் பேசினார்.

“இப்போது நீங்கள் சொன்னபடியே செய்துவிட்டால், போதும். நாங்கள் நிம்மதி அடைவோம்!”

“நீங்கள் பயப்படாதீர்கள். இன்று இங்கேயே தங்குங்கள். எல்லாவற்றையும் நாம் சரிப்படுத்தி விடலாம்” சங்கர வாரியர் உறுதியளித்தார்.

“நாங்கள் வந்த விஷயத்தை விளக்கட்டுமா... அல்லது?” தம்பி கேட்டார்.

“வேண்டாம், எனக்குத் தெரிகிறது. உங்கள் பிரச்சினையைச் சொல்லட்டுமா? கோபம் கொண்ட பிரம்மரட்ச ஒன்று உங்களை எப்போதும் பின்தொடர்ந்து கொண்டிருக்கிறது. எங்கும், எப்போதும் உங்களுக்கு ஆபத்து நிகழலாம் என்று சூசகங்கள் கூறுகின்றன. அவ்வளவு ஏன், இப்போது கூட உங்களைப் பின்தொடர்ந்து அது இங்கு வந்து சேர்ந்திருக்கிறது.”

“இங்கு வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று கேள்விப்பட்டோம். எங்களை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்” தம்பி கூறினார்.

“என்ன நடப்பதாக இருந்தாலும் இந்த இடத்தின் மூர்த்திகளை அப்படியெல்லாம் தாண்டிக்கொண்டு போக முடியாது” சங்கர வாரியர் உறுதியளித்தார்.

சங்கர வாரியருக்குச் சுமார் ஐம்பது வயது இருக்கலாம். மெலிந்த உடம்பு. சதுர முகம். தலைமுடி பரட்டையாகக் கலைந்து கிடந்தது.

அடர்த்தியாக இல்லாமல் ஆங்காங்கே இடைவெளிகளுடன் வளர்ந்திருக்கும் தாடி-மீசை, புருவங்கள், அடர்த்தியுடன் கருமையாக விளங்கின. கழுத்தில் ருத்திராட்ச மாலை ஒன்று கிடந்தது.

துர்மந்திரவாதத்தின் ஆதியையும் அந்தத்தையும் பார்த்துவிட்ட சங்கர வாரியர் தனது காம இச்சையைத் தீர்ப்பதற்காக தேவலோக மங்கையரைக் கூடத் தனது படுக்கையறைக்கு வரவழைப்பது உண்டு. மிக அழகான மோகினிகளும், கந்தர்வப் பெண்களும்கூட வாரியருடன் சுரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நீண்ட நெடுங்காலமாக அவரது பிதாமகன்கள் ஆவாகம் செய்து எடுத்திருந்த சக்திகளையும், மிகச்சிறு வயதிலிருந்தே தான் சம்பாதித்துள்ள பைசாசிக சக்திகளையும் தனது சுகத்துக்காக மாற்றிக்கொள்ள

அவர் தயங்குவதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக மரணமடைந்தவர்களைக்கூட எழுப்பும் வல்லமை பெற்றவர் அவர் என்று சொல்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

வாசுதேவன் தம்பியும் குறூப்பும் சங்கர வாரியர் ஒதுக்கித் தந்த அறைக்குள் படுத்து நல்ல தூக்கத்தில் ஆழ்ந்தனர். நடந்து வந்த களைப்பால் அவர்கள் படுத்த உடனேயே உறங்கவும் தொடங்கினர்.

'அன்றைய இரவில் பொழுதை எப்படிக் கடத்துவது? என்ற யோசனை ஏற்பட்டதும் ஓலைச்சுவடிகளை எடுத்து எதையோ தேடுவது போல் பரிசோதித்தார் சங்கர வாரியர். பிறகு பூஜையறையிலிருந்து வெளியே வந்தார். அவரது வீட்டின் தென்புறமுள்ள 'அ தித்தரை' எனப்படும் மாடத்தின் பின்புறம் வளர்ந்திருக்கும் எட்டி மரத்தின் அடிப்பகுதியை நெருங்கினார்.

நூற்றுக்கணக்கான ஆணிகள் மற்றும் சூலங்களை அந்த எட்டி மரத்தில் அறைந்திருந்தனர்.

தம்பியும் குறூப்பும் தனது வீட்டுக்குள் வந்து அமர்ந்த போது தெளிவற்ற வடிவம் ஒன்றை அவர் தெரு வாசற்படியில் கவனித்தார்.

அவர்களுடன் வந்திருக்கிற பிரம்மரட்ச தான் அது என்பதும் வாரியருக்கு விளங்கியது. எனவே, தன்னுடைய சக்தி எப்படிப்பட்டது என்பதை அது தெரிந்து கொள்ளட்டும் என்று கருதியவர், எட்டி மரத்தில் ஆணி அறைந்திருக்கும் மோகினியுடன் அன்றிரவைச் செலவழிப்பது என்று தீர்மானித்தார்.

கையில் எடுத்துச்சென்ற நிலவிளக்கின் வெளிச்சத்தில் அவர் ஒவ்வோர் ஆணியையும் பரிசோதித்தார். கடைசியில் குறிப்பிட்ட ஓர் ஆணியை உருவித் தரையில் எறிந்தார்.

அந்த ஆணி விழுந்த இடத்தில் கண்மூடித் திறப்பதற்குள் கருமையான நிழல் ஒன்று எழும்பி, பிறகு அது அழகான ஒரு பெண் வடிவாக மாறவும் செய்தது.

"வா, என்னுடன்!" சங்கர வாரியர் அந்த மோகினியிடம் கூறினார். பிறகு திரும்பிப் பார்க்காமல் அவர் பாட்டுக்கு நடக்கத் தொடங்கினார்.

சங்கர வாரியர் தனது படுக்கை அறைக்குள் நுழைந்தார். கட்டிலில் சாய்ந்து கிடந்தபடி கதவுக்கு வெளியே பார்த்தார்.

சற்று நேரத்துக்குப் பிறகு கதவை ஊடுருவிக் கொண்டு அவள் உட்புறமாக வெளிப்பட்டாள். அறைக்குள் சர்வ சாதாரணமாக நுழைந்தவள், வாரியரின் கட்டிலில் அமர்ந்தாள்.

பேரழகு வாய்ந்த அந்தப் பெண்ணுருவம் ஒளி ஊடுருவக் கூடிய. ஆனால் சன்னமாக ஒளி சொரியக்கூடிய துணியால் மார்புகள் மற்றும் இடுப்புப் பகுதியை மறைத்திருந்தது. ஒளி ஊடுருவும் பிளா டிக்கினால் உடை உடுத்தாற் போன்று இருந்தது.

அவளின் தலைமுடி அவிழ்ந்து உடலின் பின்புறம் பரவிக் கிடந்தது. கண்களில் ஜொலிக்கும் ஒளி. காமன் கணைகளை வெளிப்படுத்தும் திண்மையான அழகிய மார்பகங்கள். எப்படிப்பட்ட தவ முனிவரும் பரவசம் அடையக்கூடிய இடையும், புட்டப் பகுதிகளும்.

இதுவரை இப்படிப்பட்ட ஒருத்தியைப் பார்த்திருப்பதாக சங்கர வாரியருக்குத் தோன்றவில்லை.

"இவள் புதியவள்தான்!"

எட்டி மரத்திலிருந்து தான் உருவி எடுத்த ஆணியை, இதற்கு முன்புவரை கைகளால் தொட்டதுகூட இல்லை. பூர்வீகர்கள் யாராவது ஆவாகம் செய்து ஆணியறைந்த ஏதோ ஒரு ரட்சஸாகவும் இருக்கலாம்.

"உங்களுக்கு என்னை அடையாளம் தெரியவில்லையா?" அவள் வசியமாகச் சிரித்தபடி வாரியரிடம் கேட்டாள்.

"இப்போதுதானே முதல் தடவையாகப் பார்க்கிறேன்."

"என்னைப் போன்றவர்களை இதற்கு முன்னால் நீங்கள் பார்த்தது இல்லை. அப்படித்தானே!"

"என்ன, இப்படியொரு கேள்வி?" வாரியர் கேட்டார்.

"பார்த்திருக்க முடியாது!"

வாரியரின் கண்கள் அவள் உடலின் ஒவ்வொரு பகுதியையும் பார்வையால் வருடிக் கொண்டிருந்தன. அப்போது வாரியர் அற்புதமான மற்றொரு ரகசியத்தைக் கண்டுபிடித்தார்.

அவளுக்குப் பாலைப் பூ மற்றும் இலஞ்சிப் பூவின் மணம் இருக்கவில்லை. அதற்கு பதிலாக நீர்த்தாவரம் ஒன்றின் நறுமணத் துடன் விளங்கினாள்.

கோயில் குளத்தில் பாசத்துடன் வளரும் ஒரு தாவரத்தின் மணம். கோயில் குளத்தின் வாசனை என்றுகூட அதைச் சொல்லலாம்.

"என்னை ஒரு தடவை தொட்டுப் பாருங்கள்" அவள் கேட்டுக் கொண்டாள். "இதோ. இந்த இடத்தில்" அவள் கை நீட்டினாள்.

வாரியர் அந்த உருவத்தின் முன்கைப் பகுதியைத் தொட்டுப் பார்த்தார்.

சட்டென்று திடுக்கிடலுடன் அவர் தன் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டார்.

சங்கர வாரியர் பயந்து நடுங்கினார்.

இறந்து. மரத்துப் போன ஓர் உடம்பைத் தொடுவது போன்ற சில்லிப்பு அவளது கைக்கு இருந்தது.

"மறுபடியும் தொடுங்கள்!" அவள் கேட்டுக் கொண்டாள்.

வாரியர், தான் சாய்ந்து கிடந்த நிலையிலேயே அவளை வெறித்துப் பார்த்தார்.

"என்ன. அப்படியே படுத்துக் கிடக்கிறீர்கள்? என்னைப் பிடிக்கவில்லையா?" அவள் சிரித்தபடி கேட்டாள்.

அந்தச் சிரிப்பின் சத்தம் கேட்டுக் கை-கால்கள் இழுபட்டவரைப் போல் வாரியர் ஒரு தடவை துடித்தார்.

விகாரமும் பைசாசிகத் தன்மையும் நிறைந்த ஒரு சிரிப்பு.

"ம்... இன்னொரு முறை தொட்டுப் பாருங்கள். நானும் உங்களைத் தொட வேண்டியவள்தானே?" அவள் கையை முன்புறமாக நீட்டினாள்.

அவர் எழுந்து பின்னோக்கி நகர்ந்தார்.

அந்தக் கை நீண்டு வந்தது.

சங்கர வாரியர் கட்டிலிலிருந்து எழுந்திருக்க முயன்றார்.

## 10

மகா மாந்திரீகனான சங்கர வாரியருக்கு இதுவரை இப்படியோர் அனுபவம் நிகழ்ந்ததில்லை.

எப்படிப்பட்ட காட்டேரிகள், ரத்தப் பிசாசுகளையெல்லாமோ அவர் பிடித்து, தளைத்து ஆணியடித்திருக்கிறார். அவற்றுடன் ஒப்பிடும்போது மோகினிகள் எவ்வளவோ சாதாரணமானவர்கள். மோகினிகளை வரவழைத்து அவர் வீட்டு வேலைகளைக்கூடச் செய்ய வைத்திருக்கிறார்.

இந்த நிமிடம் வரை அவரை வெல்லக்கூடிய ஒரு மாந்திரீகர், அந்தச் சுற்றுவட்டாரத்தில் உருவாகவில்லை.

இதோ, இப்போது மிகவும் சாதாரணமான ஓர் இளம் பெண்ணின் ஆவி அவரை பயப்படுத்த முயல்கிறது.

சங்கர வாரியர் மீண்டும் ஒரு தடவை அந்த உருவத்தை ஊன்றிப் பார்த்தார். ஒளி ஊடுருவும் அந்த உடைக்குள் அழகும், கட்டுக் கோப்பும் கொண்ட உடல் தெளிவாகத் தெரிந்தது.

ஆனால், நீண்டு வரும் அந்தக் கை - அது மட்டும் திடுக்கிட வைக்கிறது.

அந்தக் கைகள் சங்கர வாரியரின் கழுத்து வரை நீண்டன. அதன் விரல் நுனிகள் நீண்டுகொண்டே இருந்தன. அவை, தன் கழுத்தைச் சுற்றிப் பிடிக்க விரைகின்றன.

திடுமென்று அந்த விரல்கள் அவர் கழுத்தில் விழுந்து சுற்றிப் பிடித்தன. ஒரு பாம்பு அவர் கழுத்தைச் சுற்றிக்கொண்டது போலிருந்தது அதன் பிடி.

குளிர்.

கடுங்குளிர்!

இதுவரை அலறிப் பழக்கப்படாத வாரியர், தன் சர்வ சக்தியையும் பயன்படுத்தி ஓர் அலறலை எழுப்ப முயன்றார்.

எனினும் குரல் அவர் தொண்டையை விட்டு வெளிவரவில்லை.

கழுத்தில் பிடி இறுகியது.

சங்கர வாரியரை அப்படியே உயர்த்தி வாசல் வழியாக அந்த உருவம் விசையுடன் வெளியே வீசியெறிந்தது. அந்தரத்தில் காற்றின் ஊடாக விர்ரென்று பறந்த அவர் உடல், எட்டி மரத்தில் அறையப் பட்டுள்ள ஆணிகளின் மீது போய் பொத்தென்று விழுந்தது.

மிகுந்த விசையுடன் வந்து விழுந்ததால் அவர் உடலின் பெரும்பாலான பகுதிகளில் நீண்டிருந்த ஆணிப் பகுதிகள் பாய்ந்தன.

வேதனை தாங்காமல் அவர் துடித்தார். சற்று நேரத்துக்குள் அந்த ஆணிகளின் பிடியிலிருந்து நழுவியவர் பொத்தென்று தரைப் பகுதியில் விழவும் செய்தார்.

ரத்தம் அவர் உடலின் பல பகுதிகளிலிருந்தும் வடியத் தொடங்கியது. அவர் துடித்து எழுந்திருக்க முயன்றார்.

அதோ -

அவருக்கு முன்பாக அந்த உருவம் நின்று கொண்டிருக்கிறது.

எந்த ஒரு சஞ்சலமும் இல்லாமல், முதலில் தென்பட்ட அதே முக உணர்ச்சிகளுடன், பேரழகியாக - மென்மையான புன்னகையுடன்!

நிலாவின் ஒளிக்கதிர்கள் அவள் உடலின் மீது பதிந்து கொண்டிருந்தன.

அவள் மீண்டும் சிரித்தாள். பயமேற்படுத்தும் ஒரு சிரிப்பு.

“என்னை இல்லாமல் ஆக்கிவிடலாம் என்று நினைத்தீர்கள் இல்லையா!” அவள் கேட்டாள்.

வாரியர் சட்டென்று ரட்சஸுகளை அசைவற்றுப் போகச் செய்யும் மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினார்.

அதைக் கவனித்த அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

"நீங்கள் தற்போது உச்சரிப்பதையும், மேற்கொண்டு உச்சரிக்க விருப்பதையும், நான் கருப்பையில் இருக்கும்போதே கேட்டு, படித்து வளர்ந்தவள். இப்போதும் சொல்லுங்கள்... கேட்டுக் கொள்கிறேன்" அவள் மறுபடியும் சிரித்தாள்.

அந்தப் பைசாசிகமான சிரிப்பைக் கண்டதும் சங்கர வாரியர் மந்திர உச்சாடனத்தைச் சட்டென்று நிறுத்திக் கொண்டார்.

"என்னை உனக்குச் சரியாகத் தெரியாது. எப்படிப்பட்ட மோகினியையும், பிரேதப் பிசாசுகளையும் ஒன்றுமில்லாமல் செய்திருக்கிறேன். அவை எனக்கு ஒரு பொருட்டே அல்ல. இரு, உனக்குக் காட்டித் தருகிறேன்" வாரியர் சட்டென்று துள்ளிக்குதித்து எழுந்து, தன் தலையிலிருந்து ஒரு கத்தை முடியைக் கொத்தாகப் பறித்தார்.

அதைக் கவனித்த அவள் மறுபடியும் சிரித்தாள். பிறகு அவரைப் பாய்ந்து பிடித்தாள். அவரைத் தலைகீழாகத் தொங்கவிட்டு இரண்டு கால்களையும் இழுத்துப் பிளந்தாள். பிறகு சொன்னாள்: "என்னை நாசமாக்கியவனுக்குத் துணை இருக்கிறாய் இல்லையா?"

அங்கு வளர்ந்திருந்த பெரிய எட்டி மரம் ஒன்று அப்படியே வேருடன் பெயர்ந்து பொத்தென்று தரையில் விழுந்தது.

**ம**றுநாள் காலையில் வாசுதேவன் தம்பியும், குறூப்பும் கண்விழித்தனர். அங்கு எங்கும் சங்கர வாரியர் தென்படவில்லை. அப்போது ஒருவர் அந்தப் பக்கமாக ஓடி வந்தார். "மாமா, அதோ அந்த எட்டி மரத்தின் அருகில் இரண்டாகக் கீறப்பட்டுக் கிடக்கிறார். கடவுளே, பகவதி, நான் எப்படி மறுபடியும் அந்தக் காட்சியைக் காண்பது?"

"நீங்கள் யார்?" தம்பி கேட்டார்.

“உறவு வகையில் நான் அவரின் சகோதரி மகன். மருமகன். அவருக்குத் தேவையான பூஜைப் பொருள்களை நான்தான் கொண்டு வந்து கொடுப்பேன்.”

“சரி. என்ன நடந்தது?” குறூப்பு கேட்டார்.

“அதெல்லாம் அனுபவக் குறைவால் ஏற்பட்ட தோஷம். பரதேவதைகளைச் சரியாகப் பராமரிக்காவிட்டால், இப்படித்தான் எதிர்த்தாக்குதல் நடக்கும். அது உறுதி. ஆமாம், நீங்கள் மாமாவை சந்திக்க வந்தவர்களா?”

“ஆமாம்.”

“இனி என்ன செய்வது? திரும்பிப் போவதுதான் நல்லது.”

மேற்கொண்டும் அங்கிருப்பதில் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லையென்று தோன்றியதால், குறூப்பும் தம்பியும் அங்கிருந்து கிளம்பினார்கள்.

நடந்து கொண்டிருந்தபோது தம்பி கூறினார்: “குறூப்பே... விஷயத்துக்குக் காரணம் வேறு. அது இங்கேயும் வந்துவிட்டிருக் கிறது.”

“ச்சேச்சே- அப்படியெல்லாம் இருக்காது. நல்ல வேடிக்கை... அது இந்த இடத்துக்கு தானாக வந்து சிக்கிக்கொள்ளுமா?”

“ஒரே குழப்பமாக இருக்கிறது. இந்த மரணத்திலிருந்து நாம் தப்பிக்க வேண்டுமே!” தம்பி கூறினார்.

“கவலையை விடுங்கள். நாம் முதலில் வீடு போய்ச் சேர்வோம். வாரியரைவிடப் பெரிய சூரப்புலிகள் நிச்சயம் இருக்கவே செய்வார்கள்!” குறூப்பு ஆறுதல் கூறினார்.

இருவரும் இடச்சேரி தறவாட்டுக்கு வந்து சேர்ந்தனர். மாலை நேரத்தில் மீண்டும் வருவதாகக் கூறி குறூப்பு கிளம்பிப் போனார்.

எதிர்பாராமல் நேர்ந்த தோல்வியை நினைத்துக் கவலைப்பட்டு, மதுவில் மூழ்கிப் பகல் பொழுதைச் செலவழித்தார் வாசுதேவன் தம்பி.

மாலை நேரமானபோது துளசி மாடத்தில் விளக்கேற்றுவதற்குக் கூட ஓமனா பயந்தாள். சந்திரிகா அதைவிட அதிகமாக பயந்தாள்.

அவ்வளவு பெரிய வீட்டில் கேட்கும் ஒரு சிறிய சத்தம்கூட அவர்களை நடுங்க வைத்தது. கையில் விளக்குடன் ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்குப் போகும்போது கூட, தங்களது சொந்த நிழலையே பார்த்து அவர்கள் பயப்படத் தொடங்கினர்.

ஒவ்வொரு கதவுக்குப் பின்னாலும் அவர்களை பயப்படுத்துவதற்காக யாரோ மறைந்திருப்பதாகத் தோன்றியது.

ஒருமுறை ஓமனா, தானிய அறைக்குள் நுழைந்தபோது, சந்திரிகாவும் வெளியிலிருந்து உள்ளே வந்தாள்.

சட்டென்று அவள் அலறினாள்.

“எதற்காக அலறுகிறீர்கள்? இங்கு நான்தானே நிற்கிறேன்?” சந்திரிகா கேட்டாள்.

“உங்களுக்குப் பின்னால் யாரோ நின்று கொண்டிருந்தார்கள்!” ஓமனா பதிலளித்தாள்.

அதைக்கேட்ட சந்திரிகா ஏகத்துக்கும் பயப்படத் தொடங்கினாள்.

யாராவது, யாரையாவது அழைத்தால்கூட பர பரம் பயப்படத் தொடங்கினர்.

இரவு எட்டு மணிக்குப் பிறகு குறுப்பும், தாமோதரன் உண்ணித்தானும் அங்கு வந்து சேர்ந்தனர்.

மது விருந்தில் அவர்களும் கலந்து கொண்டனர்.

“தாமோதரன், நேற்றிரவு உங்களுக்குப் பிரத்தியேகமான அனுபவம் ஏதாவது ஏற்பட்டதா என்ன?” தம்பி கேட்டார்.

“அப்படி நான் எதையும் பார்க்கவில்லை. அங்கு எவரும் வரவுமில்லை.”

“தாமோதரன், இதை நீங்கள் அவ்வளவு சாதாரணமாக நினைத்து விடக்கூடாது. சேகர வர்மா பழிவாங்கப்பட்டிருக்கிறார். மேற்கொண்டு

நாம் நான்கு பேர் இருக்கிறோம். அது நம் பக்கமாகத் திரும்புவதற்குள் நாம் எதையாவது செய்தே தீரவேண்டும்!'' வாசுதேவன் தம்பி முன்னெச்சரிக்கை செய்தார்.

''அதற்கு ஒரு பரிகாரத்துடன்தான் வந்திருக்கிறேன்.''

''என்ன அது?''

''விஷயம் கொஞ்சம் தீவிரமானதுதான். குறி தவறாமல் இருந்தால் வெற்றி நமக்குத்தான்!''

''அவ்வளவு நம்பிக்கைக்கு உரியதா?''

''எனக்கு மட்டும் உயிர் மேல் பயம் கிடையாதா என்ன? நானே நம்பாமல் அப்படி ஒன்றைக் கொண்டு வருவேனா?''

''அப்படியானால், அது என்னவென்று சொல்லுங்கள்... கேட்போம்.''

''எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்கிறேன் தம்பி. முதலில் தைரியம் கூடுவதற்குக் கொஞ்சம் சரக்கு உள்ளுக்குள் இறங்கட்டும்.''

தாமோதரன் உண்ணித்தான் மூன்று கிளா களில் பிராந்தியை ஊற்றினார். பிறகு கூஜாவிலிருந்து தண்ணீரை எடுத்துக் கலந்து அதன் கடுமையை நீர்த்துப் போகச் செய்தார்.

ஒரே மூச்சில் அதைக் குடித்தவர் உதட்டைப் புறங்கையால் துடைத்துக் கொண்டார். பிறகு சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்து, இரண்டு முறை ஆழ்ந்து புகையை உள்ளுக்குள் வாங்கி, நிதான்மாக அதை வெளிவிட்டபடி பேசத் தொடங்கினார்:

''நான் அதைப்பற்றி அதிகமாக யோசித்தேன். இப்போதைய சூழ்நிலையில் எழுமற்றூர் மனையும், அதற்குச் சுற்றிலுமுள்ள நிலப்பகுதியும் இப்படிக் கிடப்பதால்தானே பிரச்சினை?''

''அதற்கு இப்போது நாம் என்ன செய்வது?''

''அதற்கான பதிலைத்தான் சொல்லப் போகிறேன்.''

அவர் என்ன சொல்லப் போகிறார் என்ற ஆவல் குறுப்பு மற்றும் தம்பியின் முகத்தில் தென்பட்டது.

உண்ணித்தான் அப்படியொன்றும் ஏப்பைசாப்பையானவர் அல்லவென்று அவர்களுக்குத் தெரியும்.

"ஒரு கேள்வி, இப்போது அந்த மனைக்கு வாரிசுகள் யாராவது இருக்கிறார்களா?" உண்ணித்தான் கேட்டார்.

"இல்லை! இல்லை என்பதுதான் எனது உறுதியான நம்பிக்கை. அப்படி யாராவது இருந்திருந்தால், இந்த ஐந்து வருட காலத்துக்குள் வந்திருப்பார்களே!"

"தூரத்து உறவு வகையில் யாராவது, எங்காவது இருக்கிறார்களா?"

"எனக்குத் தெரிந்து கிடையாது."

"உறுதியாகத் தெரியுமா?"

"நான்தானே அந்த இல்லத்தின் காரிய தர். அப்படி எவரும் இருப்பதாக நான் கேள்விப்பட்டதுகூட இல்லை. அந்த வீட்டுக்கு மாப்பிள்ளையாக வந்தவர்கள் எல்லாருமே அதற்குள்ளேயே அடங்கி விட்டார்கள்."

"அப்படியானால் ஒன்று செய்வோம். எழுமற்றூர் மனையையும், அதற்குச் சுற்றிலுமுள்ள நிலப்பகுதியையும் நாம் விற்றுவிட்டால் என்ன?"

"என்ன, உண்ணித்தான் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்! நாம் எப்படி அதை விற்பது?"

"அதற்கெல்லாம் வழி இருக்கிறது. அதை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தை அவர்களின் குடும்பக் கோயிலான பகவதி கோயிலைப் புனருத்தாரணம் செய்வதற்குக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்ல வேண்டும். அப்படியானால் எதிர்ப்பு எதுவும் கிளம்பாது. இல்லாவிட்டாலும் எதிர்ப்பதற்கு யார் வரப்போகிறார்கள்?"

“சரி, இனி என்னுடைய சந்தேகங்கள் இதெல்லாம்தான். இதை எப்படி விற்பது? யார் வாங்குவது? அப்படி விற்பதால் என்ன பயன்?”

“பத்திரிகையில் விளம்பரம் ஒன்று செய்ய வேண்டும். தேவைப்படுபவர்கள் வருவார்கள். அந்த மனையை மொத்தமாக இடித்துவிட்டுப் புதிதாக வாங்க வருபவர்களிடம் நாம் விற்க வேண்டும். இதில் நாம் கவனமாக நடந்து கொண்டால், அத்துடன் அது சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

“அது எப்படித் தீரும்?” தம்பி கேட்டார்.

“அதை விலைக்கு வாங்குபவர்கள், இந்தக் கட்டடத்தை தரைமட்டமாக்கி விட்டு, புதிதாகக் கட்டடம் எழுப்புவார்கள். அப்போது பழைய பொருளாக அங்கு எதுவும் மிச்சமிருக்காது. அத்துடன் கார்த்திகா அந்தர்ஜனமும் காணாமல் போய்விடுவாள். அந்த இடத்தை வாங்குபவர்கள் அசைவம் சாப்பிடுகிறவர்களாக இருந்தால் மிகவும் நல்லது.”

“இது ஒரு நல்ல யோசனைதான்” குறூப்பு கூறினார். “மீன், இறைச்சி சாப்பிடுகிறவர்களாக இருந்தால் எந்த ஒரு பிரம்மரட்சஸும் அந்தப்பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காது. அத்துடன் எல்லாம் அடங்கிவிடும். இன்னொரு விஷயம்... பத்திரிகையில் விளம்பரம் செய்வதாக இருந்தால்கூட அதை இந்த ஊரில் யார் வாசிக்கப் போகிறார்கள்?”

“உண்ணித்தான், அதில் வேறொரு சிக்கலும் இருக்கிறது. அதை நமக்குச் சொந்தமானது என்று எப்படி நிரூபிப்பது?”

“அதிலென்ன சிக்கல் இருக்கிறது? ஆறு வருடங்களுக்கு முந்தைய தேதியிட்ட முத்திரைத்தாளில் கோவிந்தன் நம்பூதிரி உங்களுக்கு அதை விற்பனை செய்ததாக நாமே ஒரு பத்திரத்தைத் தயார் செய்ய வேண்டியதுதான். அதெல்லாம் இப்போதைய சூழ்நிலையில் மிகவும் சுலபம்... என்ன, கொஞ்சம் பணம் செலவாகும். விற்பனை செய்யும்போது அதையும் ஈடுகட்டிக் கொள்ளலாம்!”

“நீங்கள் சொல்வதெல்லாம் சாத்தியம் என்றே வைத்துக் கொள்வோம். இதெல்லாம் கண்மூடித் திறப்பதற்குள் நடந்து விடுகிற

விஷயங்கள் கிடையாது. அதற்குள் அதன் பார்வை நம் பக்கம் திரும்பி விட்டால் என்ன செய்வது?"

"அதற்கும் நான் ஒரு வழி சொல்லித் தருகிறேன்."

"சொல்லுங்கள்!"

"நமது பகுதிக்குள் அது நுழைய முடியாதபடி மந்திரம் ஜெபித்த ரட்சைத் தகடுகளைத் தயார் செய்து வீட்டுக்குச் சுற்றிலும் பள்ளம் தோண்டிப் புதைத்து வைக்க வேண்டியதுதான். அதையெல்லாம் கடந்து வர எப்படிப்பட்ட சக்திகளாலும் முடியாது. அதற்குத் தகுந்த ஒருவரை நான் விசாரித்துக் கண்டுபிடித்து விட்டேன்."

"யாரவர்?"

"ஒரு ஹாஜியார். நாளைக்கு நாம் அவரது வீட்டுக்குப் போகிறோம். என்ன சொல்கிறீர்கள்?"

"சரி, அப்படியே செய்வோம்."

மணி பதினொன்று என்பதை கடிகாரம் மணியடித்துக் கூறியது.

"அப்படியானால் நான் கிளம்புகிறேன்" உண்ணித்தான் எழுந்தார்.

"குறூப்பும் அந்தப் பக்கம்தானே. வழித்துணையாகவும் இருப்பார்" தம்பி கூறினார்.

உண்ணித்தானும் குறூப்பும் தெரு வாசற்படி கடந்தனர்.

பாதை முதலில் இரண்டாகப் பிரிந்த பகுதியில், இருவரும் இரண்டு பாதைகளில் பிரிந்தனர்.

குறூப்பு எழுமற்றூர் பகவதி கோயிலை நெருங்கி விட்டிருந்தார்.

அப்போது நிலா, மேகக் கூட்டங்களில் சிக்கி மறைந்தது. எங்கும் கூரிருட்டு. அமைதியான சுற்றுப்புறச் சூழ்நிலை.

ஓர் இலைகூட அசையும் சத்தம் கேட்கவில்லை.

அப்போது யாரோ தன்னைப் பின்தொடர்வதாக குறூப்புக்குத் தோன்றியது.

# 11

**யா**ரோ தன்னைப் பின்தொடர்கிறார்கள் என்று புரிந்ததும் குறூப்பு அங்கேயே சட்டென்று நின்றார். 'பின்தொடர்வது யாராக இருக்கும்?' யோசித்தார்.

இந்த மாதிரிச் சூழ்நிலைகளில் திரும்பிப் பார்க்கக்கூடாது என்று குறூப்புக்குத் தெரியும். பிசாசுகள் பின்புறமாக வந்தால், எந்தக் காரணத் தாலும் திரும்பிப் பார்க்கக்கூடாது. முன்னால் போகிறவர்களைப் பின்திரும்பிப் பார்க்கச் செய்வதற்காக அவை பல்வேறு வகையான சத்தங்களை எழுப்பும்.

பெண்களோ, குழந்தைகளோ அழும் சத்தம் மாதிரிக் கேட்கும்.

அல்லது யாரையாவது மூச்சுத் திணற வைத்துக் கொல்வது போன்ற சத்தம் கேட்கும்.

அவரின் பெயரைச் சொல்லி, யாரோ நெருங்கிய உறவினரைப் போல் அழைக்கும். உணர்ச்சி வசப்பட்டுத் தலையைத் திருப்பினால் ஒரே போடுதான்.

ரத்தம் கக்கிக் குப்புற விழ வேண்டியதுதான்.

அடிவயிற்றிலோ, இடுப்புப் பகுதியிலோ நீலம் பாரித்த அடையாளம் தென்படும். போஸ்ட் மார்ட்டத்தில் கூட மரண காரணம் விளங்காது.

இப்படியெல்லாம் நடந்திருப்பதாக மயிரிழையில் உயிர் தப்பித்தவர்கள் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறார்.

அவ்வளவு ஏன், கடந்த மாதம் நடந்த நிகழ்ச்சி ஒன்று மின்னல் மாதிரி குறூப்பின் மூளைக்குள் பாய்ந்து வந்தது.

குறூப்பின் பக்கத்து வீட்டுக்காரி அம்மிணி சாதம் வடித்துக் கொண்டிருந்தாள். அவளின் அம்மா அழைப்பது போல் கேட்டது. திரும்பினாள். அவ்வளவுதான். அவளின் தொப்பூழ்ப் பகுதிக்குக் கீழே யாரோ வலுவாக அடித்தாற்போலிருந்தது.

ரத்தம் பீறிட்டது.

மருத்துவமனைக்குக் கொண்டு போனார்கள். மருத்துவர்களால் மரணத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதுமாதிரி எவ்வளவோ சம்பவங்கள்.

இதே அனுபவம் அந்த வீட்டில் ஏற்கனவே ஒருமுறை நடந்துள்ளது. வெளியூரில் இருந்து திருமணம் செய்து அழைத்து வரப்பட்டவள் அம்மிணி. எனவே, அவளுக்கு இதெல்லாம் தெரிந்திருக்கவில்லை.

"எங்கே, இவ்வளவு அவசரமாக?" பின்புறத்திலிருந்து பெண் குரல் ஒன்று கேட்டது. குறூப்பு நிற்காமல் முன்னோக்கி நடக்கத் தொடங்கினார்.

கோயிலின் இடிந்து சிதிலமான வெளிப்புறச் சுவர்ப்பகுதியைக் கடக்க குறூப்பு முற்பட்டபோது திடுமென்று பயங்கர விசையுடன் காற்று வீசியது.

அந்தக் காற்று எந்தத் திசையில் இருந்து வந்தது என்றுகூட குறூப்புக்கு விளங்கவில்லை.

யாரோ பிடித்துத் தள்ளுவது போன்ற காற்று.

குறூப்பினால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை.

தன் உடம்பின் மொத்த சக்தியையும் திரட்டிக்கொண்டு இடக்காலை முன்புறமாக எடுத்து வைக்க முயன்றபோது தன் தோளில் யாரோ கை வைப்பதை அவர் உணர்ந்தார்.

'குறூப்பு தன்னையும் மீறி முகத்தைத் திருப்பிப் பார்த்தார்.

சாவித்ரிக்குட்டி நின்றுகொண்டு இருந்தாள்.

"நீ தானா?" குறூப்பு உற்சாகத்துடனும் குற்ற உணர்வுடனும் கேட்டார்.

மேலேடம் கேசவன் நம்பூதிரியின் இல்லத்தில் பெருக்கும் வேலை செய்பவள் சாவித்ரிக்குட்டி. அதிகமாக மதிப்பிட்டால் இருபத்தொரு வயது.

அழகி என்று மட்டும் சொன்னால் போதாது. ஓவியமாக வரைந்து வைக்கத் தோன்றும். சாவித்ரியின் அம்மாவும் அதே இல்லத்தில்தான் வேலை செய்தாள். அவளும் சிறு வயதில் ஊரையே ஒரு கலக்குக் கலக்கியவள்தான்.

சாவித்ரிக்குட்டியின் அப்பா கேசவன் நம்பூதிரி என்பதற்குச் சாட்சிகள் எதுவும் தேவையில்லை. அவள் முகமே அதற்குச் சாட்சி.

என்னவோர் அழகு! களை.

எத்தனையோ பேர் அவளை நோட்டமிட்டுத் தோல்வி அடைந் திருக்கிறார்கள்.

சந்தன நிறம்.

கழுத்தில் சன்னமான ஒரு தங்கச் சங்கிலி கிடக்கிறது. வெளிச்சத்தில் பளபளத்தால் மட்டுமே அப்படியொன்று இருப்பது தெரியும்; இல்லாவிட்டால் உடலுடன் ஒட்டிக் கிடக்கும். தங்கச் சங்கிலி கண்ணுக்கே தெரியாது.

“என்ன இந்த நேரத்தில்?” குறூப்பு விசாரித்தார்.

“நான் உங்கள் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் இல்லத்தைக் கடந்து போகும்போதே நான் வாசலில் நின்று கொண்டிருந்தேன்” அவள் வசியமாகச் சிரித்தாள்.

“இனி, இப்போது எந்தப் பக்கம்?” குறூப்பு கேட்டார்.

“அது நீங்கள் சொல்கிறபடிதான்...”

இதைக் கேட்டதும் குறூப்பின் இதயம் துள்ளிக் குதித்தது.

“இப்படியும் ஓர் அதிர்ஷ்டம் வருமா என்ன?” குறூப்பு சிரித்தார்.

“தறவாட்டுக்கு வரட்டுமா?” அவள் திருப்பிக் கேட்டாள்.

“ஐயோ. அது வேண்டாம்” குறூப்பு பயந்தார். “அங்கு மனைவி யும் குழந்தைகளும் இருக்கிறார்கள். அதுவும் விழித்திருப்பார்கள்.”

“அப்படியானால், அதோ... அங்கு போகலாமா?” அவள் எழுமற்றூர் மனையைச் சுட்டிக்காட்டினாள்.

குறூப்பு திரும்பிப் பார்த்தார். நிலா ஒளியில் மனை உறங்கிக் கொண்டிருந்தது.

அங்கு எந்தவிதத் தொந்தரவும் கிடையாது. யாரும் அந்தப் பக்கமாக வரவும் மாட்டார்கள்.

உள்ளுக்குள் போயிருந்த பிராந்தி அவருக்குள் உணர்ச்சிப் பாய்ச்சலை ஏற்படுத்தி விட்டது.

அவளைப் பின்தொடர்ந்து குறூப்பு நடக்கத் தொடங்கினார். மிகவும் பழக்கமானவளைப் போல்தான் அவள் அந்த மனையின் தெருவாசற்படியைக் கடந்தாள். முற்றத்தில் கால் எடுத்து வைத்தபோது அவள் திரும்பிப் பார்த்தாள்.

குறூப்பு பின்தொடர்ந்து வருவதைப் பார்த்ததும் அவள் வெளிப்புறத் திண்ணையில் அமர்ந்தாள்.

“இங்கெல்லாம் வருவதற்கு உனக்கு பயமாக இல்லையா?” குறூப்பு கேட்டார்.

“எதற்காக பயப்பட வேண்டும்? இங்கு நான் யாருக்கு பயப்பட வேண்டும்?” எதுவும் தெரியாதவளைப் போல் சாவித்ரிக்குட்டி கேட்டாள்.

“ராத்திரி நேரமாயிற்றே. ஒரு பேச்சுக்குக் கேட்டேன்” ‘தான் எதையாவது சொல்லப் போக அவள் பயந்துவிட்டால் என்ன செய்வது?’ என்று நினைத்த குறூப்பு, கார்த்திகா அந்தர்ஜனத்தைப் பற்றிய தகவலைச் சொல்லவில்லை. ‘நான் எதற்காக அதை இவளிடம் சொல்ல வேண்டும்?’ அவளுக்கு இதில் எந்தவிதமான தொடர்பு மில்லை.

குறூப்பு அவளுக்கு அருகில் அமர்ந்தார்.

இப்படியொரு வாய்ப்பு கிடைத்ததில் அவர் மெய்ம்மறந்திருந்தார். முற்றப் பகுதியில் பால் போல் நிலவு ஒளி சொரிந்து கொண்டிருந்தது.

நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த அங்கிருந்த துளசி மாடத்தின் நிழல், மேற்குப்புறமாகச் சற்று நீண்டு கிடந்தது.

எங்கும் அமைதி.

ஒரு பல்லிகூட அசையும் சத்தம் கேட்கவில்லை.

"என்ன யோசனை?" சாவித்ரிக்குட்டி அவரை மேலும் நெருங்கி அமர்ந்தாள். குறூப்பின் தோளில் கை வைத்தாள்.

பனிக்கட்டியின் சில்லிப்பு.

அல்லது பாம்பு ஒன்று படத்தை விரித்தபடி தோளில் பதிந்தது போலவா?'

"என்னைப் புரிந்ததா?" அவள் குரலில் ஒரு மாற்றம்.

அத்துடன் பூஜையறை வாசலில் வைத்திருந்த களிம்பு பிடித்த நிலவிளக்கில் வெளிச்சம் தெளிவடையத் தொடங்கியது.

அந்த வெளிச்சத்தில் குறூப்பு, சாவித்ரிக்குட்டி இருந்த இடத்தில் யாரைப் பார்த்தார்?

சாட்சாத் கார்த்திகா அந்தர்ஜனம்!

அன்றைக்கு தானும் அவளது மரணத்துக்குச் சாட்சியாக இருந்திருக்கிறோம்.

'என் பகவதீ!'

அந்த பிரம்மரட்ச தானா இப்போது தனக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கிறது?

குறூப்பின் உடலிலிருந்த மொத்த வியர்வைத் துளைகளும் செயல்பட்டன. அவர் உடல் குப்பென்று வியர்த்தது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. பயம். மின்னல் மாதிரி அவர் உடலுக்குள் நுழைந்து, கிளை விட்டபடி மேல்நோக்கிப் படர்ந்தது.

அது அவரின் இதயத் தசைகளையும் எட்டியது. அங்கிருந்து தப்பித்து ஓட குறூப்பு தீர்மானித்தார்.

அவர் எழுந்தார்.

தன் சர்வ சக்திகளையும் ஒன்று திரட்டி அவர் முன்புறமாகப் பாய்வதற்குத் தன் வலக்காலை நீட்டியபோது, மீண்டும் அவர் தோளில் கை ஒன்று பதிந்தது. வெகு தொலைவுக்கு நீண்டு வந்திருந்த அந்தக் கை, தனது பிடியை இறுக்கியதுடன் பின்னோக்கி விசையுடன் இழுக்கவும் செய்தது.

அவர் வராந்தாவில் மட்டமல்லாக்க விழுந்தார். அந்த விசையில் அவர் தலையின் பின்பகுதி தரையில் வலுவாக மோதவும் செய்தது. வேதனையுடன் அவர் தலையை உயர்த்திப் பார்த்தபோது, கார்த்திகா அந்தர்ஜனம், முன்னால் நின்று சிரித்துக் கொண்டிருந்தாள்.

பயமேற்படுத்தும் சிரிப்பு.

அந்தப் பற்கள் வைரக் கற்களைப் போல் பளபளத்தன.

நிலவிளக்கின் நீல ஒளியில் அந்தப் பற்களின் முனை வளைந்திருப்பது போல் தோன்றியது.

தோன்றியது மட்டும்தானா, உண்மையா?

அந்த முகம் குறூப்பை நெருங்கி வந்தது... குனிந்தது.

மிக நெருங்கியபோது அவர் கூர்மையான வளைந்த பற்களை வெகு அருகில் பார்த்தார். அவரின் கன்னப்பகுதியில் பதிந்து பள்ளம் ஏற்படுத்தியபடி அவை ஆழ்ந்து இறங்கின. அவரின் இடக்கன்னம் தாழ்ந்தது.

திடுமென்று அது நிகழ்ந்தது.

அந்தப் பற்கள் கழுத்தில் ஆழமாகப் பதிந்து ரத்தக்குழாய்களைத் துண்டித்தன. அவர் தன்னாலான மட்டும் முயற்சி செய்து அவளை ஒதுக்கித் தள்ளினார். ஆனால், அது அவரால் முடியவில்லை.

தான் சுயநினைவை இழப்பதாக அவருக்குத் தோன்றியது.

பிறகு அந்த பிரம்மரட்ச குறூப்பை உயர்த்தி தெரு வாசலின் மேற்புறமாக வீசி எறிந்தது. ஒரு பந்து மாதிரி விசையாக உயர்ந்தவர், அந்த மனையின் எல்லை தாண்டி வேலியின் மறுபுறம் போய் பொத்தென்று தரையில் விழுந்தார்!

மறுநாள் உண்ணித்தான்தான் அவரது உடலை முதலில் பார்த்தவர்.

தம்பியின் வீட்டுக்குச் செல்லும் வழியில், குப்புற விழுந்து கிடக்கும் குறூப்பின் உடலை அவர் கவனித்தார். சட்டென்று அவருக்குத் தோன்றியது. குடித்துவிட்டுச் சுயநினைவின்றிப் படுத்துக் கிடக்கிறாரோ என்றுதான். எனவே, தட்டி எழுப்பிப் பார்த்தார். எந்தவிதமான பதிலோ, அசைவோ இல்லை. உடம்பைப் புரட்டிப் போட்டார்.

ரத்தம் வடிந்து மரத்துப் போய்க் கிடக்கும் குறூப்பின் உடலைத்தான் அவரால் காண முடிந்தது.

உடனே அவர் தம்பிக்குத் தகவல் தெரிவித்தார்.

அதை ஊராரும் விரைவிலேயே தெரிந்து கொண்டனர்.

எழுமற்றூர் மனைக்கு முன்புறத்தில் பிணம் கிடந்ததால், அது துர்மரணம்தான் என்று ஊரார் தீர்ப்பு கூறினர்.

அந்த ஊராருக்கு சமீப காலமாகச் சில சந்தேகங்கள் தோன்றியிருந்தன. வர்மாவின் மரணமும் அரசல்புரசலாகக் கசிந்து ஊராரை எட்டிவிட்டிருந்தது.

இந்த சம்பவத்துக்குப் பிறகு தம்பியின் பயம் பலமடங்கு அதிகரித்தது. எந்த நேரத்திலும் தனக்கு மரணம் நிகழலாம் என்று அவருக்குத் தோன்றியது.

குறூப்பின் இறுதிச் சடங்குகளுக்குப் பிறகு உண்ணித்தானும் வாசுதேவன் தம்பியும் இடச்சேரித் தறவாட்டில் ஒன்று கூடினர்.

இருவரின் முகத்திலும் பீதியின் நிழல் பரவியிருந்தது.

மரணம் எந்த விநாடியிலும் அவர்களை நெருங்கலாம் என்பது உறுதியாகி விட்டிருக்கிறது. கார்த்திகா அந்தர்ஜனத்தை நாசமாக்கியவர்களில் மேற்கொண்டு உயிருடன் இருப்பது இன்னும் இரண்டு பேர் மட்டுமே. அது. தாங்கள்தான்.

அவர்களுடன் இந்தப் பழிவாங்கும் செயல் முற்றுப்பெறும் என்றும் சொல்ல முடியாது. தலைமுறைகளைத் தாண்டியும் இது தொடரலாம். வரும் தலைமுறைகளும் ஒருவேளை பாதிக்கப்படலாம்.

"இந்த நிலைமையில் என்ன செய்வது உண்ணித்தான்?" வாசுதேவன் தம்பி, தைரியத்துக்காக, கிளாசில் பிராந்தியை ஊற்றியபடி கேட்டார்.

"நானும் அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். நான் சொன்னபடி இல்லத்தை யாருக்காவது விற்றுவிட்டு, அந்த ரட்சஸை அழிப்பதற்கான நபரைச் சரணடைய வேண்டியதுதான்."

"நீங்கள் ஒரு ஹாஜியாரைப் பற்றிச் சொன்னீர்களே. அந்த விஷயம் என்னவாயிற்று?" தம்பி நினைவூட்டினார்.

"அங்கு போக வேண்டியதுதான். இன்றைக்குப் போயிருக்கலாம். முடியவில்லை. குறூப்புக்கு இப்படியொரு விபத்து நேர்ந்து விட்டதே. நாளைக் காலையில் நாம் கிளம்பினால் என்ன?" உண்ணித்தான் கேட்டார்.

"இங்கு நமக்கு ஒவ்வோர் இரவும் ஆபத்தானதுதான். எனவே, உண்ணித்தான் இன்று வீட்டுக்குப் போக வேண்டாம். இங்கேயே தங்கி விடுங்கள். நாளைக்குப் பத்திரிகையில் மனை விற்பது தொடர்பான விளம்பரத்தைக் கொடுப்பதுடன் அப்படியே ஹாஜியாரையும் பார்த்துவிட்டு வருவோம்" தம்பி கூறினார்.

அன்று இரவு உண்ணித்தான் அங்கு தங்கினார்.

உண்ணித்தான் தங்குவதற்கு சவுக்கை எனப்படும் அவுட் ஹவுஸில் படுக்கை போட்டிருந்தார்கள்.

கட்டிலில் படுத்த பிறகும் உறக்கம் வராததால் உண்ணித்தான் திறந்து கிடந்த ஜன்னல் வழியாக வெளிப்புறத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

கடிகாரம் பன்னிரண்டு முறை மணியடித்து ஓய்ந்தது.

அந்த சத்தம் உண்ணித்தானின் மனதில் பயத்தை ஏற்படுத்தியது. அப்போது யாரோ கதவைத் தட்டினார்கள்.

உண்ணித்தானின் உடல் நடுங்கத் தொடங்கியது.

நாக்கு, தொண்டைக்குள் அமிழ்ந்து போனாற் போலிருந்தது.

"கதவைத் திறங்கள், நான்தான்..." வெளியிலிருந்து பெண் குரல் கேட்டதும் உண்ணித்தான் உடம்பு குப்பென்று வியர்த்தது.

"நான்தான் சந்திரிகா, கதவைத் திறங்கள்!"

உண்ணித்தானுக்குப் புரிந்தது.

சந்திரிகாவின் உருவம் உண்ணித்தானின் மனதுள் கடந்து வந்தபோது அவரைப் பீடித்திருந்த பயம் இலவம் பஞ்சு போல் அவரை விட்டுப் பறந்தது.

உண்ணித்தான் படுக்கையிலிருந்து எழுந்தார்.

கோல்விளக்கின் திரியைச் சற்று நீட்டிவிட்டு கதவைத் திறந்தார்.

வந்தவள் சந்திரிகாதான்.

அவள் அறைக்குள் நுழைந்தபோது மல்லிகை மற்றும் வாசனை எண்ணெயின் மணமும் அறைக்குள் குப்பென்று பரவியது.

"ஓ, இன்னுமா தூங்கவில்லை நீங்கள்?" கட்டிலில் வந்து அமர்ந்தபடி அவள் கேட்டாள்.

"ஆமாம்."

"ஏன் தூங்கவில்லை?"

பயத்தினால்தான் என்று உண்ணித்தான் சொல்லவில்லை. மாறாகத் தூக்கம் வரவில்லை என்று மட்டும் கூறினார்.

சந்திரிகா ஒற்றை முண்டு உடுத்து, மற்றொரு மேல் முண்டால் உடம்பை இழுத்துப் போர்த்தியிருந்தாள். ஆகாயத்தில் மேகம் நிறைந்திருந்ததால், வெக்கை அன்று அதிகமாக இருந்தது.

எனவே, அவள் ரவிக்கை அணியவில்லை.

"அப்பா, என்னவொரு வெக்கை!" என்றவாறே அவள் போர்த்தியிருந்த வேட்டியை எடுத்துக் கட்டிலின் சட்டத்தில் போட்டாள்.

அவள் உடல், நிலவைக் குழைத்து வடிவமைத்தது போல் பளபளப்பும் மென்மையும் கொண்டு விளங்கியது. கோயில் சுவர்களில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ள கையில் விளக்கு ஏந்தி நிற்கும் பாவை போலத் தென்பட்டாள்.

ஒவ்வோர் அவயவமும் தேவகன்னிகையருடையது போல் கச்சிதமாக இருந்தன.

சந்திரிகாவின் கைவிரல்கள், உண்ணித்தானின் உடையற்ற அகன்ற மார்பில் வளர்ந்திருந்த காடு போன்ற முடியிழைகளுக்குள் சுதந்திரமாக அளைந்தன.

முற்றிலும் எதிர்பாராத அந்த சந்திப்பினால் ஏற்பட்ட திக்குமுக்காடலில் என்ன சொல்வது என்று புரியாமல் உண்ணித்தான் விக்கித்துப் போய், அசைவற்றுக் கிடந்தார்.

சந்திரிகாவின் மென்மையான உடல், உண்ணித்தானின் தசைப் பகுதிகளில் உராய்ந்தன.

வாழ்க்கையில் இன்றுவரை அனுபவித்து அறியாத ஒரு சுகானுபவத்தின் தாளலயத்தில் சந்திரிகாவின் இளஞ்சூடான மூச்சுக் காற்று, விசையுடன் தன் கன்னங்களில் பதிவதை ரசித்தவாறே அவர் கட்டிலில் மல்லாக்கக் கிடந்தார்.

சந்திரிகாவைப் பொறுத்தவரை அவள் தடுத்து நிறுத்தப்பட்ட ஒரு நதியாக இருந்தாள்.

அப்போது மண் குவியலான அணை பெயர்ந்து விழுந்து வெள்ளம் பிரவகிக்கத் தொடங்கியிருந்தது. கரைகள் இரண்டையும் உடைத்துக் கொண்டு, அட்டகாசமான விசையுடன் பாய்ந்து கொண்டிருந்தது அந்தக் காட்டாறு.

**ச**ரியாக அதே சந்தர்ப்பத்தில் இடச்சேரித் தறவாட்டின் முற்றப் பகுதியில் சுழற் காற்று ஒன்று உயர்ந்தது. அது துளசி மாடத்தை

நெருங்கியது. பின்பு அது துளசி மாடத்தில் படர்ந்து பரவி வளர்ந்திருந்த துளசிச் செடியை வேருடன் பெயர்த்து மேற்புறமாக வீசியெறிந்தது.

ஒரு பெரும் தூண் போல் அந்தச் சுழல்காற்று வெகுநேரம் அதே இடத்திலேயே சுழன்ற பிறகு, சவுக்கைப் பக்கமாக நகர்ந்தது.

## 12

மூடிக் கிடக்கும் சவுக்கையின் வாசலை யாரோ விசையுடன் ஓங்கி மிதித்தாற்போல் காற்று மோதியது.

காற்றின் வலிமை அளவுக்கு அதிகமாக இருந்தது.

கதவுகளை யாரோ திறக்க முற்படுவது போல் காற்று, இடை விடாமல் அதன்மீது மோதிக் கொண்டிருந்தது. எந்த விநாடியிலும் கதவு அப்படியே பெயர்ந்து விழலாம் என்றும் தோன்றியது.

“என்ன அது?” உண்ணித்தான் கேட்டார்.

“காற்று!” சந்திரிகா பொறுமையற்றவளாக பதிலளித்தாள்.

சந்திரிகா அவிழ்த்து வைத்திருந்த உடைகள் ஒரு குழல் மாதிரி மேற்புறமாக உயர்ந்து சுழன்றன. உண்ணித்தானின் பார்வை அதிலேயே பதிந்திருந்தது. ஆனால், சந்திரிகா அதைக் கவனிக்க வில்லை.

அப்போது அந்தத் துணியின் முனை கீழ்நோக்கி இறங்கி வந்தது. அது ஒரு கை போல் தாழ்ந்து சந்திரிகாவின் வலக்கையின் அடிப்புறமாகக் கடந்து மார்பின் நடுவே இடப்புறம் வந்து இடக்கையின் கட்கம் வழியாக இறங்கி மற்ற துணியுடன் கலந்து முடிச்சிட்டுக் கொண்டது.

அதன்பிறகு அது அப்படியே சந்திரிகாவை மேற்புறமாக உயர்த்தியது.

“என்ன இது?” அவள் கேட்டாள்.

அதற்குள் அவள் நிர்வாணமாக அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தாள்.

அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. வெறும் ஒரு துணியால் பிணைக்கப்பட்டுத் தொங்கிக் கொண்டிருக்கத்தான் அவளால் முடிந்தது.

'என்ன செய்வது?' என்று தெரியாமல் உண்ணித்தான் பயந்தபடியே கட்டிலில் படுத்திருந்தார். அப்போது சந்திரிகாவின் முந்தானைத் துணி வலுவுடன் கண்டபடி கலைந்தவாறு உயர்ந்தது. சந்திரிகாவின் தலை மச்சுப்பகுதியில் வலுவாக மோதியது.

அவள், "ஐயோ..." என்று அலறினாள்.

அதற்குள் வேருடன் பிடுங்கிப் போட்டது போல் அவள் பொத்தென்று கீழே விழுந்தாள்.

எழுந்திருக்க முற்பட்டபோது அவள் மறுபடியும் மேற்புறமாக உயர்த்தப்பட்டாள். மீண்டும் அதே பழைய அனுபவம்.

பிறகு அவள் வெளியே இழுத்துச் செல்லப்பட்டாள்.

உண்ணித்தான் துள்ளியெழுந்து வாசலை அடைந்தார்.

அப்போது சந்திரிகா துளசி மாடத்துக்கு மேல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தாள்.

'விஷயம் விபரீதமாகி விட்டது!' என்பதை உணர்ந்த அவர் அதன்பிறகு அறையிலிருந்து வெளியேறவில்லை. அப்படியே நின்று விட்டார்.

சந்திரிகா துளசி மாடத்தின் அருகில் கீழே விழுந்தாள்.

அத்துடன் பயங்கரமான அந்தச் சூழ்நிலை மாறவும் செய்தது. முற்றத்தை அடைந்த உண்ணித்தான் அவள் எழுந்திருக்க உதவினார்.

"வேண்டாம். நீங்கள் கிளம்புங்கள். எனக்கு பயமாக இருக்கிறது" அவள் தனது உடைகளையெல்லாம் வாரி எடுத்துக்கொண்டு வராந்தாவுக்குள் நுழைந்து மறைந்தாள்.

அவர் மீண்டும் சவுக்கைக்கு வந்தார். அதன்பிறகு அவரால் உறங்க முடியவில்லை. அப்படியே கட்டிலில் படுத்திருந்தார்.

'இது அவள்தான்!' அவர் மனம் மந்திரித்தது.

"மேற்கொண்டும் தாமதிப்பது ஆபத்தை அதிகமாக்கும். உடனடியாக மந்திரவாதியைச் சந்திக்க வேண்டும்." அவர் தனது தீர்மானத்தை உறுதி செய்தார்.

விடிகாலையில் சேவல் கூவியபோது உண்ணித்தான் கட்டிலிலிருந்து எழுந்தார்.

வாசுதேவன் தம்பி வராந்தாவில் அமர்ந்து காபி குடித்துக் கொண்டிருந்தார்.

"என்ன, தூக்கம் சரியாகவில்லையா?" தம்பி கேட்டார்.

"ஆமாம், நிம்மதியாக உறங்க முடிந்தால்தானே?" அவர் தம்பியின் முகத்தைப் பார்க்காமல் பேசினார்.

"என்ன, புதிய அனுபவம் ஏதாவது ஏற்பட்டதா என்ன?"

"அப்படியெல்லாம் கிடையாது. தூக்கம் வராததால் எதையெல்லாமோ யோசித்தபடி கிடந்தேன்."

"என்ன, காலையில் நாம் தீர்மானித்தபடி புறப்பட வேண்டியதுதானே?"

"ஆமாம். அதில் எந்த மாற்றமும் கிடையாது. மேற்கொண்டும் தாமதித்தால் சரியாகாது. அடுத்த விஷயம் என்னாயிற்று?"

"மனையை விற்பதுதானே?"

"ஆமாம்!"

"அதையும் வழியிலேயே பார்த்து முடித்துக் கொள்ள வேண்டியதுதான்."

தம்பி, சந்திரிகாவை அழைத்தார்.

ஓமனாதான் காபி எடுத்து வந்தாள். சந்திரிகாவுக்கு உடம்பு சரியில்லை என்று அவள் காரணம் கூறினாள்.

“அப்படியானால் ப டாண்டில் காத்திருங்கள்” உண்ணித்தான் கிளம்ப முற்பட்டபோது தம்பி ஞாபகப்படுத்தினார்.

“சரி, சீக்கிரமாகக் கிளம்புங்கள்.”

இருவரும் கிளம்பினர்.

ஹாஜியார் அப்போது வீட்டிலேயே இருந்தார்.

“உட்காருங்கள்...” நீண்ட தாடி ரோமங்களுக்கு ஊடாக விரல்களைவிட்டு அளைந்தபடி ஹாஜியார் வரவேற்றார்.

தாராளமாக அவருக்கு அறுபது வயது சொல்லலாம். தலையில் சிவப்பு நிறத் தொப்பி அணிந்திருந்தார். தாடியும் மீசையும் வெள்ளிக் கம்பிகள் போலிருந்தன. ஆனால், அதை அழகாக வெட்டிப் பராமரித்திருந்தார்.

நெற்றியில் தொழுகையின் அடையாளமான தழும்பு இருந்தது.

கண்கள் தீட்சண்ணியமானவை.

குள்ளமான, இரட்டை நாடி உடம்பு.

“தெற்கிலிருந்து வருகிறீர்கள் இல்லையா?” ஹாஜியார் கேட்டார்.

“ஆமாம்.”

“பெண்தான் இல்லையா?”

“ஆமாம்!” தம்பி பதிலளித்தார்.

அதன்பிறகு இருவரும் பர பரம் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.

அவர்களைப் பார்ப்பதற்கு முன்பாகவே விஷயத்தை தெரிந்து வைத்திருந்தவர் போலிருந்தது அவரது பேச்சு.

‘அவருக்கு நிறைய விஷயங்கள் தெரிந்திருக்கிறது?’ உண்ணித்தான் நினைத்தார். ‘அதனால் எப்படியும் விஷயம் நல்லபடியாக நடக்கும்’ என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

ஹாஜியார் வீட்டுக்குள் நுழைந்து சற்று நேரத்துக்குள் திரும்பி வந்தார்.

அவர் கையில் ஒரு வெற்றிலை இருந்தது. அந்த வெற்றிலையில் எழுத்தாணி போன்ற ஒன்றின் உதவியால் அரபி மொழியில் எதையோ எழுதினார்.

பிறகு அதை ஒரு பலகை மீது வைத்தார்.

அவர்கள் அந்த வெற்றிலையை ஊன்றிக் கவனித்தனர்.

என்ன ஆச்சரியம்!

அந்த வெற்றிலை அசைந்தது.

பிறகு அது நிமிர்ந்து நின்றது. வெற்றிலையின் மேற்புற முனை வளைந்து ஒரு பாம்பு. படம் எடுத்து நிற்பதுபோல் நின்றது.

ஹாஜியார் அரபி மொழியில் ஏதோ மந்திரங்களை உருவிட்டார்.

பிறகு வெண்கலச் சொம்பில் இருந்த தண்ணீருக்குள் கையை விட்டு. அந்த வெற்றிலையின் மீது சில துளிகளைத் தெளித்தார்.

வெற்றிலையின் மீது விழுந்த நீர்த்துளிகள், பழுக்கக் காய்ந்த இரும்பின் மீது விழுந்தவை போல் ' ... ' என்ற சத்தத்துடன் கண்ணிலிருந்து மறையத் தொடங்கின.

ஹாஜியாரின் முகத்தில் வியப்பு படர்ந்தது. அவர் கண்களில் தோல்வி உணர்வு பளிச்சிட்டது.

மறுபடியும் அவர் தண்ணீருக்குள் கையைவிட்டு வெற்றிலை மீது தெளித்தார். பலன், பழையது போலவே இருந்தது.

"விஷயம் சற்று சிக்கலானதுதான்!" ஹாஜியார் கூறினார்.

"அப்படியா சொல்கிறீர்கள்?" உண்ணித்தான் கேட்டார்.

"பழி வாங்கும் உணர்வுடன் அது அலைகிறது..."

"இதற்கு என்ன செய்யலாம்?"

"பார்க்கலாம்" ஹாஜியார் மறுபடியும் வீட்டுக்குள் நுழைந்தார்.

திரும்பி வந்த பிறகு கூறினார்: "நீங்கள் இரண்டு நாள் கழித்து வாருங்கள். நான், எருமை மாட்டின் தலை ஒன்றைத் தருகிறேன். அதை அந்த வீட்டின் பூஜையறை வாசலில் வைத்து விடுங்கள்... போதும். எல்லாப் பிரச்சினைகளும் அத்துடன் தீர்ந்து விடும்."

"உண்மையாகவா!" உண்ணித்தான் கேட்டார்.

"ஆமாம். அதில் சந்தேகம் இல்லை. நானே அதைச் செய்து தருகிறேன். நான் சொன்னபடி வந்து சேருங்கள்" ஹாஜியார் கூறினார்.

அவர்கள் அங்கிருந்து கிளம்பினர்.

'கார்த்திகைத் தம்புராட்டியின் இல்லம் விற்பனைக்குத் தயார்!' என்ற விளம்பரத்தைப் பத்திரிகைக்குக் கொடுத்த பிறகே அவர்கள் வீடு வந்து சேர்ந்தனர்.

**சொ**ன்னவாறே அவர்கள் இரண்டு நாட்களுக்குப் பிறகு ஹாஜியாரைச் சந்திக்கச் சென்றனர். இம்முறை தேங்காய் போடும் குட்டனையும் உடன் அழைத்துச் சென்றனர். ஹாஜியார் மந்திரம் செய்து தரும் எருமைத் தலையைச் சுமந்து வருவதற்கு ஒருவர் தேவையாயிற்றே.

குட்டன், தம்பியின் தென்னந்தோப்பில் தேங்காய் வெட்டி கொப்பரையாக்கும் வேலை செய்பவன். முப்பத்திரண்டு வயது. திடகாத்திரசாலி. ஆரோக்கியமான உடம்பு. மூன்று பேர் மோதினால் கூடச் சமாளிக்கும் தைரியசாலி. எதற்கும் தயங்காத மனிதன். பிரம்மச்சாரி.

தம்பியின் சில அக்கிரமங்களுக்குத் துணை நிற்கும் இயல்புண்டு. தேவைக்கு ஏற்ற அளவில் சாராயமும், பணமும் தம்பியிடமிருந்து கிடைக்கும். எனவே, குட்டன் எப்போதும் தம்பி பக்கம்தான்.

அடுத்ததாக எருமை மாட்டுத் தலையைச் சுமப்பது தம்பிக்கும், உண்ணித்தானுக்கும் மிகவும் சிரமமல்லவா?

குட்டன் உடன் வருவதால் எந்த ரகசியமும் வெளியாகவும் செய்யாது.

அவர்கள் ஹாஜியின் வீட்டை அடைந்தபோது எல்லாம் தயாராக இருந்தன.

இரவு நேரம்.

பதினேழு கிலோ மீட்டர் தூரத்தை நடந்துதான் கடக்க வேண்டும். எருமைத் தலையுள்ள மூட்டையுடன் எந்த வாகனத்திலும் செல்ல முடியாது.

ப ஸில் பயணம் செய்யும்போது யாராவது சந்தேகப்பட்டால் மூட்டையை அவிழ்த்துக் காட்ட நேரிடும். அதனால் நிலைமை மோசமாகி விடும். அதேபோல் மற்ற வாகனங்களில் சென்றாலும் போலீஸார் சந்தேகத்தில் மடக்கலாம்.

சமீப காலமாகப் போக்குவரத்தில் சோதனைகள் அதிகம்.

எனவே. அவர்கள் நடந்து செல்வதென்று தீர்மானித்தனர். குட்டனின் தலையில் சாக்குமூட்டை இருந்தது.

வாசுதேவன் தம்பியும், உண்ணித்தானும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

குறிப்பிட்ட இடைவெளியில்தான் அவர்கள் வந்து கொண்டிருந்தனர். ஒருவேளை ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் கூட, குட்டனே சமாளித்துக் கொள்வான்.

பயணம் மிக வேகத்தில் நடந்து கொண்டிருந்தது.

இரவு மணி பனிரெண்டைக் கடந்துவிட்டது. எழுமற்றூர் இல்லத்தின் வாசலை அவர்கள் நெருங்கியபோது.

தெரு வாசற்படியிலிருந்து உட்புறமாகப் பார்த்தான் குட்டன்.

எங்கும் ஒரே அமைதி.

அதிர்ஷ்டவசமாக அன்று நிலா கூட ஆகாயத்தில் இல்லை.

ஒரு சிள்வண்டின் ரீங்காரம் கூடக் கேட்கவில்லை.

“என்ன செய்யலாம் தம்பி எஜமான்?” குட்டன் விசாரித்தான்.

“ஹாஜியார் என்ன சொன்னார்?” தம்பி, உண்ணித்தானைப் பார்த்துக் கேட்டார்.

“பூஜையறை வாசலில் எருமைத் தலையை கிழக்குப் புறமாக முகம் பார்த்தபடி வைக்க வேண்டும். வைத்துவிட்டு உடனே அங்கிருந்து கிளம்ப வேண்டும்!” உண்ணித்தான் குட்டனிடம் கூறினார்.

குட்டன் அப்படியும் இப்படியுமாகப் பார்த்தான்.

உண்ணித்தான், வாசுதேவன் தம்பியை அழைத்தார். அவர் அருகே சென்றார்.

“என்ன...” ரகசியமாகக் கேட்டார்.

“நாம் இங்கே நிற்க வேண்டுமா? நாம் கிளம்பி விட்டால் என்ன?” உண்ணித்தான் கேட்டார்.

“ஏன் நின்றால் என்ன?” தம்பி விசாரித்தார்.

“இல்லை, மேற்கொண்டு என்ன நடக்கும் என்று தெரியாது. அதனால்தான் கேட்டேன்.”

“அதுவும் சரிதான்... குட்டா, கொஞ்சம் நில்” தம்பி அழைத்தார்.

குட்டன் திரும்பி நின்றான்.

“என்னங்க எஜமான்?” அவன் கேட்டான்.

“நாங்கள் சொன்னபடியே செய்துவிட்டு நீ அங்கு வந்துவிடு. நாங்கள் காத்திருக்கிறோம். மேற்கொண்டு நாங்கள் இங்கு காத்திருப்பது சரியல்ல!” தம்பி கூறினார்.

“சரி, நீங்கள் கிளம்புங்கள். வேலையை முடித்துவிட்டு வருகிறேன்” குட்டன் ஒப்புக் கொண்டான்.

அவர்கள் இருவரும் உடனே அங்கிருந்து கிளம்பினர்.

குட்டன் எழுமற்றூர் மனையின் முற்றத்தில் கால் பதித்தான்.

முதன்முதலாக அந்தப் புராதன மனையின் சுற்று மதிலுக்குள் மாமிசம் கொண்டு வரப்படுகிறது!

அதுவும் எருமை மாட்டுத் தலை.

மாந்திரீகம் செய்யப்பட்டதும் கூட.

எருமை மாட்டுத் தலையில் மாந்திரீகம் செய்தால், உயிருடன் இருப்பவர்களின் தலையே அறுந்து விழுந்துவிடும் என்று குட்டன் கேள்விப்பட்டிருக்கிறான்.

'இப்போது என்ன நடக்கப் போகிறதோ? யாரை அழிப்பதற்காக அதில் மந்திரவாதம் செய்யப்பட்டிருக்கிறதோ?' குட்டனுக்கு இந்தத் தகவல்கள் எதுவும் தெரியாது. இருப்பினும் ஏதோ ஒரு நோக்கத்துடன் இது செய்யப்படுகிறது என்று மட்டும் தெரியும்.

தம்பியும் உண்ணித்தானும் இணைந்தால், அது அவ்வளவாக நல்ல செயலாக இருக்காது என்பதும் அவனுக்குத் தெரியும்.

குட்டன், தன்னிடமிருந்த கோணி மூட்டையை வராந்தாவில் இறக்கினான்.

ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தான்.

எவருமில்லை.

மட்டுமின்றி, மயான அமைதி அங்கு நிலவிக்கொண்டு இருந்தது.

சிள்வண்டின் சத்தம் கூட இல்லை.

குட்டன் கோணிமூட்டையை நிதானமாக அவிழ்த்தான்.

அதற்குள் ரத்தம் வடியும் எருமைத்தலை இருந்தது.

குட்டன் இரு கொம்புகளையும் பிடித்து, கோணியிலிருந்து அந்தத் தலையை வெளியே எடுத்தான். பிறகு கோணியை எடுத்து ஒருமுறை உதறி விரித்து அதன்மீது வைத்தான்.

அப்போதுதான் அதை கிழக்கு நோக்கி வைக்க வேண்டுமென்று சொன்னது ஞாபகம் வந்தது.

மடியிலிருந்து தீப்பெட்டியை எடுத்தான்.

ஒரு குச்சியை உரசிப் பற்ற வைத்தபோது பூஜையறை வாசலில் நிலவிளக்கு ஒன்று இருப்பதைக் கவனித்தான்.

அதில் எண்ணெயில் நனைக்கப்பட்ட திரி ஒன்றும் இருந்தது. அவன் மற்றொரு தீக்குச்சியை உரசி திரியிடம் கொண்டு சென்றான்.

திரியில் தீப்பற்றிக் கொண்டது. அதன் வெளிச்சத்தில் எருமைத் தலையைக் கிழக்குப் புறமாகத் திருப்பி வைத்தான். அப்போது கிழக்குப்புற ஆகாயத்தில் நிலா தெளிவடைந்து ஒளி சொரியத் தொடங்கியது.

அதுவரை கருமேகங்களின் பிடியில் சிக்கியிருந்த நிலா அப்போதுதான் விடுபட்டுச் சுதந்திரம் அடைந்தது. எருமைத் தலை சரியாக இருக்கிறதா என்று மீண்டும் ஒரு தடவை பார்த்துவிட்டு குட்டன் திண்ணைப் பகுதியிலிருந்து முற்றத்துக்கு வந்தான்.

‘கிளம்ப வேண்டியதுதான்’ என்று தீர்மானித்த குட்டன் தெரு வாசற்படியை நோக்கி நடந்தான்.

திடுமென்று பின்னால் ஏதோ ஒரு சத்தம் கேட்டது. அவன் திரும்பாமல் காதை மட்டும் கூர்மையாக்கிக் கவனித்தான்.

எருமை மெதுவாகக் குரல் கொடுப்பது போலிருந்தது.

‘ஒருவேளை தனது பிரமையாக இருக்கும்!’ என்று நினைத்தவன் மீண்டும் காலெடுத்து வைத்தான்.

மறுபடியும் அதே சத்தம்.

குட்டன் திரும்பி நின்றான்.

அவன் அங்கு பார்ப்பது என்ன?

வராந்தாவில் வைத்திருந்த எருமைத்தலை வாயைப் பிளந்தது. அதன் தலை இருபுறமும் திரும்பியது. பிறகு மெதுவாக அந்தத் தலை உயரத் தொடங்கியது.

‘கனவு காண்கிறேனா என்ன!’

அவன் திடுக்கிட்டான்.

மீண்டும் பார்த்தான்.

அந்தத் தலை வராந்தாவிலிருந்து உயர்ந்தது.

இருபுறமாகவும் தலையை ஆட்டிக்கொண்டு அந்தத் தலை அவனை நோக்கி நிதானமாக நெருங்கியது.

அதற்குள் அவனது தைரியம் மொத்தமும் வடிந்துபோய் விட்டிருந்தது.

அவன் முடிந்த விரைவில் அங்கிருந்து ஓடித் தப்பிக்க முயன்றான்.

கண்ணிமைப்பதற்குள் அவனை நெருங்கிய தலை, கொம்பினால் அவனை விசையாக முட்டியது.

வாளால் வெட்டியது போலிருந்தது அது.

"ஐயோ!" என்று அலறியபடி அவன் தெரு வாசலை நோக்கி ஓடினான். எருமைத் தலையும் அதே வேகத்தில் அவனைப் பின்தொடர்ந்தது.

அவன் தெருவாசற்படி கடந்ததும் அதுவும் வெளியே வந்தது.

இம்முறையும் அவன் பழையது போலவே வெட்டுப்பட்டான். குட்டன் கீழே விழுந்தான்.

கோபக்குரல் எழுப்பியபடி அந்தத் தலை மறுபடி அவனைக் குத்திப் புரட்டியது. அதற்குள் அந்தத் தலை, ஒரு முழு எருமை மாடாக மாறிவிட்டிருந்து.

பயங்கரமான ஓர் எருமை!

குட்டனைக் கண்டபடி கொம்புகளால் குத்திக் கிழித்தது அந்த எருமை.

ஒரு கட்டத்தில் அவன் தலை நொறுங்கியது.

கடைசியில் அது குட்டனைத் தனது கொம்புகளால் வாரி யெடுத்துக் கொண்டு வாசுதேவன் தம்பியின் வீட்டை நோக்கி ஓடியது.

இடச்சேரித் தறவாட்டின் முன்புறத்தை அடைந்ததும் எருமை நின்றது.

குட்டனைத் தெருவாசற்படியில் படுக்க வைத்தபிறகு, அது முற்றத்தை நோக்கிச் சென்றது. துளசி மாடத்தை நெருங்கிய மாடு உரத்த குரலில் அலறியது.

அந்தச் சத்தம், படுக்கை அறையில் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்த வாசுதேவன் தம்பியைத் திடுக்கிட வைத்தது.

அவர் கட்டிலிலிருந்து துள்ளி எழுந்தார்!

## 13

'**த**னக்குக் கேட்டது உண்மையான எருமை மாட்டின் குரல் தானா?' என்பதை உறுதி செய்வதற்காக அவர் காதைக் கூர்மை யாக்கிக் கொண்டு காத்திருந்தார்.

மறுபடியும் அதே சத்தம்!

"முற்றத்துக்குப் போகக்கூடாது!" அவர் யாரிடம் என்றில்லாமல் பேசியபடி கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். அங்கிருந்து உட்புற வராந்தாவுக்குச் செல்லும் கதவைத் திறந்து வெளிப்புறமாகப் பார்த்தார்.

முற்றத்தில் பொழிந்து கொண்டிருக்கும் நிலவொளியில், அவர் பார்த்த காட்சி மிகவும் பயங்கரமாக இருந்தது.

எருமைத் தலை ஒன்று அந்தரத்தில் மிதப்பது போல் நிற்கிறது.

அங்கிருந்து அது குரல் கொடுக்கிறது.

திடுமென்று பெண்குரல் ஒன்று சிரிப்பது கேட்டது.

"ஹி... ஹி... ஹி!"

எருமையின் தலைப்பகுதியில் இருந்துதான் அந்தச் சிரிப்புச் சத்தம் உயர்கிறது. வாசுதேவன் தம்பியின் உடல் பயங்கரமாக நடுங்கியது. என்ன செய்வது என்று தெரியாமல், அவர் குழம்பித் தவித்தார். சற்று நேரத்துக்குப் பிறகு அந்தத் தலை அங்கேயே பொத்தென்று விழுந்தது.

தம்பி உட்புறமாகக் கதவைத் தாழிட்டுவிட்டுத் தனது படுக்கை யறைக்குச் சென்றார். ஓமனா நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

எப்படி இருப்பினும் அவள் இந்தக் காட்சிகளைக் காணாமல் இருந்ததும் நல்லதற்குத்தான் என்று நினைத்தார்.

விடியற்காலையில் சேவல் கூவியபோது அவர் கண்விழித்தார்.

எருமைத் தலையை முற்றப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

குட்டனை வரவழைத்த பிறகு அதைப் பள்ளம் தோண்டிப் புதைக்க வேண்டும். ஹாஜியாரின் மந்திரம் பலித்துவிட்டதாகவே தம்பிக்குத் தோன்றியது. தனது வேலையை முடித்த பிறகு தகவல் சொல்வதற்காகத் தலை வந்திருக்கலாம் என்றும் அவர் கருதினார்.

முதலில் துளசி மாடத்தை நெருங்கினார். ஆனால், அங்கு எதுவும் தென்படவில்லை. தெரு வாசற்படியை நெருங்கி வெளியே பார்த்தார். யாரோ குப்புறப் படுத்திருப்பதாகத் தெரிந்தது. குனிந்து பார்த்தார்.

குட்டன்!

மெதுவாக மூச்சு வந்து கொண்டு இருந்தது. நல்லவேளையாக அவன் இறந்துவிடவில்லை.

கூப்பிட்டுப் பார்த்தார். ம்... ஹூம் எந்த ஒரு பதிலும் இல்லை. உடனே உட்புறம் பார்த்து மற்ற வேலைக்காரர்களை அழைத்தார்.

ஒரு தொட்டித் தண்ணீரை குட்டன் மீது ஊற்றிய பிறகு அவன் கண் திறந்தான் உடனே. "ஐயோ, காப்பாற்றுங்கள்" என்று அலறினான்.

"பயப்படாதே, எழுந்திரு குட்டா" தம்பி கூறினார்.

குட்டன் எழுந்திருக்க முயன்றான். முடியவில்லை. உடம்பில் வலியில்லாத இடமே கிடையாது. மொத்த எலும்புகளும் நொறுங்கி விட்டிருப்பது போல் தோன்றியது.

அவருக்கு ஓரளவு விஷயம் விளங்கியதால், அப்போதைக்கு தம்பி அதிகமாக எதையும் கேட்டுக்கொள்ளவில்லை. வேலைக்காரர்களிடம் குட்டனை ஒப்படைத்த அவர், நாட்டு வைத்தியர் குஞ்ஞுராமனிடம் கொண்டு செல்லுமாறு கூறினார். அவர்கள் அவனைச் சுமந்து சென்றனர்.

வீட்டுக்குள் அவர் நுழைந்தபோது சந்திரிகா அவரை நோக்கி ஓடி வந்தாள்.

“அண்ணா, குளம் ஒரே ரத்தமயமாக இருக்கிறது. வந்து பாருங்கள். அடியில் ஏதோ ஒன்று கிடப்பது போல் தோன்றுகிறது!” அவள் பயம் நிறைந்த குரலில் கூறினாள்.

வாசுதேவன் தம்பி தனது படுக்கையறைக்குள் நுழைந்தார். ஓமனா இன்னும் கண் விழிக்கவில்லை. நல்ல தூக்கம்.

“ஓமனா!” தம்பி அழைத்தார்.

அவள் திடுக்கிட்டு விழித்து எழுந்தாள்.

“என்ன, என்ன?” அவள் திடுக்கிட்டபடி கேட்டாள்.

“ஒன்றுமில்லை, சும்மாதான் அழைத்தேன்...”

அவளுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லையென்று தெரிந்ததும் தம்பி, நேராகக் குளத்தை நோக்கிச் சென்றார்.

குளத்தின் கடைசிப் படிக்கட்டில் நின்று பார்த்தார்.

குளத்தின் தெளிந்த நீருக்கு அடியில் எருமை மாட்டுத்தலை அசைவது தெரிந்தது. அதிலிருந்து புகைச்சுருள் மாதிரி ரத்தம் மேற்புறமாக உயர்ந்து கொண்டிருந்தது.

“நம் ஆட்கள் யாரையாவது கூப்பிடு சந்திரிகா” தம்பி கூறினார்.

அதற்குள் தேங்காய் போடும் தொம்மனும், கொச்சுபாப்பியும் ஓடி வந்தனர். அவர்கள் பாரையை ஊன்றித் தேங்காய் உரிக்கத் தொடங்கியபோது அவர்களை அழைப்பது கேட்டது.

வேலையை அப்படியே போட்டுவிட்டு ஓடி வந்தனர்.

"குளத்துக்குள் பாருங்கள்... எருமைத் தலையொன்று கிடக்கிறது. யாரோ பொறுக்கிகள் கொண்டு வந்து போட்டிருப்பார்கள். அவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்!" தம்பி கோபத்துடன் பேசினார்.

தொம்மன் உடனே குளத்தில் குதித்தார்.

எருமைத் தலையை நெருங்கி அதை எடுக்க முயன்றார். ஆனால், அது சற்று நகர்ந்து, அவரைக் கண்களை உருட்டிப் பார்த்தது. அதனால் பயந்து மிரண்ட தொம்மன் சட்டென்று மேற்புறமாக வந்தார்.

"அதற்கு உயிர் இருக்கிறது" தொம்மன் நடுங்கியபடி கூறினார்.

"ச்சே... என்ன பேச்சு பேசுகிறீர்கள்! எருமைத் தலைக்கு உயிர் இருக்குமா? தண்ணீருக்கு அடியில் உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கலாம்..." தம்பி, அதை எடுப்பதற்காக அவனை உற்சாகப்படுத்தினார்.

"இல்லை எஜமான், அது பொல்லாததாக இருக்கிறது" தொம்மன் பயந்தவாறே குளத்தின் அடிப்பகுதியைப் பார்த்தார்.

"அப்படியானால் ஒரு வேலை செய்யுங்கள், இரண்டு பேராகத் தண்ணீரில் இறங்குங்கள். அதை எடுத்துக்கொண்டுதான் வர வேண்டும்."

அந்த உறுதியுடன் இரண்டு பேர் தண்ணீரில் குதித்தனர்.

இருவரும் அதை எடுப்பதற்காக நெருங்கினர். ஆனால், அதற்குள் எருமைத்தலை மேற்புறமாக உயர்ந்தது. யாரோ அதைக் கீழ்ப்புறத்திலிருந்து விசையுடன் வீசி எறிந்தாற்போல் குளக்கரையில் வந்து விழுந்தது அத்துடன் அசைவற்றுப் போனது.

"அதை எடுத்துப் புதைத்து விடுங்கள்" தம்பி உத்தரவிட்டுப் போனார்.

கடைசியில், 'சோதித்துப் பார்த்ததும் இப்படித் தோல்வியடைந்து விட்டதே!' என்று வருத்தப்பட்டார் தம்பி.

தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தீயைத் தின்ன வைத்துக் கொண்டிருக்கிறாள் அவள் என்பது விளங்கியது. மீதமுள்ள ஒரே வழி, அந்த எழுமற்றூர் மனையை விற்பனை செய்வது ஒன்றுதான். அது வேறு யார் கைக்காவது மாறிவிட்டால், அதைத் தரைமட்டமாக இடிப்பார்கள். குளத்தை மூடுவார்கள். அதன்பிறகு அதனால் இங்கு வசிக்க முடியாமல் போகும்.

அதுமட்டும்தான் ஒரே வழி.

அந்த விளம்பரமும் பத்திரிகையில் வெளியானது.

வாசுதேவன் தம்பியும் உண்ணித்தானும் அதை வாசித்தனர்.

"யாராவது வராமல் இருக்க மாட்டார்கள்" தம்பி மந்திரிப்பது போல் பேசினார்.

தம்பி ஆசைப்பட்டபடியே நடக்கவும் செய்தது.

லட்சாதிபதியான விஜயமோகன் என்ற இளைஞர் ஒருவரும் அந்தப் பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்தார்.

அந்தப் பெயரைப் பார்த்ததும் அவருக்குப் பழக்கமானது போல் தோன்றியது. அவர் நெற்றி சுளிவடைந்தது.

'அந்தப் பெயரை எங்கேயோ கேள்விப்பட்டது மாதிரி இருக்கிறதே!' அவர் நினைவுகூர முயன்றார். ஒருவேளை அதைப் போன்ற பெயர் எதையாவது கேள்விப்பட்டிருப்போம்!' அவர் தனக்குத் தானே ஆறுதலாக நினைத்துக் கொண்டார்.

விஜயமோகன் ஒரு வரலாற்றுப் பாட விரும்பி. அவர் புராதன காலத்தின் யோக முறைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்பவரும் கூட.

அதில் மாந்திரீகமும் முக்கியமான ஒரு பகுதி.

விஜயமோகனின் பெரிய தாய்மாமா மேலாற்றூர் கிருஷ்ணன் நம்பூதிரி, புகழ்பெற்ற ஒரு மாந்திரீகராக விளங்கினார். அவர் தனது நூற்று நான்காவது வயதில்தான் காலமானார்.

அவரின் இளையதம்பி மித்ரன் நம்பூதிரியும் இந்த விஷயங்களில் ஆர்வம் கொண்டவர்தான். புகழ்பெற்ற மனிதரும் கூட.

விஜயன் அந்த விளம்பரத்தைத் தன் சின்ன மாமாவிடம் காட்டினார்.

"இந்தப் பெயரை இதற்கு முன் எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா மாமா?" விஜயன் கேட்டார்.

"ஆமாம். நான் எங்கேயோ, எப்போதோ கேள்விப்படிருக்கிறேன். அதுவும் அண்ணன் சொல்லித்தான் என்று ஞாபகம். அங்கு பெரிய மாந்திரீகர்கள் பலர் இருந்தனர். ஆமாம்... அதெல்லாம் மிகப் பழங்காலத்தில். பிறகு அந்த மனை நொடித்துப் போய்விட்டது. அதனால்தான் விற்கப் போகிறார்களோ என்னவோ? உனக்கு அதில் ஆர்வமிருப்பதாகத் தோன்றுகிறதே!" மாமா கேட்டார்.

"அப்படி ஒரு சிறிய ஆசை இருக்கிறது. அங்கு பழைய பொருள்கள் ஏதாவது கண்டிப்பாக இருக்கும். வாசித்த ஆசை, யாரோ ஒரு தம்பியை அணுக வேண்டும் என்று விளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்தான் காரிய தராக இருக்க வேண்டும்."

"ஒருவேளை அவரே இப்போதைய உரிமையாளராகவும் இருப்பார். ஆர்வம் இருந்தால் போய்ப் பார். விலைக்கு வாங்கலாம். இன்னொரு விஷயம், அவர்கள் குறிப்பிடுவதில் பாதி விலைக்குக் கேட்டால் போதும். அதிலேயே உறுதியாக இருக்க வேண்டும்!" மாமா முன்னெச்சரிக்கை செய்தார்.

"அப்படியே செய்கிறேன் மாமா. நாளைக்குப் போய்ப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன்."

"நல்ல விஷயம், விலை படிந்தால் முன்பணம் கொடுத்துவிட்டு வா!"

"சரி"

விஜயமோகன் பயணம் புறப்பட்டார்.

வாசுதேவன் தம்பியைச் சந்தித்துப் பேசினார்.

"இவ்வளவு தொலைவில் வசிக்கும் நீங்கள் இந்த மனையை வாங்க விரும்பும் காரணம்?" தம்பி விசாரித்தார்.

"உண்மையைச் சொல்லி விடுகிறேன். எழுமற்றூர் மனையில் ஒரு காலத்தில் புகழ்பெற்ற மந்திரவாதிகள் இருந்ததாகக் கேள்விப்பட்டிருக் கிறேன். அதனால் வாங்கலாம் என்று தோன்றியது!" விஜயமோகன் கூறியபோது தம்பியின் கண்கள் மலர்ந்தன.

அவர், தனக்கு அருகில் அமர்ந்திருக்கும் உண்ணித்தானின் முகத்தைப் பார்த்தார். உண்ணித்தான் பூடகமாகச் சிரித்தார்.

"இப்படிப்பட்ட ஒருவரைத்தான் நாங்கள் எதிர்பார்த்தோம்" தம்பி கூறினார்.

அப்போது மாமா கூறியனுப்பிய விஷயங்கள் விஜயமோகனின் நினைவுக்கு வந்தன.

"இதன் விற்பனை உரிமை யாரிடம் உள்ளது?" விஜயன் கேட்டார்.

"உண்மையைச் சொன்னால் இப்போது அப்படி எவரும் இல்லை. வாரிசு அற்றுப் போய்விட்ட ஒரு மனை அது. நான் அவர்களின் காரிய தனாக இருந்தவன். அந்த மனைக்குச் சொந்தமான பகவதி கோயிலைப் புனருத்தாரணம் செய்வதற்காகத்தான் இந்த விற்பனை நடக்கிறது!"

"நான் கேட்டது விற்பதற்கான உரிமை யாரிடம் உள்ளது என்று!"

"இப்போது ஊரார் ஒன்று சேர்ந்து கமிட்டி ஒன்றை அமைத்திருக் கிறார்கள். அவர்கள்தான் இந்த மனை விற்கும் உரிமையை எனக்குத் தந்திருக்கிறார்கள்" தம்பி கூறினார்.

"வேறு ஏதாவது பிரச்சினைகள்..." விஜயமோகன் சந்தேகம் எழுப்பினார்.

"கிடையாது. அதற்கெல்லாம் நான் பொறுப்பு. என்னுடைய இந்த வீட்டையும் சொத்துகளையும் நான் பத்திரத்தில் ஜாமீனாகத் தருகிறேன். போதுமா?"

விஜயமோகன் திருப்தி அடைந்தார்.

“இப்போது விலை பேசலாம். நாங்கள் நிர்ணயித்திருப்பது ஒரு லட்சம் ரூபாய்...” தம்பி கூறினார்.

“இடத்தைப் பார்க்காமல் நான் எப்படிப் பேரம் பேச முடியும்?”

“நான் விலையைக் குறிப்பிட்டது ஒருமுறைக்காகத்தான். வாருங்கள். நாம் போய் இடத்தைப் பார்ப்போம்.”

மூவருமாக மனையை நோக்கி நடந்தனர்.

எழுமற்றூர் மனைக்கு முன்னால் வந்ததும், விஜயமோகன் ஏற்கெனவே அந்த இடம் பழக்கமானவரைப் போல் தெருவாசல் தாண்டி உட்புறம் சென்று பார்வையிடத் தொடங்கினார்.

“இதன் குளம் எங்கிருக்கிறது?” அவர் கேட்டார்.

அப்போதும் தம்பியும் உண்ணித்தானும் பர பரம் பார்த்துக் கொண்டனர்.

‘இதையெல்லாம் மிகவும் பழக்கமானவர் மாதிரி இவர் கேட்கிறாரே!’ என்பதுதான் அவர்களது பார்வையின் பொருள்.

“அதோ... அங்குதான் குளம்.”

விஜயமோகன் அதை நோக்கி நடந்தார்.

“இந்தக் குளத்தின் தண்ணீரை ஒட்டுமொத்தமாக வெளியேற்றி, குளத்தைச் சுத்தம் செய்ய வேண்டும்.”

“என்ன இப்படிச் சொல்கிறீர்கள்?” தம்பி கேட்டார்.

“இதில் பிணம் கிடந்திருக்கிறது!”

“என்ன!” தம்பி தன்னையும் மீறிக் குரல் கொடுத்தார்.

“அதற்கென்ன... பரவாயில்லை. ஆனால், துர்மரணம் நடந்த இல்லம் இது. ஒரு நல்ல காரியத்துக்காக இந்தப் பணத்தைப் பயன்படுத்தப் போவதால் நான் ஐம்பதாயிரம் விலை மதிக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?” விஜயன் கேட்டார்.

"கொஞ்சம் கால அவகாசம் கொடுங்கள்" தம்பி. உண்ணித் தானைப் பார்த்தபடி கூறினார்.

"என்னவாக இருந்தாலும் இன்று மாலை நேரத்துக்குள் பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால், இதற்காக நான் மறுபடி ஒரு பயணம் புறப்பட முடியாது" விஜயமோகன் கூறினார்.

கடைசியில் தம்பி அந்தத் தொகைக்கு ஒப்புக்கொள்ளவே செய்தார். அன்று மாலை நேரத்திலேயே ஐயாயிரம் ரூபாய் அட்வான் கொடுத்துப் பத்திரம் தயார் செய்யப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு பத்திரம் பதிவு செய்யலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

விஜயமோகன் அங்கிருந்து கிளம்பினார்.

தகவல்களை தாய்மாமாவிடம் தெரிவித்தார்.

"இடம், சூழல் எல்லாம் எப்படி?" மாமா கேட்டார்.

"மிகவும் பழைமையான தறவாடு, வாரிசுகள் என்று எவரும் இல்லை. காரிய தர் தம்பி என்பவர்தான் கவனித்துக் கொள்கிறார். இந்தப் பணத்தைக் கோயிலைப் புனருத்தாரணம் செய்யப் பயன்படுத்தப் போகிறார்கள்."

"பிற்பாடு வாரிசுகள் யாராவது வந்து சேர்ந்தால்?"

"அதற்கு அவருடைய சொத்துகளை ஈடுகாட்டி பத்திரத்தில் எழுதியிருக்கிறார்."

"அப்படியானால் நல்லதுதான்!"

சொன்னபடியே எழுமற்றூர் மனையின் பத்திரப்பதிவு முடிந்தது.

மரணமடைந்த கார்த்திகா அந்தர்ஜனம், தம்பியைத் தனது சொத்துகளை நிர்வகிக்கும் பொறுப்பாளராக நியமித்ததாக தம்பி, கள்ளக் கடிதம் ஒன்றைத் தயாரித்திருந்தார். அதன் அடிப்படையில் தான் பத்திரப்பதிவு நடந்தது.

ஒரு வார காலத்துக்குப் பிறகு ரிஜி திரார் அலுவலகத்துக்குச் சென்ற விஜயமோகன் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டார்.

தனது வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

பத்திரத்தை மாமாவிடம் காட்டினார்.

மாமா, பத்திரத்தை மிகுந்த கவனத்துடன் வாசித்தார்.

"உண்ணி (குழந்தை) இப்படி வா" மித்ரன் நம்பூதிரி அழைத்தார்.

விஜயமோகன் அருகில் வந்தபோது மாமா, பத்திரத்தின் முதல் பக்கத்தின் பின்புறம் கையெழுத்துப் போட்டிருந்த பெயர்களைச் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன மாமா,"

"இதைக் கொஞ்சம் வாசி. யார், யாரெல்லாம் இதில் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் என்று பார்..." அவர் கைவிரலால் சுட்டிக் காட்டினார்.

விஜயமோகன் அதிலிருந்த ஒவ்வொரு பெயரையும் வாசித்தார்.

இடச்சேரி ராகவன் தம்பியின் மகன் வாசுதேவன் தம்பி.

செறுவள்ளியில் விஜயமோகன் நம்பூதிரி.

சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டவர்களில் ஒரு பெண்மணியின் பெயரும் இருந்தது.

எழுமற்றூர் மனை வலிய சங்கரன் நம்பூதிரியின் மருமகள் கார்த்திகா அந்தர்ஜனம்... அந்தப் பெயருக்கு நேராகக் கையெழுத்துப் போடாமல் கைநாட்டு வைக்கப்பட்டிருந்தது.

"யார் இந்த கார்த்திகா அந்தர்ஜனம்?" மித்ரன் நம்பூதிரி கேட்டார்.

"எனக்குத் தெரியவில்லையே? பத்திரப் பதிவின்போது பெண்கள் எவரையும் பார்த்ததாக எனக்கு ஞாபகம் இல்லை" விஜயமோகன் ஆச்சரியம் நிறைந்தவராக பதிலளித்தார்.

"உண்மையிலேயே ஆச்சரியத்துக்கு உரிய ஒரு விஷயம்தான். உண்ணி. ஒரு நடை போய். இது யாரென்று விசாரித்துவிட்டு வந்தால் நல்லது" மாமா கூறினார்.

அன்று மாலை நேரத்திலேயே விஜயமோகன், எழுமற்றூர் கிராமத்துக்குப் பயணம் புறப்பட்டார்.

மாலை நேரம் முடிவடையும்போது அவர் அந்தக் கிராமத்தில் ப ஸிலிருந்து இறங்கினார்.

எழுமற்றூர் இல்லத்துக்குச் செல்வதற்கு முன்பாக தம்பியை ஒரு தடவை சந்திக்க வேண்டும் என்று விஜயமோகன் விரும்பினார்.

சற்றுத் தொலைவு நடப்பதற்குள் இருட்டத் தொடங்கியது.

ஆள் நடமாட்டம் இல்லாத பாதை.

கிராமத்துக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதை.

கையில் டார்ச் லைட் இருந்ததும் நல்லதற்குத்தான். அவர் ஒற்றையடிப் பாதையில் நடந்தார். ஏறத்தாழ அரை கிலோ மீட்டர் நடந்த பிறகு பாதை இரண்டாகப் பிரிந்தது. எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பது புரியாமல் அவர் தவித்தார்.

"நீங்கள் எங்கு போக வேண்டும்?" பெண் குரல் ஒன்று கேட்டது.

திரும்பிப் பார்த்தவர், டார்ச் லைட்டை எரிய விட்டார்.

எதிரில் மிகவும் அழகான இளம்பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள்!

## 14

'**அ**து யாராக இருக்கும்?' விஜயமோகன் யோசித்துப் பார்த்தார்.

'இந்த முன்னிரவு நேரத்தில் ஆள் நடமாட்டமில்லாத பாதையில் நிற்பது யார்?

அதுவும் ஒரு பெண்.

பேரழகி!

தன்னை வலைவீசிப் பிடிக்க முயலும் கணிகையாக இருப்பாளோ?

"நீங்கள் எங்கு போக வேண்டும்?" அவள் மறுபடியும் கேட்டாள்.

"நான் போக வேண்டியது எழுமற்றூர் இல்லத்துக்கு. ஆனால், அதற்கு முன்பாக இடச்சேரித் தறவாட்டுக்குச் செல்ல வேண்டும்" விஜயமோகன் கூறினார்.

அவர் அப்படிக் குறிப்பிட்டதற்குப் பிரத்தியேகக் காரணம் ஒன்று இருந்தது. இடச்சேரித் தறவாட்டைச் சேர்ந்த வாசுதேவன் தம்பி, அந்த ஊரின் ஒரு பிரமுகரும்கூட. இதைத் தெரிவித்தால் ஒரு மாதிரியான வர்கள் பின்வாங்கிச் செல்லக்கூடும் என்று அவர் கருதினார்.

"போக வேண்டிய இடத்துக்குப் போகாமல், ஏன் வேறிடத்துக்குச் சென்று இரவைக் கழிக்கிறீர்கள்?" அவள் கேட்டாள்.

'ஆகா... இவள் கைகாரிதான்! விஜயன் யோசனையில் ஆழ்ந்தார். 'தன்னை விட்டுவிடக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருக்கிறாள்.' அவர், அவளை தலை முதல் பாதம் வரை ஒரு தடவை ஊன்றிப் பார்த்தார்.

'தரையில் கால் பதித்து நிற்கிறாள்.

மோகினியல்ல!

அப்படியானால், தான் முதலில் நினைத்த பெண்மணியாகத்தான் இருக்க வேண்டும்.'

"நீங்கள் யார்?" விஜயமோகன் கேட்டார்.

"நானா... நான் எழுமற்றூர் இல்லத்தின் ஒரு வாரிசு."

"என்ன... அப்படி யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே!"

"அப்படியானால் இன்னும் நீங்கள் பத்திரத்தைச் சரியாகப் பார்க்கவில்லை என்று தோன்றுகிறது."

"சரியாகப் பார்த்தேனே!"

"அதில் சாட்சிக் கையெழுத்து போட்டிருப்பவளை மறந்து விட்டீர்களா என்ன?" அவள் கேட்டாள்.

"ஆமாம்; ஞாபகம் இருக்கிறது. எழுமற்றூர் மனை வலிய சங்கரன் நம்பூதிரியின் மருமகள் கார்த்திகா அந்தர்ஜனம்."

"ஓகோ, அப்படியானால் ஞாபகம் இருக்கிறது."

"அது யார் என்று விசாரித்து வருமாறு மாமா சொல்லி அனுப்பி இருக்கிறார்."

"அது நானேதான். இனி, இதற்காக இடச்சேரி தறவாட்டுக்குப் போக வேண்டியது இல்லையே?" அவள் கேட்டாள்.

விஜயமோகன் யோசித்தார்.

தான் வாங்கியுள்ள மனையுடன் தொடர்புள்ள ஓர் இளம் பெண்தான் தனக்கு எதிரில் நின்று கொண்டிருக்கிறாள். அதுவும் இல்லத்துக்கே போகுமாறு சொல்கிறாள்.

"கார்த்திகா, உங்கள் வீடு எங்கே இருக்கிறது?" விஜயன் கேட்டார்.

"நான் சற்றுத் தொலைவில் வசிக்கிறேன். பத்திரப் பதிவு நடத்தும்போது நான் ஊரில் இல்லை. விற்பனைக்குப் பிறகு நான் சாட்சிக் கையெழுத்துப் போட வேண்டுமென்று தம்பி வற்புறுத்தினார். சரி, ஒரு நல்ல காரியத்துக்குத்தானே என்று நானும் ஒப்புக் கொண்டேன்."

"இந்த இரவில் எதற்காக இங்கு வந்து நிற்கிறீர்கள்?"

"என்னுடைய சில பொருள்கள் இல்லத்துக்குள் இருக்கின்றன. அவற்றை எடுக்க வேண்டும். வீட்டை விற்பனை செய்து விட்டதால், இனி அதற்குள் எப்படி நுழைவது? உடைமையாளரின் அனுமதி தேவையாயிற்றே!"

அவள் சொல்வது சரிதான் என்று விஜயனுக்கும் தோன்றியது.

'தான் வாங்கிய இல்லத்தில் தனக்கு உரிமை இருந்தும் சட்டரீதியான மற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் சாட்சிக் கையெழுத்து போட்டிருக்கிறாள். இந்த நிலைமையில் ஏன் அவளை அந்த இல்லத்துக்குள் அனுமதிக்கக் கூடாது?

“ஒரு காரியம் செய்யலாமே. நாளைக்கு நான் இல்லத்துக்கு வருகிறேன். இன்று மட்டும் நான் தம்பியுடன் தங்கிக் கொள்கிறேன். கார்த்திகா, நாளைக்கு அங்கு வந்தால் போதும்!”

“அப்படியானால்...” அவள் அவர் முகத்தைப் பார்த்தாள்.

“என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் எங்கு தங்கியிருக்கிறீர்கள் என்று சொன்னால், நான் வேண்டுமானால், உங்களை உங்கள் வீட்டிலேயே கொண்டுபோய் விடுகிறேன்.

“நான் வெகு தொலைவில் தங்கியிருக்கிறேன் என்று உங்களிடம் சொல்லவில்லையா? இன்றைக்கு நீங்கள் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் நீங்கள் வரும் வழியில் காத்திருக்கிறேன்.”

விஜயமோகனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

‘அழகான ஓர் இளம்பெண். தன்னைச் சந்திப்பதற்காக வெகு தொலைவிலிருந்து வந்திருக்கிறாள். அதுவும் தனது அனுமதி பெற்று, அந்த வீட்டிலிருந்து சில பொருள்களை எடுத்துச் செல்வதற்காக, அவளைத் தனியாக விட்டுவிட்டுப் போவதும் சரியல்ல.’

“அப்படியானால் நாம் இல்லத்துக்கே போகலாம். ஆனால், எதுவும் சாப்பிடவில்லையே?” விஜயமோகன் கூறினார்.

“நீங்கள் வருவீர்கள் என்று தெரிந்ததால் நான் சமையல் செய்திருக்கிறேன்.”

“எங்கே?”

“இல்லத்தில்தான். சமையல் வேலைகளை எல்லாம் முடித்து விட்டுத்தான் உங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.”

“நிஜமாகவா!” விஜயமோகன் வியப்பு அடைந்தார்.

பேச்சின் நடுவே ஒன்றிரண்டு தடவை டார்ச் லைட்டை எரியவிட்டு அந்த வெளிச்சத்தில் அவளது வடிவழகைக் கவனிக்கவும் செய்தார்.

“நீங்கள் இவ்வளவு தொலைவுக்கு வற்புறுத்துவதால் போகலாம். மட்டுமின்றி, நீங்கள் தனியாக வேறு இருக்கிறீர்கள்” என்ற

விஜயமோகன். அவள் முன்னால் நடப்பதற்காக வழிவிட்டு ஒதுங்கி நின்றார்.

அவள், அவருடன் இணையாக நடந்தாள்.

ரவிக்கையும் முண்டு எனப்படும் வேட்டியும் மேல் முண்டு எனப்படும் சரிகையாலான முந்தானையும்தான் அவளது உடை. தலைமுடி அவளின் இடுப்பைக் கடந்து நீண்டிருந்தது.

அவருடன் அவள் நடந்தாள். அவ்வப்போது விஜயமோகன் சற்று பின்வாங்கி அவளின் பின்புறத்தில் வெளிச்சம் பாய்ச்சிப் பார்த்தார்.

மோகினிகள் மற்றும் ஆவிகளுக்குப் பின்புறம் என்பதே இல்லாமல் உள்ளீடற்றதாக இருக்கும் என்று விஜயமோகன் மாந்திரீக நூல்களில் வாசித்திருக்கிறார். ஆனால், 'தன்னுடன் நடந்து கொண்டிருக்கும் பெண்மணிக்கு அப்படிப்பட்ட எந்த ஒரு விபரீதமும் இல்லாததால், அவளுடன் அந்த இல்லத்தில் தங்குவதில் எந்த ஒரு தயக்கமோ வெறுப்போ தேவையில்லை' என்று நினைத்தார்.

மட்டுமின்றி, 'இரவுக்கு ஒரு துணையுமாயிற்று!' என்று அவர் மனதுள் நினைத்துக் கொள்ளவும் செய்தார்.

தன்னுடன் தங்குவதில் அவளுக்கும் எந்தவிதத் தயக்கமும் இல்லை என்பது அவள் பேச்சிலிருந்து விளங்கவும் செய்தது.

"இதுவரை நீங்கள் இந்தப் பக்கம் வந்தது இல்லை... அப்படித்தானே?" நடந்துகொண்டே கார்த்திகா கேட்டாள்.

"இல்லை, நான் இந்த ஊருக்குப் புதியவன்" அவர் பதிலளித்தார்.

"பழைய இல்லத்தை வாங்க வேண்டும் என்ற யோசனை உங்களுக்கு எப்படித் தோன்றியது?"

"பிரத்தியேகமாக எந்த ஒரு நோக்கமும் கிடையாது. ஒரு காலத்தில் புகழ்பெற்ற மந்திரவாதிகள் இருந்த இல்லம் அது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியானால் எனக்கு உதவக்கூடிய சிலதெல்லாம் அங்கு தட்டுப்படலாம்... அதற்காகத்தான்."

"மாந்திரீகம் கற்றுக் கொள்கிறீர்கள், இல்லையா?"

"ஆமாம்."

"இன்னும் தேர்ச்சி பெறவில்லையா?"

"ஆமாம். இப்போதுதான் வசமாகி வருகிறது. மாமா இந்த விஷயத்தில் கெட்டிக்காரர்."

"அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இங்கு இருந்தார்கள் என்று சொல்லி என்ன பயன்? கடைசியில் யாரும் இல்லாமலாகிப் போனார்கள். என்னவெல்லாம் நடந்துவிட்டது!" அவள் பெருமூச் செறிந்தாள்.

அதன்பிறகு அவர்கள் வழியில் பேசிக்கொள்ளவில்லை.

இருளின் கனம் அதிகரித்துக்கொண்டு வந்தது.

இருபுறமும் கனமான இருள். படர்ந்து வளர்ந்திருக்கும் மரங் களின் கிளைகள் பாதையை மறித்தபடி ஆங்காங்கே வளர்ந்திருந்தன.

பாதை ஒரு குகை போலிருந்தது.

நடுவே சற்றுத் தூரம் விஜயமோகன் டார்ச் லைட்டை எரியவிட மறந்து போனார்.

ஆனால், அவள் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் நடந்து கொண்டிருந்தாள்.

"என்ன ஓர் இருட்டு!" என்ற விஜயமோகன் லைட்டின் சுவிட்சை அமுத்தினார்.

லைட் எரியவில்லை.

லைட்டின் பின்புறப் பகுதியைக் கழற்றி, பேட்டரிகளை மாற்றிப்போட்டு என்னவெல்லாமோ செய்து பார்த்தார். ம்ஹூம்... எந்த ஒரு பிரயோஜனமுமில்லை.

"என்ன லைட் எரியவில்லையா?" அவள் கேட்டாள்.

"ச்சே_ ஏதோ ஒரு சின்னப் பிரச்சினை. அவ்வளவுதான்" என்ற விஜயமோகன் டார்ச் லைட்டை நாலைந்து முறை குலுக்கிப் பார்த்தார்.

அப்படியும் எரியவில்லை.

“பேட்டரி புதிதுதான். பல்புதான் ரிப்பேராகி இருக்க வேண்டும். என்ன செய்வது? நல்ல இருட்டு வேறு!” விஜயமோகன் தவித்தார்.

“பரவாயில்லை, இதற்கு ஏன் வருத்தப்படுகிறீர்கள்? எனக்குப் பாதை தெரியுமே. என்னுடன் நடந்து வாருங்கள் போதும். அப்படியும் சிரமமாக இருந்தால் என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்” அவள் கூறினாள்.

“நடக்கலாம். கார்த்திகாவின் வெள்ளை உடைகளுக்கு ஒருவிதமான ஒளி இருக்கிறது. பாதையிலும் பெரிய ஆபத்துகள் எதுவும் ஏற்படப் போவதில்லை” அவர் டார்ச் லைட்டை உதறியவாறே பேசினார்.

“இதோ, இல்லத்துக்கு வந்து சேர்ந்து விட்டோம்” அவள் இருளடைந்த தெரு வாசற்படியை அடைந்ததும் கூறினாள்.

‘எப்படி இவ்வளவு தொலைவைக் கடந்திருக்கிறோம்!’ அவர் மனதுள் கேட்டுக் கொண்டார்.

அவள் முதலில் தெரு வாசற்படியில் இறங்கினாள்.

“கொஞ்சம் இருங்கள்... இங்கு நான் தீப்பெட்டி ஒன்றை வைத்திருந்தேன்” அவள் திண்ணையில் ஏறி பூஜையறை வாசலருகே தேடினாள்.

“இந்தாருங்கள், விளக்கை ஏற்றுங்கள். விளக்கு உங்கள் பக்கத்திலேயே இருக்கிறது” அவள் சொன்னாள்.

நிலவிளக்கு ஒன்று அங்கு இருந்தது.

அவர் விளக்கை ஏற்றினார்.

அங்கு வெளிச்சம் பரவியது.

“நேரம் அதிமாகி விட்டதோ?” அவள் கேட்டாள்.

“ஒன்பது மணி.”

“பசியெடுக்கிறதா?”

“கொஞ்சமாக...”

“அப்படியானால் சற்றுப் பொறுங்கள். இதோ வந்து விடுகிறேன்” அவள் வராந்தா வழியாக வடக்குப் பக்கமாக விரைந்தாள்.

விஜயமோகன் அவள் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

‘இந்த இல்லத்தை வாங்குவதற்காகப் பேச வந்தபோதும், பத்திரம் எழுதும்போதும் இப்படிப்பட்ட ஒருத்தியைப் பற்றி எவருமே எதுவும் சொன்னதில்லை. அதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?’ என்று அவர் யோசித்தார்.

‘தான் விலைக்கு வாங்கியதில் எந்த ஓர் எதிர்ப்பும் தெரிவிக்க வில்லை. ஒப்புக்கொண்டு கையெழுத்தும் போட்டுக் கொடுத்திருக் கிறாள்.’

இருளில் காலடியோசை கேட்டது.

அவள் அருகில் வந்தாள்.

“இதுதான் பூஜையறையின் சாவி” அவள் கயிறு கோத்த சாவி ஒன்றை விஜயமோகனிடம் கொடுத்தாள்.

“அறைக்குள் வாள் ஒன்று இருக்கிறது. முதலில் அதை எடுங்கள். அதன் பிறகு என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறேன்” அவள் கூறினாள்.

“சாப்பாட்டு நேரத்தில், சாப்பிடாமல் வாள் எதற்கு?” விஜயன் கேட்டார்.

“முதலில் அதை எடுங்கள்... சொல்கிறேன்” அவள் திரும்பவும் கூறினாள்.

விஜயமோகன், அவள் சொன்னபடியே அறையைத் திறந்தார். அறைக்குள் மூலையில் வாள் ஒன்று சாத்தி வைக்கப்பட்டிருந்தது. நில விளக்கின் வெளிச்சத்தில் அந்த வாள் பளபளத்தது.

அவள் சொன்னபடியே வாளைக் கையில் எடுத்தார்.

"இனி என்னுடன் வாருங்கள்" அவள் இல்லத்தின் பின்பக்கமாக நடந்தாள். அவரும் பின்தொடர்ந்தார்.

நிலவிளக்கை அவள் கையில் எடுத்திருந்தாள்.

"இதோ பாருங்கள்... இந்தச் செந்தெங்கில் இளநீர் இருக்கிறது. இன்றைக்கு இது இரவு உணவாக இருக்கட்டும். நாளைக்கு சமையலுக்கு ஏற்பாடு செய்யலாம்."

அவர் எதுவும் பேசவில்லை.

இரண்டு இளநீரை வெட்டிப் போட்டார். அதில் ஒன்றைச் சீவி தண்ணீரைக் குடித்தார். மற்றொன்றை வெட்டி அவளிடம் நீட்டினார்.

"வேண்டாம்... நீங்கள் குடியுங்கள். நாளைக்கு உங்கள் சாப்பாட்டுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்" அவள் மறுபடியும் கூறினாள்.

அப்படியானால் தனக்காக அவள் சமைத்து வைத்திருப்பதாகச் சொன்னது பொய் என்று புரிந்தது.

"போதுமா?"

"போதும்."

"உங்கள் பொருளை, நீங்களே எடுத்துப் பயன்படுத்துமாறு சொன்னதற்கு என்னை மன்னித்து விடுங்கள்" அவள் கூறினாள்.

"பரவாயில்லை, சொல்ல உங்களுக்கும் உரிமை இருக்கிறது."

"ஒரு காலத்தில் இருந்தது. சரி, வாருங்கள்."

அவள் நடந்தாள்.

இளந்திண்ணையில் ஏறி, கதவைத் திறந்து அவள் வீட்டுக்குள் காலெடுத்து வைத்தபோது உட்புற மச்சில் இடம்பிடித்திருந்த சிள்வண்டுக்களும், வௌவால்களும் விகாரமான சத்தம் எழுப்பிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன.

"இவையெல்லாம் இப்போது இல்லத்தைத் தாவளமாக்கி இருக்கின்றன. இனிமேல் நாம் இங்கு இருப்போமே" அவள் கூறினாள்.

அப்படியானால் கார்த்திகாவும் தன்னுடன் வசிக்கத் தீர்மானித் திருக்கிறாளோ என்று அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

"இதோ. இங்கு தூங்கலாம். இந்த அறையை நான் சுத்தப்படுத்தி வைத்திருக்கிறேன்."

அவள் தென்புற அறையின் கதவைத் திறந்தாள்.

"கட்டிலில் மெத்தை விரித்திருக்கிறேன்" அவள் கூறினாள்.

அவள் சொன்னது உண்மைதான்.

கட்டிலில் மெத்தைப் பாய் விரிக்கப்பட்டிருந்தது. தலையணை, பாயின் அடியில் போடப்பட்டிருந்தது.

விஜயமோகன் கட்டிலில் அமர்ந்தார்.

அறைக்குள் இருந்த மேஜையில் விளக்கை வைத்த பிறகு அவள், டூல் ஒன்றில் அமர்ந்தாள். பிறகு ஏதோ ஞாபகம் வந்தவளாக எழுந்து, மார்பில் போட்டிருந்த மேலாக்கை எடுத்து மடக்கி தலையணை இருந்த பகுதியில் விரித்தாள்.

ரவிக்கை - முண்டு வேஷத்தில் அவள் மீண்டும் டூலில் அமர்ந்தாள்.

அவள் உள்ளாடைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை.

'கட்டான் உடல்!' அவர் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

"என்ன யோசிக்கிறீர்கள்... என்னைப் பற்றியா?" அவள் மெலிதாகப் புன்னகைத்தபடி சிரித்தாள்.

"உண்மைதான். இப்படி ஓர் இரவில் ஓர் இளம்பெண் எந்தவோர் அறிமுகமும் இல்லாத ஓர் இளைஞனின் அருகில், அதுவும் ஒரே அறையில் இருப்பதற்கு எங்கிருந்து தைரியம் வந்ததென்றுதான்."

"இதில் அவ்வளவு யோசிக்க என்ன இருக்கிறது? இங்கு நீங்கள் மட்டும்தான் இருக்கிறீர்கள். வேறெவரும் இல்லையே? ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால்தான் பயப்பட வேண்டும். ஓர் ஆணின் நெருக்கத்தில் ஒரு பெண் இருப்பது எப்போதும் நல்லதுதானே. இல்லாவிட்டால் இந்த வாழ்க்கைதான் எதற்காக?"

‘இந்த கார்த்திகா அந்தர்ஜனம், தான் நினைத்த மாதிரி இல்லை!’ என்று விஜயமோகனுக்கு விளங்கியது.

அவள் ஓர் ஆணுக்காக ஏங்குகிறாள் என்று அவருக்குத் தோன்றியது.

“உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா?” அவர் கேட்டார்.

“இல்லை.”

“ஏன்?”

“ஆதரிப்பார் யாருமில்லாத ஒருத்தியை யார் கல்யாணம் செய்வார்கள்?”

“ஏன், இப்படிப் பேசுகிறீர்கள்?”

“அது அப்படித்தான், இங்கு நிரந்தரமாகத் தங்கப் போகிறீர்கள் அல்லவா?” அவள் கேட்டாள்.

“ஆமாம்.”

“அப்படியானால் நான் உங்களுடன் இருப்பேன். என்னைப் பற்றி வேறெவரிடமும் சொல்ல வேண்டாம்.”

“ஏன்?”

“அதையெல்லாம் நான் பிற்பாடு சொல்கிறேன். போதும் இல்லையா? தூக்கம் வருகிறதா?”

“ஆமாம்.”

“நான் விளக்கை அணைக்கிறேன்.”

“வெளிச்சம் இருக்கட்டும்.”

“வேண்டுமா?”

“எதற்கு, நாம் இருவர் மட்டும்தானே இருக்கிறோம்?”

“அதுவும் சரிதான்.”

அவள் வந்து கட்டிலில் அமர்ந்தாள். அப்போது அவள் ரவிக்கையின் பட்டன்கள் அவிழ்ந்து கிடந்தன.

அவளின் கைப்பகுதி அவரின் மார்பைத் தொட்டபோது விவரிக்க முடியாத சில்லிப்பு தோன்றியது.

பனிக்கட்டியின் சில்லிப்பு இருந்தது அந்தக் கைகளுக்கு.

அவள் கை அவரின் உடம்பில் ஊர்ந்தது.

அவளின் சுருண்ட முடி அவரின் கன்னத்திலும் கழுத்திலும் தத்தி விளையாடிக் கொண்டிருந்தது.

நிதானமாக அவளின் கைக்கு வலு அதிகரித்துக்கொண்டு இருப்பதாக விஜயமோகனுக்குத் தோன்றியது!

## 15

'ஒரு பெண்ணுக்கு இவ்வளவு வலுவா!' விஜயமோகன் யோசித்தார். அதற்குள் அவள் அவரை இறுக்கி அணைத்தாள்.

அது பைசாசிகமான ஒரு சக்திபோல் அவருக்குத் தோன்றியது. தன் சமவயதினரைவிட, தனக்குச் சற்று வலு அதிகம் என்பது அவருக்கே தெரியும். அத்தியாவசியமான வித்தைகளை அவரும் கற்று வைத்திருந்தார்.

சட்டென்று விஜயமோகனுக்கு ஒரு யுக்தி தோன்றியது.

அவர் நிதானமாக அவளின் உடையற்ற முதுகில் ஓம் என்ற பிரணவ மந்திரத்தை எழுதினார்.

"ஐயோ!" அவள் தீப்பட்டது போல் அலறினாள். அவர் தன்னை அடையாளம் தெரிந்து கொண்டார் என்பதை உணர்ந்ததும் அவள் தன் கையைத் தளர்த்தினாள்.

தான், அவளை அடையாளம் தெரிந்து கொண்டதை அவள் புரிந்துகொள்ளாமல் இருக்க அவர், அவள் முதுகை மெதுவாக வருடினார்.

அதன்பிறகு அவள் விஜயமோகனை நெரிக்க முற்படவில்லை. தன் விருந்தாளி அவ்வளவு லேசுப்பட்டவர் அல்ல என்பது கார்த்திகாவுக்கு விளங்கியது.

அவரிடம் தனது வித்தைகள் செல்லுபடியாகாது என்று தெரிந்ததும் அவள் சாதாரணமான ஒரு பெண்ணாக நடிக்கத் தொடங்கினாள்.

விஜயமோகனைப் பொறுத்தவரை அவள் புதியதோர் அனுபவமாக இருந்தாள்.

புகழ்பெற்ற ஓர் இல்லத்தின் வாரிசு என்ற முறையில் அவருக்குச் சில ரகசியத் தொடர்புகள் இருந்தன. அதற்குக் காரணம் அவரின் அழகும், கட்டுடலும்தான்.

எப்படிப்பட்ட அழகியும் அவருடைய ஒரு பார்வையில் விழுந்து விடுவாள்.

ஊரில் அவர் பலரின் குழந்தைக் கிருஷ்ணனாக இருந்தார். அவர்கள் எல்லாரும் அவரைத் தங்கள் இதயத்தில் வைத்து ஆராதித்தனர்.

கார்த்திகா கட்டிலிலிருந்து எழுந்து உடையைச் சரிசெய்து கொண்டு அந்த அறையிலிருந்து வெளியேறினாள்.

விஜயமோகன் யோசனையில் ஆழ்ந்தார். 'யார் இவள்? நான் நினைத்தது மாதிரி இவள் மோகினி அல்ல. மோகினியாக இருந்தால் அவளின் முதுகைத் தொட விடமாட்டாள். ஆனால், இவளின் முதுகு ஆம்பல் பூவிதழ் போலிருக்கிறது. இவளின் தலைமுடியில் காய்ச்சிய எண்ணெயின் சுகந்தம் வீசுகிறது.

மோகினிகளுக்கு பாலைப்பூவின் மணமிருக்கும். மாமா மித்ரன் நம்பூதிரியின் பூஜை அறைக்குள் அவர் மோகினியைப் பார்த்திருக் கிறார். அறைக்குள் அவள் வரும்போது பாலைப்பூவின் வாசனை வரும்.

சில சந்தர்ப்பங்களில் பாலைப்பூ பூக்காது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலும் அவர்கள் வந்தால் பாலைப்பூவின் வாசனை வீசும்.

இவள் மோகினி அல்லாவிட்டால், வேறு யார்?' இப்படி யெல்லாம் அவர் பல்வேறு யோசனைகளில் ஆழ்ந்திருந்தபோது அவள் திரும்பி வந்தாள்.

"என்ன யோசனை?" கார்த்திகா கேட்டாள்.

"ஒன்றுமில்லை..."

"என்னைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? நான் யாரென்று யோசிப்பீர்கள். ஒரு விபசாரியாக இருப்பேன் என்று நினைத்தீர்கள்... அப்படித்தானே?" அவள் அவருக்கு எதிரில் உட்கார்ந்தாள்.

"இல்லை. நான் அப்படியெல்லாம் நினைக்கவே இல்லை."

"அப்படியானால் நான் சொல்கிறேன். இந்தத் தறவாட்டுடன் எனக்குத் தொடர்பு இருக்கிறது. தற்போது அதை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்."

"எப்படியும் கார்த்திகாவைச் சந்தித்ததும் நல்லதற்குத்தான்."

"எனக்கும்தான், இனிப் படுத்துத் தூங்குங்கள்" அவள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து அவருக்கு அருகில் வந்து அமர்ந்தாள். அவர் நெற்றியில் கை வைத்துப் பின்பக்கமாக வருடினாள்.

படிப்படியாக அவர் உறக்கத்துள் நழுவி விழுந்தார். கார்த்திகா அங்கிருந்து வெளியேறினாள்.

முற்றத்தைக் கடந்து, தெரு வாசற்படியில் இறங்கி அவள் குளத்தை நோக்கிச் சென்றாள். அங்கிருந்து நிதானமாக நடந்தவள் கருங்கல் கல்லறையை நெருங்கிச் சட்டென்று மறைந்தாள்.

அறைக்குள் சூரிய வெளிச்சம் பாய்ந்தபோது விஜயமோகன் கண்விழித்தார்.

கதவு திறந்து கிடந்தது. வெளியே பார்த்தபோது வெண்கலக் கிண்டி ஒன்றில் தளும்பத் தளும்ப நீர் நிறைத்து வைக்கப்பட்டிருந்தது.

அவர் எழுந்தார்.

கிண்டியைக் கையில் எடுத்தவர் நடுமுற்றத்துக்கு வந்து வாய் கொப்பளித்து முகம் கழுவினார்.

அப்போது முன்பின் அறிமுகமில்லாத இளம்பெண் ஒருத்தி வெண்கல தம்ளரில் சூடான காபியுடன் அவரை நோக்கி வந்தாள்.

அவர் சந்தேகத்துடன் அவளைப் பார்த்தார்.

இருபத்தோரு வயது மதிக்கலாம்.

ரவிக்கை, முண்டு அணிந்திருந்தாள். அப்போதுதான் குளித்துவிட்டு வந்திருப்பவள் மாதிரி இருந்தது தலைமுடி. தலைமுடியின் கீழ் முனையில் ஒரு சிறிய முடிச்சுப் போட்டிருந்தாள். நெற்றியில் மெல்லிய சந்தனக் கீற்று.

“என்னை உங்களுக்குப் பழக்கமில்லை அல்லவா,” காபியை நீட்டியபடி அவள் கேட்டாள்.

“ஆமாம்” விஜயன் அவளை ஏறயிறங்க ஊன்றிப் பார்த்தவாறு பதிலளித்தார்.

“பெயர் சாவித்ரி. பக்கத்தில் குடியிருக்கிறேன். அப்பா பெயர் மாதவ வாரியர்” அவள் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.

“உங்களை யார் இங்கு அனுப்பி வைத்தது?” விஜயன் கேட்டார்.

“நேற்று இரவு இந்த மனையின் தம்புராட்டி எனது வீட்டுக்கு வந்திருந்தார்.”

“யார், தம்புராட்டியா!” விஜயமோகன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தார்.

“ஆமாம், திருமேனியின் தம்புராட்டி.”

“பிறகு?”

“பகல் நேரத்தில் தம்புராட்டி இங்கு இருக்க மாட்டார். பட்டணத்தில் அவருக்கு வேலை. வந்திருப்பவருக்கு நீ சமையல் செய்து கொடு... என்று கூறினார்கள்.”

“ஓகோ...” அவள் வார்த்தைகளை விஜயமோகனால் நம்ப முடியவில்லை.

எனவே, சந்தேக நிவர்த்திக்காக அவர் கேட்டார்: “வேறு என்ன சொன்னார்?“

“விடியற்காலையில் நான் கிளம்பி விடுவேன். சாயந்தரமானால், நீ உன் வீட்டுக்குக் கிளம்பு என்றும் சொல்லி இருக்கிறார்.”

“யாராவது ஒருவர் இங்கு இருப்பது நல்லதுதான். உனக்கு ருசியாகச் சமைக்கத் தெரியுமா?“

“ம்...”

“சரி, போய் வேலையைப் பார். பணம் தேவைப்படும் போது தயங்காமல் என்னிடம் கேள்.”

“சரி.”

விஜயமோகன் வீட்டிலிருந்து கிளம்பினார்.

இல்லத்துக்குச் சொந்தமான குளத்தில் அவர் குளித்தார். குளித்த பிறகு புத்துணர்வு தோன்றியது. திரும்பி வந்தபோது சாவித்ரி, தோசையும் காபியும் தயாராக வைத்திருந்தாள். அவளே சொன்னது போல் அவள் ஒரு நல்ல சமையற்காரிதான்.

“சமையலுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் வாங்கி வந்தது யார்?”

“என் அப்பா வாங்கிக்கொண்டு வந்தார். தம்புராட்டி அதற்கான பணம் கொடுத்திருந்தார்.”

“காலையில் நான் ஓர் இடம் வரை போக வேண்டியுள்ளது” என்ற விஜயமோகன் உடை மாற்றிக் கொண்டார். பர்ஸை எடுத்துத் திறந்தார்.

அதில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் குறைந்திருந்தன. ‘சாவித்ரி சொன்னதை வைத்துப் பார்த்தால், கார்த்திகா எடுத்திருக்க வேண்டும்!’ என்று யூகித்தார்.

வாசுதேவன் தம்பியின் வீட்டுக்குத்தான் விஜயமோகன் சென்றார். அப்போது அவர் கையில் பதிவு செய்யப்பட்ட பத்திரமும் இருந்தது.

பத்திரத்தின் பின்புறம் சந்தேகம் ஏற்படுத்தும் முறையில் பதிக்கப் பட்டிருந்த வலக்கைப் பெருவிரல் அடையாளம் மற்றும் கார்த்திகாவைக் குறித்து விசாரிப்பது அவரது நோக்கம்.

இரவில் தன்னுடன் தங்கியிருந்தவள் யாரென்றும் உண்மையில் அவள் எந்த வகையைச் சேர்ந்தவள் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சிக்கல்கள் ஏற்படலாம் என்று நினைத்தார்.

அவர் இடச்சேரித் தறவாட்டை அடைந்தபோது அங்கு வாசுதேவன் தம்பியும், உண்ணித்தானும் அமர்ந்திருந்தனர்.

இருவருமே விஜயமோகனை ஒருவிதத் திகைப்புடன் பார்த்தார்கள்.

"என்ன, நீங்கள் இருவரும் என்னமோ போலிருக்கிறீர்கள்?" விஜயன் கேட்டார்.

"இரவில் நீங்கள் இல்லத்திலா தங்கினீர்கள்?" தம்பி கேட்டார்.

"ஆமாம்...." எந்தவித உணர்ச்சியுமற்றவராக பதிலளித்தார் விஜயன்.

தம்பி மற்றும் உண்ணித்தானால் அந்த பதிலை நம்பமுடிய வில்லை. எனவே, அவர்கள் பர பரம் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.

'இதற்கு என்ன அர்த்தம்?' அவை ஒன்றையொன்று கேட்டுக் கொண்டன.

"உட்காருங்கள். உங்களை எதிர்பார்த்துத்தான் காத்திருக்கிறோம். ராத்திரியே வருவதாகச் சொல்லியிருந்தீர்கள். குடிக்க ஏதாவது..." தம்பி கேட்டார்.

"இப்போது எதுவும் வேண்டாம்" என்ற விஜயன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

"இங்கு நீங்கள் சாப்பிடுவதற்குத் தயக்கமானால், வெளியிலிருந்து வரவழைக்கலாம்" தம்பி கூறினார்.

“அதுவும் ஒரு காரணம்தான். அசைவம் சமைக்காத வீடுகளில் சமைக்கும் உணவைச் சாப்பிடுவதில் எனக்கு எந்த ஆட்சேபனையுமில்லை. அந்த விஷயத்தில் நான் பிடிவாதமான ஆசாமி.”

“இருந்தாலும் காலையில் எதுவும் சாப்பிட்டிருக்க மாட்டீர்களே என்றுதான்...”

“நான் தோசை சாப்பிட்டேன்.”

“எங்கிருந்து?”

“அங்கு வேலைக்காரப் பெண்மணி ஒருவர் இருக்கிறார்.”

“இவ்வளவு சீக்கிரமாக உங்களுக்கு வேலைக்காரியும் அமைந்து விட்டாளா? எங்கிருந்து கிடைத்தாள்?”

“இங்கு மாதவ வாரியர் என்று ஒருவர் இருக்கிறாராமே... அவர் மகள்தான் பெயர் சாவித்ரி...”

இதைக் கேட்டதும் தம்பியும் உண்ணித்தானும் மீண்டும் பர பரம் பார்த்துக்கொண்டனர். அவர்களின் பார்வையில் விடை கிடைக்காத கேள்விக்குறிகள் தோன்றி மறைந்தன.

“நீங்கள் ஏன் என்னமோ போல் இருக்கிறீர்கள்?” விஜயன் கேட்டார்.

“அப்படியெல்லாம் ஒன்றுமில்லை” உண்ணித்தான் பதிலளித்தார்.

“இரவு இங்கு தங்கவேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால், முடியவில்லை.”

“ஏன், என்ன ஆனது?”

“உங்கள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, அந்த இல்லத்துடன் தொடர்புள்ள ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோது நான் மலைத்துத்தான் போனேன்.”

“அப்படியா, அது யார்? அப்படித் தொடர்புள்ள உறவினர்கள் யாரும் எங்களுக்குத் தெரிந்து கிடையாது. இருந்திருந்தால், பத்திரப்பதிவின்போது அங்கு வந்திருப்பார்களே!”

"அவர்கள் ரிஜி திரர் ஆபீஸுக்கு வரவில்லை... அவ்வளவு தான். ஆனால், இதைப் பாருங்கள்" விஜயமோகன் பத்திரத்தில் தென்பட்ட பெருவிரல் அடையாளத்தைக் காட்டினார்.

தம்பி, அந்தப் பத்திரத்தைக் கையில் வாங்கிப் பார்த்தார்.

"ஐயோ, என்ன இது. எழுமற்றூர் தறவாட்டின் கார்த்திகா அந்தர்ஜனத்தின் கையெழுத்து. உண்ணித்தான், இதைப் பார்த்தீர்களா?" தம்பியின் கை நடுங்கியது. அவர் கையிலிருந்த பத்திரம் காற்றில் துள்ளி விளையாடியது.

"பகவதி" உண்ணித்தான் மெதுவான குரலில் அழைத்தார்.

"யார் இந்த கார்த்திகா அந்தர்ஜனம்?" விஜயமோகன் கேட்டார்.

"இது... ஆமாம்! இவர்களைத்தான் நீங்கள் நேற்றுப் பாதையில் பார்த்தீர்களா?" வாசுதேவன் தம்பி தன்கையில் கட்டியிருக்கும் தாயத்தைத் தடவியபடி கேட்டார். அவர் உடம்பு அப்போதும் நடுக்கத்திலிருந்து விடுபடவில்லை.

அந்தக் கையெழுத்துடன் கூடிய கட்டைவிரல் அடையாளத்தைப் பார்த்த உண்ணித்தானின் நெஞ்சுக்குள் பயம் கொழுந்து விட்டு எரிந்தது.

இருவருக்குமே நன்கு தெரிந்த கையெழுத்து அது.

"ஆமாம்... இது கார்த்திகாவின் கையெழுத்தேதான் சந்தேகம் இல்லை."

"பிறகு..." அவர்கள் இருவரும் ஏக காலத்தில் ஒரே குரலில் கேட்டனர்.

"நேற்று அந்த இல்லத்தில் அவள் என்னுடன் தங்கியிருந்தாள்."

"ஙே...." தம்பி நிலைகுலைந்தார்.

"மேற்கொண்டு..."

"நான் எல்லாக் காரியங்களிலும் அதிர்ஷ்டம் வாய்ந்தவன். இரவு கடந்து பொழுது விடிந்ததே எனக்குத் தெரியவில்லை. பரவாயில்லை...

ஆள் கெட்டிக்காரிதான்!'' விஜயமோகன் வேறு யாராவது தங்களைக் கவனிக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தபடி கூறினார்.

வேறெவரும் தென்படவில்லை.

இதையெல்லாம் கேள்விப்பட்ட வாசுதேவன் தம்பியும், உண்ணித்தானும் பூனையைப் பார்த்த எலிபோல் ஆயினர்.

'அப்படியானால் கிளைக்கதை ஒன்று இருக்கிறது!' விஜயன் நினைத்துக் கொண்டார்.

"அப்படியானால் அந்தப் பெண், அந்த இல்லத்துடன் தொடர்பு உள்ளவள்தான் இல்லையா?"

"தூரத்து உறவென்று சொல்லலாம்" உண்ணித்தான் பதிலளித்தார்.

அப்போது தம்பி, "ஐயோ!" என்று அலறினார். தன் கழுத்தைப் பிடித்து யாரோ நெரிப்பதுபோல் தோன்றியது தம்பிக்கு.

"என்ன, என்ன நடந்தது" விஜயன் கேட்டார்.

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை" தம்பி, கழுத்துப் பகுதியைத் தடவியவாறு பதில் அளித்தார்.

"அப்படியானால், நான் கிளம்புகிறேன்... ஏதாவது உதவி தேவைப்பட்டால் வருகிறேன். நீங்கள் இங்கேயே இருப்பீர்கள் அல்லவா?"

"நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம். உங்களுக்கு எந்தவிதமான தயக்கமும் வேண்டாம்" உண்ணித்தான் பதிலளித்தார்.

அவர் தெருவாசற்படி தாண்டுவதை இருவரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அதிசயமாக இருக்கிறதே உண்ணித்தான். இவருக்குச் சமையல்காரியை வேறு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறாளாமே. அது யாரென்று சொன்னனார்?"

"மாதவ வாரியரின் மகள் சாவித்ரி."

"யார் அந்த மாதவ வாரியர்?"

"ஏதாவது பிசாசாக இருக்கும்."

"அப்படியானால் சாவித்ரி?"

"அதுவும் மற்றொரு பிசாசாகத்தான் இருக்கும்."

"இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?"

"அதைத்தான் நானும் யோசிக்கிறேன்" என்ற உண்ணித்தான் தலையில் கைவைத்தபடி சாய்ந்து உட்கார்ந்தார்.

"இனி நாம் வேறு யாரைப்போய்ப் பார்ப்பது? இப்போது எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டதுபோல் இருக்கிறது. நமது நிலைமை மேலும் சிக்கலாகி விட்டதாகவும் தோன்றுகிறது."

"எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடலாம்."

"அவருக்கு இன்னும் இதெல்லாம் புரியாமல் இருப்பதுதான் எல்லாவற்றை விடவும் பெரிய ஆச்சரியம்!" தம்பி, விஜய மோகனுக்காகப் பரிதாபப்பட்டவராகப் பேசினார்.

"இந்த பிரம்மரட்சஸைப் பிடித்துக்கட்டக் கூடிய யாரையாவது உடனடியாகக் கண்டுபிடிக்கா விட்டால் நமக்கு ஆபத்துதான்."

"அப்படிப்பட்டவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? நாம் கேள்விப்பட்ட இரண்டு பேரிடமும் போய்விட்டு வந்தாயிற்று. பலனையும் கண்கூடாகப் பார்த்து விட்டோமே."

"வேறொரு முயற்சி செய்யலாம். பந்தளத்தில் என் மாமா ஒருவர் இருக்கிறார். அவரே ஒரு பிசாசுதான். அவரும் சில வேலையெல்லாம் செய்வார். அவர் மூலமாக யாரையாவது தேடிப் பார்க்கலம்."

"எதைச் செய்தாலும் அதை உடனடியாகச் செய்ய வேண்டும்" தம்பி நிலைமையை ஞாபகப்படுததினார்.

உண்ணித்தான் தனது வீட்டுக்குக் கிளம்பினார்.

வீட்டில் பந்தளம் மாமா, உண்ணித்தானை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

"மாமா, உங்களுக்கு நூறு வயது. சற்று நேரத்துக்கு முன்னால்தான் உங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். இப்போது நீங்களே என் முன்னால் வந்து நிற்கிறீர்கள்" உண்ணித்தான் மகிழ்ச்சி நிறைந்தவராக மாமாவின் பக்கத்தில் அமர்ந்தார்.

"என்னைப்பற்றிப் பேசினால், ஏதோ முக்கியமான விஷயம் இருப்பதாக அர்த்தம்!" என்ற மாமா, மருமகனைப் பார்த்தார்.

"பிரம்மரட்சஸை ஒழிக்கத் தகுந்த ஆள் யாராவது இருக் கிறார்களா?"

"அது, ஆணா, பெண்ணா?"

"பெண்தான்!"

"இருக்கிறார். ஆனால் செலவு கொஞ்சம் அதிகமாகும்."

"எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. இது வாழ்வா சாவா போராட்டம்."

"அப்படியானால் நாளைக்கு என்னுடன் கிளம்பு. பொருத்தமான ஒருவரிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்" மாமா உறுதியளித்தார்.

"அதன் இருப்பிடம் எது?"

"பக்கத்தில்தான், எழுமற்றூர் இல்லத்தில்."

"ம்..." என்றவர், தனது வெள்ளியாலான வெற்றிலைச் செல்லத்தைத் திறந்தார். அதற்குள் தாயத்துகள் நிறைய இருந்தன.

"தற்காலிகமாக நான் ஓர் ஏற்பாடு செய்கிறேன்" என்றவர் செப்புத்தகடு ஒன்றை அதற்குள்ளிருந்து எடுத்தார்.

எழுத்தாணியால் அதில் யந்திரம் ஒன்றை வரைந்து, மந்திர வார்த்தைகளை எழுதினார். பிறகு சற்று நேரம் கண்ணை மூடி தியானித்தார். பின்பு, அதை ஒரு தாயத்துக்குள் போட்டு மூடி உண்ணித்தானிடம் கொடுத்தார்.

"இதைக் கொண்டுபோய் அந்த இல்லத்தின் பூஜையறை வாசலில் வைக்க வேண்டும். இது ஒரு சிறிய வேலை செய்யும். இருட்டும் நேரத்தில் கொண்டுபோய் வைத்தால் போதும். இல்லாவிட்டால் யாராவது தாயத்தை எடுத்து அப்புறப்படுத்தி விடலாம்."

உண்ணித்தான் பக்தியுடன் அதைப் பெற்றுக் கொண்டார்.

அன்று மாலை நேரமானபோது, உண்ணித்தான் எழுமற்றூர் மனையை அடைந்தார்.

"யாரும் இல்லையா?" உண்ணித்தான் திண்ணையில் உட்கார்ந்து குரல் கொடுத்தார்.

எவரும் பதில் குரல் கொடுக்காததால், உண்ணித்தான் தன் கையிலிருந்த தாயத்தை பூஜையறையின் வாசற்படியில் வைத்தார்.

சற்று நேரத்தில் சாவித்ரி வெளியே வந்தாள்.

அவள் கையில் கோல்விளக்கு ஒன்று இருந்தது. அந்த வெளிச்சத்தில் உண்ணித்தான் சாவித்ரியைப் பார்த்தார்.

"என் பகவதி!" என்று அலறியபடி துள்ளி எழுந்த உண்ணித்தான் அங்கிருந்து தலைதெறிக்கும் வேகத்தில் ஓடத் தொடங்கினார்.

# 16

**உ**ண்ணித்தான் கண்மண் தெரியாத வேகத்தில் பாய்ந்து கொண்டிருந்தார்.

அவருடைய வாழ்க்கையில் அவர் இதுவரை இந்த அளவுக்கு பயந்ததே கிடையாது; தான் அங்கு கண்டது கனவல்ல; உண்மைதான் என்பதை நினைக்க நினைக்க அவரது ஓட்டத்தின் வேகம் அதிகரிக்கவே செய்தது. நேராக வீட்டுக்குப் போனால் மாமா என்ன ஏதென்று விசாரிப்பார்.

இல்லத்தில் தான் கண்ட பெண்ணைப் பற்றி எப்படி மாமாவிடம் சொல்ல முடியும்? எனவே, எழுமற்றூர் பகவதி கோயில் கருவறைக்கு முன்னால் வந்து அமர்ந்தார்.

'அங்கு, தான் பார்த்த பெண்மணி யார்?

அது அவளேதானே....'

அது தொடர்பான பழைய சம்பவம் ஒன்று அவர் மனதில் திரைப்படம் மாதிரி ஒன்றன்பின் ஒன்றாக வடிவம் பெறத் தொடங்கியது.

வாசந்தி!

அவள் சங்கர வாரியரின் மகள்தான்.

வாரியருக்கு அவள் ஒரேயொரு மகள். அவர் மனைவி வெகு நாட்களுக்கு முன்பே இறந்து விட்டாள். மறுபடியும் ஒரு திருமணம் செய்து கொண்டால், தன் மகளின் வாழ்க்கை வீணாகி விடுமோ என்ற பயந்ததால் அவர் துணையின்றியே வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

வாசந்தி அழகி.

உண்ணித்தான் ஒரு தடவை அவளைக் கோயிலில் சந்தித்தார்.

அன்று வாரியர் கோயிலுக்கு வரவில்லை. எனவே, வாசந்திதான் அவருக்கு பதிலாகக் கோயிலுக்கான மாலை மற்றும் பூக்களைக் கொண்டு வந்தாள்.

உண்ணித்தான் அவளிடம் அறிமுகம் செய்து கொண்டார்.

அது காதலாக மாறியது.

காதல் அவளுக்கு மட்டுமே ஏற்பட்டது.

உண்ணித்தானைப் பொறுத்தவரையில் வாசந்திக்குட்டி ஒரு புதிய இரை. பலவகையான வாக்குறுதிகள் வழங்கி, அவர், அவளை வசப்படுத்தினார். ஒரு தடவை ஆடு மேய்ப்பதற்காகக் கோயில் பகுதிக்கு வந்த வாசந்தியை, உண்ணித்தான் யதேச்சையாகச் சந்தித்தார்.

அந்தப் பகுதியில் வேறு மனிதர்கள் எவருமே தென்படவில்லை.

அங்கு பழைய கட்டடம் ஒன்று இருந்தது.

அதற்கு பூட்டோ தாழ்ப்பாளோ கிடையாது. அதன் வாசலில் நின்றுகொண்டு உண்ணித்தான் அவளை அழைத்தார்.

“நான் உனக்கு ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன்” அவர் சொன்னார்.

“என்ன அது?” அவள் கேட்டாள்.

“உள்ளே வைத்திருக்கிறேன். போய் எடுத்துக்கொள்.”

அவள் உள்ளே நுழைந்தாள்.

அவரும் அவளைப் பின்தொடர்ந்தார். கதவைப் பின்னங்கால் களால் உதைத்து மூடியவர், அவளைப் பாய்ந்து பிடித்தார்.

அவள் குரல் எழுப்ப முயன்றபோது, அவர் கைகள் சட்டென்று அவள் வாயைப் பொத்தின.

அவள் திமிறினாள். அவர் விடுவதாக இல்லை.

அந்தப் போராட்டத்தினிடையில் அவளது முண்டு அவர் கைக்கு வந்தது. அவர் வாசந்தியைப் புரட்டிப் போட்டார்.

பலம் வாய்ந்த அவரது பிடியிலிருந்து அவளால் தப்பிக்க முடியவில்லை.

அவளது வாழ்க்கையில் அதுவரை நிகழாத ஒன்று. சற்று நேரத்துக்குப் பிறகு வாசந்தியின் கைகள் உண்ணித்தானின் முதுகை வருடிக் கொண்டிருந்தன.

மறுநாளும் அதே நேரத்தில் வாசந்தி அதே இடத்துக்கு வந்தாள். அன்று அந்தக் கட்டடத்தின் கதவை அவளே திறந்தாள். அதற்குப் பிறகு அது ஒரு வழக்கமானது.

ஒருநாள் வாசந்தி கூறினாள். “என்னவோ இன்று எனக்கு ஒரே பயமாக இருக்கிறது.”

“பயப்படாதே, ஏதாவது சின்ன உபாதையாக இருக்கும். இரண்டு மூன்று நாட்களில் சரியாகிவிடும்” அவர் ஆறுதல் கூறினார்.

பிறகு ஒருநாள் கூறினாள்: "எனக்கு எப்படியோவெல்லாம் தோன்றுகிறது."

"பயப்படாதே, நான் இருக்கிறேன்."

நாட்கள் சில கடந்தன.

ஒருநாள் அவள் பரபரப்புடன் பேசினாள்: "நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்!"

"நாம் முதலில் டாக்டர் ஒருவரிடம் போவோம். அது உண்மைதானா என்று தெரிந்து கொள்வோம்."

பட்டணத்துக்குப் போனபோது, வாசுதேவன் தம்பியும் அவர்களுடன் வந்தார். அவர்கள் ஓட்டல் ஒன்றில் அறை எடுத்தனர்.

வாசந்திக்குத் தெரியாமலே, அவளுக்கும் மது கொடுத்து, எல்லாருமாக மது அருந்தினர். அன்று மாலை நேரம் வரை அவர்கள் அங்கேயே பொழுதைக் கழித்தனர். இரவுக்குள் வாசந்தி மிகுந்த திணறலுக்கு உள்ளானாள். அதன்பிறகு டாக்ஸி ஒன்றில் அவர்கள் கிராமத்தை அடைந்தனர்.

மறுநாள் காலையில் வாசந்தி அவளது வீட்டின் பின்னாலுள்ள வில்வ மரத்தில் தூக்குப் போட்டு இறந்தாள்.

போ ட் மார்ட்டம் சோதனையில் அவள் கர்ப்பவதி என்பது விளங்கியது..

வாசந்தியை அவர்களது பகுதியிலேயே அடக்கம் செய்தனர். அவமானம் தாங்க முடியாத சங்கர வாரியரும் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

அத்துடன் அந்தக் குடும்பமும் வாரிசற்றுப் போனது. சில நாட்களுக்குப் பிறகு சங்கர வாரியரின் சகோதரி மகன் ஒருவன் அந்த வீட்டில் வசிக்கத் தொடங்கினான். தொல்லைகள் சில நேர்ந்ததால் அவன், அந்த வீட்டையும் நிலப்பகுதியையும் வாசுதேவன் தம்பிக்கு எழுதிக் கொடுத்துவிட்டுக் கிளம்பினான்.

இதெல்லாம் நடந்து ஏழு வருடங்கள் கடந்து விட்டன.

இப்போது இதோ வாசந்தி மறுபடியும் உயிர்த்து எழுந்திருக்கிறாள்.

வாசந்தியின் தற்போதைய பெயர் சாவித்ரி.

உண்ணித்தான் சுற்றுமுற்றும் பார்த்தார். எங்கும் ஒரே அமைதி. எந்தவிதமான அசைவும் தென்படவில்லை. இருட்டு. தனிமையின் பயத்தை அதிகப்படுத்தியது.

'எங்கே போவது?'

தம்பியிடமே போவோம். இதையெல்லாம் சொல்வதற்கு தனக்கு அவரை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்?

உண்ணித்தான் கோயில் வாசலிலிருந்து எழுந்தார்.

பகவதியைத் தொழுதார்.

''காப்பாற்றுங்கள் தாயே!'' அவர் குரல் சற்று உரத்து ஒலித்தது.

அப்போது பல்லி ஒன்று குரல் கொடுத்தது. அந்தச் சத்தம் பயமேற்படுத்தக்கூடியதாக இருந்தது. அவர் திடுக்கிட்டார்.

பிறகு விரைவாக அங்கிருந்து நடக்கத் தொடங்கினார். வாசுதேவன் தம்பியின் வீட்டை அடைந்து தெருவாசற்படி கடந்தபோது, தம்பி, விஜயமோகனுடன் பேசிக்கொண்டிருந்தார்.

"என்ன உண்ணித்தான்... என்னமோ போல் இருக்கிறீர்கள்... அவசரமான காரியம் ஏதாவது..." தம்பி கேட்டார்.

அதற்குப் பதிலளிக்காத உண்ணித்தான் இளந்திண்ணையில் உட்கார்ந்தபடி கூறினார்.

"குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்."

"சந்திரிகா, சந்திரிகா!" தம்பி, சகோதரியை அழைத்தார்.

"என்னண்ணா?" என்றபடி வாசலுக்கு வந்தவள் உண்ணித்தானைக் கவனித்தாள்.

இருவரும் பர பரம் பார்த்துக் கொண்டனர்.

"கூப்பிட்டீர்களே..." அவள் கேட்டாள்.

"உண்ணித்தானுக்கு குடிக்க ஏதாவது..." தம்பி கூறினார்.

அவள் வீட்டுக்குள் சென்றாள். சற்று நேரத்துக்குப் பிறகு தம்ளரில் தண்ணீர் எடுத்து வந்தாள்.

"இன்னும் கொஞ்சம் வேண்டும்" மொத்தத் தண்ணீரையும் ஒரே மடக்கில் குடித்த உண்ணித்தான் கேட்டார்.

"சொம்பில் கொண்டு வாம்மா!" தம்பி கூறினார்.

"என்ன உண்ணித்தான்... ஏன், என்னமோ போலிருக்கிறீர்கள்?" விஜயமோகன் கேட்டார்.

'தான் கண்ட காட்சியை எப்படி இந்தத் திருமேனியிடம் சொல்வது?' உண்ணித்தான் ஒரு விநாடி யோசித்தார்.

"குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு ஒன்றுமில்லை. வேகமாக வந்ததால் கொஞ்சம் மூச்சு வாங்குகிறது, அவ்வளவுதான்" சந்திரிகா கொண்டு வந்த வெண்கலச் சொம்பைக் கையில் வாங்கிய உண்ணித்தான் கூறினார்.

"நேரமாகி விட்டது, சரி, நான் கிளம்புகிறேன். நீங்கள் பேசிக்கொண்டு இருங்கள்" விஜயமோகன் எழுந்தார்.

அவர் தெருவாசற்படி தாண்டிச் செல்வதை உண்ணித்தான் வியப்புடன் பார்த்துக்கொண்டு இருந்தார்.

"என்ன உண்ணித்தான், சிக்கலான சமாசாரம் ஏதாவதா?" தம்பி கேட்டார். சந்திரிகா அருகில் எங்காவது நிற்கிறாளா என்று கவனிக்கவும் தம்பி தவறவில்லை.

"எல்லாமே ஒரே சிக்கலுக்கு மேல் சிக்கலாகிக் கிடக்கிறது."

"குறிப்பாக ஏதாவது?"

"நான் இல்லத்துக்குப் போயிருந்தேன். ஒரு சின்ன இடைஞ்சல் செய்வதற்காக. யதேச்சையாகப் பார்த்தால் நம் வாசந்தி."

“என்ன, வாசந்தியா! நீங்கள் கனவு ஏதாவது கண்டிருப்பீர்கள் உண்ணித்தான்.”

“அட, நான் நேரில் பார்த்தேன் என்று சொல்கிறேன்.”

“அப்படியா, எல்லாமே எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டனவா என்ன? அல்லது ஒருவேளை உங்களுக்குப் பழைய...”

“கிடையவே கிடையாது. அந்தத் திருமேனி சொல்லவில்லையா? மாதவ வாரியாரின் மகள் சாவித்ரி என்று அவள்தான் வாசந்தி. இன்னும் சரியாகச் சொன்னால், வாசந்தியின் ஆவி. இல்லையென்றால் ரட்ச ” உண்ணித்தான் ஒரே மூச்சில் பேசி முடித்தார்.

“அப்படியானால் அந்தத் திருமேனி ரட்சஸுகளையெல்லாம் கிளப்பி விடுவதற்காக வந்து சேர்ந்திருக்கிறாரா என்ன? பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதையாகி விட்டதா? இனி என்ன செய்வது?” தம்பி இதை எப்படிக் கையாளுவது என்ற யோசனையில் ஆழ்ந்தார்.

“ஒருவேளை அந்தத் திருமேனியைத் தொலைத்துக் கட்டுவதற்காக அவை நட்பு பாராட்டுகிறதோ என்னவோ, அதற்கும் வாய்ப்பு உண்டே.”

“அதுவும் சரிதான்.”

“அப்படி ஏதாவது இருந்தால் நாம் தப்பித்து விடுவோம்.”

“இப்போது அங்கு இரண்டு பேர் இருக்கிறார்கள் இல்லையா?” தம்பி கேட்டார்.

“அதுதான் எனது பயத்துக்குக் காரணம்” உண்ணித்தான் கூறினார்.

அன்று இரவு உண்ணித்தான் அங்கேயே படுத்துக் கொண்டார். படுக்கை வழக்கம்போல் சவுக்கையில்தான். வாசந்தியைப் பார்த்ததிலிருந்து அவரது பயம் தாறுமாறாக அதிகரித்திருந்தது. அதனால், மெத்தையில் படுத்தும் அவருக்குத் தூக்கம் வரவில்லை.

வெளியே சன்னமாக மழை. சாரல் போட்டுக் கொண்டிருந்தது. அதன் சத்தம் தெளிவாகக் கேட்டது. அவ்வப்போது காற்று வலுவுடன்

வீசியது. ஜன்னல் திறந்து கிடந்தது. உண்ணித்தான் கட்டிலிலிருந்து எழுந்தார். சத்தம் எழுப்பாமல் தாழ்ப்பாள்களையெல்லாம் கவனமாகப் போட்டார். கட்டிலில் வந்து அமர்ந்தபோது யாரோ கதவைத் தட்டும் சத்தம்.

உண்ணித்தானின் உடல் சிலிர்த்தது. அது கால் பெருவிரலி லிருந்து மேற்புறமாக உயர்ந்தது.

"யார் அது?" அவரது குரல் வெளியே கேட்டிருக்குமோ என்னவோ?

மறுபடியும் கதவைத் தட்டும் சத்தம்.

உண்ணித்தான் தீப்பெட்டியை எடுத்து முதலில் விளக்கேற்றினார். அறைக்குள் வெளிச்சம் பரவியபோது சற்று தைரியம் ஏற்பட்டது போல் தோன்றியது. மெதுவாக எழுந்து கதவை நெருங்கினார்.

"நான்தான் சந்திரிகா வந்திருக்கிறேன். கதவைத் திறங்கள்."

உண்ணித்தான் அப்போதும் தயங்கினார். 'வந்திருப்பது சந்திரிகாதானா? அல்லது வேறு யாராவது சந்திரிகாவின் வேஷத்தில் தன்னைக் கொல்ல வந்திருப்பார்களோ?'

"என்ன, கோபமா?" வெளிக்குரல் கேட்டது.

'அது சந்திரிகாதான். சந்தேகமில்லை!'

இருப்பினும் உண்ணித்தான் நடுங்கும் கைகளுடன் கதவைத் திறந்தார்.

சந்திரிகா அறைக்குள் நுழைந்தாள்.

தலைமுடியை அவிழ்த்தபடி அவள் அங்கிருந்த கட்டிலில் அமர்ந்தாள்.

சந்தேக நிவர்த்திக்காக உண்ணித்தான் அவள் முகத்தை ஊன்றிப் பார்த்தார்.

"என்ன இப்படிப் பார்க்கிறீர்கள்? நான்தான் சந்திரிகா. இன்னும் சந்தேகமா என்ன" அவள் மெதுவாக அவரின் கையைப் பற்றிக் கட்டிலில் உட்கார வைத்தாள்.

சந்திரிகா அன்று மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்தாற் போலிருந்தது. அவள், அவரைக் கட்டிலில் சாய்த்து உட்கார வைத்து அந்த மடியில் தலை வைத்துப் படுத்தாள். அவர் கணுக்கால்களை அவள் கைவிரல்கள் அளைந்தன.

உண்ணித்தான் எந்தவித உணர்ச்சியும் அற்றவராக உட்கார்ந் திருந்தார். அவர் மனதில் அப்போதும் வாசந்தியே நிறைந்திருந்தாள்.

**வி**ஜயமோகன் எழுமற்றூர் இல்லத்துக்கு வந்தபோது பூஜையறை வாசலில் நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதற்கு அருகில் உட்கார்ந்து யாரோ எதையோ வாசித்துக் கொண்டிருந்தனர்.

நெருங்கியபோதுதான் அவள் கார்த்திகா என்பது விளங்கியது.

அவள் கையில் பழங்காலத்திய ஓலைச்சுவடியொன்று இருந்தது.

ஆழ்ந்த வாசிப்பு.

"என்ன இது?" விஜயமோகன் கேட்டார்.

"உட்காருங்கள் திருமேனி!" எழுந்திருக்க முயன்றவளாக அவள் பேசினாள்.

"வேண்டாம், எழுந்திருக்கத் தேவை இல்லை. இதைப்பற்றியல் லாம் தெரிந்துகொள்ள எனக்கும் ஆர்வம் இருக்கிறது" விஜயமோகன் அவள் தோளைப் பிடித்து உட்கார வைத்தார்.

"பூஜையறையை நீங்கள் திறந்த பிறகு மூடவில்லை. இனி எல்லாமே உங்களுடையதுதானே? இருப்பினும் நான் வழக்கம் போலவே பழையதையெல்லாம் தொடர்கிறேன். அதன் ஒரு பகுதிதான் இந்த வாசிப்பு."

"மீதமெல்லாம் எது?" அவர் கேட்டார்.

"இதெல்லாம் இந்த வீட்டின் பழைய காரணவர்கள் எழுதி வைத்துள்ளவை. எல்லாம் சக்தி வாய்ந்த மந்திரங்கள். இறந்து போனவர்களை எழுப்பும் வல்லமை வாய்ந்தவை. இதோ, இதைப் பாருங்கள்" அவள் ஓலைச்சுவடியை அவரிடம் கொடுத்தாள்.

விஜயமோகன் அதை வாங்கி ஒவ்வோர் ஏடுகளையும் புரட்டிப் பார்த்தார். அவள் சொன்னது உண்மைதான்.

"அப்புறம் ஏன் இதையெல்லாம் இதுவரை நீங்கள் வாசிக்க வில்லை?"

"அப்போது இப்படியெல்லாம் தோன்றவில்லை. அதற்கெல்லாம் நேரமும் இல்லை."

"வேலைக்காரி சாவித்ரி எங்கே?"

"அவள் பகலில் போதுமே. இரவில் உங்களுக்குப் பணிவிடை செய்ய நான் மட்டும் போதாதா? என்ன... சாப்பிடுகிறீர்களா?" அவள் கேட்டாள்.

"சாப்பிடலாம்."

"நான் பரிமாறுகிறேன்... எழுந்திருங்கள்."

விஜயன் அவளை ஆராய்வது போல் ஊன்றிப் பார்த்தார்.

அற்புதமான ஏதோ ஒரு சக்தி அவளுள் இருப்பதாகவும், அவளுக்கு நிறைய விஷயங்கள் தெரியும் என்றும் அவருக்குத் தோன்றியது. ஆனால், அவள் ஒரு பிரம்மரட்ச என்பது அவருக்குத் தெரியவில்லை.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவர் மீண்டும் இளந் திண்ணைக்கு வந்தார்.

"நீங்கள் தம்பியிடம் போயிருந்தீர்களா?" அவள் கேட்டாள்.

"ஆமாம்."

"அவன் இந்த இல்லத்தின் காரிய தனாக இருந்தான். அவன் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் சொத்துகளின் பெரும்பகுதி இந்தத் தறவாட்டிலிருந்து திருடப்பட்டவை. அவனது நோக்கம் இன்னும் முற்றுப் பெறவில்லை."

"அதற்கு இங்கு ஏதாவது மிச்சம் இருக்கிறதா என்ன?"

"இல்லை, ஆனால், நீங்கள் எப்போதாவது இதை விட்டுவிட்டுப் போனால் சொந்தமாக்கிக் கொள்வான்."

"அப்படி விட்டுவிட்டுப் போக வந்தவன் அல்ல நான்."

"நீங்கள் இப்போது இப்படியெல்லாம் சொல்வீர்கள். திட்ட மிட்டதை நிறைவேற்ற அவர்கள் எப்படிப்பட்ட வழிகளையும் கையாளுவார்கள்."

"எந்த வழியில்..."

"ஆபத்தான மந்திரங்களைப் பிரயோகிப்பார்கள். அவர்கள் என்றால் நேரடியாக அவர்கள் அல்ல. அதையெல்லாம் நேரிட உங்களுக்கு வல்லமை வேண்டும். இல்லாவிட்டால், அதில் நீங்கள் உயிரை இழப்பீர்கள்."

விஜயமோகன் யோசித்தார்.

'இவள் சொல்வதும் உண்மைதான். தம்பியும் உண்ணித்தானும் பேச்சுக்கு இடையே பலமுறை பர பரம் பார்த்துக் கொண்டார்கள். அதற்குப் பின்னணியில் எவ்வளவோ நோக்கங்கள் இருக்கலாம்!'

"அதற்காக நீங்கள் இந்தச் சுவடிகளை எல்லாம் படிக்க வேண்டும். இது உங்களுக்குப் பயன்படும். இதுபோன்று இன்னும் பல இங்கு இருக்கக் கூடும். அதற்கு நானும் உங்களுக்கு உதவுகிறேன்" அவள் வாக்குறுதி அளித்தாள்.

குளிர்ந்த காற்று வீசியது.

விளக்கின் தீபம், காற்றுக்கு ஏற்றாற்போல் அலைந்தது. அதையொட்டி நிழல்களும் அலைபாய்ந்தன.

"வலுவாக மழை பெய்யும் என்று தோன்றுகிறது" ஆகாயத்தைப் பார்த்தபடி பேசினாள் கார்த்திகா.

அவள் சொல்லி முடிப்பதற்குள் மணலை வாரி எறிவது போல் மழைத்துளிகள் வீட்டின் ஓட்டுப் பகுதிகளில் விழத் தொடங்கின.

"இனி, இதையெல்லாம் பகலில் வாசிப்போம்" அவள் சொன்னாள்.

விஜயமோகன் ஓலைச்சுவடியை மூடி, பூஜையறைக்குள் வைத்துவிட்டுக் கதவை மூடினார். பிறகு படுக்கை அறையை நோக்கி நடந்தார்.

கதவை மூட முற்பட்டபோது அவள் வாசலுக்கு வெளியே நின்றாள்.

"ஏன் அங்கேயே நின்றுவிட்டீர்கள்?"

"அழைக்காமல் நான் உள்ளே வருவது எப்படி? நீங்கள் இப்போது இந்த இல்லத்தின் உரிமையாளர் அல்லவா?"

அவள் சொன்னதன் பொருள் அவருக்கு விளங்கவில்லை.

கார்த்திகா காலை நேரத்தில் எங்கே போகிறாள் என்று தெரியவில்லை.

காலையில் எழுந்தபோது சமையலறையில் சத்தம் கேட்டது. சாவித்ரிதான்.

காலைச் சிற்றுண்டியைச் சாப்பிடும்போது விஜயமோகன், சாவித்ரியை ஊன்றிக் கவனித்தார்.

அவள் கழுத்தில் கருமையான ஒரு பெரிய தழும்பு. கயிறு இறுக்கியதால் ஏற்பட்டது போன்ற ஓர் அடையாளம்!

## 17

விஜயமோகன், சாவித்ரியின் கழுத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அதைக் கவனித்த அவள் கேட்டாள்: "என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?"

"உங்கள் கழுத்தில் தெரியும் தழும்பு எதனால் என்றுதான்..."

"ஓகோ, அதுவா?" என்றவள் தலைமுடியால் அதை மறைக்க முயன்றாள். பின்புறம் இடுப்பைத் தாண்டி நீண்டு வளர்ந்திருந்த

தலைமுடியை மொத்தமாக இடதுபுறத் தோள் வழியாக முன்புறம் எடுத்துக் கழுத்தைச் சுற்றி வலதுபுறத் தோள் வழியாக முன்புறம் தொங்க விட்டாள். அப்போதும் அவள் தலையின் பின்புறம் முடி ஏராளமாக இருந்தது.

“நோய் ஏதாவது ஏற்பட்டதா?” விஜயமோகன் கேட்டார்.

“ச்சேச்சே... அப்படியெல்லாம் இல்லை” அவள் நழுவ முயன்றாள்.

அதன்பிறகு அவரும் அதைப்பற்றி மேற்கொண்டு விசாரிக்க வில்லை.

காலைப் பலகாரத்துக்குப் பிறகு, தனது அறைக்குள் வந்தவர் கார்த்திகா வழங்கிய ஏடுகளைச் சோதிக்கத் தொடங்கினார். அவற்றில் ஒன்றில் கீழ்க்கண்ட ஆச்சரியமான தகவலை வாசித்தார்.

தேவநாகரி எழுத்துகளிலான ஒரு மந்திரத்தின் கீழே, இப்படி எழுதப்பட்டிருந்தது: ‘மேற்குறிப்பிட்ட மந்திரத்தை லட்சத்து ஒரு தடவை ஜெபித்து மனித ரத்தத்தில் சமிதை நனைத்து அக்னியில் ஹோமித்தால், அற்ப ஆயுளில் மரணமடைந்தவர்கள், கொலை செய்யப்பட்டவர்கள் பிணக் குழியிலிருந்து எழுந்திருப்பார்கள். அவர்கள் சாதாரண மனிதர்களைப் போலவே நடந்து கொள்வார்கள். ஆனால், அப்படிப்பட்டவர்களிடம் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். அவர்களிடம் பைசாசிகத் தன்மை அதிகமிருக்கும்.

விஜயமோகன் அந்தப் பகுதியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த மந்திரத்தை ஒரு தடவை வாசித்துப் பார்த்தார்.

மிருத சஞ்சீவினி மந்திரத்துடன் இதற்கு ஓர் ஒற்றுமை இருந்தது. ஆனால், அதன் ஒவ்வொரு வரியிலும் ஒன்று அல்லது இரண்டு எழுத்துகளை அழித்து வைத்திருந்தனர்.

அதை யாரோ வேண்டுமென்றே புத்திசாலித்தனமாகச் செய்திருக்கிறார்கள் என்று தெளிவாக உணர முடிந்தது. எனவே, அதைக் குறித்து கார்த்திகாவிடம் கேட்க வேண்டுமென்று அவர்

நினைத்தார்.

"யாரோ, உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்!" சாவித்ரி அறை வாசலுக்கு வெளியே நின்று கூறினாள்.

'யாராக இருக்கும்?' என்று யோசித்தவாறே விஜயமோகன் எழுந்தார்.

வராந்தாவை அடைந்தபோது வாசுதேவன்தம்பி, சிறு திண்ணையில் நின்றிருந்தார்.

'யார் தம்பியா... வாருங்கள்... வாருங்கள். நாம் வசதியாக இப்படிச் சவுக்கையில் உட்காரலாம்... வாருங்கள்" விஜயமோகன் முற்றத்தில் இறங்கினார்.

இருவரும் சவுக்கைக்குள் நுழைந்தனர்.

தம்பி சுற்றுமுற்றும் பார்த்தவாறு உள்ளே நுழைந்தார்.

"நான் வந்திருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" தம்பி கேட்டார்.

"இங்கு ஒரு வேலைக்காரி இருப்பதாக நான் உங்களிடம் சொல்லவில்லையோ... ஒருவேளை சொல்லியிருக்க மாட்டேன்."

"இல்லை, சொல்லியிருக்கிறீர்கள். மாதவ வாரியரின் மகள் சாவித்ரி என்று சொன்னதாக ஞாபகம்."

"ஆமாமாம்... அவள்தான்" விஜயமோகன் பதிலளித்தார்.

வாசுதேவன் தம்பி சவுக்கையை ஒரு தடவை வட்டமாகப் பார்த்தார். சுத்தமாகப் பராமரிக்கப்பட்டிருந்தது. அதேபோல் அதற்குள் இருந்த பொருள்கள் மிகவும் அழகாக அடுக்கி ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தன.

'இதெல்லாம் செய்தது வேலைக்காரிதானா?' தம்பி கேட்டார்.

"ஆமாம், ஆனால், இங்கு வேறொருவரும் இருக்கிறார். அதையும் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். பெயர், கார்த்திகா அந்தர்ஜனம்."

"என்ன, கார்த்திகாவா!" தம்பி நிலைகுலைந்து போனார்.

"ஆமாம், நான் வரும்போது என்னுடன் வந்தவள். அதன்பிறகு இங்குதான் தங்கியிருக்கிறாள்."

அதைக்கேட்ட தம்பி திடுக்கிட்டார். ஆனால், அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

வாசுதேவன் தம்பி வந்ததற்கான நோக்கமே அதுதான். கார்த்திகா அந்தர்ஜனத்தைப் பற்றி முடிந்த அளவுக்குத் தெரிந்துகொள்ள விரும்பினார். அவளின் போக்குவரத்தைக் குறித்துச் சரியாகத் தெரிந்து கொண்டால், அதற்கு ஏற்றபடி அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று அவர் நினைத்தார்.

"தம்பி, காபி குடித்திருப்பீர்களே... இங்கு அதது சமயத்தில், அதது என்ற வரைமுறை. அதனால் எல்லாம் குறித்த நேரத்துடன் முடிந்துவிடும். எனவே, அப்படி உபசரிக்க முடியாததற்கு என்னை மன்னியுங்கள்" விஜயமோகன் கூறினார்.

தூக்கில் தொங்கி இறந்துபோன வாசந்தியை ஒரு தடவை பார்க்க வேண்டுமென்று தம்பி நினைத்தார். ஆனால், அதற்கு வாய்ப்பு ஏற்படாது என்று தோன்றுகிறது. எழுமற்றூர் மனைக்கு அவர் வருவதற்கு அதுவும் மற்றொரு காரணம்.

"அந்தர்ஜனம் பகலில் ஏதாவது வேலைக்குப் போகிறார்களோ?" தம்பி எதுவும் தெரியாதவரைப்போல் கேட்டார்.

"அப்படித்தான் நினைக்கிறேன். நான் அதைப்பற்றியெல்லாம் விசாரிப்பதில்லை. மற்றவர்களின் தனிப்பட்ட, அந்தரங்கமான விஷயங்களில் நாம் ஏன் தலையிட வேண்டும்? எனக்கு அதெல்லாம் பிடிக்காது."

"நல்ல கொள்கைதான். இருப்பினும் உடன் வசிக்கும்போது அதையெல்லாம் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது இல்லையா?"

"எனக்கு என்னுடைய சொந்த வேலைகளைப் பார்க்கவே நேரம் கிடைப்பதில்லை. இதில் மற்றவர்களைப் பற்றி எனக்கு என்ன கவலை வேண்டிக் கிடக்கிறது!"

“கொஞ்சம் தண்ணீர் கிடைத்தால் நல்லது” தம்பி. உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தார். விஜயமோகன் தடுக்கவில்லை.

தம்பி. கிணற்றடியை நெருங்கினார்.

பக்கெட்டும் கயிறும் இருந்தது.

அவரே தண்ணீரைச் சேந்தினார். இடது கையால் பக்கெட்டைப் பிடித்துக்கொண்டு வலக்கையில் தண்ணீரைச் சரித்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்தார். மிச்சமிருந்த நீரைக் கால்களில் ஊற்றினார்.

“சொல்லியிருந்தால் நான்கூட சேந்தித் தந்திருப்பேனே...” பெண் குரல் ஒன்று கேட்டது.

தம்பி தலையை உயர்த்திப் பார்த்தார்.

அதோ நிற்கிறாள் வாசந்தி.

அதே முகம். கோயிலில் அவளைப் பார்த்த விநாடியில் வலைவீசத் தொடங்கியதிலிருந்து பட்டணத்தில் உள்ள ஓட்டல் அறைக்குள் பாலியல் பலாத்காரம் செய்தது வரையிலான நிகழ்ச்சிகள் அவர் மனதில் சட்டென்று பாய்ந்து வந்தன.

“பகவதீ. என்ன இது” அவர் தன்னையும் மீறி வாய்விட்டு அரற்றினார்.

“என்ன, என்னை உங்களுக்கு ஞாபகம் வருகிறதா?”

அவர். அவள் கண்களைப் பார்த்தார்.

அவளின் பளப்பான கண்மணிகள் வைரக் கற்கள் போல் ஜொலித்தன. அந்த உதடுகள் ரத்த நிறத்துக்கு மாறுகின்றன. எப்படிப் பட்டவர்களும் பயந்து நடுங்கக்கூடிய ஓர் உணர்வு அந்த முகத்தில் தெரிவதை அவர் கவனித்தார்.

அதன்பிறகு சற்றும் தாமதிக்காமல் அவர் சவுக்கையை அடைந்து பழைய இடத்தில் அமர்ந்தார்.

“தண்ணீர் குடித்து விட்டீர்களா?” விஜயமோகன் கேட்டார்.

“ம். குடித்துவிட்டேன்.”

“ஏன், என்னமோ போலிருக்கிறீர்கள்?”

“ஓ, ஒன்றுமில்லை!” என்றவர் ஜன்னல் பக்கமாக வெளியே பார்த்தார்.

உண்ணித்தான் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பது விளங்கியது. அது அவளேதான்!

ரட்சஸுகள் நிறைய வசிக்கும் இந்த இல்லத்தில் தனக்கு முன்பாக அமர்ந்திருப்பவர் மனிதர்தானா அல்லது பிசாசா என்றுகூட தம்பிக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

“கார்த்திகா அந்தர்ஜனத்தை உங்களுக்குத் தெரியுமில்லையா தம்பி?” விஜயமோகன் கேட்டார்.

“தெரியாதே... இல்லை. இதுவரை நான் பார்த்ததே இல்லை.”

உடனே பெரிய பல்லியொன்று அந்த அறைக்குள் குரல் எழுப்பியது. அதன் சத்தம் புது மாதிரியாக இருந்தது.

தம்பி சத்தம் வந்த பக்கம் திரும்பினார். மிகப்பெரிய பல்லியொன்று மரப்பலகையில் தலைகீழாக ஒட்டிக் கொண்டிருந்தது. சுமார் மூன்று அடி நீளம் இருக்கும். பார்த்தால் ஒரு முதலைக்குட்டி என்று சொல்லத் தோன்றும்.

அப்படிப்பட்ட ஒன்றை தம்பி அப்போதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறார்.

ஊன்றிப் பார்த்தார். அதன் கண்கள் பளபளப்பாகத் தோன்றின.

இரண்டு சிவப்பு வைரக்கற்கள் மாதிரி.

‘இப்படியுமா பல்லிகள் உள்ளன!’

அவர் சுற்றுமுற்றும் தேடினார். எனினும் அவரால் மற்றொரு பல்லியைக் காண முடியவில்லை.

“அந்தப் பெண்மணிக்கு இந்த இல்லத்துடன் உறவு முறையிலான தொடர்பு இருப்பதாக என்னிடம் சொன்னாரே... பிறகு எப்படி நீங்கள் பார்க்காமல் இருந்திருக்க முடியும். அதனால்தானே அவர்

பத்திரத்திலும் சாட்சிக் கையெழுத்துப் போட்டிருக்கிறார். விஜயமோகன் சந்தேகம் நிறைந்தவராகக் கேட்டார்.

தம்பி தெரியாது என்று சொல்வதில், ஏதோ ஒரு மர்மம் இருப்பது விஜயமோகனுக்குத் தெரிந்தது. மட்டுமின்றி, அவர் இது தொடர்பான விஷயங்களை மறைக்கிறார் என்பதும் உறுதியானது.

"விசாரிக்கிறேன், விசாரித்தால் தெரியலாம்" தம்பி நழுவினார்.

"இருங்கள். இன்னொரு சந்தேகம்" விஜயன் பேசினார்.

"என்ன?"

"அந்தப் பத்திரத்தில் அவர்கள் எப்படிக் கையெழுத்து போட்டார்கள்?"

"அதில் பெரிதாக யோசிக்க எதுவுமில்லை. சாட்சிகள் நம் கண் முன்பாகத்தான் கையெழுத்து போட வேண்டும் என்பதில்லை. நாம் அங்கு போனபோது வேறெவரும் இல்லை. நாம் கிளம்பி வந்த பிறகு இந்தப் பெண்மணி அங்கு போயிருக்கலாம். அப்போது அவர்களிடம் சாட்சிக் கையெழுத்து வாங்கியிருக்கலாம்."

"உண்மைதான், அதற்கு வாய்ப்பு உள்ளது" விஜயமோகன் ஒப்புக் கொண்டார்.

அப்போதும் மச்சுப் பகுதியில் தலைகீழாக நின்று கொண்டிருந்த பல்லி குரல் எழுப்பியது.

தம்பி அந்தப் பக்கமாகப் பார்த்தார்.

'ஐயோ, அதன் முகம் கார்த்திகா அந்தர்ஜனத்தைப் போல் இருக்கிறதே!' தம்பி நினைத்தார்.

அதற்குமேல் அங்கு உட்கார்ந்திருக்க முடியாதவராக எழுந்தார்.

"நான் கிளம்புகிறேன். அடிக்கடி வீட்டுப்பக்கம் வாருங்கள். உங்களுக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் கேட்கத் தயங்காதீர்கள். உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டி இருக்கிறது."

"சொல்லுங்கள்!"

“திருமேனி, நீங்கள் இந்தப் பகுதிக்குப் புதியவர். அதனால் வேலைக்கோ உதவி செய்வதற்கோ ஆட்களை நியமிக்கும்போது எங்களிடமும் ஒரு வார்த்தை கேட்டுக்கொள்வது நல்லது.”

“அப்படியொரு நீண்ட நாள் வாழ்க்கையை நான் இங்கு எதிர்பார்க்கவில்லை.”

“வாழ்க்கை எவ்வளவு குறுகிய கால அளவுள்ளதாக இருந்தாலும், பழக்கப்பட்டவர்களாக இருந்தால், அது எல்லா வகையிலும் நல்லது. நமக்கு உதவும்.”

“இங்கு ஆண் வேலைக்காரர்கள் யாரும் கிடையாது. இந்த வீட்டில் அப்படிப்பட்ட வேலைகள் எதுவும் இல்லையென்பது இரண்டாவது விஷயம்.”

“இங்கு பக்கத்திலேயே ஒரு ஓட்டல் இருக்கிறது, நாற்சந்தியில். போற்றி ஒருவரின் ஓட்டல். திருமேனி, நீங்கள் வேண்டுமானால் அங்கேயே கூடச் சாப்பிட்டுக் கொள்ளலாம்.”

“அப்படியா?”

“ஆமாம், நீங்கள் அங்கிருந்துதான் சாப்பிடுகிறீர்கள் என்று நான் நினைத்தேன். அந்த ஓட்டல் வைத்திருப்பவர் ஓர் ஏழையும் கூட. நீங்கள் அங்கு சாப்பிட்டால் அது அவருக்கு ஓர் உதவியாகவும் இருக்கும்.”

“பார்க்கலாம்.”

“அப்படியானால் நான் கிளம்புகிறேன். அந்த ஓட்டல்காரரிடம் சொல்லி வைக்கிறேன்” தம்பி, அங்கிருந்து நடக்கத் தொடங்கினார்.

அவர் அங்கிருந்து கிளம்பும்போதும் பல்லி குரல் கொடுத்தது. விஜயமோகன் மேற்புறமாகப் பார்த்தார்.

அந்தப் பல்லி நிதானமாக மேற்குத் திசை நோக்கி நகர்ந்தது. கண்ணிமைப்பதற்குள் மரச்சட்டங்களின் இடைவெளியில் அது மறையவும் செய்தது.

‘இந்த வீட்டுக்குள் மர்மம் நிறைந்த ரகசியங்கள் நிறைய உள்ளன!’ விஜயமோகன் நினைத்தார்.

அன்று மாலை நேரத்தில் விஜயமோகன் அப்படியே காலாற நடக்கக் கிளம்பினார். ஒரு சிற்றுலாதான் நோக்கம். அப்படியே ஊராரிடமிருந்து அந்த இல்லத்தைக் குறித்து முடிந்தால் எதையாவது தெரிந்துகொள்வது துணை நோக்கம்.

நடந்து கொண்டே இருந்தவர் அந்த ஊரின் நாற்சந்திப்பை அடைந்தார்.

கிராமத்தின் மாலை நேரச் சந்தை அந்தப்பகுதி என்று கூறலாம்.

தம்பி சொன்ன ஓட்டல் ஒன்று, ஒரு டீக்கடை, சிகை அலங்கார நிலையம், பலசரக்குக் கடை, ஜவுளிக்கடை ஆகியவை இருந்தன. இதுதவிர காய்கறி மற்றும் உள்ளூர்ச் சரக்குகளை விற்கும் கிராமத்து வியாபாரிகள் சிலரது தற்காலிகக் கடைகளும் இருந்தன.

அங்கு தென்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சட்டை போடாதவர்கள்.

விஜயமோகன் ஓட்டலுக்குள் நுழைந்து காலியாகக் கிடந்த பெஞ்ச் ஒன்றில் அமர்ந்தார்.

“டீயா, காபியா?” பூணூல் போட்ட நடுவயது மனிதர் ஒருவர் கேட்டார்.

“டீ கொடுங்கள்” விஜயமோகன் சொன்னார்.

“சாப்பிட ஏதாவது?”

“ம்.. ஏதாவது கொடுங்கள்!”

அவர் ஓர் இலைத்துண்டில் மசால் வடை ஒன்றையும் மெதுவடை ஒன்றையும் எடுத்து வந்தார்.

அந்த பெஞ்சின் மற்றொரு பகுதியில் அப்போது பெரியவர் ஒருவர் வந்து அமர்ந்தார்.

"எங்கே தங்கியிருக்கிறீர்கள்... ஊருக்குப் புதியவர் மாதிரித் தெரிகிறதே!" பெரியவர் கேட்டார்.

"ஆமாம்...." விஜயமோகன் மெது வடையைக் கையில் எடுத்தபடி பதிலளித்தார்.

"தங்கியிருப்பது?"

"எழுமற்றூர் இல்லத்தில்...."

அதைக் கேள்விப்பட்ட பெரியவர் வியப்புடன் விஜய மோகனைப் பார்த்தார்.

"உங்கள் பெயர்?" அவர் விசாரித்தார்.

"விஜயமோகன், நான் அந்த இல்லத்தை விலைக்கு வாங்கி யிருக்கிறேன்."

"அதனால் அங்கேயே குடியிருக்கிறீர்களா?" பெரியவர் நம்பிக்கை ஏற்படாதவராகக் கேட்டார்.

"ஆமாம்."

"எத்தனை நாட்களாகத் தங்கியிருக்கிறீர்களா?"

"மூன்று நாட்களாகிறது."

"தனியாகவா இருக்கிறீர்கள்?"

"ஆமாம், ஏன் இப்படியெல்லாம் கேட்கிறீர்கள்?" விஜயமோகன் கேட்டார்.

"நீங்கள் தைரியசாலிதான்" அவர் கூறினார்.

"என்ன ராமன் நாயரே... எதற்குத் தேவையில்லாததையெல்லாம் கேட்கிறீர்கள்?" ஓட்டல் முதலாளி, பெரியவர் பக்கமாகத் திரும்பினார்.

"இல்லை, எவருக்குமே வேண்டாத ஓரிடத்தில் வசிக்கவும் ஒருவர் வந்து சேர்ந்திருக்கிறாரே... அதனால்தான் கேட்டேன்."

"போதும்... போதும்... நிறுத்துங்கள்!"

அதன் பிறகு அந்தப் பெரியவர் எதுவும் பேசவில்லை. சற்று நேரத்துக்குப் பிறகு அவர் அங்கிருந்து கிளம்பவும் செய்தார்.

விஜயமோகன் டீ குடித்து பணத்தைக் கொடுத்துவிட்டுக் கிளம்ப முற்பட்டபோது ஓட்டல் முதலாளி அவரை அழைத்தார்.

"என்ன விஷயம்?"

"உட்காருங்கள். உங்களைப் பற்றி எனக்கு ஓரளவுக்குத் தெரியும். ஆமாம். நீங்கள் இங்கு வந்து தங்கியிருப்பதற்கு ஏதாவது நோக்கம் இருக்கிறதா?" கடைக்காரர் விசாரித்தார்.

"என்னைப் பற்றி இங்கு உங்களிடம் சொன்னது யார்?"

"வாசுதேவன்தான். அவர்தான் அந்தத் தறவாட்டின் பழைய காரிய தர். அங்கிருந்து அவர் சுருட்டி எடுத்திருப்பதுதான் அவரது இப்போதைய மொத்த சொத்துகளும்."

விஜயமோகன் பதில் எதுவும் சொல்லாமல் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"கடைசி வாரிசாகப் பெண் குழந்தை ஒருத்தி இருந்தாள். பாவம், அவளும் குளத்தில் விழுந்து செத்துப் போனாள்" அவர் பேசினார். பிறகு எதுவோ ஞாபகம் வந்தவரைப் போல் தொடர்ந்தார். "இறந்து போனாள் என்றும், கொல்லப்பட்டதாகவும் கூட ஊரார் பேசிக் கொள்கிறார்கள். எது உண்மையென்று தெரியவில்லை."

"இப்படிப்பட்ட வரலாறு கொண்ட தறவாடுகள் இன்னும் ஏராளமாக உள்ளன" விஜயமோகன் பதிலளித்தார்.

"நல்ல விஷயம் ஒன்றும் இருக்கிறது. அந்தத் தறவாட்டில் இருந்தவர்கள் மகத்தான மந்திரவாதிகள். எப்படிப்பட்ட ஆச்சரியங்களை எல்லாம் நிகழ்த்தியிருக்கிறார்கள் தெரியுமா? ம்... அதையெல்லாம் சொல்லி என்ன பயன்! அப்படிப்பட்ட தறவாடுகள்தான் பெரும்பாலும் வாரிசின்றி அழிந்து போயிருக்கிறது. பரதேவதைகளை ஒரே ஒரு கணம் மறந்து விட்டாலும் போதும்... எல்லாம் தாறுமாறாகி விடும்."

“இங்கு அப்படியெல்லாம் நிகழ்ந்திருக்காது. எல்லாம் விதிதான். இல்லாவிட்டால், உயிரோடு இருப்பவர்கள் செய்த அக்கிரமங்களாக இருக்கும்.”

“அப்படியும் இருக்கலாம்.”

“சரி, நான் கிளம்பட்டுமா? இனி அடிக்கடி வருகிறேன்.”

“அப்படியானால் சாப்பாடெல்லாம்?”

“தற்சமயம் அதெல்லாம் அங்கேயேதான்.”

“இங்கேயே சாப்பிடலாமே?”

“பார்க்கலாம்” விஜயமோகன் அங்கிருந்து கிளம்பினார்.

அவரைப் பெரும்பாலானவர்கள் பயத்துடன் பார்த்தனர்.

‘ஆள் சாமானியமானவர் அல்லர்!’ என்பதுதான் பலரது கணிப்பாக இருந்தது.

விஜயமோகன் இல்லத்தை அடைந்தார்.

விளக்கேற்றப்பட்டிருந்தது.

சாவித்ரி கிளம்பி விட்டிருந்தாள்.

சற்று நேரத்துக்குள் கார்த்திகா அந்தர்ஜனம் வந்தாள்.

“என்ன வேறிடத்தில் சாப்பிடப் போகிறீர்களா என்ன?”

“யார் சொன்னார்கள்?”

“எல்லாம் எனக்குத் தெரியும். இந்தாருங்கள் இன்னொரு சுவடி. மரணத்தை வெற்றி கொள்வதற்கான எல்லா வித்தைகளும் இதில் இருக்கின்றன. சோதித்துப் பார்க்க வேண்டியது இல்லை. தெரிந்து வைத்துக் கொண்டால் போதும்.”

அன்று இரவில் விஜயமோகனின் மார்பின் மீது ஒட்டிக் கிடந்தபோது கார்த்திகா அந்தர்ஜனம் கேட்டாள்: “நாளை மாலை நேரத்தில் நீங்கள் தம்பியின் வீட்டுக்குப் போகும்போது என்னையும் அழைத்துச் செல்வீர்களா?”

அவர் ஒப்புக் கொண்டார்.

"என்னை யாரென்று அறிமுகம் செய்து வைப்பீர்கள்?"

"கார்த்திகா அந்தர்ஜனம் என்றுதான்."

"அப்படிச் சொன்னால் அவர் நம்ப மாட்டார்."

"வேறு எப்படிச் சொல்வது?"

"நான் உங்கள் ஊரிலிருந்து வந்திருப்பதாகச் சொல்லுங்கள். முறைப்பெண் என்று வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள்."

"அவருக்குத் தெரியாதா என்ன?"

"தெரியாது. அதற்கெல்லாம் வழி இருக்கிறது."

அவள் கைகள், அவர் மார்பில் அளைந்தன.

அவர் வயிற்றின் மென்மையான தசைப் பகுதிகளில் அந்த விரல்கள் ஊர்ந்தபோது அவர் அவளை இறுக்கி அணைத்தார்.

அவளின் மூச்சுக்காற்று, அவர் இடக் கன்னத்தில் வலுவாகப் பதிந்து கொண்டிருந்தது.

அப்போது பூஜையறை வாசலில் இருந்த தாயத்து திறந்து கொண்டது. அதிலிருந்து புகைச் சுருள்கள் உயர்ந்தன. அது ஒரு பெண் வடிவமாக மாறியது. அப்போது அந்த அறையின் கதவு திறக்கப்பட்டது.

அந்த அறை வாசலில் யாரோ நிற்பதாக விஜயமோகனுக்குத் தோன்றியது.

## 18

விஜயமோகன் உற்றுப் பார்த்தார்.

மங்கலான அரண்ட வெளிச்சத்தில் அந்த உருவம் ஒரு நிழல் போல் தென்பட்டது.

ஒரு பெண் உருவம்.

மார்புப் பகுதிகளை மறைக்காத உருவம். மார்புப் பகுதிகள், அவள் இளமையின் உச்சத்தில் இருப்பதை எடுத்துக் காட்டின. மிகவும் சன்னமான துணி ஒன்றை ஏறத்தாழ முழங்கால் வரை உடுத்திருந்தாள். அந்தத் துணியின் நூலிழைகளின் இடைவெளி வழியாக அவள் கால்கள் தென்பட்டன.

“யாரது?” விஜயமோகன் கேட்டார்.

உடனே கார்த்திகா திரும்பினாள். சட்டென்று அந்த உருவம் மறையவும் செய்தது.

“சாவித்ரியா அது?” விஜயமோகன் கேட்டார்.

“இல்லை, நிச்சயமாக அவளாக இருக்க முடியாது. இந்த நேரத்தில் இங்கு வர அவளுக்குத் தைரியம் ஏற்படாது.”

“அப்படியானால் வேறு யார்?”

“யாராக இருந்தாலும் வரட்டும். நான் பார்த்துக் கொள்கிறேன்.”

ஆனால், விஜயமோகனின் மனதில் அந்த உருவம் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

சற்று நேரத்துக்குப் பிறகு கட்டிலிலிருந்து எழுந்த கார்த்திகா, கோல் விளக்கின் திரியை நீட்டினாள். மங்கலாக எரிந்து கொண்டிருந்த விளக்கு உயிர் பெற்றது. அந்த வெளிச்சத்தில் அவர் கார்த்திகாவை கவனித்தார்.

எப்படிப் பார்த்தாலும் அவள் அழகியாகவே தெரிந்தாள்.

“கார்த்திகாவிடம் நகைகள் எதுவும் கிடையாதா?” விஜயன் கேட்டார்.

“எனக்கு எதற்கு நகைகள்?” அவள், அவரை நெருங்கி அவர் கன்னங்களை வருடியபடி கேட்டாள்.

“இந்த அடையாளம்... நிலாவிலுள்ள வடு மாதிரி...” அவர் அந்தக் கறுப்பு நிறத்தை வருடினார்.

சந்திரப் பிறை வடிவத்தில் ஓர் இருபத்தைந்து பைசா நாணயத்தின் அளவில், கார்த்திகாவின் சந்தன நிற உடலில் அந்த அடையாளம் எடுப்பாகத் தெரிந்தது.

“இதுதான் என்னை அடையாளம் தெரிந்து கொள்ள உதவக்கூடியது. இது மட்டும் இல்லாவிட்டால், ஏதோ ஒரு குறை இருப்பதாக உங்களுக்குத் தோன்றும்” அவள், அவர் மார்பில் முகம் பதித்துக் கிடந்தாள்.

விஜயமோகன் அவளின் நீண்ட தலைமுடியில் விரல்களை அளைய விட்டார்.

“உங்களுக்குத் தூக்கம் வருகிறாற் போலிருக்கிறதே” அவள், அவரின் கண்ணிமைகளை வருடினாள்.

“ஆமாம், இன்றைக்கு என்னவோ ஒரே களைப்பாக இருக்கிறது. நான் நாற்சந்தி வரை போயிருந்தேன்.”

“ஒருவேளை அதனால் இருக்கலாம். ஆனால், அங்கு என்னைப்பற்றி ஏதாவது பேசினீர்களா?”

“ஏன் பேச வேண்டும்? வீட்டில் இருப்பவர்களைப் பற்றி நான் ஏன் கடைவீதியில் பேச வேண்டும்?”

“தேவையில்லைதான். நான் வாய் தவறிக் கேட்டுவிட்டேன். சரி, தூங்குங்கள். நாளைக்குத் தம்பியின் வீட்டுக்கு நானும் வருவேன்.”

“நாம் பகல் நேரத்தில் அங்கு போனால் என்ன?”

“முடியாது. நாளைக்கு அவசரமாகச் சில வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது. நான் மாலை நேரத்தில்தான் வருவேன்.”

“அப்படியானால் வேறொரு நாள் போவோம்.”

“வேண்டாம், ஏற்கெனவே தீர்மானித்ததாயிற்றே... மாற்ற வேண்டாம்.”

“சரி, ஒப்புக்கொள்கிறேன்.”

கார்த்திகா எழுந்தாள். உடையை சரிசெய்து கொண்டு விஜயனைப் பார்த்தாள். அவரின் கன்னத்தை ஒருமுறை வருடிவிட்டு அங்கிருந்து வெளியேறினாள்.

அப்போது வெளியே சேவல் குரல் கொடுத்தது.

'யார் இவள்?' விஜயன் யோசனையில் ஆழ்ந்தார்.

அவர் எழுந்து கதவைத் தாழிட்டார்.

மறுபடியும் வந்து படுத்தார்.

**அ**டுத்த பகல் பொழுதில் உண்ணித்தான், தன் தாய் மாமா குறிப்பிட்ட மாந்திரீகனை அழைத்துக்கொண்டு இடச்சேரித் தறவாட்டுக்கு வந்து சேர்ந்தார்.

அவரைப் பார்த்தபோதே 'கெட்டிக்காரர்!' என்று தம்பிக்குத் தோன்றியது.

சரியான மனிதர். விசாலமான நெற்றி. தலைமுடி ஜடை பிடித்தாற் போல் பிரிந்து தனித்தனிச் சுருள்களாகப் பின்னோக்கி விடப்பட்டிருந்தது. முகம் பயங்கரமாக இருந்தது. அதே நேரம் சற்று அருவருப்பு ஏற்படுத்தும் விதமாக ஒரு கண் சற்றுத் தாழ்ந்திருந்தது. அந்தக் குழியில் இருள் நிறைந்திருந்தது. அந்த இருளுக்குள் ஏதோ ஒன்று பளபளத்தது. அது அவ்வப்போது அசையவும் செய்தது.

அந்தக் கண் இப்படி ஆனதற்குப் பின்னணியில் ஒரு கதை இருக்கிறது. சேகரன் உண்ணித்தான் மாந்திரீக வித்தையில் எதையும் செய்வார் என்று பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. மிகவும் நெருக்கமானவர்களுக்குக் கூட.

பல ஊர்களில் சுற்றித் திரிந்தவர்.

ஒரு தடவை ரத்த சாமுண்டி வரி தேவியை மகிழ்ச்சிப்படுத்து வதற்காக, ஆண் யானை ஒன்றைக் கழுத்து வெட்டி ஹோமம் ஒன்றைச் செய்தார்.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரைக் கொல்வதற்காக அந்த ஹோமத்தை நடத்தினார்.

ஆனால், என்ன காரணத்தினாலோ, அவர் நோக்கம் முழுவதுமாக நிறைவேறவில்லை. அதில் ஒருவர் வலிமை வாய்ந்த தாயத்து ஒன்று இடுப்பில் கட்டியிருந்ததால் மாந்திரீகம் பலிக்கவில்லை. ஹோம குண்டத்துக்கு முன்னால் தயாரித்து வைத்திருந்த மூன்று களி மண் பொம்மைகளில் இரண்டின் தலை உடைந்து விழுந்தது.

ஆனால், ஒன்று மட்டும் பழைய வடிவத்தில் அப்படியே இருந்தது. அதைக் கண்டு கோபம் அடைந்த சேகரன் உண்ணித்தான், சாமுண்டி தேவியின் கையிலிருந்த சூலத்தால் தன் வலது கண்ணில் ஓங்கிக் குத்தினார்.

ரத்தம் பீய்ச்சியடித்தது.

ரத்தம் ஒரு நீர்வீழ்ச்சி மாதிரி ஹோமகுண்டத்தில் பாய்ந்தது.

உடனே அது நிகழ்ந்தது.

அப்போது மூன்றாவது பொம்மையின் தலையும் பெயர்ந்து கீழே விழுந்தது.

சேகரன் உண்ணித்தான் ஹோம குண்டத்தில் கிடந்த கங்குகளுடன் கூடிய சாம்பலை வலக் கையால் வாரி, ரத்தம் வடியும் கண்களில் வைத்துப் பொத்தினார். உடனே ரத்தம் பீய்ச்சியடிப்பது நின்றது.

ஆனால், அந்த விவரம் அங்கிருந்த இரண்டு பேரைத் தவிர வேறெவருக்கும் தெரியாது. அவர்களிடம், அவர்களது மரணம் வரை இதை வெளியே சொல்லக்கூடாது என்று எச்சரிக்கை செய்யவும் அவர் தவறவில்லை.

தன்னுடைய ஒரு வீழ்ச்சியாகத்தான் சேகரன் உண்ணித்தான் அதைக் கருதினார்.

“விஷயங்களை எல்லாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். எதிராளி ஒரு பிரம்மரட்ச ... இல்லையா?” சேகரன் உண்ணித்தான் கேட்டார்.

"ஆமாம், மனித வடிவில் உலவுகிறது" தம்பி கூறினார்.

"அப்படியா!" சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்த பிறகு அவர் கேட்டார்: "அப்படியானால் எலும்பும் தசையும் கொண்டிருக்கிறாள்... அப்படித்தானே?"

"அப்படித்தான் தெரிகிறது."

மாந்திரீகர் சற்று நேரம் கண்ணை மூடி உட்கார்ந்திருந்தார். அப்போது அந்த முகத்தைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

மூடியிருக்கும் ஒரு கண்; பள்ளமான மற்றொரு கண்.

அவர் எதையோ ஜபித்துக் கொண்டிருந்தார். அந்த உதடுகள் அசைந்தன.

"வழக்கமாக மற்றொருவரின் உடம்புக்குள் புகுந்து கொள்வதுதான் வழக்கம்" ஒரு கண்ணைத் திறந்து அவர் கூறினார்.

"இதற்கு உருவமும், உணர்ச்சிகளும் இருக்கின்றன."

தம்பி சுற்றுமுற்றும் பார்த்தார். ஜன்னல் அருகில் சந்திரிகாவும் ஓமனாவும் நின்றிருந்தனர். அவர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் அவர் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

இந்தக் குடும்பத்தில் ஏதோ ஒரு பிரச்சினை ஏற்பட்டிருப்பதாக அவர்களுக்கு ஏற்கெனவே சந்தேகம் ஏற்பட்டிருந்தது. ஆனால், அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. திருமணத்துக்குப் பிறகு அண்ணன் நிம்மதியற்றுத் தவிக்கிறார் என்று சந்திரிகாவுக்குத் தெரியும். ஒருபோதும் இந்த வீட்டில் படுத்து உறங்காத உண்ணித்தான் இரண்டு இரவுகள் இங்கு தங்கியிருக்கிறார்.

அவர் இங்கு வந்து படுப்பது ஒருவகையில் அவளுக்கு உதவிதான் என்றாலும் அதன் காரணம் அவளுக்குத் தெரியவில்லை.

இரவில் எவ்வளவு நேரமானாலும் பயப்படாமல் இங்கிருந்து வெளியேறும் உண்ணித்தான். இப்போது எதற்கோ பயப்படுகிறார் என்று அவளுக்கு விளங்கியது.

மட்டுமின்றி, சமீப காலமாக அண்ணனுக்கும் உண்ணித் தானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கமும் அவளது சந்தேகத்தை அதிகப்படுததியது.

"நீங்கள் ஏன் அங்கு நிற்கிறீர்கள்? இது நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் அல்ல?" தம்பி கூறினார்.

உடனேயே பெண்கள் இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

"உடம்பு இருப்பதாகத் தோன்றுவதற்குக் காரணம் என்ன?" மாந்திரீகன் கேட்டார்.

"ஒரு தடவை..." தம்பி ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார்: "ஒரு தடவை என் படுக்கையில் கிடந்தாள். பழிவாங்குவதுதான் அவளது நோக்கம்."

"பிறகு..."

"மெதுவாக என்னைத் தொலைத்துக் கட்டுவது லட்சியம். இதற்கிடையில் ஒருவரைக் கொல்லவும் செய்தாள்."

"உண்மையாகவா!" என்று கேட்ட சேகரன் உண்ணித்தான் யோசனையில் ஆழ்ந்தார்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு அவர் கூறினார்: "லட்சத்தில் ஒன்றுதான் இப்படியெல்லாம் செய்யும். அதுதான் விதி. அதுவும் நமது வழக்கப்படி எரியூட்டப்படாதவை மட்டுமே இப்படி உயிர்த்து எழும்."

"புரியவில்லை..." உண்ணித்தானும் தம்பியும் அவர் முகத்தை ஊன்றிக் கவனித்தனர்.

அந்த ஒற்றைக்கண் அவர்களை நோக்கித் திரும்பியது.

"நாம் வழக்கமாக இறந்த உடலை எரித்துச் சாம்பலாக்கி அதைத் தண்ணீரில் கரைப்பதுதானே வழக்கம்? அப்படிச் செய்தால், ஒருபோதும் அவற்றால் மீண்டும் வடிவம் கொள்ள முடியாது. அதற்கு மாறாகப் பிணத்தைப் புதைத்து விட்டால், நாம் சந்தேகப்படுவதுபோல் எல்லாம் நடக்க வாய்ப்பு உள்ளது."

“அப்படியா?” இருவரும் ஏக காலத்தில் ஒரே குரலில் கேட்டனர்.

“இன்னும் எந்த விதமான இறுதிச் சடங்கையும் செய்யவில்லை என்றால், கண்டிப்பாக மறுபடியும் தொல்லை கொடுக்கலாம். அதுவும் உண்மையான வடிவத்துடன்.”

தம்பி, உண்ணித்தானின் முகத்தைப் பார்த்தார்.

உண்மைதான்! கார்த்திகா அந்தர்ஜனத்தின் உடம்பை எரிக்கவுமில்லை. அதற்கு எந்தவிதமான இறுதிச்சடங்குகளைச் செய்யவும் இல்லை.

குளத்தில் மிதந்த உடம்பை கருங்கல் பெட்டிக்குள் போட்டு, கருங்கல் மூடியால் அப்படியே மூடி விட்டனர்.

அதைச் செய்தது பாச்சுவும், குட்டனும்தான். அதில் பாச்சுவை தம்பி வஞ்சகமாகக் கொன்று விட்டார். சாராயத்தில் விஷம் கலந்து கொடுத்தார். குட்டனை, எருமைத்தலை கவனித்துக் கொண்டது.

“அப்படியானால் எழுந்து வருமா?” தம்பி விசாரித்தார்.

“அப்படியும் சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதுவும் அபூர்வமாக. அப்படி விழித்து எழும் பிரம்மரட்ச மிகவும் ஆபத்தான ஒன்று. அதன் சக்தி அளவு கடந்தது. உடலும் இருப்பதால் என்ன வேண்டுமானாலும் செய்யும். பகல் நேரத்தில் கூட அவற்றால் உலவ முடியும்.”

“நீங்கள் சொன்னதை வைத்துப் பார்த்தால், சொந்த உடம்புடன் அலையும் இந்த பிரம்மரட்சஸை அவ்வளவு சுலபத்தில் நம்மால் கட்டுப்படுத்த முடியாது என்று தோன்றுகிறது.”

“வேறு என்னதான் செய்வது?” தம்பி கேட்டார்.

உடனே மாந்திரீகன் தன் தோள்பையில் இருந்து மிகவும் பழைய ஓலைச்சுவடி ஒன்றை வெளியில் எடுத்தார். ஏறத்தாழ இற்றுப் போகத் தொடங்கிய அதன் ஓலைத் தாள்களை அவர் நிதானமாகப் புரட்டினார். அப்படியும் அவரின் கைவிரல் நகம் பட்டு, ஓலைத்தாள்கள் சிறிய சிறிய துண்டுகளாக உடைபட்டுக் கொண்டிருந்தன.

ஏறத்தாழ பாதிப் பகுதியைப் புரட்டிய பிறகு அவர் ஒரு தாளை ஊன்றிப் பார்த்தார். ஒரு கண்ணின் இமைகளை மூடித் திறந்தவர், தனது தோள்பையிலிருந்து சிறிய பெட்டி ஒன்றை வெளியே எடுத்தார். அதற்குள் மூக்குக் கண்ணாடி ஒன்று இருந்தது. அதன் இரு வில்லைகளில் ஒன்று மட்டுமே கண்ணாடியுடன் இருந்தது. அதை மூக்கில் பொருந்தினார். தடித்த கண்ணாடியின் ஊடாகச் சுவடிகளைப் பார்த்தார்.

“வழியிருக்கிறது!” என்றவர், தம்பியின் முகத்தைப் பார்த்துக் கேட்டார்: “இந்த ரட்சஸை அடக்கம் செய்த இடம் எதுவென்று தெரியுமா?”

“தெரியும்” தம்பி கூறினார்.

“ஒரு வித்தையைப் பிரயோகிக்கலாம்” மாந்திரீகன், உண்ணித் தானைப் பார்த்துக் கேட்டார்: “உங்கள் மாமா கொடுத்த தாயத்தை அங்கு கொண்டுபோய் வைத்தீர்களா?”

“அவர் சொன்னபடியே வைத்து விட்டேனே...” உண்ணித்தான் பதிலளித்தார்.

“அப்படியானால் அதிலிருந்து மற்றொரு ரட்ச இந்நேரம் வெளியேறியிருக்க வேண்டும். அங்கு இருப்பவளுடன் மோதுவதற்காகத்தான் இதைச் செய்திருக்கிறார். ஆனால், அவளது வடிவம் இப்படி இருப்பதால் இது செல்லுபடியாகுமா என்று தெரியவில்லை. எனவே, நான் வேறொரு முயற்சி செய்கிறேன்.”

“சொல்லுங்கள்.”

“அதைச் செய்ய வேண்டுமென்றால், அவளை அடக்கம் செய்த இடத்தில் நான் சில பூஜைகள் செய்து, முதலில் அங்கு ஒரு தடையை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்து விட்டால், அதன் பிறகு அவளால் அங்கிருந்து வெளியேற முடியாது.”

“நிஜமாகவா! நிஜமாகவே இது நல்ல ஒரு யோசனைதான். வேறு எவரும் இப்படி ஒன்றை இதுவரை எங்களிடம் சொல்லவில்லை...” தம்பி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

“கொஞ்சம் சிரமமான காரியம்தான். அவள் பிரம்மரட்சஸாக இருப்பதால், நம்பூதிரி அல்லாத வேறு ஏதாவது ஓர் உடலின் பகுதிகளை எரியும் சிதையிலிருந்து எடுத்து அவளை அடக்கம் செய்த இடத்தின் நான்கு பகுதிகளிலும் வைக்க வேண்டும். அதன்பிறகு சில பூஜைகள் செய்ய வேண்டும்.”

இதைக் கேள்விப்பட்ட தம்பி மற்றும் உண்ணித்தானின் முகங்களில் ஆனந்தம் அலையடித்தது. இம்முறை தாங்கள் வெற்றி பெற்று விட்டதாகவே அவர்கள் தீர்மானித்தனர்.

“ஆனால், இந்த நேரத்தில் எரியும் பிணத்துக்கு நாம் எங்கே போவது?” தம்பி, திடுமென்று கேட்டார்.

“அதுவரை காத்திருக்க முடியுமா என்ன? நமது காரியம் நடக்க வேண்டும். அதனால், அப்படிப்பட்ட எவரையாவது நாம் பிணமாக்க வேண்டும்” மாந்திரீகன் கூறினார்.

“நடக்கக்கூடிய யோசனைதான்!” தம்பி உண்ணித்தானின் காதில் கிசுகிசுத்தார்.

“இன்றைக்கு இரவிலேயே அதைச் செய்து விடலாம்” தம்பி கூறினார்.

“அப்படியானால் அதன்பிறகு மற்றவை பற்றி யோசிப்போம்.”

“எனக்கு மேலும் ஒரு தகவல் தெரிய வேண்டி உள்ளது” தம்பி, மாந்திரீகனைப் பார்த்துக் கேட்டார்.

“ம்... கேளுங்கள்.”

“எரியும் பிணத்தின் மிச்சமீதிகளை நாம் எப்போது. பிரம்மரட்சஸின் கல்லறையில் வைக்க வேண்டும்?”

“பகல் நேரத்தில்தான். இரவில் அது வெளியேறிய பிறகு நாம் இப்படிச் செய்தால், நாம் தோல்வியடைந்து விடுவோம்.”

“அப்படியானால் நாளைக்கு மதிய நேரத்தில் செய்து விடுவோம். அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்கிறோம்.”

மாந்திரீகன். மதிய சாப்பாட்டை முடித்துக்கொண்டு உண்ணித்தான் வீட்டுக்குச் சென்றார்.

தம்பியும் உண்ணித்தானும் மந்திரவாதி சொன்னபடி பிணம் ஒன்றைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றை வகுத்தனர்.

தம்பியிடம் வேலை செய்யும் எத்தனையோ கூலிக்காரர்களில் ஒருவனை அதற்கு பலி கொடுப்பது என்று அவர்கள் தீர்மானித்தனர். மாலை நேரமானபோது தம்பியின் அடியாட்கள் சிலர் குறிப்பிட்ட அந்த ஊழியனைக் கள்ளுக்கடைக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்களை வழியனுப்பி வைத்த பிறகு தம்பி தனது வீட்டின் வராந்தாவில் அமர்ந்தார். அவர் முகத்தில் நிம்மதி ஏற்படத் தொடங்கியிருந்தது.

ஓமனா வந்து விளக்கேற்றினாள்.

யதேச்சையாகத் தெரு வாசற் பக்கமாகத் திரும்பிய அவர் கண்களில் விஜயமோகனுடன் வரும் பெண்மணி ஒருத்தியும் தென்பட்டனர்.

“யாரோ வருகிறார்கள்!” ஓமனா கூறினாள்.

அவர்கள் முற்றத்தைத் தாண்டி நடந்து வந்தனர்.

வாசுதேவன் தம்பி அந்தப் பெண் உருவத்தை ஊன்றிக் கவனித்தார். அது -

கார்த்திகா அந்தர்ஜனம்!

## 19

**எ**ன்ன செய்வது என்று தெரியாமல் வாசுதேவன் தம்பி தடுமாறினார்.

விஜயமோகனுடன் வருகிறாள் கார்த்திகா அந்தர்ஜனம்!

மாலை நேரம் முடியும் தறுவாய். விளக்கு ஏற்றப்பட்டு விட்டது.

பைசாசிக சக்திகளுக்கு வலு அதிகரிக்கும் நேரம். 'தன்னைப் பழிக்குப்பழி வாங்கத்தான் இந்தப் பயணம் புறப்பட்டிருக்கிறாளா?' தம்பி தனக்குத்தானே கேட்டுக் கொண்டார்.

அவர்கள் நெருங்கி வந்தனர்.

இளந்திண்ணையில் கால் பதித்தனர்.

தம்பி, கார்த்திகா அந்தர்ஜனத்தின் பாதப் பகுதிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரால் அந்த முகத்தைப் பார்க்க முடியவில்லை. அதற்கான தைரியம் அவரிடமில்லை. வடிந்து போய்விட்டாற் போலிருந்தது.

ஐயோ, பாதம் என்ன இப்படி இருக்கிறது!

நான்கு விரல்கள் மட்டுமே உள்ள பாதங்கள். கட்டை விரல் இல்லாத பாதங்கள்!

ஒரே நீளமுள்ள நான்கு விரல்கள்.

வாசுதேவன் தம்பியின் உடல் குப்பென்று வியர்த்தது.

அவர் இதயத் துடிப்பின் வேகம் அதிகரித்தது.

"உட்காருங்கள் திருமேனி!" அவர் விஜயமோகனிடம் கூறினார். கார்த்திகா கடைக்கண்ணால் தம்பியை ஒரு தடவை பார்த்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

சந்திரிகாவும் ஓமனாவும் அவளை வரவேற்று உபசரித்தனர்.

விஜயமோகனின் மனைவியாக இருக்கக்கூடும் என்று அவர்கள் கருதினர்.

"வாருங்கள்!" என்ற சந்திரிகா அவளை உட்புற அறைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள கட்டிலில் உட்கார வைத்தார்.

நிலவிளக்கில் திரி மிகவும் தாழ்ந்து எரிந்து கொண்டிருந்தது. கார்த்திகா அறைக்குள் நுழைந்ததும், திரியின் வெளிச்சம் சட்டென்று அதிகரித்தாற் போலிருந்தது.

சந்திரிகா அதைக் கவனிக்கவில்லை என்றாலும் ஓமனாவுக்கு அது விளங்கியது. எனவே, அவள் கார்த்திகாவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இந்தப் பெண்மணியை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன். சிறு வயதிலிருந்தே பார்த்துப் பழகிய முகம். அநேகமாகக் கோயிலில்தான் பார்த்திருக்க வேண்டும். ஆனால், அந்தப் பெண்மணியாக இருந்தால், இப்போது இப்படி இந்த இடத்துக்கு வந்திருக்க முடியாது' அவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

"என்ன, இருவருமாக என்னை அப்படியே விழுங்கி விடுவது போல பார்க்கிறீர்கள்?" கார்த்திகா கேட்டாள்.

அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் குழம்பினாள் சந்திரிகா.

'எழுமற்றூர் மனையைச் சேர்ந்த கார்த்திகா அந்தர்ஜனமா என்று எப்படி நேருக்கு நேராகக் கேட்பது?'

அவள் குளத்தில் மூழ்கி இறந்து விட்டதாக அவர் சொல்லி யிருக்கிறார். அதனால்தானே வாரிசுகள் எவரும் இல்லாமல் மனையை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதை வாங்கியிருப்பவர் தன் மனைவியுடன் வந்திருக்கிறார்.

ஒருவேளை ஒருவரைப் போலவே இன்னொருவரும் இருக்கலாமே.

"உங்கள் குடும்பம்?" சந்திரிகா கேட்டாள்.

"யார், என் குடும்பத்தையா அல்லது அவர் குடும்பத்தையா?" கார்த்திகா எதிர்க்கேள்வி கேட்டாள்.

"உங்கள் குடும்பம்தான்!" சந்திரிகா, கார்த்திகாவை நோக்கி விரல் சுட்டியபடி கேட்டாள்.

"அது கொஞ்சம் தொலைவில்... சொன்னால் உங்களுக்குப் புரியுமா?"

"சரி, குழந்தைகள்?"

“மெதுவாகப் பிறக்கட்டும் என்றுதான்....”

இவ்வளவு பேசுவதற்குள் சந்திரிகாவின் பயம் அகன்று விட்டது. தனது சந்தேகம் வீணானது என்று விளங்கியது. இப்படிச் சந்தேகப்பட்டதற்காக அவள் வெட்கப்படவும் செய்தாள்.

“அப்படியானால்... சாப்பிட ஏதாவது...? தம்பி திருமேனியிடம் குசலம் விசாரிப்பதற்கு நடுவே கேட்டார்.

“வேண்டாம், அதெல்லாம் இனி வீட்டுக்குப் போனபிறகு. நான் எப்போதும் தாமதமாகச் சாப்பிடுவது வழக்கம்.”

“உங்கள் பொழுதெல்லாம் எப்படிப் போகிறது?”

“எதையாவது வாசித்துக் கொண்டிருக்கிறேன்.”

“எந்த மாதிரியான புத்தகங்களை வாசிப்பீர்கள்?”

“பெரும்பாலானவை மாந்திரீகப் புத்தகங்களாக இருக்கும்.”

“அதிலேயே இரண்டு வகைகள் இருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன்.”

“ம்... நல்லதும் - கெட்டதும்.”

“அதில் உங்களுக்கு எது மிகவும் பிடிக்கும்?”

“அப்படியெல்லாம் தனியாக எதையும் பிரித்துச் சொல்ல முடியாது. படிக்கும்போது இரண்டும் மாறி மாறி வரும்.”

“அப்படியானால் இரண்டு வகையான மந்திரங்களும் உங்களுக்குத் தெரியும் என்று அர்த்தம்!” தம்பி, உள்ளர்த்தத்துடன் பேசினார். கார்த்திகா அந்தர்ஜனம் ஒரு பிரம்மரட்ச என்று தெரிந்தே அவர், அவளுடன் தங்கி இருக்கிறார் என்று தம்பி நினைத்தார்.

“நான் அன்றைக்குச் சொல்லவில்லையா... அந்தப் பெண்மணி இவள்தான். பெயர் கார்த்திகா. அந்த சொத்தில் இவளுக்கும் ஏதாவது ஒரு பங்கு இருக்கலாம் இல்லையா?” விஜயமோகன் கேட்டார்.

‘இதற்கு என்ன பதில் சொல்வது? வில்லன். எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுதான் இப்படிக் கேட்கிறாரோ... என்னவோ?’

“ம்... அதெல்லாம் யாருக்குத் தெரியும்!” தம்பி ஒரு பெருமூச்சுடன் பதிலளித்தார்: “இப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி நான் இதுவரை கேள்விப்பட்டது இல்லை. ஒருவேளை ஏதாவது தூரத்து சொந்தமாக இருக்கலாம்” தம்பி பிடி கொடுக்காமல் பேசினார்.

“அவள் விரும்பியிருந்தால், உரிமை கோரி வழக்கு தொடர்ந்திருக்கலாம். என்ன காரணத்தாலோ அவள் அப்படிச் செய்யவில்லை...” விஜயமோகன் உட்புறம் பார்த்தபடி பேசினார்.

“இவர்கள் உங்களுடன் தங்கி இருக்கிறாரா?” தம்பி கேட்டார்.

“ஆமாம்... எனக்கும் ஒரு துணை. இன்னொரு விஷயம். அவளுக்கு அந்த இல்லத்தைப் பற்றி நன்றாகத் தெரியும்.”

விஜயமோகனுக்கு அவர்களுக்கு இடையிலான உறவும் பகையும் தெரியாது. அங்கு நடந்த வஞ்சனையையும் கொலையையும் பற்றித் தெரிந்து கொண்டிருந்தால் அதன்பிறகு தம்பியுடன் எந்தவிதமான தொடர்பும் வைத்திருக்க மாட்டார் அவர்.

“அப்படியானால், நாங்கள் கிளம்பலாம் இல்லையா?” விஜயமோகன் எழுந்தார்.

அதற்குள் சொல்லி வைத்தாற்போல் கார்த்திகாவும் வாசலுக்கு வந்து விட்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் தெருவாசற்படி தாண்டிச் சென்றபோது தம்பியின் மனதில் பல்வேறு உணர்ச்சிகள் அலையடித்தன.

‘இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?’ அவருக்கு எதுவும் புரியவில்லை.

அவர்கள் கண்ணிலிருந்து மறைந்ததும் சந்திரிகா அவசர அவசரமாகத் திண்ணைக்கு வந்தாள்.

“அண்ணா, அந்தப் பெண்மணி யார்?” அவள் கேட்டாள்.

வாசுதேவன் தம்பி இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? இறந்துபோன கார்த்திகா அந்தர்ஜனம்தான், மறுபடி வந்திருக்கிறாள் என்று சொல்வதா? அப்படிச் சொன்னால் அதைத் தொடர்ந்து

ஏராளமான கேள்விகள் பின்தொடரலாம். எனவே, அவர் அந்தக் கேள்விக்குப் பதில் எதுவும் சொல்லாமல், சந்திரிகாவைப் பார்த்து வெறுமனே சிரிக்க மட்டும் செய்தார்.

“நான் முதல் தடவைப் பார்த்தபோது எழுமற்றூர் மனையின் தம்புராட்டிதான் ஞாபகத்துக்கு வந்தார். அப்புறம்தான் ஒரே மாதிரி உருவத்தில் அபூர்வமாக மற்றும் சிலர் இருப்பார்கள் என்று தோன்றியது!” சந்திரிகா கூறினாள்.

“ஆமாம், இருப்பார்கள்.”

“ஆனால், அந்த வீட்டில் எப்படிக் குடியிருக்க முடிகிறது?”

“ஏன், அங்கு தங்கினால் என்ன?” தம்பி கேட்டார்.

“அவ்வளவு பெரிய இல்லத்தில் இரண்டே இரண்டு பேர் தங்குவதா? அதுவும் அந்தத் தம்புராட்டி அற்பாயுளில் இறந்து போனவரில்லையா?”

“பெரும்பாலான இடங்களில் இப்படியெல்லாம் இருக்கும். நாம் அதையெல்லாம் கவனிக்காமல் இருந்தால் போதும்.”

அப்போது ஓமனா அந்தப் பக்கமாக வந்தாள். அவளும் எதையோ சொல்ல விரும்பினாள்.

“அண்ணா, அண்ணிக்கு ஏதோ சொல்ல வேண்டுமாம்” சந்திரிகா தெரிவித்தாள்.

“என்ன?” தம்பி, ஓமனாவின் முகத்தைப் பார்த்தார்.

“அவளை நான் ஒரு தடவை இந்த வீட்டுக்குள்ளேயே பார்த்திருக்கிறேன்” ஓமனாவின் முகத்தில் பீதி பரவியிருந்தது.

“அதெல்லாம் மனசின் பிரமை. அப்படியெல்லாம் தோன்றி யிருக்கும். அதையும் மீறி உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், நாம் ஒரு ஹோமம் நடத்திவிடலாம்” அதை சொல்லும்போது சேகரன் உண்ணித்தான் மூலம் தான் செய்யவிருக்கும் மாந்திரீக வித்தை அவர் மனதில் கடந்து வந்தது.

அதற்கான கர்மங்களை இந்த வீட்டில் நடத்த இப்போது ஒரு காரணமாகப் பரிணமித்திருக்கிறது.

மறுநாள் சூரியன் உதித்து விட்டால், உடனே அந்தக் கருங்கல் அறைக்குச் சுற்றிலும் எரிந்த உறுப்புகளின் மிச்ச மீதியை வைப்பதாக சேகரன் உண்ணித்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அதற்கான காரியங்களை இன்றிரவு நடத்த வேண்டும்.

சாப்பாட்டுக்குப் பிறகு உண்ணித்தான்கள் இருவரும் வந்து சேர்ந்தனர். ஹோமத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கள்ளுக்கடையில் இருந்த தம்பியின் அடியாட்கள் தோட்டத் தொழிலாளி பப்பனுக்கு மூக்கு முட்டக் குடிப்பதற்கு வாங்கிக் கொடுத்தனர். பிறகு சுடுகாட்டுப் பக்கமாக அழைத்துச் சென்றனர்.

"நாம் எதற்காக இங்கு வந்திருக்கிறோம்?" பப்பன் கேட்டான்.

"நம் சங்கர வாரியர் இறந்து போய்விட்டார். இன்று நள்ளிரவில் அந்த உடம்பை நாம் எரிக்க வேண்டும்" இருவரில் ஒருவர் கூறினார்.

"அதற்கு ஏன் நடுராத்திரியாக வேண்டும்?" பப்புவுக்கு சந்தேகம் தோன்றியது.

"அவர் அம்மை போட்டு இறந்து போனவர் ஆயிற்றே. அதனால், அவரை எரிக்கும் பொறுப்பை நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார். தம்பி ஒரு வாரம் இடைவிடாமல் குடிக்கலாம். அதுதான் நம்முடைய கூலி."

அதைக் கேட்டதும் பப்பன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவர்கள் நான்கு பேருமாகச் சேர்ந்து சிதையைத் தயார் செய்தார்கள். நன்றாகக் காய்ந்த விறகுகளை நிறைய அடுக்கிய பிறகு அதில் மண்ணெண்ணெய் ஊற்றினார்கள்.

மறுவிநாடி, "ஐயோ!" என்ற ஓர் அலறலுடன் பப்பன் தரையில் விழுந்தான். அவனை எடுத்துச் சிதையில் கிடத்தினார்கள்.

முதல் தாக்குதலிலேயே அவன் உயிரை இழந்திருந்தான். அவன் உடலிலும் மண்ணெண்ணெய் ஊற்றினார்கள். விறகால் மூடி நெருப்பு வைத்தார்கள்.

நெருப்பு கொழுந்து விட்டு எரிந்தது.

அதே நேரத்தில் அவர்கள் எடுத்து வந்திருந்த சாராய பாட்டில்கள் வரிசையாகக் காலியாகிக் கொண்டிருந்தன.

பிணவுடல் வெந்து கடுமையான துர்நாற்றம் பரவியதும் அவர்களில் ஒருவர் வாசுதேவன் தம்பியின் வீட்டை நோக்கி ஓடினார்.

"என்ன, எல்லாம் நல்லபடியாக முடிந்து விட்டதா?" தம்பி கேட்டார்.

"எரிந்து கொண்டிருக்கிறது."

உடனே தம்பி ஹோமம் நடத்திக் கொண்டிருக்கும் சேகரன் உண்ணித்தானிடம் ஓடினார்.

அவரிடம் தம்பி தகவல் தெரிவித்தார்.

சேகரன் உண்ணித்தான் அதிவேகமாகச் சுடுகாட்டை நோக்கி ஓடினார்.

தீயை அணைத்தார். அரைகுறையாக வெந்த உடல் சிதையில் கிடந்தது.

**த**ம்பியின் வீட்டில் ஹோமம் நடந்து கொண்டிருந்தபோது, கார்த்திகா அந்தர்ஜனம், எழுமற்றூர் மனைக்குள் விஜயமோகனின் மார்பில் முகம் பதித்துப் படுத்திருந்தாள்.

"என்ன... இன்றைக்குத் தூங்குவதாக எண்ணமில்லையா?" விஜயமோகன் கேட்டார்.

"அப்படியெல்லாமில்லை... இன்றைக்கு எனக்கு மனம் சரியில்லை... என்னமோ மாதிரி இருக்கிறது" அவள் விஜயனின் மார்பிலிருந்த முடியை அளைந்தபடி பேசினாள்.

விஜயமோகனின் கைப்பகுதி அவளின் உடையற்ற முதுகில் பதிந்திருந்தது. தசைப்பற்றான அவளின் புட்டப்பகுதியின் சுழியில் அந்த விரல் சிக்கிக் கொண்டது. அது அவளைக் கூச்சம் கொள்ள வைத்தது.

ஆனால், அவள் எந்தவித உணர்ச்சியும் இல்லாதவளாகக் கிடந்தாள்.

"ம்... கனவு காண்கிறாயா என்ன?" அவர் கேட்டார்.

"இல்லை... என் கண்ணுக்குள் இருள் படிவது போலிருக்கிறது" அவள் எழுந்து உட்கார்ந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கோல் விளக்கின் வெளிச்சம் அவள் முகத்தில் பதிந்து கொண்டிருந்தது.

அவள் முகத்தின் ஒருபுறம் இருண்டும் மறுபுறம் வெளிச்சத்துடனும் விளங்கியது. அவள் மார்பகத்தால் ஏற்பட்ட நிழல் அவரின் கைப்பகுதியில் பதிந்தது.

"அப்படியானால் ஒன்று செய்... நாளைக்கு நீ எங்கும் போக வேண்டாம்... இங்கேயே இருந்து விட்டால் என்ன?" விஜயமோகன் கேட்டார்.

கார்த்திகா அப்படியும் யோசித்தாள். ஆனால், பகலில் அவளால் உறங்க மட்டுமே முடியும். அந்தச் சந்தர்ப்பத்தில் விஜயமோகன் அவளை எழுப்ப முற்பட்டால் சில நேரம் எழுந்திருக்க முடியாமல் போகலாம். ஏற்கெனவே தன்னைக் குறித்து அவருக்கு ஏதேதோ சந்தேகங்கள் ஏற்பட்டிருப்பது அவளுக்குத் தெரியும்.

இருப்பினும் தான் ஒரு பிரம்மரட்ச என்பது அவருக்குத் தெரிந்திருக்காது. தான் பழிவாங்குவதற்காக உலவிக் கொண்டிருப்பதும் தெரியாது.

அந்தப் பழிக்குப் பழி நிறைவேற வேண்டுமானால், அதற்கு தற்காலிகமாக ஓர் அடைக்கலப் பகுதி தேவை. அதிர்ஷ்டவசமாக அதற்கு உதவும் தகுந்த ஒரு மனிதர் கிடைத்திருக்கிறார். வாசுதேவன் தம்பியை உடனடியாகக் கொல்லவும் கூடாது. அவனை அணு அணுவாகக் கொல்ல வேண்டும் என்று அவள் ஏற்கெனவே தீர்மானித்திருந்தாள்.

"பொழுது விடிவதற்கு முன்னால் போக வேண்டும் இல்லையா? எங்கே போக வேண்டும்? நானும் அதைத் தெரிந்து கொண்டால் நல்லது என்று தோன்றுகிறது!" விஜயமோகன் கூறினார்.

"வேண்டாம்... தற்சமயம் அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாம். நமக்குள் சில ரகசியங்கள் இருப்பதுதான் நல்லது என்று நினைக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?"

"சரி, அப்படியே இருக்கட்டும். ஆனால், கார்த்திகா ஒரு பெண்ணாக இருப்பதால் நானும் இதையெல்லாம் தெரிந்து கொள்வது நல்லது என்று நினைக்கிறேன்!"

"அதற்கான நேரம் வரும்போது நான் சொல்கிறேன்" என்றவள் அவரை முத்தமிட்டாள்.

அவள் உடலிலிருந்து கிளம்பிய பாலைப் பூவின் வாசனை அவரது உடலில் ஒன்றிக் கலந்தது.

விடியற் காலையில் கோழி கூவுவதற்கு முன்பாக அவள் கண் விழித்தாள்.

விஜயமோகன் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

கார்த்திகா எழுந்து வெளியே போனாள்.

குளத்தை அடைந்தவள் நின்றாள். ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தாள். யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பது உறுதியானதும் அவள் கருங்கல் அறையை நோக்கி நடந்தாள். சட்டென்று மறைந்தாள்.

"அதோ, அங்கே யாரோ சட்டென்று மறைந்தாற் போல் தோன்றுகிறதே!" சேகரன் உண்ணித்தான் கூறினார்.

பப்பனின் அரைகுறையாக எரிந்த உடலைப் பாய் ஒன்றில் சுற்றிக் கட்டி எடுத்து வரும் அடியாட்களும் அப்போது அவருடன் இருந்தனர்

## 20

"அப்படியானால் நமது முயற்சி வெற்றி பெற்றுவிட்டது!" வாசுதேவன் தம்பி நிம்மதி அடைந்தவராகக் கூறினார்.

'இத்தனை நாட்களாகத் தன்னை அலைக்கழித்துக் கொண் டிருக்கும் கார்த்திகா அந்தர்ஜனத்தின் பிரம்மராட்ச இன்றுடன்

அழியப் போகிறது!' என்பதை நினைத்த தம்பி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

"எல்லாம் முறைப்படி நடந்தபோது சரியான நேரத்தில் ஆளைப் பார்க்கவும் செய்தோம்" அவர் மனம் மந்திரித்தது.

சேகரன் உண்ணித்தானும் தம்பியும் கருங்கல் அறை இருந்த பகுதியை அடைந்து, நெருங்கி நின்றனர். உண்ணித்தான் பின்னால் வந்து கொண்டிருந்தார். அவர், பொதியைச் சுமந்து வருபவர்களுடன் பேச்சுக் கொடுத்தபடி நடந்து கொண்டிருந்தார்.

வெளிச்சம் பரவத் தொடங்காததால் சுற்றுப்புறத்தை தெளிவாகப் பார்க்க முடியவில்லை. இருப்பினும் அவர்தான் முன்னால் நடந்தார்.

அந்தப் பயணத்தின்போது உண்ணித்தான் பிணத்தைச் சுமந்து வருபவர்களில் ஒருவரைத் தொட்டு விட்டார். எனவே, குளத்தைப் பார்த்ததும் ஒரு தடவை கை கால்களைக் கழுவ முடிவு செய்தார்.

அவர், குளத்தின் படிக்கட்டில் இறங்கினார்.

அப்போது அந்தக் குளத்தின் மையப் பகுதியிலிருந்து திடுமென்று உயர்ந்த யாரோ, உண்ணித்தானுக்கு முன்பாக இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டிருந்தனர்.

திடுக்கிட்டு ஓர் எட்டு, பின்னுக்கு நகர்ந்த உண்ணித்தானுக்கு முன்பாக சாவித்ரி நின்று கொண்டிருந்தாள்.

"என்ன, குளிக்க வேண்டுமா?" அவள் கையை நீட்டினாள்.

அந்தக் கை நீண்டுகொண்டே வருவதாக உண்ணித்தானுக்குத் தோன்றியது.

அவர் பின்னோக்கித் திரும்பி மேற்புறமாகப் படிக்கட்டில் ஓடத் தொடங்கினார். அதற்குள் ஒரு தடவை அலறிக் குரல் எழுப்பவும் செய்தார்.

உடனே எல்லாரும் அந்தப் பக்கமாகப் பார்த்தனர்.

"என்ன. என்ன நடந்தது?" தம்பி கேட்டார்.

"குளத்தில் யாரோ நிற்கிறார்கள்" அவர் அது சாவித்ரி என்ற உண்மையைச் சொல்லவில்லை. வேறெவருக்கும் அந்தப் பெயர் தெரிய வேண்டாம் என்பதற்காக அவர் சொல்லவில்லை.

"ஒருவேளை உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கலாம்" தம்பி அவரை ஆறுதல் படுத்தினார்.

"சீக்கிரம், சீக்கிரமாக. அந்த இடம் எங்கே இருக்கிறது?" மாந்திரீகன் கேட்டார்.

"இதோ... இங்குதான்!" தம்பி சுட்டிக்காட்டினார்.

"அப்படியானால் அந்தக் கட்டை அவிழ்த்து அந்த உடலை, அதற்கு மேல் படுக்க வையுங்கள்" சேகரன் உண்ணித்தான் கட்டளையிட்டார்.

வேலையாட்கள் மூட்டையைக் கல்லறைக்கு மேற்புறம் வைத்தார்கள். பிறகு பாயின் கட்டுகளை அவிழ்த்தனர். அந்தப் பகுதியில் சட்டென்று துர்நாற்றம் பரவத் தொடங்கியது.

"வாருங்கள், இனிமேல் அங்கு யாரும் நிற்காதீர்கள்!" உண்ணித்தான் எல்லாரிடமுமாகச் சொன்னார்.

அவர்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறும் போதும்கூட சூரிய வெளிச்சம் எட்டிப் பார்க்கவில்லை.

**வி**ஜயமோகன் மிகவும் தாமதமாகக் கண் விழித்தார்.

காபியை மட்டும் குடித்துவிட்டுக் குளிக்கப் போனார். ஆற்றில் குளித்துவிட்டு நேராக டீக்கடைக்குச் சென்றார்.

"நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன்" டீக்கடைக்காரர் சிரித்தபடி வரவேற்றார்.

"குளித்ததும் அப்படியே வந்துவிட்டேன்" விஜயமோகன் பெஞ்ச் ஒன்றில் உட்கார்ந்தார்.

சிற்றுண்டியை முடித்துவிட்டு விஜயமோகன் இல்லத்தை நோக்கிக் கிளம்பினார்.

அவர் வந்தபோது சாவித்ரி அவரை எதிர்பார்த்துக் காத்திருந் தாள்.

"என்ன... இனிமேல் இங்கிருந்து சாப்பிடுவதில்லை என்று தீர்மானித்து விட்டீர்களா?" அவள் ஏமாற்றம் நிறைந்த குரலில் கேட்டாள்.

“அப்படியெல்லாமில்லை. உங்களால் எல்லா நாட்களும் சமையல் செய்ய முடியாதே. அதனால் இப்படி ஒரு மாற்று ஏற்பாடும் கைவசம் இருக்கட்டும் என்று நினைத்தேன்... அவ்வளவுதான்.”

இந்த பதிலைக் கேட்டதும் சாவித்ரி வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

“அப்படியானால் மதியச் சாப்பாடு?” அவள் கேட்டாள்.

“சாவித்ரி இங்கு வருவதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. யாராவது ஒருவர் இங்கு இருப்பது அவசியம்தான்.”

“இங்கு வருவதில் எனக்கு எந்தவிதமான சிரமமும் கிடையாது. தம்புராட்டியின் வற்புறுத்தலுக்காகவே வந்தேன். எனவே, இனிமேல் எல்லாம் நீங்கள் சொல்கிறபடிதான்” அவள் கூறினாள்.

“நான் இந்த இல்லத்தில் இருப்பதுவரை சாவித்ரி இங்கு வரவேண்டும். நான் சொல்லும்போது போனால் போதும்.”

“சரி...”

“ஆமாம்... அந்தர்ஜனம் பகல்பொழுது எல்லாம் எங்கே போகிறார்கள்?” விஜயமோகன் கேட்டார்.

“அது எனக்குத் தெரியாது. நீங்களே, அதை அவரிடம் கேட்டிருக்கலாமே?”

“இன்று கேட்டுவிட வேண்டியதுதான்” அவர் தீர்மானித்தார்.

**அ**ன்று, பகல் பொழுது முழுவதும் வாசுதேவன் தம்பியின் வீட்டில் ஒரே குடியும் கும்மாளமும்தான். அது அப்படியே நீண்டு போனது.

அவரது எதிரி என்றென்றைக்குமாக அழிந்து போனதில் அவர் அளவுக்கு மீறி மகிழ்ச்சி அடைந்தார். எனவே, அதைக் கொண்டாட ஏராளமாகக் குடித்தார்.

உண்ணித்தானும் அந்த விருந்தைப் பாழாக்கவில்லை. நடுநடுவே சந்திரிகாவை ஓரக்கண்ணால் பார்த்தவாறே மது கிளாஸுகளை காலி செய்தார். அன்று இரவு அங்கு தங்கப்போவதாக அவர் சைகை மூலமாக அவளுக்குத் தெரிவிக்கவும் செய்தார்.

ஏறத்தாழ நள்ளிரவை நெருங்கும்போது அந்த மது விருந்து முடிவடைந்தது. சந்திரிகாவும், ஓமனாவும்கூட, விருந்தின் காரணம் புரியாமல் கொஞ்சமாக மது அருந்தினர்.

“இன்று எனக்குப் பிறந்தநாள். அதாவது மறுஜென்மம் எடுத்த நாள்” வாசுதேவன் தம்பி எல்லாரது கிளாசுகளிலும் மதுவை ஊற்றியபடி பேசினார்.

‘தம்பி, நீண்டகாலம் வாழட்டும்!’ என்று பிரார்த்தித்தவாறு எல்லாரும் கிளாசுகளில் இருப்பதை வயிற்றுக்குள் செலுத்தினார்கள்.

சேகரன் உண்ணித்தான் அங்கிருந்து நழுவினார்.

உண்ணித்தான் சந்திரிகாவைப் பார்த்துக் கண்ணடித்த பிறகு, சோர்வு அடைந்தவரைப் போல் வராந்தாவில் மட்டமல்லாக்கப் படுத்துக் கொண்டார்.

அதைக் கவனித்த சந்திரிகா புளகாங்கிதத்துடன் உட்புறம் சென்றாள்.

வாசுதேவன் தம்பி வராந்தாவில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் படுத்தவர், அப்படியே உறங்கிப் போனார். ஓமனா வெகு நேரமாகத் தட்டி எழுப்பிய பிறகு எதையோ புலம்பியபடி எழுந்து அவள் தோளில் சாய்ந்தபடி படுக்கையறைக்குச் சென்றார்.

உண்ணித்தான் மெதுவாக எழுந்தார்.

ஒரு தடவை தொண்டையைச் செருமிக்கொண்டு அவுட் ஹவுஸான சவுக்கையை நோக்கி நடந்தார்.

வாயை நன்றாகக் கொப்பளித்து விட்டு அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிடாமல், அப்படியே கட்டிலில் படுத்தார்.

காதைக் கூர்மையாக்கிக் கொண்டு படுத்திருந்தார். அந்த நிலையில் அப்படியே உறங்கி விட்டார்.

சட்டென்று தன் உடல் மீது யாரோ இருப்பதாகத் தோன்றியது. அவர் கண் விழித்தார்.

ஆமாம் யாரோ படுத்திருக்கிறார்கள்.

‘யாரோ என்ன... சந்திரிகாதான். வேறு யார் இப்போது வருவார்கள்?’

"நல்ல தூக்கமா?" காதில் இனிமையான குரல் கேட்டது.

"ம்..." அவர் முனகினார்.

"என்னை எதிர்பார்க்கவில்லையா அல்லது மறந்து விட்டீர்களா?"

"மறக்க முடியுமா என்ன?"

அவள், அவரின் கன்னத்தில் முகம் பதித்தாள்.

அவரை இறுக அணைத்தாள்.

அவள் உடம்பில் அப்போது பாலைப்பூவின் வாசனை அடித்தது.

அவள், அவரை இறுக்கினாள்.

எலும்புகள் நொறுங்கும்படியாக இருந்தது அவளின் இறுக்கமான அணைப்பு.

உண்ணித்தானுக்கு மூச்சுத் திணறியது.

"சந்திரிகா... என்ன இது?" அவர், அவளிடமிருந்து விடுபட முயன்றபடி கேட்டார்.

"வலித்து விட்டதா என்ன?"

"ஆமாம்."

"வலிக்கட்டுமே, நான்தானே, கொஞ்சம் வலித்தால் என்ன?" அவள் கைகளுக்கு வலு அதிகரித்துக் கொண்டிருந்தது.

பலசாலியான உண்ணித்தானுக்கு மூச்சுத் திணறுவது போல் தோன்றியது.

அவள் முதுகை அழுத்திப் பிடித்திருந்த அவர் கைகளில் தலைமுடியின் சுருள் இழைகள் போன்ற தலைமுடி, அவர் தடவிப் பார்த்தார். பனங்குலை போன்ற அடர்ந்த முடி.

'சந்திரிகாவுக்கு இந்த அளவுக்கு முடி கிடையாதே! அப்படி யானால் இது யார்?

'ஓமனாவா!'

வாசுதேவன் தம்பி குடித்துக் குடித்துச் சுயநினைவை இழந்து விட்டதால் என்னைத் தேடி வந்திருப்பாளோ? ஒருசில சந்தர்ப்பங் களில் ஓமனா தன்னை வெறித்துப் பார்த்திருக்கிறாள்.'

"யார் இது ஓமனாவா!" அவர் மூச்சிரைத்தபடி கேட்டார்.

"இல்லை, நான் வாசந்தி. இப்போதாவது புரிந்ததா?" அவள் அவரை நெரிக்கத் தொடங்கினாள்.

உண்ணித்தான் அலற முயன்றார்.

ஆனால் முடியவில்லை.

அவள் கை விரல்கள் அவர் கழுத்தைச் சுற்றி வளைத்தன.

அந்த விரல்களின் நீளம் அதிகரித்தன.

கழுத்தைச் சுற்றிய விரல்கள் ஒன்றுடன் ஒன்று பிணைந்தன.

உண்ணித்தானின் கழுத்து நெரிபட்டது. அவரின் கண் விழிகள் துருத்திக்கொண்டு வந்தன. நாக்கு கீழ்ப்புறமாக இறங்கத் தொடங்கியது.

அவர் பலமுறை அலறிக் குரல் கொடுக்க முயன்றார். ஆனால், என்ன காரணத்தாலோ சத்தம் அவர் தொண்டையை விட்டு வெளியேறவில்லை.

"அன்றிரவு நீங்கள் இருவருமாகச் சேர்ந்து ஓட்டல் அறையில் என்னைக் கசக்கிப் பிழிந்தது ஞாபகம் இருக்கிறதா... அல்லது மறந்து போய்விட்டதா?" வாசந்தியின் தெளிவான குரல் அவர் காதுகளுக்குக் கேட்டது

படிப்படியாக அவர் புலன்கள் ஒடுங்கின.

அந்த உடல் அசைவற்றுப் போனது.

சவுக்கையிலிருந்து அந்தப் பெண்ணுருவம் வெளியேறியது. அது காற்றில் மிதந்து செல்வது போல் தெருவாசற்படி தாண்டி மறைந்தது.

**அ**ன்று இரவில் விஜயமோகன், கார்த்திகா அந்தர்ஜனத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து அலுத்துப் போனார்.

வராந்தாவில் எரிந்து கொண்டிருந்த நிலவிளக்கில் பலமுறை எண்ணெய் ஊற்றினார். ஆனால், அவளை மட்டும் காணவில்லை.

'அவள் ஏன் வரவில்லை?' விஜயமோகன் யோசனையில் ஆழ்ந்தார்.

தனிமை அவரைச் சூழ்ந்து கொண்டது.

'அந்தக் கிராமத்துக்கு வந்த போதிலிருந்து அவள் தன்னுடன் இருந்தாள். எந்த ஓர் இரவிலும் தன்னுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ள அவள் மறந்தது இல்லை.

ஓர் ஆண், அவளை மறக்காமலிருக்க வேண்டியதெல்லாம் அவளுக்குத் தெரியும். அவளுடன் எவ்வளவு நேரத்தைச் செலவழித்தாலும் அலுப்பு ஏற்பட்டதில்லை. மாறாக உற்சாகமும் புத்துணர்ச்சியும் அதிகரிக்கும்.

இன்று இரவில் அவள் இல்லாமல் பொழுது போகுமா?

அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அவள் வராமலிருக்க எந்த ஒரு காரணமும் இல்லை. இப்படி எதிர்பார்த்துக் கொண்டிருந்ததிலேயே பொழுது கடந்து சேவலும் கூவியது.

விஜயமோகன் வாசித்துக் கொண்டிருந்த ஓலைச்சுவடியை மூடி வைத்துவிட்டு எழுந்தார்.

விளக்கு அணையாமலிருக்குமாறு திரியை உட்புறமாக இழுத்துவிட்டு அவர் படுக்கை அறையை அடைந்தார்.

அவள் இல்லாத படுக்கையை அவர் வெறித்துப் பார்த்தார். பிறகு பெருமூச்செறிந்தவராக அதில் படுத்தார்.

அடிக்கடி கண் விழித்தார்.

அவரால் ஒழுங்காக உறங்க முடியவில்லை.

கோழி கூவியதும் எழுந்தார். வழக்கமாக அந்தச் சத்தத்தைக் கேட்டு அவர் எழுந்ததே இல்லை.

எழுந்தவுடன் குளிக்கப் போனார்.

திரும்பி வரும்போது குளத்தை ஒட்டிய பாதையில் அவர் வந்தார்.

அந்தப் பகுதியில் ஏதோ ஒரு துர்நாற்றம் வீசியது.

"ச்சே.. என்ன ஒரு நாற்றம்!" என்று மூக்கைப் பொத்தியபடி அவர் இல்லத்தை அடைந்தார். அங்கு வந்த பிறகும் அந்த துர்நாற்றம் தன்னைப் பின்தொடர்வதாக அவருக்குத் தோன்றியது.

அந்தப் பகுதியில் அவர் அதிகமாகச் சென்று பழக்கம் இல்லாத தால், காட்டு விலங்கு ஏதாவது இறந்து போய் அழுகியிருக்கலாம் என்று அவர் நினைத்தார்.

“இன்றைக்கு வழக்கத்தை விட, சீக்கிரமாக எழுந்து விட்டீர் களா?” சாவித்ரி கேட்டாள்.

விஜயமோகன் அவளை ஊன்றிப் பார்த்தார்.

அவளது ரவிக்கையில் ரத்தக்கறை தெறித்திருப்பதை அவர் கவனித்தார்.

அவர் ஊன்றிக் கவனிப்பதை உணர்ந்ததும் அவள் சட்டென்று வீட்டுக்குள் போனாள்.

அவளிடம் ஏதோ ஒரு விபரீதம் இருப்பதாக விஜயமோகனுக்குத் தோன்றியது. ஆக மொத்தத்தில் விவரிக்க முடியாத ஒரு சந்தேகம் அவரின் இதயத்தில் பரவியது. இங்கு வந்த பிறகு நடப்பதெல்லாம் ஆச்சரியங்களாக இருக்கின்றன.

ஒருவிதத்தில் கார்த்திகா அந்தர்ஜனமே ஓர் ஆச்சரியம்தான். இப்படி அவர் மனதில் என்னென்னவோ சிந்தனைகள் கிளை பிரிந்தன.

அவர் டீக்கடைக்குள் நுழைந்தபோது மணி ஒன்பதாகி விட்டது.

அங்கு அன்று வழக்கதைவிட கூட்டம் அதிகமாக இருந்தது. நாற்சந்தியில் ஆட்கள் கூட்டம் கூட்டமாக நின்று கிசுகிசுத்தனர்.

தன்னை ஏதோ ஒருவித உள்ளர்த்தத்துடன் பார்க்கின்றனர். அவர் கடைக்குள் நுழைந்ததும் சட்டென்று மரியாதைக்கு அடையாளமாக எல்லாரும் எழுந்து நின்றனர்.

அவர் உட்கார்ந்த பிறகு, அவர்களும் உட்கார்ந்தனர்.

கடைக்காரர் அவருக்குச் சிற்றுண்டி பரிமாறினார்.

“இன்று என்ன வழக்கத்துக்கு மாறாகக் கூட்டம் அதிகமாக இருக்கிறது?” விஜயமோகன் அருகில் அமர்ந்திருந்தவரிடம் கேட்டார்.

அதற்கு பதில் எதுவும் கூறாமல் அவர் மற்றவர்களைப் பார்த்தார்.

“ஏன், நீங்கள் என்னமோ போலிருக்கிறீர்கள்? என்ன விஷயம்?” விஜயமோகன் கேட்டார்.

"நான் சொல்கிறேன் சார். வாசுதேவன் தம்பியின் வீட்டில் ஒரு மரணம் நிகழ்ந்திருக்கிறது. உண்ணித்தான் இறந்து போயிருக்கிறார். அதை இயற்கையான மரணம் என்று சொல்ல முடியாது..." டீக்கடைக்காரர் தெரிவித்தார்.

"அப்படியொரு மரணம் இருக்கிறதா என்ன?" விஜயமோகன் கேட்டார்.

"ரட்சஸின் தாக்குதல்" அவர் விவரித்தார்.

"அப்படியா. இதை யார் சொன்னார்கள்?"

"இது முதல் தடவையாக இங்கு நடக்கவில்லை. இது இரண்டாம் மரணம். முதலில் இதையெல்லாம் எவரும் நம்பவில்லை. முந்தைய மரணத்தையெல்லாம் ரகசியமாக மறைத்து வைத்தனர். இதை அப்படி மறைக்க முடியவில்லை. நடந்தது தம்பியின் வீட்டிலாயிற்றே..."

"ரட்சஸின் தாக்குதல்தான் இதற்குக் காரணம் என்று யார் தீர்மானித்தது?"

"உடம்பில் இருந்த ரத்தம் மொத்தமும் உறிஞ்சப்பட்டிருக்கிறது. ரத்தத்தை உறிஞ்சிக் குடித்துக் கொன்றிருக்கிறதே. நான் உங்களிடம் ஒரு ரகசியம் சொல்லட்டுமா?" அவர், விஜயமோகனை நெருங்கி மிகவும் மெதுவான குரலில் கூறினார்.

"எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள். எனக்கு அப்படி ரகசியம் எதுவுமில்லை" விஜயமோகன் எல்லாரையும் பார்த்தபடி பேசினார்.

"அப்படியென்றால் சொல்கிறேன். நீங்கள் தங்கியிருக்கும் இல்லத்திலும் இந்த ரட்ச தான் இருக்கிறது. அதனால்தான் இவர்கள் எல்லாரும் உங்களை ஊன்றிப் பார்க்கின்றனர்."

விஜயமோகனுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது சாவித்ரியின் உருவம்தான்.

அவர் உடனே இல்லத்தை நோக்கி விரைந்தார்.

"சாவித்ரி!" அவர் உரத்த குரலில் அழைத்தார்.

# 21

**வி**ஜயமோகன் அழைத்த உடன் சாவித்ரி வாசலுக்கு வந்தாள்.

அவர், அவளைச் சந்தேகத்துடன் தலை முதல் பாதம் வரை பார்த்தார். அவரின் பார்வை படிப்படியாக இறங்கியது... முகம்... கண்கள்... உதடுகள்...

ரவிக்கையில்...

ரத்தப் பொட்டுகள் போன்ற அடையாளங்கள்.

"என்ன இதெல்லாம்?" அவர் ரவிக்கையில் தென்பட்ட அடையாளங்களைச் சுட்டிக்காட்டிக் கேட்டார்.

"ரத்தம்!" எந்த ஒரு தயக்கமும் இன்றி அவள் பதிலளித்தாள்.

"அப்படியானால் நான் சந்தேகப்பட்டது சரிதான்!" அவர் அவளையே பார்த்தார்.

"என்ன உங்கள் சந்தேகம்?" அவள் இயல்பான குரலில் கேட்டாள்.

"ரத்தம் குடிப்பவர்கள்தான் இங்கு தங்கியிருக்கிறீர்கள்?" அவர் கூறினார்.

"யார் சொன்னது?"

"டீக்கடையில் பேசிக் கொண்டார்கள். அந்த உண்ணித்தானைக் கொன்றது ஒரு ரட்ச என்று சொன்னார்கள்."

"ஓகோ... அதுதான் விஷயமா?" திருமேனி, நீங்கள் இதையெல்லாம் நம்பி விட்டீர்களே. இடைவிடாமல் ஓலைச்சுவடிகளைப் படித்துப் படித்து, தட்டுப்படுகிறவர்கள் எல்லாரும் பிசாசுகளாகி விட்டார்களா என்ன? என் ரவிக்கையில் தென்படும் ரத்தத்துக்குக் காரணம் ரவிக்கையில் முள் குத்தியதுதான்."

"மார்பில் முள் குத்தியதா... ஆச்சரியமாக இருக்கிறதே."

"ஆமாம், இன்று காலையில் நான் குளிப்பதற்காகக் கிளம்பினேன். குளத்துக்கு அடியில் என்னமோ இருப்பது போல் தோன்றியது. மூச்சைப் பிடித்துக்கொண்டு அவசர அவசரமாக நீரின் மேற்பரப்புக்கு

வந்தேன். நான் நீரின் மேற்புறம் உயர்ந்ததோ முட்களுக்கு நடுவில். உடலில் சில இடங்களில் முள் குத்தியிருக்கிறது. உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால், முள் குத்திய காயங்களைக் காட்டுகிறேன்'' அவள் ரவிக்கையின் பட்டன்களை அவிழ்க்கத் தொடங்கினாள்.

''வேண்டாம். நான் அதையெல்லாம் பார்க்க வேண்டியது இல்லை'' அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

''திருமேனி. உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? இங்கு இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் தம்பியின் ஆட்கள். நீங்கள் இந்த இல்லத்தை விலைக்கு வாங்கி, இன்னும் இதை இடித்துத் தள்ளாமல் இருப்பதுதான் அவர்களது வயிற்றெரிச்சலுக்குக் காரணம்.''

''அதில் இவர்களுக்கு என்ன இருக்கிறது? இடிப்பதும் இடிக்காததும் எனது விருப்பத்தைப் பொறுத்தது!''

''அது. அவர்களுக்குத் தெரிய வேண்டுமே!''

''போகட்டும். உண்ணித்தான் எப்படி இறந்தார் என்று தெரியுமா?''

''எந்த உண்ணித்தான். எனக்கு அது தெரியாதே!''

''சரி. நீங்கள் உள்ளே போங்கள்!''

விஜயமோகன் தனது படுக்கையறைக்குச் சென்றார்.

கட்டிலில், தலையணையில் முகம் பதித்துக் கிடந்தார்.

'இன்றைக்காவது கார்த்திகா வருவாளா?' அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

உண்ணித்தானின் மரணத்துக்குப் பிறகு தம்பியின் மகிழ்ச்சியெல்லாம் கரைந்து பயம் அதிகரிக்கத் தொடங்கியது. 'தொல்லைகள் எல்லாம் தீர்ந்து விட்டன!' என்று நேற்றிரவுதான் அவர் ஆறுதல் அடைந்தார்.

'கார்த்திகா அந்தர்ஜனத்தின் கல்லறைக்கு மேற்புறம் பாதி எரிந்த மனித உடலை வைத்ததுடன் இனிமேல் அவள் எழுந்திருக்க முடியாது என்று உறுதியாக நம்பினோம்.

அப்படியானால், இதற்குக் காரணம் யார்?

சட்டென்று அவருக்கு வாசந்தியின் ஞாபகம் வந்தது.

எழுமற்றூர் மனையில் வாசந்தியைச் சந்தித்த தகவலை, உண்ணித்தான் ஏற்கெனவே அவரிடம் தெரிவித்திருந்தார்.

அப்படியானால், அவள்தான் பழிவாங்கியிருக்க வேண்டும். அவளுக்குத் தன் மீதும் கோபம் ஏற்பட்டிருக்குமே?

இப்போது தனக்கு ஆறுதல் சொல்லவோ, யோசனை தெரிவிக்கவோ கூட ஆள் இல்லாமல் போய்விட்டார்கள். எப்படி இருந்தாலும் மாந்திரீகனான சேகரன் உண்ணித்தானை வரவழைத்துச் சந்தேகம் கேட்பது என்று தம்பி தீர்மானித்தார்.

அப்போது தம்பியின் மனதில் மற்றொரு சந்தேகமும் நுழைந்து கொண்டது. எழுமற்றூர் இல்லத்தை விலைக்கு வாங்கியிருக்கும் விஜயமோகனும் சாமானியமான மனிதன் அல்ல என்று அவருக்கு விளங்கியது. 'இல்லாவிட்டால், பிரம்மரட்சஸான கார்த்திகா அந்தர்ஜனத்தை அவர் தன்னுடன் அழைத்து வந்திருப்பாரா என்ன?

அவர்கள் கணவன்-மனைவியைப் போல் நடந்து கொண்டனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவள் நடந்துவிட்ட எல்லாவற்றையும் அவரிடம் தெரிவித்திருக்க வேண்டும். கிரயப் பத்திரத்தின் பின்னால் அவள் எப்படிக் கையெழுத்து போட்டாள் என்று கேட்கவும் செய்தாரே? அப்படியானால் இப்போது அவருக்கு எல்லாமே விளங்கி விட்டிருக்கும்.'

காரிய தரை அனுப்பி உண்ணித்தானை வரவழைத்தார்.

அவரும் உடனடியாக வந்து சேர்ந்தார்.

உண்ணித்தானின் மரணத்தைப் பற்றி அவர்கள் பேசினர். அதற்குப் பின்னணியில் விஜயமோகன் இருக்கலாம் என்று இறுதியில் அவர்களாக ஒரு தீர்மானத்துக்கு வந்தனர்.

"அப்படியானால், அந்தத் திருமேனியிடம் இனி மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அவர் எதையெல்லாமோ கற்று வைத்திருக்கிறார்!" சேகரன் உண்ணித்தான் கூறினார்.

அந்தச் செய்தி தம்பிக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியது.

'எப்படியாவது கார்த்திகா அந்தர்ஜனம் கல்லறையிலிருந்து வெளியேறி விட்டால், முதலில் கணக்குத் தீர்ப்பது தன்னைத்தான்!' என்று அவருக்கு விளங்கியது.

'எப்படிப் பார்த்தாலும் அந்த வகையில், தான் ஒரே ஒருவன் மட்டுமே மீதமிருக்கிறோம்.

தன்னை அவள் எந்த மாதிரி பழிவாங்குவாள்?' அவர் பீதியுடன் சிந்தித்தார்.

"இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்வது?" தம்பி மிகுந்த கவலையுடன் கேட்டார்

உண்ணித்தான் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

"எனக்கு ஒரேயொரு வழி தட்டுப்படுகிறது!" உண்ணித்தான் பெருமூச்சுடன் கூறினார்.

ஒரு வழி இருக்கிறது என்ற பதிலே அவரைப் பெருமளவு ஆறுதல் கொள்ள வைத்தது. அது என்னவென்று தெரிந்து கொள்ளும் ஆவல் அவர் முகத்தில் வெளிப்பட்டது.

"எல்லாவற்றையும் கணக்கு கூட்டிப் பார்த்தால் விஜயமோகன் அப்படியொன்றும் ஏப்பை சாப்பையானவர் இல்லை. எனவே, அடியாட்களை அனுப்பித் தாக்க முயற்சிப்பதும் நடக்காது!" உண்ணித்தான் விவரித்தார்.

"மீறி நாம் அனுப்பி வைத்தால் அவர் எதிர்ப்பார். நம்மைத் தோற்கடிப்பார். அதை ஊரார் தெரிந்து கொண்டால் நமக்கு அசிங்கம். வேறு என்ன செய்வது?" தம்பி கேட்டார்.

சேகரன் உண்ணித்தான் பதில் சொல்ல முற்படாமல் யோசனையில் ஆழ்ந்தார்.

அவரின் ஒற்றைக் கண் மாறி மாறி மூடித் திறந்து கொண்டிருந்தது. இறுதியில் அவர் கூறினார்: "நேற்று இரவு அந்தர்ஜனம் அவரிடம் போகவில்லை. காத்திருந்து ஏமாந்திருப்பார். இன்று வேண்டுமானால், அந்தர்ஜனம் அவரிடம் போகட்டும்."

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்! நாம் இதுவரை செய்தது எல்லாம் பாழாகி விடாதா?" தம்பி சட்டென்று துள்ளியெழுந்தார்.

"பொறுங்கள், பொறுங்கள். பதற்றம் வேண்டாம். நான் முட்டாள்தனம் செய்வேன் என்று நினைக்கிறீர்களா?"

தம்பி, அவரை வெறித்துப் பார்த்தார்.

"கேளுங்கள். இன்றைக்கு நாம் அனுப்பப்போவது அந்தர் ஜனத்தை அல்ல. அந்தர்ஜனத்தைப் போன்ற வேறொருவரை. அதற்கான வேலையை நான் செய்ய ஆரம்பிக்கலாம் இல்லையா?"

தம்பி ஒரு பெருமூச்செறிந்தார். உடனே தன் காரிய தரை அனுப்பி, பூஜைக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வரச் செய்தார்.

மாலை நேரம் தாண்டியதும் சாப்பாட்டு வேலையை முடித்துக் கொண்டனர்.

பெண்களிடம் கதவுகளை மூடிக்கொண்டு வீட்டுக்குள் படுத்து உறங்கச் சொன்னார்.

பின்னர் அவர்கள் இருவரும் சவுக்கையை நோக்கி நடந்தனர்.

சேகரன் உண்ணித்தான் பூஜை தொடங்கினார். ஒரு கட்டத்தில் அவர் ஹோமாக்னிக்குள் தன் வலக்கைச்சுட்டுவிரலை நீட்டினார்.

பூஜையில் வைத்திருந்த வாளை எடுத்து விரலில் கீறி ரத்தத்தை ஹோமாக்னியில் சொட்டச் செய்தார்.

அப்போது ஹோமாக்னிக்குப் பின்னால் நிறுத்தி வைத்திருந்த யோகினி விக்கிரகம் அசைந்தது. அதிலிருந்து பீகர ரூபினியான பிசாசு ஒன்று எழுந்து வந்தது.

"என்ன, எனக்கு எதுவும் தெரியவில்லையே?" தம்பி கூறினார்.

"அதோ, அங்கு பாருங்கள்..." உண்ணித்தான் ரத்தம் வடியும் விரலால் சுட்டிக்காட்டினார்.

தம்பி அந்தப் பக்கமாகப் பார்த்தார். அப்போதும் அவருக்கு எதுவும் தெரியவில்லை.

"என்னைத் தொட்டுக்கொண்டு பாருங்கள்" உண்ணித்தான் கூறினார்.

தம்பி, அப்படியே செய்தார்.

அப்போது அவர் உடல் பயத்தால் நடுங்கத் தொடங்கியது.

இன்றுவரை அவர் கற்பனையில் கூட பார்த்திராத பயங்கரமான வடிவம் ஒன்று அவருக்கு முன்பாகத் தட்டுப்பட்டது.

நெற்றியிலிருந்து சரிந்து இறங்கும் வளைந்த மூக்குக்கு நேர் மேலாக ஒரேயொரு கண்.

அகன்ற வாய்ப்பகுதி. கூர்மையாக வளைந்து நீண்ட பற்கள். தலையில் முடிக்கு பதிலாக சணல் நார் போன்ற வெள்ளி நிறப் பாம்புகள். அவற்றின் கழுத்துப் பகுதிகள் எல்லாம் படம் எடுத்து ஆடிக்கொண்டிருந்தன.

அந்தப் பைசாசிக வடிவத்தைக் கண்ட வாசுதேவன் தம்பி உண்ணித்தானின் தோளிலிருந்து சட்டென்று கையை எடுத்தார். அந்த விநாடியிலேயே அவர் பார்த்த உருவம் அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து அந்த இடம் சூனியமானது!

உடனே மாந்திரீகன் ஹோமாக்னியில் சாம்பிராணித் தூள் போன்ற ஒன்றை வீசிஎறிந்தார்.

மின்மினிப் பூச்சிகளைப் போல் நெருப்புத் துணுக்குகள் அந்தப் பகுதி முழுவதும் பரவி, அந்த இடமே பிரகாசத்தால் நிறைந்தது. அவை தாழ்ந்து மறைந்தபோது உண்ணித்தான் கூறினார்: "இப்போது என்னைப் பிடித்துக்கொண்டு பாருங்கள்."

தம்பி மீண்டும் அவர் தோளில் கை வைத்தார்.

இப்போதும் அவர் திடுக்கிட்டார்.

அவருக்கு முன்பாக கார்த்திகா அந்தர்ஜனம் நின்று கொண்டிருந்தாள். அவள், அவரையே பார்ப்பதாகவும் அவருக்குத் தோன்றியது.

"இனி, கையை எடுங்கள்!" சேகரன் உண்ணித்தான் கூறினார்.

தம்பி கையை எடுத்தார். கையை எடுத்த பிறகும் அந்த உருவம் அவர் கண்ணிலிருந்து மறையவில்லை.

"இது– இது..." அவரால் மேற்கொண்டு பேச முடியவில்லை.

"இப்போது இதுதான் கார்த்திகா அந்தர்ஜனம். நான் இவளை அவரிடம் அனுப்பப் போகிறேன். நாளைக்கு யாரும் அவரை உயிருடன் பார்க்க முடியாது... என்ன சொல்கிறீர்கள்?" உண்ணித்தான் இப்படிக் கேட்டதும் தம்பி மிகவும் நிம்மதி அடைந்தார்.

"சரி, நீ போய் வா!" அவர் கட்டளையிட்டார்.

கார்த்திகா அந்தர்ஜனத்தின் வேடத்திலிருந்த பிசாசு உடனே அங்கிருந்து மறைந்தது.

அப்போது விஜயமோகன் படுக்கையில் வருத்தத்துடன் படுத்திருந்தார்.

முந்தைய இரவில் கார்த்திகா வராத ஏமாற்றமே அதற்குக் காரணம். 'ஒருவேளை இனி அவள் வர மாட்டாளோ? அதேபோல் அவள் தினமும் வரவேண்டும் என்பது கட்டாயம் ஒன்றுமில்லையே!'

அந்தப் பழைய நாலுகட்டில் அவர் தன்னந்தனியனாகக் கிடந்தார். அந்த வீடு முழுக்க அமைதி நிறைந்திருந்தது. சுவர்க்கோழிகூட எதுவும் குரல்கொடுக்கவில்லை.

விஜயமோகன் எழுந்து ஓலைச்சுவடி ஒன்றை எடுத்தார்.

கோல்விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அவர் திரியை இழுத்து விட்டார். அறைக்குள் வெளிச்சம் அதிகமானது.

அதன் உதவியால் அவர் ஓலைச்சுவடியில் இருந்த எழுத்துகளின் மீது பார்வையை ஓட்டினார்.

திடுமென்று யாரோ நடந்து வரும் காலடிச்சத்தம் அவர் காதுகளில் விழுந்தது.

"சில்... சிலீர்... சில்... சிலீர்..." கால் கொலுசுகளின் சத்தம்.

'கார்த்திகாதான்' அவர் தீர்மானித்தார். உடனேயே எழுந்து அவளை வரவேற்பது தன் ஆண்மைக்கு அழகு அல்ல என்று நினைத்ததால், அவர் அந்த நிலையில் அப்படியே கிடந்தார்.

கால் கொலுசுகளின் சத்தம் நெருங்கி வருகிறது.

அது அறை வாசலைக் கடந்து வந்தது.

விஜயமோகன் தலையை உயர்த்திப்பார்த்தார்.

கார்த்திகா அந்தர்ஜனம்!

"நேற்றுக் காணோமே!" அவர் கேட்டார்.

அதற்கு பதிலளிக்காமல் அவள், அவரது கட்டிலில் வந்து அமர்ந்தாள். அவர் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டும் அவள் பதில் சொல்லவில்லை.

எதற்கும் பதில் இல்லை.

விஜயமோகன் அவளைப் பார்த்தார்.

அவள் தலை தாழ்த்தி அமர்ந்திருந்தாள்.

இதுவரை பார்த்ததைவிட இப்போது அதிக அழகுடன் விளங்கினாள் அவள். இன்று அவள் அணிந்திருக்கும் முண்டு, இதுவரை அணிந்ததை விட மிகவும் சன்னமாக இருந்தது.

அவளின் மார்பகங்களுக்கு நடுவில் உள்ள இடைவெளிகள் பளிச்சென்று தெரிந்தன.

விஜயமோகன் எழுந்து அவளருகில் சென்று அமர்ந்தார்.

“ஏன், என்னமோ போலிருக்கிறாய்?” அவர், அவிழ்ந்து கிடக்கும் அவள் தலைமுடியில் விரல்களை அளைந்தபடி கேட்டார்.

அவள் பெருமூச்செறிந்தாளே தவிர, பதில் எதுவும் சொல்லவில்லை. அப்போது யதேச்சையாக அவிழ்ந்தாற்போல் அவளது மேல் முண்டு, முடிச்சை அவிழ்த்துக் கொண்டு பின்புறமாக விழுந்தது.

அவள் ஒரு சிலைபோல் அமர்ந்திருந்தாள்.

மார்பகங்களும், இடுப்புப் பகுதியும், தொப்பூழ்க் கொடியும் சிற்பி ஒருவர் வடித்து வைத்தாற்போல் கச்சிதமாக இருந்தன. போதை ஏற்படுத்தும் அழகு.

விஜயமோகனின் கைவிரல்கள் அவள் உடலைத் தழுவின. இதுவரை ஏற்படாத ஓர் உணர்வுக்கு அவர் சட்டென்று அடிமையானார்.

கார்த்திகாவோ எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தாள்.

“ஏன் பேசமாட்டேன் என்கிறாய்? என் மீது கோபமா?”

இப்போதும் அவள் பதிலளிக்கவில்லை.

‘தன் மீது அவளுக்குச் சந்தேகம் ஏதாவது தோன்றியிருக்குமோ?’

அவர், அவளது கோபத்தை அகற்றத் தீர்மானித்தார். எனவே, அவளை இறுகக் கட்டியணைத்தார். அவளும் அவரை இறுக அணைத்தாள்.

அவர்களின் உடம்புகள் பர பரம் உரசிவிலகிக் கொண்டிருந்தது.

அவளுக்குள் உணர்ச்சி வேகம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

மந்திரவாதி அவளுக்குள் ஆவாகித்து அனுப்பியிருந்த காமசூத்ர மந்திரம் செயல்படத் தொடங்கி விட்டிருந்தது. பிசாசினியான அவளால் அவ்வளவு விரைவில் திருப்தியடைய முடியவில்லை.

படிப்படியாக அவளின் பிடி இறுக்கம் அடைந்து கொண்டிருந்தது.

விஜயமோகன், தனக்கு முதலில் ஏற்பட்ட அனுபவத்தை ஏனோ அப்போது நினைவு கூர்ந்தார்.

'இவள் கார்த்திகாதான். அன்றைய இரவில் அவள் தனது இயல்பை வெளிக்காட்ட முயன்றபோது அவர், அவள் முதுகில் ஓம் என்ற மந்திரத்தை வரைந்தார். மறு விநாடி அவள் இயல்பு நிலைக்குத் திரும்பினாள்.

இப்போதும் அந்த வித்தை தேவைப்படலாம்.

விஜயமோகன் அவள் முதுகில் கைவிரல் பதித்து, ஓம் என்று எழுத முற்பட்டபோது, அவள் கைகள் அவர் கழுத்தில் இறுக்கிப் படிந்தன.

அவரால் அசைய முடியவில்லை.

'என்ன இது? இவள் ஏன்இப்படி ஆகிவிட்டாள்?' விஜயமோகன் யோசித்தார்.

சட்டென்று அவர், அவளை ஒருபுறமாகப் புரட்டிப்போட்டார்.

அப்போது அவருக்குத் தென்பட்டது அவளது அதிபயங்கரமான யதார்த்த வடிவம்!.

நெற்றியின் மையத்தில், மூக்கின் மேற்புறம் தீப்பொறி பறக்கும் ஒற்றைக்கண் மட்டும். பயங்கரமான ஒரு விலங்கு.

"கார்த்திகா, என்ன இதெல்லாம்? இதுதான் உன் உண்மையான வடிவமா?" அவர் ஓலைச்சுவடியைக் கையில் எடுத்தபடி கேட்டார்.

அந்த பூதம் எழுந்து விஜயமோகனைத் தாக்கத் தயாரானது.

உடனடியாக என்ன செய்வது என்று தெரியாமல் ஒருகணம் குழம்பினார். சட்டென்று தன் இடுப்பில் கட்டியிருக்கும் தாயத்து அவருக்கு ஞாபகம் வந்தது.

ஆபத்தான கட்டத்தில் மட்டுமே அந்தத் தாயத்தைப் பயன்படுத்தலாம் என்று, அதை வழங்கியபோது தாய்மாமா எச்சரித்திருந்தார்.

அதற்குள் அதிபயங்கரமான ஒரு சக்தியை அடக்கம் செய்த யந்திரம் இருப்பதாகவும், அதை வெளியில் எடுத்துக்கொண்டு எதிராளியிடம் மோதவேண்டும் என்றும், அதைத் திறப்பதற்கான முறையையும் மாமா ஒருமுறை சொல்லித் தந்திருந்தார்.

விஜயமோகன் அவசர அவசரமாகத் தனது தாயத்தைப் பிடுங்கியெடுத்தார். அதன் கொக்கிப் பகுதியைக் கடித்து இழுத்தார். தாயத்து திறந்து கொண்டது.

அதனுள்ளிருந்து சூலம் ஒன்று வெளியே வந்தது. அது மிகப் பெரியதாக வளரவும் செய்தது.

விஜயமோகன் அந்த சூலத்தை வாகாகப் பிடித்தார். தனக்கு முன்பாக நாக்கை நீட்டி, வாயில் ரத்தம் வடியவிட்டபடி நிற்கும் அந்தப் பிசாசை நோக்கி எறிந்தார்.

அந்தச்சூலம் அவள் நெற்றியிலுள்ள ஒற்றைக் கண்ணில் குறிதவறாமல் பாய்ந்தது.

அவள் பின்புறமாக மட்டமல்லாக்க விழுந்தாள்.

அதன்பிறகு அங்கு தென்பட்டது வாழ்க்கையில் ஒருபோதும், எவரும் காணாத ஆச்சரியங்களாக இருந்தன!

## 22

அந்த சூலம் அவளின் நெற்றியில் இருந்த ஒற்றைக் கண்ணில் பாய்ந்தது.

உடனே அந்தக் கண் இரண்டாகப் பிளக்கப்பட்டது. அதன் இடைவெளியில் தோன்றிய பிளவிலிருந்து பாம்புகள் ஏராளமாக வெளியே ஊர்ந்து வந்தன.

கண்ணிமைப்பதற்குள் அந்த உடம்பு நேர்பாதியாக இரண்டாகப் பிளக்கப்பட்டுக் கீழே விழுந்தது. மூக்கு, வாய், தாடை, மார்பகம், அந்த மார்புக்கு உள்ளிருந்து வௌவால்கள் சிறகடித்துப் பறந்து வந்தன.

அதைத் தொடர்ந்து நண்டுகளும், கருந்தேள்களும் வெளியேறின. அப்படியும் இப்படியுமாகப் பார்த்த அவை, சிறகு முளைத்தவுடன் விகாரமான குரலை எழுப்பிக்கொண்டு அம்பெய்யப்பட்டது போன்ற விசையுடன் பாய்ந்து சென்றன.

வயிற்றுப் பகுதியை பிளவு நெருங்கியபோது உள்ளிருந்து கருநாகம் ஒன்று வெளியேறியது. அது நாக்கை வெளியே நீட்டியது. அதன் வாயிலிருந்து நீலநிற ஜுவாலைகள் உயர்ந்தன. தொப்பூழ்க்கொடிப் பகுதியிலிருந்து வெளியேறிய அந்த நாகம் படம் எடுத்தவாறு ஏறத்தாழ அதன் பாதியளவு உயரத்தில் நின்றது.

விஜயமோகன் பின்பக்கமாக நகர்ந்து விலகி நின்றார்.

சட்டென்று அந்த நாகம் கீழ்ப்புறமாக அமர்ந்து காற்றில் கரைந்து போனது.

கடைசியில் சுழற்காற்று ஒன்று வீசியடித்து ஓய்ந்தது போல் அந்தக் காட்சி முடிவு அடைந்தது.

விஜயமோகன் அவள் மீது எறிந்த சூலமும் இல்லாமலானது. ஆக மொத்தம் ஏகத்துக்குக் களைப்படைந்தவரைப் போல் அவர் கட்டிலில் அமர்ந்தார்.

கார்த்திகா அந்தர்ஜனம் தன்னிடம் இப்படி நடந்து கொண்டாளே என்று அவர் மிகவும் வருத்தப்பட்டார். அதனால், அந்த அறைக்குள் படுக்கக்கூட அவருக்கு மனம் வரவில்லை. அறையிலிருந்து வெளியேறியவர், திண்ணையில் வந்து நின்றார்.

நிலவிளக்கு அப்போதும் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

தூக்கம் எப்போதோ அவரை ஒதுக்கிவிட்டுப் போயிருந்தது.

அப்படியே அங்கிருந்த தூணில் சாய்ந்து உட்கார்ந்தார். தலையை உயர்த்தியபோது யாரோ தெருவாசற்படி தாண்டி வருவது தெரிந்தது. அருகில் வந்தபோது சாவித்ரி என்பது விளங்கியது.

"என்ன இந்த நேரத்தில்?" அவர் கேட்டார்.

"வர நேர்ந்து விட்டது!" சிறு திண்ணையில் அவருக்குக் கீழே அமர்ந்தாள்.

"இந்த வீடு முழுவதும் பூதப் பிரேதாதிகள்தான். யாரையும் நம்ப முடியாமல் ஆகியிருக்கிறது" அவர், அவளைப் பார்த்துப் பேசினார்.

"என் மீதுமா உங்களுக்கு சந்தேகம்?" அவள் கேட்டாள்.

"நான் எப்படி அதைச் சொல்வது?"

"என் ரவிக்கையில் ரத்தத் துளிகளைப் பார்த்ததால் சொல் கிறீர்களா?"

விஜயமோகன் அதற்கு பதில் சொல்லவில்லை.

"அந்த உண்ணித்தானை ரட்ச கொன்றதை நினைத்துக் கேட்கிறீர்கள்! அதற்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது. அதை நீங்கள் கேட்க விரும்பினால் சொல்கிறேன்" அவள் வலப்புறத் தோள் வழியாக வழிந்து மடியில் கிடந்த தலைமுடியை வருடியபடி பேசினாள்.

அவளுக்கு அப்போது இலஞ்சிப்பூவின் மணமிருந்தது.

அப்போதுதான் பூத்து விரிந்த இலஞ்சிப் பூக்களின் வாசனை.

"சரி, அதையும் சொல், கேட்டுக் கொள்கிறேன்" அவர் அவள் பக்கமாகத் திரும்பி உட்கார்ந்தார்.

கார்த்திகா அந்தர்ஜனத்தைக் குறித்த அவரது கணிப்பு மாறிவிட்டது. முதலில் அவள் மீது அவருக்கு சந்தேகம் ஏற்பட்டாலும் பின்னர் அது மாறியது. ஆனால், சற்று நேரத்துக்கு முன்னால் நடைபெற்ற சம்பவத்துடன், அவளை அவர் எல்லை கடந்து வெறுக்க ஆரம்பித்தார். அதுமட்டுமின்றி, இனி ஒருபோதும் திரும்பி வராதபடி அந்த பூதம் அழிந்துவிட்டது என்பதில் அவர் ஆறுதலடையவும் செய்தார்.

அப்போதுதான் சாவித்ரியின் வருகை.

அது அவரின் தனிமையை ஓரளவுக்கு அகற்றியது.

"அந்த உண்ணித்தானும் தம்பியுமாகச் சேர்ந்து கொண்டு இந்த ஊரிலுள்ள ஏழைப்பெண் ஒருத்தியைக் கொண்டுபோய் பட்டணத்திலுள்ள ஓட்டலில் தங்க வைத்து நாசமாக்கினார்கள்..." சாவித்ரியின் குரல் கேட்டது.

"அவள் எதற்காக அவர்களுடன் போனாள்?" விஜயமோகன் குறுக்கிட்டார்.

“அவள் ஏற்கெனவே உண்ணித்தான் விரித்த காதல் வலையில் விழுந்தவள். அவளை அவர் பலாத்காரம் செய்து கீழடக்கினார். கர்ப்பிணியான அவளை மருத்துவமனைக்குக் கொண்டு போவதாகச் சொல்லி, ஏமாற்றிப் பட்டணம் கொண்டு போனார். அங்கு தம்பியும் இதில் பங்கு பெற்றார். கிராமத்துக்குத் திரும்பி வந்தவள், அவமானம் தாங்காமல் தற்கொலை செய்தாள். அந்த ஆவிதான் உண்ணித்தானைக் கொன்றது.”

“ஓகோ, இதுதான் கதையா? இதை யார் உன்னிடம் சொன்னார்கள்?”

“தற்கொலை செய்வதற்கு முன்னால் அவள் என்னிடம் சொல்லியிருந்தாள்.”

“யார் அந்தப் பெண்?”

“அவள் பெயர் வாசந்தி.”

ஆகாயத்தில் நிலா எழும்பியிருந்தது.

பூரணச் சந்திரன்.

அந்த வெளிச்சத்தில் அவரால் சாவித்ரியை நன்றாகப் பார்க்க முடிந்தது. அவளின் கால்கள் முற்றப் பகுதியில் இருந்தன. அவள் உட்கார்ந்திருந்ததால் மேலேறி விட்ட வேட்டியினால், அவளின் கணுக்கால்கள் தெளிவாகப் புலப்பட்டன. கார்த்திகாவை மறந்துவிட்ட விஜயமோகனின் கண்கள் சாவித்ரியின் கணுக்கால்களைத் தாண்டிக் கீழே இறங்கின.

அந்தப் பார்வை அவளின் பாதங்களில் போய் நின்றது.

ஒவ்வொரு பாதத்திலும் நான்கு விரல்கள்!

அந்த விரல்களில் பளபளப்பான நகங்கள்!

“சாவித்ரி...” அவர் தலையை உயர்த்தினார்.

“நீ சாவித்ரியா அல்லது வாசந்தியா?”

“என்ன சொல்கிறீர்கள்?” அவள் எழுந்து நின்றாள்.

“நீ சாதாரணமான மனிதப்பெண் இல்லை, ஒரு ரட்ச . நீதான் உண்ணித்தானைக் கொன்றாய்!”

அவள் அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை.

"என்ன, நான் சொன்னது உண்மைதானே?" அவர் சற்று உரத்த குரலில் கேட்டார்.

"ஆமாம், நீங்கள் சொன்னது உண்மைதான். நான்தான் உண்ணித்தானைக் கொன்றவள்" அவள் ஒப்புக் கொண்டாள்.

"ச்சே... என்னால் இதை நம்ப முடியவில்லை. அன்று, உன் ரவிக்கையில் இருந்த ரத்தத் துளிகளுக்கு, முள் தைத்து விட்டதாக ஒரு காரணம் சொன்னாய். அதன்பிறகு நான் அதைப்பற்றி யோசிக்கவில்லை. இப்போது உன் கால் விரல்களைக் கவனித்த போதுதான் அது விளங்கியது."

"அப்படித்தான் என்னை நீங்கள் அடையாளம் தெரிந்து கொண்டீர்களா? நான் அந்த விஷயத்தை மறந்தே போனேன்."

"இல்லாவிட்டால் நீ என்னையும் பழி வாங்கி இருப்பாய்... இல்லையா?" அவர் குரலில் கோபம் தெரிந்தது.

"தயவு செய்து என்னை அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நாங்கள் கனவில் கூட அப்படி நினைத்தது இல்லை. என்னை நம்புங்கள்."

"நாங்கள் என்றால்..."

"இந்த இல்லத்தின் தம்புராட்டி உட்பட!"

"யார் அந்தத் தம்புராட்டி?"

"கார்த்திகா தம்புராட்டிதான். அவர்தான், என்னை இங்கு வரவழைத்தவர்."

"அதுவும் எனக்கு விளங்கிவிட்டது. தம்புராட்டியின் வித்தையையும் நான் பார்த்து விட்டேன்."

"என்ன சொல்கிறீர்கள் தம்புரான்?"

விஜயமோகன் சற்று முன்பு நடந்ததை அவளுக்கு விளக்கினார். அவளுக்குள் ஒரு சந்தேகம் உயர்ந்தது. ஒருவேளை அப்படி நடந்திருக்குமோ என்ற பயமும் அவளை வாட்டியது. இருப்பினும் அவள் கடைசியில் சொன்னாள்:

“தம்புராட்டி ஒருபோதும் அப்படிச் செய்திருக்க மாட்டார்!” அவள் குரலில் உறுதி தெரிந்தது.

“எப்படி அதை நம்புவது? நான் இந்த இல்லத்தை வாங்கியது கூட. உங்கள் தம்புராட்டிக்குப் பிடிக்கவில்லையோ என்று எனக்கு இப்போது தோன்றுகிறது.”

“நான் ஒன்று சொல்கிறேன். நிச்சயமாக இதில் வேறு யாரோ குறுக்கிட்டு, உங்களை ஏமாற்றி இருக்கிறார்கள். தம்புராட்டியின் வேடத்தில் யாரையோ அனுப்பி வைத்திருக்க வேண்டும். அநேகமாக அது தம்பியின் வேலையாகவும் இருக்கலாம்.”

“அப்படியானால் உங்கள் தம்புராட்டி எங்கே? நேற்றிரவும் இங்கு வரவில்லையே!”

“அது உண்மையானல் தம்புராட்டியை யாரோ பந்தனம் செய்திருக்கிறார்கள். இல்லாவிட்டால், கடலுக்கு அடியில் இருந்தால்கூட அவர் கண்டிப்பாக இங்கு வந்து சேர்ந்திருப்பார்.”

“நீ சொல்வது உண்மையாக இருந்தால் அதை கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். அந்த அளவுக்கு அவளை ஆபத்துக்கு உள்ளாக்க இங்கு எவருக்கு வல்லமை உள்ளது?” விஜயமோகன் கேட்டார்.

“நீச மந்திரங்கள் செய்து அவர் ஒருபோதும் எதிர்ப்புக் காட்டாமல் இருக்க அடக்கி வைத்திருக்கலாம்.”

“அப்படியானால், அதற்கான காரணம் என்னவென்று விசாரித்து அறிந்து எனக்குச் சொல்ல முடியுமா? நாளைக் காலையில் நான் ஊருக்குப் போகிறேன். நாளை இரவு உன்னை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்.”

“சரி, தம்புரான். நீங்கள் வருவதற்குள் நான் என்னால் முடிந்த அளவுக்கு எல்லாவற்றையும் விசாரித்து வைக்கிறேன். அதுவரை நான் இந்த இல்லத்தில் தங்கிக் கொள்ளலாம் இல்லையா?” அவள் விஜயமோகனைப் பார்த்துக் கேட்டாள். அவள் பார்வையில் வசீகரம் நிறைந்திருந்தது.

“கார்த்திகா!” விஜயமோகன் மந்திரிப்பது போல் அந்தப் பெயரை ஒரு தடவை உச்சரித்தார்.

“தம்புரான், நீங்கள் ஒருபோதும் ஒரு பிரம்மரட்சஸைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டீர்கள் அல்லவா? அது நடைமுறைக்கும், ஆசாரங்களுக்கும் விரோதமானது ஆயிற்றே. இது என்னுடைய ஓர் ஆசையும் கூட. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது” அவள் மறுபடியும் விஜயமோகனின் காலருகே அமர்ந்தாள்.

அவளின் தலைமுடி அவர் பாதத்தில் படிந்து, சிறு திண்ணையில் பரவியது.

‘அவளின் ஆசை என்னவாக இருக்கும்?’ அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

“ஒரு காரணம் இருப்பதாகச் சொன்னாயே, அது என்ன?” அவர் கேட்டார்.

“நீங்கள் ஒரு நம்பூதிரி. நான் மோட்சப்பிராப்தி அடையாத ஒரு ரட்ச . நான் ஒருநாள் ஓர் இரவு உங்களுடன் தங்கினால், உங்களது பரிசத்தால், உங்களது சக்தியில் இணைந்தால் நான் மோட்சப் பிராப்தி அடைந்துவிடுவேன். அது ஒன்றுதான் எனது வேண்டுகோள்.”

விஜயமோகன் என்ன செய்வது என்று தெரியாமல் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“நான் கேட்பதில் தவறு ஏதாவது இருக்கிறதா தம்புரான்?” அவள் அவர் பாதத்தை வலக்கையால் வருடியபடி கேட்டாள்.

அவள் கை, அவரின் முழங்கால் வரை வருடியபடி உயர்ந்தது.

“மோட்சப் பிராப்தி மட்டும்தான் உனது நோக்கம் என்றால் எனக்கு அதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. தங்கிக் கொள்ளலாம்!” அவர் அங்கிருந்து எழுந்தார்.

அவள், அவருடன் அவரது படுக்கை அறையை அடைந்தாள்.

விஜயமோகன் விளக்கின் திரியை நீட்டி வைத்துவிட்டுக் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தார். அவள் அவரின் கால்களை வருடியபடி கால்மாட்டில் அமர்ந்தாள்.

அவள் இடுப்பின் மேற்புறத்தில் உடை எதுவும் இல்லாமலிருந்தது.

வடித்து வைத்தாற் போன்ற அவள் உடம்பை அவர் பார்த்தார்.

“உங்களைப் பார்த்தவுடன் நான் என்னைப் பற்றி யோசித்தேன். எனது பழிவாங்கும் செயல் முடிந்துவிட்டால், உங்களிடம் இப்படியோர் இரவையும் உறவையும் யாசிப்பதென்று தீர்மானித்தேன். எனக்கு அதுமட்டும் போதும்!” அவள், அவர் உடலை ஒட்டிப் படுத்துக் கொண்டாள்.

அவளின் கை விரல்கள் அவரைத் தழுவின. அவள் விஜயமோகனை மன்மதனின் வில்லில் இடம்பெற்ற தாமரை மலராக்கி விட்டிருந்தாள். அதன் இதழ்கள் அவள் உடலின் பகுதிகளில் எதையோ தேடிப் பயணம் செய்தன.

அவளின் தலைமுடி அவர் முகத்தை மூடியது.

அதற்கு மனதை மயக்கும் ஒருவித மணமிருந்தது. போதை கலந்த மணம்.

அவளின் இதழ்களுக்குத் தேனின் சுவை இருந்தது. அணையை உடைத்துக்கொண்டு வரும் வெள்ளம் மாதிரி அவள், அவருள் நிறைந்து வழிந்து கொண்டிருந்தாள்.

“அடுத்த ஜென்மத்தில் உங்கள் வீட்டு வேலைக்காரியாக வேண்டுமென்று நான் பிரார்த்திப்பேன்!” அவள், அவர் காதுகளில் மந்திரித்தாள்.

“ஏன் அப்படி?” அவர் கேட்டார்.

“உங்களை அப்படியாவது அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு கிடைக்குமே...” அவளின் மூச்சுக்காற்றுக்கு இலஞ்சிப்பூவின் வாசனை இருந்தது.

விடியற் காலையில் சேவல் கூவுவது வரை அவள், அவரது படுக்கையில் இருந்தாள். அவர்கள் இருவருமே விழித்திருந்தனர்.

“நான் இரவில் திரும்பி வருவேன். வரும்போது எல்லாவற்றையும் தெரிந்து கொண்டிருப்பேன்” அவள், அவரை முத்தமிட்டபடி பேசினாள்.

ஒரு சிறிய தூக்கத்துக்குப் பிறகு விஜயமோகன் எழுந்தார்.

கண் விழித்தபோது எல்லாம் ஒரு கனவு போல் தோன்றியது. குளித்துவிட்டு அவர் டீக்கடையை நெருங்கியபோது முந்தைய

நாளைப் போலவே எல்லாரும் அவரிடம் நடந்து கொண்டனர். பயம் அல்லது மரியாதையுடன் தங்களது இருப்பிடங்களிலிருந்து எழுந்தனர்.

அவர் உட்கார்ந்த பிறகு மற்றவர்களும் உட்கார்ந்தனர்.

காலைப் பலகார வேலை முடிந்தது.

“ஏன், எல்லாரும் என்னையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்கள்?” விஜயமோகன் கடைக்காரரிடம் கேட்டார்.

“பயத்தினால்தான்!”

“எதனால் பயம்?”

“நீங்கள் அந்த வீட்டில் இரவைச் செலவழிப்பதே இவர்களுக்கு ஆச்சரியம்தான்!”

“ஏன் அப்படி?”

“ஆட்களை அழைத்துக்கொண்டு போய் ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் ரத்த ரட்சஸுகள் வசிக்கும் மனை அது என்பதால்தான்.”

“இதுவரை எனக்கு அப்படி எதுவும் தோன்றியது இல்லையே...”

கடைக்கு வெளியே நின்றிருந்த மனிதர் ஒருவர் விஜயமோகனை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தார். வாசுதேவன் தம்பியின் காரிய தர் அவர். உடனே இடச்சேரி தறவாட்டை நோக்கி ஓடினார் அவர்.

தம்பியை சந்தித்தவர், விஜயமோகனைப் பார்த்த தகவலை அவரிடம் தெரிவித்தார்.

தனது சொந்தத் தறவாட்டை அடைந்த விஜயமோகன் தன் தாய்மாமனைச் சந்தித்தார்.

அங்கு நடந்ததை எல்லாம் அவரிடம் விவரித்தார் விஜயமோகன்.

மாமா உடனே பிர னம் பார்த்தார். பிர னத்தில் அவருக்குத் தட்டுப்பட்டதையெல்லாம் விஜயமோகனிடம் தெரிவித்தார்.

“மனையின் வடமேற்கில் எட்டி மரம் ஒன்று நிற்கிறது. அதன்வடக்கில் சுமார் பத்து கஜத் தொலைவில் கல்லாலான அறை ஒன்று இருக்கிறது. அதற்குள் இருக்கிறாள் நீ குறிப்பிட்ட பெண்!”

விஜயமோகன் சற்று நேரத்தில் அங்கிருந்து கிளம்பினார்.

அவர் எழுமற்றூர் மனையை அடைந்தபோது மணி பதினொன்று ஆகிவிட்டிருந்தது.

சாவித்ரியைக் காணவில்லை.

ராப்பறவை ஒன்று குரல் எழுப்பியது.

விஜயமோகன் டார்ச் லைட்டை எரிய விட்டபடி வீட்டிலிருந்து வெளியேறினார்.

அப்போது, தெரு வாசற்படியில் நின்று கொண்டிருந்தாள் சாவித்ரி.

"தம்புரான், அந்தப் பக்கமாகப் போகாதீர்கள்" அவள் தடுத்தாள்.

"போனால் என்ன... நான் போவேன்!" அவளை விலக்கிவிட்டு அவர் பாட்டுக்கு நடந்தார்.

எட்டி மரம் தென்பட்டது. இப்போது அங்கு துர்நாற்றம் எதுவும் கிடையாது.

மாமா சொன்னபடி அதே திசையில் நடந்தார். அருகில்தான் கல்லறை.

அப்போது அந்தக் கல்லறையின் மேற்புறத்திலிருந்து கருமையான உருவம் ஒன்று எழுந்து வந்தது.

டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் அவர் அந்த உருவத்தைக் கவனித்தார். அழுகி, பெயர்ந்து விழும் உடலின் மாமிசத் துண்டுகள். ஒரு கண்மணி பெயர்ந்து, சிறிய குமிழ்போல் தாழ்ந்து கிடந்தது.

கன்னப் பகுதியின் மாமிசம் எண்ணெய் வடிவதுபோல் தொங்கிக் கிடந்தது.

உடலின் எலும்புகள் மொத்தமும் வெளிப்பார்வைக்குத் தெரிந்தன.

அந்த உருவம் விஜயமோகனைப் பிடிப்பதற்காகத் தனது இரண்டு கைகளையும் நீட்டியது.

பாதிக்கு மேல் எரிந்த - மாமிசம் பெயர்ந்து விழுந்த ஒரு பிண உடல்... சட்டென்று அது உயிர் பெற்றாற் போலிருந்தது.

அதோ -

அது, தனது கால்களை உயர்த்த முற்பட்டது!

## 23

விஜயமோகன் பின்னோக்கி நகர்ந்தார்.

இது என்னவென்று அவருக்கு விளங்கவில்லை. மாமா, இப்படியொரு விஷயத்தைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை. அவர் சொன்னது முழுக்க கார்த்திகா அந்தர்ஜனத்தின் கல்லறையைப் பற்றியும் அதன் சரியான இருப்பிடத்தையுமே.

ஆனால், இதோ இப்போது இங்கு ஒரு பிரேதம் எழுந்து நிற்கிறது.

அதுவும் எரிந்து கொண்டிருக்கும் சிதையிலிருந்து எழுந்து வந்தது போல்! அவர் டார்ச் லைட்டை எரிய விட்டு அந்த உருவத்தைத் தலை முதல் பாதம் வரை முற்றிலுமாகப் பார்த்தார் - அது, ஆணா - பெண்ணா என்று தெரிந்து கொள்ள.

ஆண்தான், சந்தேகமில்லை.

"அப்படியானால் அது கார்த்திகா அல்ல!" அவர் முணு முணுத்தார்.

'கார்த்திகா எங்கே?'

மாமா சொன்னது தவறா?

அங்கு நடந்ததே வேறு.

விஜயமோகனைத் தொலைத்துக் கட்டுவதற்காக சேகரன் உண்ணித்தான் ஏவி விட்ட பிசாசினி திரும்பி வராமல் போகவே, அவர்களுக்குச் சந்தேகம் தோன்றியது. மறுநாள் காலையில் விஜயமோகன் உயிருடன் இருப்பதாக, டீக்கடையில் அவரைப் பார்த்த காரிய தர் வந்து தெரிவிக்கவும் செய்தார்.

தம்பியின் திகைப்பு அதிகரித்தது.

அப்படியானால், விஜயமோகன் தப்பித்திருக்கிறார்!

இனிமேல் அவர் கார்த்திகாவைத் தேடி வரலாம். அவளைக் கண்டுபிடிக்கவும் செய்யலாம். கல்லறையை நெருங்கலாம்.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், விஜயமோகனை சமாளிப்பதற்காக, சேகரன் உண்ணித்தான் ஹோமம் ஒன்றை நடத்தி, தூமாவதி என்ற பிசாசை வரவழைத்தார்.

அந்த துர்தேவதையை அழுகிய அந்த உடலுக்குள் புகுத்தி, விஜயமோகன் வந்தால் அங்கிருந்து அவரை விரட்டியடிக்கப் பயன்படுத்துவது என்று தீர்மானித்தார்.

விஜயமோகன் மீண்டும் முன்னோக்கிப் பாய்ந்தார்.

அப்போது அந்தப் பிரேதம் கைகளை உயர்த்தியது.

எப்படிப்பட்டவரும் பயந்து நடுங்கும் அந்த உருவத்தை அதிக நேரம் பார்த்துக் கொண்டிருக்க அவரால் முடியவில்லை. அது தன்னைத் தொட்டுவிட்டால் தான் அசுத்தமாகி விடுவோம். படித்ததெல் லாம் வீணாகி விடும். மீண்டும் ஒரு ஜென்மம் எடுக்க வேண்டியிருக்கும்.

எனவே, விஜயமோகன் ஏமாற்றத்துடன் மனைக்குத் திரும்பி வந்தார்.

“என்ன தம்புரானே... நான் சொன்னது சரிதானே?” சாவித்ரி கேட்டாள்.

“நீ என்ன நோக்கத்தில் சொன்னாய்?” விஜயமோகன் கேட்டார்.

“அங்கு சுடலைப் பிசாசு இருக்கிறது. அது தொட்டு விட்டால் நீங்கள் அசுத்தமாகி விடுவீர்கள். அதற்காகச் சொன்னேன்.”

“அந்தப் பிசாசின் இருப்பிடம் கார்த்திகாவின் சமாதிக்கு மேற்புறம். அது, அங்கு இருப்பதுவரை, கார்த்திகா அதிலிருந்து விடுதலை பெற முடியாது. எனவே, எப்படியாவது அவளை இந்தச் சிக்கலிலிருந்து காப்பாற்ற வேண்டும்” விஜயமோகன் கூறினார்.

“தம்புரான் நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் சுவடியில், நினைத்த இடத்துக்கு மனதை அனுப்புவதற்கான வித்தை உள்ளது. அதன் மூலம் நீங்கள் தம்புராட்டியை நெருங்க முடியும்...” சாவித்ரி யோசனை தெரிவித்தாள்.

“முயற்சி செய்கிறேன்” விஜயமோகன் ஓலைச்சுவடியை எடுத்துக்கொண்டு வராந்தாவில் வந்து அமர்ந்தார். சாவித்ரி அவருக்கு அருகில் அமர்ந்தாள்.

"நீ ஏன் மீண்டும் திரும்பி வந்திருக்கிறாய்? உனக்கு மோட்சப் பிராப்தி கிடைக்கவில்லையா?" அவர் கேட்டார்.

"தம்புராட்டியைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போவதற்காக வந்தேன். அவர்தானே என்னை இங்கு வரவழைத்தவர்."

"கார்த்திகா விஷயத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. இருந்தாலும் முயற்சி செய்கிறேன்" விஜயமோகன் சுவடியின் இதழ்களைப் புரட்டத் தொடங்கினார்.

கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தைதான் முதலில் தட்டுப்பட்டது.

அதை வாசித்துப் பார்த்தபோது, அதை நடைமுறைப்படுத்துவது மிகவும் சிரமம் என்று தோன்றியது.

உடலிலிருந்து ஆத்மா வெளியேறும்போது உடலைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். ஏறத்தாழ இறந்து விட்டது போல் தோன்றும் அந்த உடம்பை பிறர் பார்த்தால் எரியூட்டவோ, புதைக்கவோ வாய்ப்பு உள்ளது.

எனவே, தன் உடம்பைப் பாதுகாக்க நம்பிக்கையான ஒருவர் வேண்டும். மட்டுமின்றி, உடல் சில்லிட்டுப் போகாமல் இருக்க அதற்கு வெப்பம் வழங்கவும் வேண்டும்.

ஓலையை மூடி வைத்துவிட்டு, விளக்கின் திரியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன யோசனை?" சாவித்ரி கேட்டாள்.

"சாவித்ரி குறிப்பிட்ட மந்திரம் இதில் இருக்கிறது. ஆனால், ஆத்மா இந்த உடலிலிருந்து வெளியேறும்போது உடலின் வெப்பம் குறையும். அதைப் பத்திரமாக பார்த்துக் கொள்ள ஒருவர் தேவை. ஆத்மா திரும்பி வருவதுவரை இந்த நிலை தொடர வேண்டும்" அவர் விவரித்தார்.

"இதற்கு என்ன அந்த அளவு யோசிக்க வேண்டியிருக்கிறது?" அவள் மிகவும் லாகவத்துடன் கேட்டாள்.

"நீ இதற்குத் தயார் என்றால், நான் போய் கார்த்திகாவைச் சந்தித்துவிட்டு வருகிறேன்."

"எனக்கு அதில் மகிழ்ச்சியே. இதோ நான் தயார்..." அவள் தன் கையை அவரை நோக்கி நீட்டினாள்.

அவர்கள் இருவரும் படுக்கை அறையை அடைந்தனர். கதவு மற்றும் ஜன்னல்களை பத்திரமாக மூடித் தாழிட்டனர்.

எரிந்து கொண்டிருக்கும் கோல்விளக்கை அணைத்தனர்.

அறைக்குள் இருள் பரவியது.

விஜயமோகனின் கரங்கள், சாவித்ரியைத் தழுவின.

அவள் உடலை இறுக்கிப் பிடித்திருந்த ரவிக்கையின் பட்டன்களை அவர் விரல்கள் தேடின.

படுக்கையில் அவள், அவரின் மார்பில் முகம் அமர்த்திப் படுத்திருந்தாள். அவளின் உதடுகள் அவர் முகத்தில் எதையோ தேடின. அந்த உதடுகள் தாகத்துடன் ஒன்றையொன்று பற்றிக் கொண்டன.

ஒரு கொடி மாதிரி அவள், அவர் உடலில் பரவிப் படர்ந்தாள். அவளது சக்தியும் உற்சாகமும் அவரின் மயிர்க்கால்களின் ஊடாக ரத்தக் குழாய்களில் ஊடுருவிப் பாய்ந்தது.

அவளின் வெப்பம் அவருக்குள் பிரவேசித்தது.

"போதுமா?" அவள் கேட்டாள்.

"போதும்... இனி நான் மந்திரம் ஜபிக்கப் போகிறேன்" அவர், அவள் காதில் கிசுகிசுத்தார்.

"நான் இந்த நிலையிலேயே இங்கு காத்திருப்பேன்..." அவள் உறுதியளித்தாள்.

விஜயமோகனின் அதரங்களில் கூடுவிட்டுக் கூடு பாயும் மந்திரம் உயர்ந்தது. படிப்படியாக அந்த மந்திரத்தின் சத்தம் வலு குறைந்து வந்தது.

ஒரு கட்டத்தில் அவர் உதடுகள் அசைவற்றன. விஜயமோகனின் உடல் குளிர்ந்து வருவதாக சாவித்ரிக்குத் தோன்றியது.

அவள், அவரை இறுக்கி அணைத்தாள்.

விஜயமோகனின் ஆத்மா, அவர் உடலிலிருந்து விடுபட்டு அந்த அறையின் கதவு இடைவெளி வழியாக வெளியே வந்தது. அது

நேராகக் குளத்தை நோக்கி நகர்ந்தது. எட்டி மரத்தின் அருகே சென்று பார்த்தது.

கார்த்திகாவின் கல்லறைக்கு மேற்புறம் அந்தப் பைசாசிக உருவம் உட்கார்ந்திருப்பதை அவர் கவனித்தார்.

அது ஒரு கையைப் பின்புறமாக ஊன்றி, ஒரு காலை உயர்த்தி வலக் கையை முழங்காலுக்கு மேல் வைத்தபடி உட்கார்ந்திருந்தது.

அவ்வப்போது ஓர் இயந்திரம் மாதிரி அதன் தலை சுழன்று கொண்டிருந்தது.

சன்னமான நிலா வெளிச்சம் அந்தப் பகுதியில் விழுந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் அந்த உருவத்தின் தோற்றம் பைசாசிகமானதாகவும், பயங்கரமானதாகவும் இருந்தது.

விஜயமோகனின் ஆத்மா, கல்லறையின் அருகே சென்றது.

அப்போதும் அதன் அசிங்கம் பிடித்த தலை சுழன்று கொண்டிருந்தது.

தன்னை அந்த உருவத்தால் அடையாளம் தெரிந்து கொள்ள முடியாது என்பது தெரிந்ததும், விஜயமோகன் நிதானமாகக் கல்லறையின் இடைவெளி வழியாக உள்ளே நுழைந்தார்.

கனத்த இருட்டில் கார்த்திகா அந்தர்ஜனம் அதற்குள் குப்புறப் படுத்திருப்பது அவருக்குத் தெரிந்தது.

"கார்த்திகா... கார்த்திகா..." அவர், அவளின் காதருகே மந்திரித்தார்.

"யார், நீங்களா? நீங்கள் எப்படி இதற்குள் வந்தீர்கள்?" அவள் படுத்த நிலையிலிருந்து அசையாமல் கேட்டாள்.

"நான் பௌதிக உடலுடன் வரவில்லை. என் ஆத்மா மட்டும்தான்!" அவர் பதிலளித்தார்.

"என் கல்லறைக்கு மேற்புறம் அந்தப் பிரேதம் இருக்கிறது. அதனால், என்னால் மல்லாக்கப் படுக்க முடியாது!" அவள் கூறினாள்.

"இப்போது அது வெறும் பிரேதம் மட்டும் அல்ல. அதற்கு பைசாசிக சக்தியும் ஊட்டப்பட்டிருக்கிறது. நம்மைத் தொட்டு அழிக்க அது தயாராகக் காத்திருக்கிறது."

"உங்களை... உங்களை நான் ஒரு தடவை பார்க்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" அவள் அழுவது போல் தோன்றியது.

"நீ இப்போது திரும்பிப் படுக்கலாம். பயப்பட எதுவும் இல்லை" அவர், அவள் உடம்புடன் ஒட்டிப் படுத்துக் கொண்டார். கார்த்திகா அந்தர்ஜனம் அதற்குள் புரண்டு மல்லாந்து படுத்தாள்.

இருவர் படுக்கக்கூடிய அளவுக்கு அதில் போதுமான இடம் இருந்தது.

"நான் இப்போது வந்திருப்பது. உன்னிடம் சில விஷயங்களைத் தெரிவிப்பதற்காகத்தான்!" அவர், அவள் காதில் கிசுகிசுத்தார்.

இருவரும் இடைவெளியின்றி நெருங்கிப் படுத்திருந்தனர்.

"நான் இங்கிருந்து தப்பிக்க வேண்டும். தப்பித்தே ஆக வேண்டும். நான் செய்து தீர்க்க வேண்டிய வேலைகள் இன்னும் மீதமிருக்கின்றன!" கார்த்திகா கூறினாள்.

"அப்படியானால், இந்தக் கல்லறைக்கு மேலே கிடக்கும் பிணவுடலை நீக்குவது எப்படி? அது சிதையில் கிடந்து அரைகுறையாக எரிந்த ஒன்றும் கூட!" விஜயமோகன் பேசினார்.

"அதற்கு ஒரேயொரு வழிதான் இருக்கிறது. கருட மந்திரம் ஜபித்து ஹோமம் நடத்தி, கருடனை வரவழைக்க வேண்டும். கருடன். அதற்கான பரிகாரங்களைச் சொல்லித் தருவார்" கார்த்திகா கூறினாள்.

"சரி, நான் அப்படியே செய்கிறேன்" அவர் ஒப்புக்கொண்டார்.

"அப்படியானால் உடனே கிளம்புங்கள். உங்கள் உடல் சில்லிட்டு விடப் போகிறது."

"சில்லிடாது. அதற்கு நான் ஓர் மாற்று ஏற்பாடு செய்திருக்கிறேன்."

"என்ன இருந்தாலும், உங்களை உங்கள் உடம்புடன் பார்க்க என்னால் முடியவில்லையே... அதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன். உடனடியாகப் போய் நான் சொன்னது போல் செய்யுங்கள்."

"சரி..."

விஜயமோகன் கல்லறைக்கு வெளியே வந்தார்.

அந்த உருவம் அப்போதும் அதே நிலையில் அமர்ந்திருந்தது.

விஜயமோகன் அவசர அவசரமாக இல்லத்தை அடைந்தார். அவரது படுக்கை அறைக்கு வந்தபோது, சாவித்ரி, தன் உடலைக் கட்டியணைத்தபடி படுத்திருப்பது தெரிந்தது.

விஜயமோகன் தன் உடலுக்குள் பிரவேசித்தார்.

அவர் உடல் படிப்படியாக வெப்பம் அடைவதை அவளால் உணர முடிந்தது.

"நீங்கள் வந்து விட்டீர்களா?" அவள் அவரை இறுக அணைத்தபடியே கேட்டாள்.

"வந்துவிட்டேன். நான் போன காரியமும் நினைத்தபடி நடந்து விட்டது" அவர், அவளது பிடியிலிருந்து தன்னை விடுவித்தபடி பேசினார்.

"உங்களுக்குச் சூடு வழங்கியதால் நான் குளிர்ந்து போய் விட்டேன்" அவள், அவர் உடம்பை ஒட்டி உரசியபடி பேசினாள்.

"இன்று இரவே நான் அவசர அவசரமாகச் சில காரியங்களைச் செய்யவேண்டி இருக்கிறது..." என்றவர் கார்த்திகா சொன்னதை விளக்கினார்.

"அதற்கு வேண்டிய ஹோமத் திரவியங்களை நான் எடுத்து வருகிறேன். அதெல்லாம் முடிந்ததும் நான் இங்கிருந்து கிளம்பி விடுவேன்!"

"கார்த்திகா வராமலேயா?"

"தம்புராட்டியிடம் நான் சொல்லிக் கொள்கிறேன்."

சற்று நேரத்தில் சாவித்ரி வெளியேறினாள். திரும்பி வரும்போது ஹோமம் செய்வதற்கான பொருள்களை எடுத்து வந்திருந்தாள்.

விஜயமோகன் ஹோமம் தொடங்குவதற்கான ஆயத்தங்களை முடித்துவிட்டு, மந்திரம் ஜபிக்கத் தொடங்கினார்.

"க்ஷிப ஓம் வாக" விஜயமோகனின் உதடுகள் இடைவிடாமல் மந்திரத்தை உருவிட்டன. கரவீர புஷ்பத்தை திரிமதுரத்தில் நனைத்து ஐம்பதாயிரம் முறை ஹோமித்தார்.

தொலைவில் எங்கேயோ ஒரு சிறகடியோசை கேட்டது.

மேகத்துண்டுகளைப் பிளந்து கொண்டு அந்தரத்தில், இடி-மின்னலை உதிர்த்தபடி கருடன், விஜயமோகனுக்கு முன்பாக வெளிப்பட்டார்.

தெளிவற்ற அந்த ஒளியை உற்றுப் பார்த்தபடி விஜயமோகன் வேண்டினார்.

“உங்களுக்கு எல்லாம் தெரியும். கார்த்திகா அந்தர்ஜனத்தின் கல்லறைக்கு மேற்புறமுள்ள அந்தப் பிணவுடலை அகற்றித் தர வேண்டும்.”

கருடன் பறந்து உயர்ந்தது.

சற்று நேரத்துக்குப் பிறகு இல்லத்தின் வெளியே ஆயிரமாயிரம் சிறகடியோசைகள் உயர்ந்தன.

அது என்ன சத்தம் என்ற அறிவதற்காக விஜயமோகன் வெளியே வந்தார். அந்தச் சத்தம் குளத்தின் பக்கமிருந்துதான் கேட்டது.

அந்தக் கூரிருட்டில் அவர் அந்தத் திசை நோக்கி நடந்தார்.

அங்குள்ள எட்டி மரத்தில் நூற்றுக்கணக்கான பறவைகள் புதிதாகக் குடியேறி இருப்பது போல் தோன்றியது.

அவற்றின் கண்கள் சிவப்பு நிற முத்துகள் மாதிரி பளபளத்தன.

அவை, அவ்வப்போது கல்லறைப் பக்கமாகப் பறந்து, தாழ்ந்து மீண்டும் மேலெழும்பிக் கொண்டிருந்தன.

விகாரமான குரல்களை எழுப்பிக்கொண்டு அவை அந்தரத்தில் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து அலைந்தன.

விஷயம் என்னவென்று விளங்காமலே அவர் இல்லத்துக்குத் திரும்பி வந்தார்.

மறுநாள் காலையில் விஜயமோகன் கண்விழித்தார். எட்டி மரத்தில் இரவில் பார்த்த பறவைகளைப் பற்றித் தெரிந்து கொள்வது அவரது நோக்கம். எனவே, அந்த மரத்தை நோக்கி நடந்தார்.

அங்கு சென்றபோது அவர் கண்டது அற்புதமான ஒரு காட்சியாக இருந்தது.

ஆயிரக்கணக்கான கழுகுகள் அந்தக் கல்லறைக்கு மேல் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

பறவைகளின் ராஜாவான கருடனின் உத்தரவுப்படி, அங்கு வந்த கழுகுகள், அந்தக் கல்லறைக்கு மேலிருந்த பிண உடலைக் கொத்திக் குதறி, ஒரு பொட்டுக்கூட விடாமல், எலும்புகள் வரை தின்று தீர்த்து விட்டிருந்தன!

அவையெல்லாம் பறந்து உயர்ந்தபோது அசிங்கம் பிடித்த அப்படியொரு பொருள் அங்கு இருந்ததற்கான எந்தவிதமான அடையாளமும் தட்டுப்படவில்லை.

விஜயமோகன் அந்தக் கல்லறையே நெருங்கினார்.

தன்னுடைய மொத்த சக்தியையும் ஒன்றுதிரட்டி அதன் மேற்புறமிருந்த கருங்கல் பலகையை இழுத்து அகற்றினார். அங்கு -

## 24

**அ**ங்கு, விஜயமோகன் அசைவற்றுக் கிடக்கும் கார்த்திகா அந்தர்ஜனத்தைக் கண்டார்.

“கார்த்திகா... கார்த்திகா...” அவர் அழைத்தார்.

அவள் அதைக் கேட்டதாகத் தெரியவில்லை.

ஆனால், அந்த உடலில் வெப்பமிருந்தது.

‘இதற்குக் காரணம் என்ன?’ அவர் யோசித்தார். ‘ஒருவேளை இவளால் இரவில் மட்டுமே எழுந்திருக்க முடியுமோ?

அப்படியானால் சாவித்ரி?

விஜயமோகன் எழுந்தார். கல்லறையின் மூடியைப் பழையபடி இழுத்து மூடிவிட்டு இல்லத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார். சற்றுத் தொலைவு நடந்தவருக்குள் ஒரு சிறிய சந்தேகம்.

பகலில் தம்பியின் ஆட்கள் யாராவது வந்து கல்லறையைச் சோதித்தால் என்ன செய்வது?

அவர்கள் கல்லறையைத் திறந்து பார்த்தால் கார்த்திகாவின் உடம்பு தட்டுப்படும். பார்த்து விட்டால் உடனே அதை அழிக்க

முற்படுவார்கள். எனவே, அதற்குள்ளிருந்து அந்த உடம்பை அகற்றுவதே நல்லது என்று அவருக்குத் தோன்றியது.

விஜயமோகன் திரும்பி மறுபடியும் கல்லறையை நோக்கி நடந்தார்.

கருங்கல் மூடியை இழுத்து அகற்றினார்.

அவளது உடலை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு இல்லத்தை நோக்கி நடந்தார். எழுமற்றூர் மனையை அடைந்ததும் தென்புறப் படுக்கை அறையில் அந்த உடலைப் படுக்க வைத்தார்.

விஜயமோகன் யூகித்தது போலவே தம்பியின் காரிய தனும் மற்றும் இரண்டு வேலைக்காரர்களும் கல்லறைக்கு வந்து சேர்ந்தனர். திறந்து கிடந்த கல்லறைக்குள் கார்த்திகா அந்தர்ஜனத்தின் உடம்பைக் காணாமல் அவர்கள் ஆச்சரியம் அடைந்தனர். உடனேயே தம்பியிடம் விவரம் தெரிவிக்க ஓடினர்.

மறுவிநாடி சேகரன் உண்ணித்தான் வரவழைக்கப்பட்டார்.

அவரும் வந்து சேர்ந்தார்.

"என்ன, அந்த உடல் அங்கு இல்லை என்றா சொல்கிறீர்கள்?" அவர் ராசிப்பலகையை எடுத்து வைத்துப் பிர னம் பார்க்கத் தொடங்கினார். கார்த்திகாவின் உடல் எழுமற்றூர் மனையில் இருப்பது தெரிந்தது.

"இனி என்ன செய்யலாம்?" தம்பி, தன் ஆட்களைப் பார்த்துக் கேட்டார்.

"அங்கிருந்து அந்த உடம்பை எடுத்து வரவேண்டியதுதான்!" ஒருவன் கருத்துத் தெரிவித்தான்.

"அது எப்படி? அவர் அங்கு இருக்கிறாரே!"

"இப்படியெல்லாம் யோசித்தால் நமது வேலை நடக்காது. போய் எடுத்துக்கொண்டு வரவேண்டியதுதான்!"

"அதுதான் எப்படி என்கிறேன்."

"பலவந்தமாகத்தான்."

"மற்றவர்களுக்குத் தெரிந்து விடாதா?"

"மாலை நேரமாகி விட்டால் அதன்பிறகு யாரும் அந்த வழியாக நடக்க மாட்டார்கள். அப்போது ஐந்து அல்லது ஆறு பேர் அங்கு போக

வேண்டும். தேவைப்பட்டால் விஜயமோகனின் உடம்பைக் குளத்துக்குள் போட்டுவிடுங்கள்."

"வேறு வழி இல்லாவிட்டால், அப்படித்தான் செய்ய வேண்டும்!" தம்பி கூறினார்.

**கா**ர்த்திகாவின் உடம்பைப் பத்திரப்படுத்திய பிறகு விஜயமோகன் டீக்கடைக்குச் சென்றார்.

அப்போதும் அங்கு இருந்தவர்கள் அவரை பயத்துடனும் ஒருவித சந்தேகத்துடனும் பார்த்தனர்.

"தயவு செய்து நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்" எல்லாரும் அங்கிருந்து போன பிறகு டீக்கடைக்காரர் விஜயமோகனை நெருங்கினார்.

"விஷயத்தைச் சொல்லுங்கள்."

"அந்த மனையை நீங்கள் இடித்துத் தள்ளுவதுதான் நல்லது. நீங்கள் அந்த மனையில் தங்கியிருப்பதும் நல்லதல்ல!"

"அந்த அளவுக்கு இப்போது என்ன நடந்து விட்டது? நான் அங்கு தங்கியிருப்பதால், யாருக்கு என்ன நஷ்டம் அல்லது கஷ்டம்?"

"அது, பிசாசுகள் குடியிருக்கும் வீடு."

"இருக்கட்டுமே... அங்கு குடியிருக்கும் எனக்கு அது ஒரு பொருட்டில்லை என்றால்..."

"நான் சொல்வதில் மற்றொரு விஷயமும் இருக்கிறது. இன்று மாலை நேரத்தில் அங்கு யாரெல்லாமோ வரப்போகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். நிச்சயமாக அது நல்ல காரியத்துக்காக இருக்காது."

"அப்படியென்றால்?"

"தம்பியின் ஆட்கள்தான் வரப் போகிறார்கள்."

"இப்போது எனக்கு விஷயம் புரிந்து விட்டது... அதை நான் பார்த்துக் கொள்கிறேன்."

அதன் பிறகு விஜயமோகன் தாமதிக்கவில்லை. உடனே இல்லத்துக்குத் திரும்பினார்.

**மா**லை நேரமானபோது சேகரன் உண்ணித்தான் இடச்சேரித் தறவாட்டில் பூஜை தொடங்கினார்.

கார்த்திகா அந்தர்ஜனத்தின் உடம்பை எரித்துச் சாம்பலாக்கு வதற்கான ஏற்பாடுகள் தறவாட்டின் தென்புறமுள்ள காவுக்கு அருகில் நடந்து கொண்டிருந்தன.

உடம்பைக் கொண்டு வந்துவிட்டால், இப்போது முறைப்படி அதை எரிப்பதற்கு எல்லாம் தயார். மட்டுமின்றி, அதன் பிறகு அவளால் எந்தவிதத் தொல்லையும் ஏற்படாதிருப்பதற்கு வேண்டிய ஹோமத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சூரியன் மேற்குப்புறக் குன்றில் மறைந்து விட்டது.

கிராமத்தில் திடுமென்று நிழல் பரவியது. கூடவே, கிராமத்தின் வடமேற்குப் பகுதியில் இருந்து கார்மேகத் துண்டுகள் மேலெழும்பத் தொடங்கின. அந்தப் பகுதியில் மழைமேகம் தென்பட்டால், காற்றும் மழையும் கடுமையாக இருக்கும் என்பது கிராமத்தினரின் நெடுநாளைய நம்பிக்கை.

எங்கும் இருள் பரவியது.

மழை மிகவும் கடுமையாக-இருக்கும் என்று நினைத்ததால், நாற்சந்தியில் கூடியிருந்தவர்கள் சட்டென்று தங்கள் வீடுகளை நோக்கிச் சென்றனர்.

**வி**ஜயமோகன் நிலவிளக்கை ஏற்றினார்.

சாவித்ரி இனி ஒருபோதும் வரமாட்டாள்! என்பது உறுதியாகி விட்டது. கார்த்திகா இன்னும் விழித்து எழவில்லை. அவள் கொண்டு வந்து போட்டபோது எப்படிக் கிடந்தாளோ இன்னும் அப்படியே கிடக்கிறாள்.

தெரு வாசற்படியில் யாரோ பேசும் சத்தம் கேட்டு, விஜயமோகன் அந்தப் பக்கமாகப் பார்த்தார்.

கொழுந்துவிட்டு எரியும் பந்தங்களுடன் நான்கு அல்லது ஐந்து பேர் முற்றப்பகுதிக்கு வந்தனர்.

அவர்கள் துளசி மாடத்துக்கு முன்பாக வந்து நின்றனர்.

“யார் நீங்கள், உங்களுக்கு என்ன வேண்டும்?” விஜயமோகன் கேட்டார்.

“திருமேனி, எங்களது தேவை... அந்தக் கல்லறைக்குள் கிடந்த பிணம்தான். அது இங்கே இருப்பது எங்களுக்குத் தெரியும்.”

“நீங்கள் எப்படி என் வீட்டுக்குள் நுழையலாம். அதற்கு உங்களுக்கு அனுமதி அளித்தது யார்?”

“நாங்கள் வீண் பேச்சுக்காக வரவில்லை...” வந்தவர்களின் தலைவன் போன்றவன் இளந்திண்ணையில் ஏற முயன்றான்.

“நில் அங்கேயே! என் அனுமதி இல்லாமல் என் தெரு வாசற்படி தாண்டி வந்திருப்பதே தவறு. அதையும் தாண்டி இப்போது வீட்டுக்குள் வேறு நுழையப் போகிறாயா?” விஜயமோகனின் குரல் கர்ஜனை போல் ஒலித்தது.

“திருமேனி, தயவு செய்து எங்களைத் தடுக்காதீர்கள். வீணாக வம்பு செய்யாதீர்கள்” என்றபடி தலைவன், நிலைவாசற்படியை நோக்கி முன்னேறினான்.

“யாரவன்... இந்த இல்லத்துக்குள் நுழைய வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பவன்?” பெண் குரல் ஒன்று வாசலில் முழங்கியது.

கார்த்திகா அந்தர்ஜனம்!

“கார்த்திகா தம்புராட்டி!” அவர்களில் யாரோ ஒருவர் கூறினார்.

“என்ன. அதிலும் ஏதாவது சந்தேகமா?” அவள் நிலவிளக்கை நெருங்கினாள்.

விளக்கைக் கையில் எடுத்தவள், முன்புறமாக வந்தவனுக்கு நேராக நீட்டினாள். விளக்கின் தீ நாளம் அவன் கழுத்தில் சுற்றி வளைத்துப் படர்ந்தது.

“ஐயோ. கொல்லாதீர்கள்!” அவன் அலறினான்.

அந்த தீபத்தின் தீ நாளம் கண் மூடித் திறப்பதற்குள் அடுத்தவன் கழுத்தைப் பாய்ந்து பிடித்தது. அடுத்தடுத்துப் படிப்படியாக சுமார் இரண்டு நிமிட நேரத்துக்குள் வந்த ஐந்து பேரின் கழுத்துப் பகுதிகளையும் தீ நாளம் சுற்றிக் கொண்டது.

அந்த ஐந்து பேருமே தரையில் விழுந்து துடித்தனர்.

“என்னுடன் வாருங்கள்!” அவள், விஜயமோகனை அழைத்தாள்.

அவர். அவளைப் பின்தொடர்ந்தார்.

தம்பியின் வீட்டில் ஹோமம் நடந்து கொண்டிருந்தது.

கார்த்திகா அந்தர்ஜனம் தெரு வாசற்படி கடந்து அந்த வீட்டின் முற்றத்தில் காலெடுத்து வைத்தாள்.

"அதோ வருகிறாள்... உண்ணித்தான்... அதோ வருகிறாளே அவளேதான்!" தம்பி உரத்த குரலில் கூவினார்.

சேகரன் உண்ணித்தான் தன் ஒற்றைக் கண்ணைத் திறந்து பார்த்தார்.

பிரமாண்டமாக நின்று கொண்டிருந்தாள் பிரம்மரட்சஸான கார்த்திகா அந்தர்ஜனம் மட்டுமின்றி அவள் வளர்ந்து கொண்டும் இருந்தாள்.

சுமார் மூன்று ஆள் உயரத்துக்கு வளர்ந்த அந்த உருவம், தனது வலக் கையை நீட்டியது.

அந்தக் கை நீண்டு வந்தது.

சேகரன் உண்ணித்தானை அந்தக் கை சட்டென்று எட்டிப் பிடித்தது.

அவர் குடுமியைப் பிடித்து உயர்த்திய அந்த உருவம், விசையுடன் தட்டாமாலை சுற்றியது. பிறகு வானில் விசையுடன் வீசி எறிந்தது.

அந்தரத்தில் அதே விசையில் சற்று நேரம் வட்டமடித்தார் உண்ணித்தான்.

பிறகு தலைகீழாகச் சர்ரென்று பூமிக்கு இறங்கியவர் ஹோமாக்னிக்குள் செருகுவது போல் விழுந்தார்.

அதன் பிறகு அவள் முன்னோக்கி நடந்தாள்.

வாசுதேவன் தம்பி ஓட முயன்றார்.

ஆனால், நீண்டு வந்த கார்த்திகாவின் கரம் அவரையும் பாய்ந்து பிடித்தது. அவரைத் தூக்கிக் கொண்டவள் மேலும் முன்னேறினாள்.

கார்மேகத் துண்டுகள் வானப் பரப்பில் ஒன்றுடன் ஒன்று மோதின.

பயங்கரமான மின்னல் கீற்றுகள் ஆகாயத்தில் அங்கும் இங்குமாகப் பாய்ந்து விளையாடின.

ஆயிரமாயிரம் நாகங்கள் போல் அவை திசைகளில் தீக்கொழுந்துகளைத் துப்பின.

திசைகள் நடுங்குமாறு இடியோசைகள் கர்ணகடூரமாக முழங்கின.

கார்த்திகா தனது சொந்த வடிவத்துக்குத் திரும்பிய பிறகு தம்பியை அவரது படுக்கை அறைக்குள் கொண்டு சென்று கட்டிலில் வீசியெறிந்தாள்.

"இனி நீ மட்டும்தான்!" அவள், அவரைக் கட்டிலிலிருந்து தூக்கியெடுத்து மறுபடியும் கட்டிலில் போட்டாள்.

"என்னை நீ சரியாகப் பார்த்ததில்லை... இல்லையா? இப்போது பார்த்துக் கொள்" அவள், அவருக்கு முன்பாக ஒரு பிரம்மரட்சஸாக நின்றாள்.

தம்பி அந்த உருவத்தைப் பார்த்து அலறினார்.

அவளது பற்கள் வெளிப்புறமாக நீண்டு வளைந்திருந்தன. கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன.

அவள் வலக்கை மீண்டும் அவருக்கு நேராக நீண்டு வந்தது. இப்போது அவள் கரம், அவரின் தொப்பூழ்க் கொடி வழியாகக் கட்டிலின் மரப்பரப்பு வரை ஆழ்ந்து இறங்கியது.

அந்த விரல்களிலிருந்து நகங்கள் இறங்கி வந்தன. அவை அவரின் வயிற்றுக்குள் ஊடுருவின.

அந்த விரல்கள் மேலெழும்பியபோது குடல்களைக் கொத்தாக அள்ளிக்கொண்டு வந்தன. அப்போது அவள் அட்டகாசமாகக் குரல் எழுப்பிச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பைக் கேட்டு இடச்சேரித் தறவாடு மொத்தமும் திடுக்கிட்டு நடுங்கியது.

அந்த உடலைத் தூக்கிக்கொண்டு அவள் வராந்தாவை அடைந்தாள்.

அங்கு நின்றபடி அந்த உடம்பை மேற்புறமாக வீசியெறிந்தாள்.

அந்த உடல் போய் விழுந்த இடம், தென்புறக் காவின் மறுபுறம் – அவளது உடம்புக்காக எரியூட்டப்பட்டிருந்த சிதையில்!

அத்துடன் அவள் அமைதி அடைந்தாள். அவளது வடிவம் மாறியது. அவள் மறுபடியும் கார்த்திகா அந்தர்ஜனம் ஆனாள்.

"வாருங்கள்!" அவள் விஜயமோகனை அழைத்தாள்.

அவர்கள் மீண்டும் எழுமற்றூர் மனைக்கு வந்தனர்.

"என்னை அப்போது பார்த்தபோது உங்களுக்கு பயம் தோன்றியதா?" அவள் கேட்டாள்.

"நான் எதற்கு பயப்பட வேண்டும்? நான் உன்னை நேசிப்பவன் அல்லவா? நேசிக்கும் நபரிடம் பயம் தோன்றுமா என்ன?"

“உண்மைதான். நாம் எத்தனையோ வருடங்களுக்கு முன்பே சந்தித்திருக்க வேண்டியவர்கள்...” அவள் கட்டிலில் மல்லாந்து படுத்தாள்.

அவள் இப்போது முன்பைக் காட்டிலும் அழகியாகத் தெரிந்தாள்.

“இனிமேல் கார்த்திகா இங்கேயே இருக்கலாம். இந்த மனையில் இதற்கு உரியவளாகவே!” அவர், அவள் நெற்றியை வருடியபடி கூறினார்.

“இல்லை, நான் போகாமலிருக்க முடியாது.”

“ஏன்?”

“பழிக்குப்பழி வாங்குவதற்காகவே நான் இங்கு தாக்குப்பிடித்துத் தங்கியிருந்தேன்.”

“நான் விடவில்லை என்றால்...” அவர், அவளைக் கட்டியணைத்தார்.

அவரின் கர வளைத்துக்குள் அவள் ஒரு புது மணப்பெண் போல் கூச்சத்துடன் நெளிந்தாள்.

அவளின் உடல் பகுதிகளில் விஜயமோகனின் கை விரல்கள் காணாமற் போன எதையோ தேடுவது போல் பயணித்தன.

“இன்று நான் விழித்திருப்பேன்” அவள், அவரை இறுகக் கட்டியணைத்தாள். வெளியே பலத்த இடியோசையுடன் மழை பெய்து கொண்டிருந்தது.

மின்னல்கள் ஆகாயத்தில் ஆயிரமாயிரம் நாகப்பாம்புகளைப் போல் சீறிப் படர்ந்தன.

அந்த நாலுகட்டு எனப்படும் இல்லத்தின் முற்றப்பகுதிகளில் தண்ணீர் தேங்கி நின்றது. அதன் கால்வாய்ப்பகுதிகள் அடைபட்டிருந்தன.

விடியற்காலையில் விஜயமோகன் கண் விழித்தார். ஆனால், கார்த்திகாவைக் காணவில்லை.

“கார்த்திகா... கார்த்திகா!” அவர் அழைத்தார்.

அது அவளுக்குக் கேட்டதாகத் தெரியவில்லை. எனவே, அதற்கு பதில் குரல் எதுவும் எழும்பவில்லை.

படுக்கையிலிருந்து எழுந்த விஜயமோகன் குளத்தை நோக்கி ஓடினார். அங்கிருந்து கல்லறைக்குப் பாய்ந்தார்.

கல்லறையின் கருங்கல் மூடி ஆவென்று திறந்து கிடந்தது. அதற்குள் எதுவும் இல்லை.

"கார்த்திகா... கார்த்திகா" அவர் மீண்டும் மீண்டும் அழைத்தார்.

எந்த ஒரு பதிலுமில்லை.

அவர் எழுமற்றூர் மனைக்குத் திரும்பி வந்தார்.

மதிய நேரமாகியும் அங்கு எவரும் வந்து சேரவில்லை.

அந்த வீட்டையும் சுற்றுப்புற நிலத்தையும் வாங்கிய கிரயப் பத்திரத்தை அவர் நிலவிளக்கின் தீபத்தில் நீட்டி எரித்தார்.

அதில் தீப்பிடித்தது.

அந்த வீட்டின் நடு ஹாலில் அந்தப் பத்திரத்தைப் போட்டவர் தனது சூட்கேஸை எடுத்துக்கொண்டு வெளியேறினார்.

தெருவாசற்படி கடந்தவர், மீண்டும் ஒரு தடவை அந்த இல்லத்தைத் திரும்பிப் பார்த்தார்.

பூஜையறை வாசலில் அவரையே பார்த்தபடி யாரோ நிற்பது போல் அவருக்குத் தோன்றியது.

'இல்லை... அங்கு எவரும் இல்லை!' அவர் மனம் முணு முணுத்தது.

விஜயமோகன் நடந்தார்.

அதன் பிறகு அவர் திரும்பிப் பார்க்கவே இல்லை!



மின்னூல் ஆக்கம் - தமிழ்நேசன்
மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net
TAMIL EBOOKS